
லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ விண்ணைத்தாண்டி வந்தாயே... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
விண்ணைத்தாண்டி
வந்தாயே..!


லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ விண்ணைத்தாண்டி வந்தாயே... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
விண்ணைத்தாண்டி
வந்தாயே..!

## முத்துலட்சுமி ராகவன் எழுதிய

## விண்ணைத்தாண்டி வந்தாயே..!

### 1

அனைத்து அலுவலகங்களிலும் காலையில் காணப்படும் பரபரப்பு அந்த அலுவலகத்திலும் நிலவியது.. 'மேக்னோ கண்ஸ்ட்ரக்சன்..' என்று தங்க எழுத்துக்களால் கரும்பச்சை கிரானைட் கல்லில் பொறிக்கப் பட்ட எழுத்துக்களை ஒட்டிக் காண்பிக்கப்பட்ட அம்புக்குறி காட்டிய வழியில் நடந்து அலுவலகக் கட்டிடத்திற்குள் நுழைந்தவள் வரவேற்புப் பகுதியில் இருந்த பெண்ணிடம்..

"எக்ஸ்யூஸ் மி.." என்றாள்..

"யெஸ்.." என்று நிமிர்ந்தாள் அந்த ரோஜா நிற அழகி..

"எம்.டியைப் பார்க்கனும்.."

"அப்பாயிண்ட்மெண்ட் இருக்கா..?"

"ம்ம்ம்.."

மேனேஜிங் டைரக்டரின் பெர்சனல் போன் நம்பரைக் கொண்ட விசிட்டிங் கார்டை நீட்டினாள்.. அதை வாங்கிக் கொண்ட ரிசப்சனிஸ்ட்டின் முகத்தில் மரியாதை கலந்த வியப்பு வந்திருந்தது..

"இது எங்க எம்.டியோட பெர்சனல் விசிட்டிங் கார்டாச்சே.. இம்பார்டண்ட் பெர்சனுக்குத்தான் இந்த விசிட்டிங் கார்டைக் கொடுப்பார்.. ஸோ.. யு ஆர் தி இம்பார்ட்டண்ட் பெர்சன்.."

ரிசப்சனிஸ்ட்டின் பேச்சிற்கு பதில் சொல்லாமல் மென்மையாக முறுவலித்தாள்.. அவளிடம் நிலவிய சாந்தமான அழகு ரிசப்சனிஸ்டைக் கவர்ந்தது.. மெலிதான மேக வண்ணத்தில் அடர்நீலக் கரையிட்ட காட்டன் புடவையை உடுத்தியிருந்தாள்.. கழுத்தில் சன்னமான

சங்கிலி.. காதுகளில் சிறிய தோடுகள்.. வலது கையில் ஒற்றை வளையல்.. இடது கையில் கைக்கடிகாரம்.. கெட்டியான துணியினால் தைக்கப்பட்டிருந்த கைப்பையை வைத்திருந்தாள்..

'இம்வளவு சிம்பிளா..?'

எளிமையிலும் பாந்தமான அழகுடன் இருந்தவளை ரிசப்சனிஸ்ட்டிற்குப் பிடித்துப் போயிருக்க வேண்டும்..

"ஐ ஆம் ரோஜா..! இங்கே ரிசப்சனிஸ்ட்டா இருக்கேன்.." என்று கை நீட்டினாள்..

பதிலுக்கு கை பற்றிக் குலுக்கியவளின் விரல்கள் மிருதுவாக இருந்தன.. இவளும் மிருதுவானவள்தான் என்று நினைத்தபடி இண்டர்காமை எடுத்து மேனேஜிங் டைரக்டரை தொடர்பு கொண்ட ரோஜா..

"சார்.. உங்க பெர்சனல் விசிட்டிங் கார்டுடன் ஒரு யங் லேடி உங்களைப் பார்க்க வந்திருக்கிறாங்க.." என்றாள்.

"இம்மீடியட்டா உள்ளே அனுப்புங்க.. அவங்க என்னுடன் பேசி விட்டுப் போகிற வரைக்கும் எந்த விசிட்டரோ, போன் காலோ என்னை டிஸ்டர்ப் பண்ணவே கூடாது.. எல்லாவற்றையும் நிறுத்தி வையுங்க.. அண்டர்ஸ்டாண்ட்..?" மறுமுனையில் எம்.டி உத்தரவிட்டார்..

"யெஸ் சார்.." இண்டர்காமை வைத்து விட்டு எதிரிலிருந்தவளை ஆராய்ச்சியாக பார்த்தாள்..

'மேக்னோ கண்ஸ்ட்ரக்சன்..' என்பது தமிழகத்தில் மட்டுமல்ல.. இந்தியாவிலேயே புகழ்பெற்ற கட்டுமானத் தொழில் செய்யும் கம்பெனி.. அதன் முதலாளி தன்னைப் பார்க்க வரும் முக்கியமானவர்களையும், அதி முக்கியமான தொலைபேசி அழைப்புகளையும் நிறுத்தி வைத்து விட்டு ஒரு இளம் பெண்ணுடன் பேசப் போகிறார்.. அந்த அளவுக்கு அதி முக்கியமான விருந்தாளியான அந்தப் பெண்ணோ எளிமையான தோற்றத்துடன் தனக்கான முக்கியத்துவத்தைப் பொருட்படுத்தாத இயல்போடு காத்திருக்கிறாள்..

"உங்க இடத்தில வேற ஒருத்தர் இருந்திருக்கனும்.. இந்நேரம் ஹாய், ஹீய், நான் யார் தெரியுமான்னு அலட்டியிருப்பாங்க.. உங்களுக்காக எங்க எம்.டி எல்லா வேலைகளையும் நிறுத்தி வைத்துட்டு வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கார்.. நீங்க சிம்பிளா ஒரு சின்னச் சிரிப்போடு உட்கார்ந்திருக்கீங்களே.." விழிகளை விரித்தாள் ரோஜா..

"வேற என்ன செய்யனும்..?" அமைதியாக அவள் கேட்டாள்..

"பந்தா பண்ண வேண்டாமா..?"

அங்கலாய்த்த ரோஜாவை இமைகளை உயர்த்தி அந்தப் பெண் பார்த்த விதம் அலாதியான அழகோடு இருந்தது..

"நான் சாரைப் பார்க்கப் போகலாமா..?" வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்பதைப் போல மிக மெல்லிய குரலில் கேட்டாள்..

"நல்லாக் கேட்டிங்க போங்க.. உங்களுக்காக எங்க எம்.டி அத்தனை புரோக்ராமையும் நிறுத்தி வைத்து விட்டுக் காத்திருக்கிறார்ன்னு இப்போதுதானே சொன்னேன்..? என்னிடம் பெர்மிசன் கேட்கறிங்களே.."

ரோஜா இருக்கையை விட்டு எழுந்து எம்.டியின் அறை வாசல் வரைக்கும் கூட வந்தாள்..

"இதுதான் எம்.டி சாரின் ரூம்.."

அவள் கைகாட்டிய அறையின் கதவில் 'பத்மநாபன் எம்.ஈ, மேனேஜிங் டைரக்டர்..' என்ற எழுத்துக்கள் மிளிர்ந்தன.. கதவை ஒற்றை விரலால் இவள் தட்ட..

"யெஸ்.. கமின்.." என்ற கனத்தகுரல் கம்பீரமாக ஒலித்தது..

ரோஜாவுக்கு நன்றி சொல்லும் விதத்தில் தலையை அசைத்து விட்டு அறைக்குள் நுழைந்தாள்..

"வெல்கம் பேபி.." கனிவுடன் வரவேற்றார் பத்மநாபன்..

"வணக்கம் அங்கிள்.." இவள் கரம் குவித்தாள்..

"உட்காரும்மா.."

அவள் உட்கார்ந்தாள்.. கையிலிருந்த கனத்த ஃபைலை அவரிடம் நீட்டினாள்.. அவர் புருவங்கள் சுருங்க..

"இது என்னம்மமா..?" என்று அதட்டினார்..

"என் செர்ட்டிபிகேட்ஸ் அங்கிள்.. ஃபைனல் செமஸ்டர் ரிசல்ட் இன்னும் வரலை.. மற்ற செர்டிபிகேட்ஸ் இருக்கு.."

இமைக்காமல் அவளை அவர் பார்த்த பார்வையில் பலத்த கண்டனம் இருந்தது.. நேர் கொண்ட பார்வையாய் அவரது பார்வையை சந்தித்தவளின் விழிகளில் தெரிந்த திடத்தில் பெருமூச்சு விட்டார்..

"வேண்டாம்மா.. உன் குவாலிபிகேசனைப் பார்த்து நான் உனக்கு வேலை கொடுக்கிறதாக இல்லை.."

"நீங்க கொடுக்கிற வேலைக்கு நான் தகுதியானவளா இருக்க வேண்டாமா அங்கிள்..?"

"எனக்கு உன் குவாலிபிகேசன் என்னன்னு தெரியாதாம்மா..? இந்த ஃபைலை பார்த்துத்தான் தெரிந்துக்கனுமா..?"

"மார்க், ரேங்க்ன்னு நிறைய இருக்கே அங்கிள்.."

"நீ யார்ன்னு எனக்குத் தெரியும்.. ஸோ.. இதைப் பத்தின ஆர்கியுமெண்டை ஸ்டாப் பண்ணிக்கலாம்."

அவள் மௌனமாக ஃபைலை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள்.. அவளையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தவரை சலனமற்ற முகத்துடன் ஏறிட்டாள்..

"உன் முடிவை மாற்றிக்க மாட்டடியா அம்மா..?" பத்மநாபனின் விழிகளில் சொல்லொண்ணாத் துயரம் இருந்தது.. அவரது பார்வை அவளிடம் எதையோ மன்றாடியது.. யாசித்தது.. இரக்கம் காட்டு பெண்ணே என்று இறைஞ்சியது..

அவள் அசைவற்று பாறை போல இறுகியிருந்தாள்..

"இப்போதும் நேரம் கடந்து விடவில்லை பேபி.. உன் டாடியிடம் நான் பேசுகிறேன்.. உன் முடிவை மாற்றிக் கொள்.."

"மாற்றிக் கொள்ளும் முடிவை நான் எடுக்கவில்லை அங்கிள்.. சில முடிவுகள் மாற்ற முடியாதவை.. மாற்றக் கூடாதவை.."

"நீ இன்ஜினியரிங் படித்தவள்ன்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்க.."

"நீங்களும் நம்ப மாட்டிங்களா அங்கிள்..? நம்பாமலா என் செர்டிபிகேட்ஸை கூட வெரிபை பண்ணாம எனக்கு வேலை போட்டுக் கொடுக்கறிங்க.."

"பேச்சிலேயே மடக்கி விடுவியே.. இந்த புத்திசாலித்தனத்தை தொலைத்து விட்டு இப்படியொரு முடிவை எடுத்திருக்கிறாயே அம்மா.. நீ யார்.. எப்படிப்பட்டவள்.. உன் உயரம் என்ன.. இதைப் பற்றியெல்லாம் ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்திருந்தால் இப்படிப்பட்ட முடிவை எடுத்திருப்பாயா..?"

"யோசித்துப் பார்க்க நான் உயிருடன் இருக்க வேண்டுமில்லையா அங்கிள்..? அந்த உயிரும் இந்த உடலும் எனக்குச் சொந்தமில்லைன்னு ஆன பின்பு யோசிப்பதில் அர்த்தம் என்ன இருக்கு..?"

பத்மநாபனின் இமைகள் துடித்தன.. கலங்கிய விழிகளுடன் பேசாமல் இருந்தார்.. அவள் விழிகளில் கலக்கமில்லை.. கண்ணீரும் இல்லை.. மௌனப் பாசறை போல இறுக்கமான முகபாவத்துடன் எதிரில் இருப்பவரைத் தயக்கமில்லாமல் நோக்கினாள்..

"உன் அம்மா, டாடி, அண்ணன், அண்ணின்னு ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் தூக்கி எறிந்து விட்டு உனக்கு யாரும் வேண்டாம்ன்னு வெளியில் வந்து விட்டாயே.. உன்னை உயிருக்குயிராய் காதலித்த பிரசன்னாவிற்கு என்ன பதிலைச் சொல்லப் போகிற..? அவனைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா..?"

இந்தக் கேள்வி அவளிடம் அதிர்வலைகளை எழுப்பி விடும் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.. இரும்பு இளகவேயில்லை..

"அவரைப் பற்றி நினைத்துப் பார்க்க என்ன இருக்கிறது..?" என்று நிதானமாக கேள்வி கேட்டு அவரைத்தான் அதிர வைத்தாள்..

"ஒன்றுமேயில்லையா..? உனக்கும் அவனுக்கும் இடையே ஒன்றுமே இல்லையா..?" அவருக்கு நெஞ்சை வலிப்பதைப் போல இருந்தது..

"ஒன்ன்ன்..றுமே இல்லை அங்கிள்.." அழுத்தம் திருத்தமாக அவள் சொன்னாள்..

"நீ அவனைக் காதலித்தாய் அம்மா.. அவனைப் போலவே உயிருக்குயிராய் காதலித்தாய்.. அதெல்லாம் பொய்யா..?"

"என் உயிரே எனக்குச் சொந்தமில்லை என்கிறேனே அங்கிள்.. உயிருக்குயிரான காதல் மட்டும் எப்படி எனக்குச் சொந்தமாகும்.."

நெற்றிப் பொட்டில் அடித்ததைப் போன்ற அந்தக் கேள்வியில் நிலை குலைந்தவர் நெற்றிப் பொட்டுக்களை பிடித்து விட்டுக் கொண்டார்..

அவர் கேட்ட கேள்வியினால் துளியும் பாதிப் படையாமல் கற்சிலையைப் போல அமர்ந்திருந்தாள் அந்தப் பெண்.. அடுத்தவரின் துயரம் பாதிக்காமல் தன்னைப்

பற்றி மட்டும் சிந்தித்து வாழும் பெண்ணல்ல அவள்.. மற்றவரின் துயரம் கண்டு துடித்துப் போய் விடுவாள்.. அதுவும் அவளால்தான் அவர்களுக்கு அந்தத் துயரம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்தால் உயிரையே விட்டு விடுவாள்.. அவளின் அத்தகைய ஈர மனதும் இரக்க குணமும் தான் அவளை இந்த நிலையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது..

எந்த குணங்களை பிரசன்னா போற்றி அவளைக் காதலித்தானோ.. அந்த அவளின் குணமே அவளுக்கும்

பிரசன்னாவிற்கும் இடையில் இருந்த காதலை உடைத்து நொறுக்கித் தூள் தூளாக்கி விட்டது..

"அவள் தேவதை டாடி.."

அவளைப் பற்றிப் பேசும் போதெல்லாம் பிரசன்னாவின் கண்களில் கனவு மிதக்கும்.. காதல் துள்ளும்.. அவனைச் சுற்றி வந்த பேரழகிகளைத் தவிர்த்து அவன் சாருலதாவிடம் மையல் கொண்டான்.. அவளைத் தீவிரமாக காதலித்தான்..

அவனது காதலுக்கு சற்றும் குறைந்ததல்ல அவளது காதல்.. பிரசன்னாவிற்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருந்தவள்தான் அவள்.. அவள்தான் சொல்கிறாள்.. அவளது உயிர் அவளுக்குச் சொந்தமானதல்ல என்று.

"நீயும் பிரசன்னாவும் அமெரிக்காவில் வாழ்வதற்காக அங்கே அவன் வசந்த மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறான் அம்மா.."

"வசந்த மாளிகையில் குடியிருக்க அவருக்கு ஏற்றவளாய் ஒரு ஏஞ்சல் வருவாள் அங்கிள்.."

"உன்னைத்தானே அவன் தேவதையென்று சொன்னான்.."

"இல்லை அங்கிள்.. நான் தேவதையில்லை.. தேவதைகள் வரம் கொடுப்பவர்கள்.. வரம் பெறுபவர்கள் அல்ல.. நான் மனுஷி அங்கிள்.. ரத்தமும் சதையுமாக உணர்வு பூர்வமான மனதைக் கொண்ட மனுஷி.. வரம் வாங்கியிருப்பவள்.. இந்த வாழ்வையும் உயிரையும் வரமாக வாங்கியிருக்கிறேன்.. இவையிரண்டும் என்னுடையவை அல்ல.."

இப்படிப் பேசுபவளை என்ன செய்வது..? இந்த வாதத்திற்கு எந்த எதிர்வாதத்தை முன் வைப்பது..? அவளிடம் பேசாத ஆளில்லை.. போடாத சொந்தமில்லை.. எவரது பேச்சும் அவளது செவிகளில் ஏறவில்லையே.

அவள் பிடித்த பிடியில் அவள் பிடிவாதமாக இருந்தாள்.. எடுத்த முடிவில் உறுதியாக நின்றாள்.. எவராலும் வசப்படுத்த முடியாத அவள் மனதை வசப்படுத்தி விட்டதாக பிரசன்னா கனவு கண்டான்.. பெருமைப் பட்டான்.. அவனிடம் அவள் மனம் வசப்படவில்லையே..

"பிரசன்னாவிற்கு என்ன குறைம்மா..?"

"என்ன கேள்வியிது அங்கிள்..? அவரிடம் என்ன குறையிருக்கிறது..? ஹி இஸ் எ கம்ப்ளீட் மேன்.."

"அப்புறமும் ஏன் அம்மா அவனை புறக்கணிக்கிறாய்..?"

"இல்லை அங்கிள்.. நான் அவரைப் புறக்கணிக்க வில்லை.. விலகிப் போகிறேன்.. தட்ஸ் ஆல்.."

அவ்வளவுதானா..? அவளுக்கும் பிரசன்னாவிற்கும் இடையே இருந்த காதல் அவ்வளவுதான் என்ற ஒற்றைச் சொல்லில் ஓடி விடக் கூடியதா..? ஒரே வார்த்தையில் பிரசன்னாவைத் தூக்கி எறிந்து விடக் கூடிய குணம் படைத்தவளா அவள்..?

இல்லையே.. அவள் தங்கமான குணம் படைத்தவளாயிற்றே.. மென்மையான மனம் கொண்டவளாயிற்றே.. இந்த இரண்டும் அவளைப் பிரசன்னாவிடமிருந்து பிரித்து நிறுத்துமா..?

"நீ நியாயமான பெண் அம்மா.."

"தேங்க் யு அங்கிள்.. இதை பிரசன்னாவிடம் சொல்லுங்கள்.."

"பட்.. உனக்கு நியாயம் என்று படுவதை நீ செய்வதால் பிரசன்னாவின் காதல் அழிகிறதே அம்மா.. அவனுக்கு நீ செய்வது அநியாயமில்லையா..?"

"இதைத்தான் அவரும் சொல்கிறார்.. நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கலாம் அங்கிள்.. திசைகள் நான்காக இருக்கலாம்.. ஆனால் நியாயத்திற்கு பக்கங்கள் இல்லை.. திசைகளும் இல்லை.. நியாயத் தராசு எந்தப் பக்கமும் சாயாது.. நேர்கோட்டில் நிலைத்து நிற்கும்.. நான்

நியாயத்தராசை கையில் பிடித்திருக்கிறேன் அங்கிள்.. என் மனம் பிரசன்னாவின் பக்கம் சாயவே சாயாது.. இதை அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள்.."

'என்னத்தை எடுத்துச் சொல்வது..?'

தலைவலி தாங்காமல் இண்டர்காமை எடுத்த பத்மநாபன் அவரது பெர்சனல் செக்கரட்டரியான ரூபாவை அழைத்து சூடாக இரண்டு கப் காபியை அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.. அவள் 'சரி' என்று மட்டும் சொல்லி விட்டு இண்டர்காமை வைத்திருக்கலாம்.. அப்படிச் செய்யாமல்..

"சார்.. மிஸ்டர் நீலமேகம் உங்களைப் பார்க்க வந்து ரொம்ப நேரமா வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கிறார்.." என்று சொல்லி விட்டாள்..

அதிமுக்கியமான விருந்தாளியிடம் நான் பேச வேண்டியிருக்கிறது.. எவரையும் எந்த போன்காலையும் என்னை தொந்தரவு செய்யும் வகையில் அனுமதிக்க வேண்டாம் என்று பத்மநாபன் ரோஜாவிடம் உத்தர விட்டிருந்த விவரம் பாவம் ரூபாவுக்கு தெரியவே தெரியாது.

2

ரூபா அன்று தாமதமாக அலுவலகத்துக்கு வந்தாள்.. அதி முக்கிய விருந்தாளியை எம்.டி சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்.. அந்த விருந்தாளி எம்.டியின் அறையை விட்டு வெளியே வந்த பின்னால்தான் மற்ற விவரங்களை அவருக்கு நினைவுறுத்த வேண்டும்... அதுவரை அனைவரையும், அனைத்து தொலைபேசி அழைப்புக்களையும் நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்ற விவரத்தை அவளிடம் ரோஜா சொல்வதற்குள் வேறு ஒரு அவசர வேலை வந்துவிட ரூபா ரோஜாவைக் கடந்து தன் இருக்கைக்கு சென்று விட்டாள்..

"ஷட்-அப்..! எந்த மேகம் வந்தாலும் இப்போது அவரைப் பார்க்க முடியாது.. இம்பார்ட்டண்ட் கெஸ்ட் வந்திருக்கிறாங்க.. நான் அவங்களிடம் பேசி முடித்த பின்னால்தான் மற்ற எங்கேஜ்மெண்ட்ஸ்.. அண்டர்ஸ்டாண்ட்.. அதுவரைக்கும் எந்த விசிட்டரையும் அலோவ் பண்ணக் கூடாதுன்னு ஸ்ட்ரிக்ட்டா ரோஜாவுக்கு இன்ஸ்ட்ரக்சன் கொடுத்திருந்தேனே.. அவங்க உங்களிடம் சொல்லவில்லையா..?"

இல்லை என்று சொன்னால் ரோஜா ரூபாவை உண்டு இல்லையென்று பண்ணி விடுவாள்..

"நீ லேட்டா வந்ததை எம்.டியிடம் போட்டுக் கொடுத்திருக்கனும்டி.. பிழைத்துப் போகட்டும்ன்னு நீ பார்க்க வேண்டிய வொர்க்கை நான் பார்த்தேனில்ல..

அந்தத் திமிர்தாண்டி என்னைப் பத்தி உன்னைப் போட்டுக் கொடுக்க வைத்திருக்கு.. அந்தத் திமிரை அடக்கலைன்னா நான் எப்படி ரோஜா ஆவேன்..? இப்பவே எம்.டியிடம் போய் உன்னைப் பற்றி வத்தி வைக்கிறேன் பார்.." என்று ஆடித் தீர்த்து விடுவாள்..

ரோஜா சொன்னதை நிறைவேற்றி விடும் வல்லமை மிக்கவள்... அவளுடன் மோதினால் துகள் துகளாகி விடுவோம் என்று பணிந்து போய் விடுவாள் ரூபா..

"சொன்னாங்க சார்.. பட்.. நீலமேகம் சார் நம்ம கம்பெனியின் இம்பார்ட்டண்ட் கிளையண்ட் என்கிறதினால நான்தான்.." மென்று விழுங்கினாள்..

"இந்த செகண்டில எனக்கு எதுவுமே இம்பார்ட்டண்ட் இல்லை.. முதலில் காபியை அனுப்பப் பாருங்க... மார்னிங் நான் வருகிறப்ப நீங்க உங்க சீட்டில் இல்லை..

சரியான நேரத்துக்கு வந்திருந்தீங்கன்னா உங்களுக்கு இன்பர்மேசன் கிடைத்திருக்கும்.. வந்தது லேட்.. அப்புறம் எப்படி உங்க வேலையைச் சரியாப் பார்ப்பீங்க..? ரோஜா ரிசப்சனிஸ்ட்தான்.. எம்.டியோட செக்கரட்டரி போஸ்டில் வொர்க் பண்ணலை... உங்க வேலையை அவங்க

பார்க்கிறாங்க.. நீங்க பொறுப்பில்லாம எனக்கென்னன்னு லேட்டா வந்துட்டு எதுவும் தெரியாம விழிக்கறீங்க.. லேட்டா வருகிறதுதான் வருகிறீங்க.. நீங்க இல்லாத நேரத்தில என்ன வொர்க் நடந்திருக்குன்னு மத்தவங்களிடம் கேட்டுத் தெரிந்துக்கனுமா வேண்டாமா..? அவங்களா உங்க சீட்டைத் தேடி வந்து சொல்லிட்டுப் போவாங்களா..? உங்களைப் போலவே எல்லோரும் இருப்பாங்களா..? அவங்க வேலையை அவங்க பார்க்க வேண்டாமா..?"

பத்மநாபன் கொடுத்த மண்டகப் படியில் இன்று விடிந்து எழுந்ததும் எவர் முகத்தில் விழித்தேன் என்று நொந்து போனாள் ரூபா.. அவள் முன் இருந்த சோபாவில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்த நீலமேகம் மிகப் பெரும் தொழிலதிபர்.. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இருந்தார்.. அவருடைய தொழில் நடந்த கட்டிடம் பழமையானது என்பதினால் புதிதாக பலமாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்ட உத்தேசித்து பத்மநாபனை அணுகியிருந்தார்... அன்று அதற்கான வரைபடத்தை நீலமேகம் பார்த்து ஒப்புதல் கொடுத்ததும் ஒப்பந்தத்தைப் பேசி முடித்துக் கையெழுத்திட்டு கட்டிட வேலைகளை ஆரம்பித்து விடவேண்டும் என்று நீலமேகமும் பத்மநாபனும் கைபேசியில் பேசி முடிவெடுத்திருந்தார்கள்.. அதன்படி தனது வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு பத்மநாபனைச் சந்திக்க வந்திருந்தார் நீலமேகம்... அவர் நினைத்திருந்தால் அவரிடம் வேலை பார்க்கும் மேனேஜர்களில் ஒருவரை அனுப்பியிருக்கலாம்.. ஒப்பந்தப் பத்திரத்தை அவரது அலுவலகத்திற்கு கொண்டு வரச் செய்து கையொப்பமிட்டு அனுப்பி வைத்திருக்கலாம்.. அந்த அளவுக்கு அவர் நேரத்தை செலவிட முடியாதவர்..

இருந்தும் நீலமேகம் நேரடியாக பத்மநாபனைச் சந்திக்க வந்திருக்கிறார் என்றால் பத்மநாபனிடமும் அவர் வைத்திருக்கும் அன்பு அத்தகையது.. நீலமேகத்திற்கு இணையான தொழிலதிபர் பத்மநாபன்.. நீண்டநாள் நண்பரும் கூட.. ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் வேலையை முன்னிருத்தி நண்பரிடம் அளவளாம் என்ற எண்ணத்தில்தான் அவரே நேரடியாக வந்திருந்தார்..

நீலமேகத்துடன் ஒப்பிட்டால் வேறு எவருமே முக்கியமான விருந்தினராக இருக்க முடியாது.. அப்படிப் பட்ட நீலமேகம் வந்திருக்கும் செய்தியைச் சொல்லாமல் விட்டால் மண்டகப்படி கிடைத்து விடுமே என்ற பயத்தினால் ரூபா செயல்பட்டால் அதைச் சொன்னதற்காகவே மண்டகப்படி கிடைக்கிறது என்றால் இந்தக் கொடுமையை யாரிடம் சொல்வாள்..?

யாரிடம் சொன்னாலும் ரூபா முன்னால் 'ஐயோ பாவம்' என்று அனுதாபம் காட்டி விட்டு அவள் இந்தப்பக்கம் வந்ததும் 'வேண்டும் இவளுக்கு..' என்று சந்தோசப் படத்தான் போகிறார்கள்.. அந்த சந்தோசத்தை எதற்காக மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று வாயை மூடிக் கொண்ட ரூபா காபியை வரவழைத்துத் தானே எடுத்துச் சென்று கொடுத்தாள்..

"நான் கொண்டு போய் கொடுக்கிறேன் மேடம்.." என்ற பியூனிடம்..

"இருக்கட்டும் மாணிக்கம் நீயும்தான் பாவம் எத்தனை வேலையைத்தான் பார்ப்ப.. நான் எம்.டியிடம் இந்த ஃபைலில் சைன் வாங்கப் போயாகனும்.. அப்படியே இந்தக் காபிக் கப்புகளை கொடுத்து விட்டு வந்து விடுவேன்.. நீ போய் மத்த வேலைகளைப் பாரு.." என்று காருண்ய திலகமாக காபிக் கப்புகள் இருந்த டிரேயை அவள் பிடுங்கிக் கொண்டதில்..

"இன்னைக்குன்னு இந்தம்மாவுக்கு என்ன ஆச்சு..? உக்காந்த இடத்தை விட்டு எழுந்திருக்காது.. சட்டமா ஆயிரம் வேலைகளை அடுக்கிக்கிட்டே போகும்.. மனுசனுக்கு முழி பிதுங்கி நாக்குத் தள்ளிராதான்னு நினைச்சுக்கூடப் பார்க்காது.. இப்ப என்னடான்னா கையில இருக்கிற காபிக்கப்பை பிடுங்கிக்கிட்டுப் போகுது.. எதுக்காக இந்தக் கரிசனம்.." என்று பார்ப்பவர்களிட மெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான் மாணிக்கம்..

பண்பலைகளின் உபயமில்லாமல் அவன் செய்திகளைப் பரப்புவதில் வல்லவன் என்பதால் ரூபா காபிக்கப்புகளை

கொடுத்து விட்டுத் திரும்புவதற்குள் அவள் மாணிக்கத்திடமிருந்து காபிக் கப்புகளைக் கைப்பற்றிக் கொண்டு போன விவரம் அலுவலகம் முழுவதும் பரவிவிட்டது..

எம்.டியின் அறைக்குள் போன ரூபா சம்பளம் கொடுக்கும் எம்.டியை மறந்து அவருக்கு எதிரில் உட்கார்ந்திருந்த இளம் பெண்ணை அவசரத்துடனும், ஆர்வத்துடனும் பார்த்தாள்.. யார் அந்த நிலவு என்பதைப் போல.. யார் அந்த முக்கிய விருந்தாளி என்று உற்று உற்றுப் பார்த்தவளுக்கு அந்த இளம்பெண்ணின் எளிமையான தோற்றத்தில் ஏமாற்றமாகி விட்டது..

'இந்தப் பெண் வந்திருப்பதற்காகவா நீலமேகம் சாரை வெயிட் பண்ண வைக்கிறார்..?'

விசித்திரமான அவளது பார்வையை கண்டு கொள்ளாமல் அந்த இளம் பெண்ணுக்கு காபி கொடுக்கச் சொல்லி சைகை செய்தார் பத்மநாபன்.. நான் என்ன எம்.டியின் செக்கரட்டரியா இல்லை பியூனா என்று ரூபாவுக்குள் கொதிப்பு வந்தது..

'இது நானாய் இழுத்துக்கிட்ட இழுவை..'

தன்னைத்தானே நொந்து கொண்டவளாக ரோபோ போல அந்தப் பெண்ணிடம் காபி டிரேயை நீட்டினாள்..

"தேங்க் யு.." மிகச் சின்னப் புன்னகையுடன் அந்தப் பெண் காபி கப்பை எடுத்துக் கொண்டதில் ரூபாவின் மன வருத்தம் ஓடி விட்டது..

"நோ மென்சன்.." பதிலுக்கு முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டிவிட்டு பத்மநாபனிடம் காபிக் கப்பை நீட்டினாள்..

அவர் நீலமேகத்தைப் பற்றிக் கேட்பார் என்று எதிர்பார்த்தாள்.. சிந்தனையுடனிருந்தவர் நீலமேகத்தைப் பற்றி ஒற்றைச் சொல்லைக்கூட உதிர்க்கவில்லை..

'என்னடா இது..' ஆச்சரியத்துடன் வெளியேறி விட்டாள்..

காத்திருந்த நீலமேகத்திடம் சங்கடத்துடன்..

"எம்.டி ஹெஸ் சம் அர்ஜன்ட் வொர்க் சார்.." என்றாள்.

கடுமையான முகத்துடன் தலையசைத்த நீலமேகம் இந்தக் காத்திருத்தலை விரும்பவில்லை என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.. ரூபாவால் என்ன செய்ய முடியும்..? அவர் வந்ததை பத்மநாபனிடம் தெரிவித்ததற்கு சரியான மண்டகப்படி கிடைத்திருக்கிறது.. அதற்கு மேலும் வாய்விட அவளென்ன முட்டாளா..? நீலமேகத்தின் கோபத்தைப் பற்றிய அக்கறை பத்மநாபனுக்கே இல்லாதபோது சம்பளம் வாங்கும் அவளுக்கு என்ன வந்தது..?

மனதுக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டாலும் முறைத்துக் கொண்டிருந்த மனிதரின் முன்னால் உட்கார்ந்திருப்பது முள்ளின்மீது உட்கார்ந்திருப்பதைப் போல இருந்ததில் ஏதோ வேலையிருப்பதைப் போல ரோஜாவிடம் போய் விட்டாள்.. அவளோ இவளை நிமிர்ந்து கூடப் பார்க்காமல்..

"மாணிக்கத்தின் கையிலிருந்த காபிக் கப்புகளை எம்.டியிடம் கொடுக்க விடாமல் நீயே பிடுங்கிக்கிட்டுப் போனாயாமே.. என்ன விசயம்..? எம்.டிக்குப் போன காபியை வழி மறித்துப் பிடுங்கி நீயே குடித்து விடலாம்ங்கிற திட்டத்தை எத்தனை நாள் ஸ்கெட்ச் போட்ட..?" என்று கேட்டு வைத்தாள்..

"இப்பத்தானடி கொண்டு போனேன்..? இன்னும் அவங்க காபியைக் கூடக் குடித்திருக்க மாட்டாங்க.. அதுக்குள்ள விசயம் ஆபிஸ் பூராவும் பரவிருச்சா..? இந்த மாணிக்கம் இருக்கானே.."

"அவனே பி.பி.சி.. நடமாடும் செய்திச் சேனல்.. தெரிஞ்சும் நீ மாட்டினா என்னடி பண்றது..? தானா வந்து தலையைக் கொடுத்தா அவன் கிடைச்சது சான்ஸீன்னு ஒலிபரப்பத்தான் செய்வான்.. நீயேண்டி மாட்டின..?"

"அதையேண்டி கேட்கிற.." என்று ஆரம்பித்த ரூபா விவரத்தைக் கூற ரோஜா சுவராஸ்யமாகி தன் வேலையை மறந்து கதை கேட்க ஆரம்பித்து விட்டாள்..

"நிஜமாகவா சொல்கிற..? நீலமேகம் சார் வெயிட் பண்ணுகிறாரா..?"

ரோஜா ஆதங்கப்பட்டதில் தனக்கொரு கூட்டாளி கிடைத்து விட்டாள் என்று அக மகிழ்ந்து போன ரூபா, கதைபேச வசதியாக அங்கேயே உட்கார்ந்து விட்டாள்..

பொதுவாக பத்மநாபனின் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் கூடி உட்கார்ந்து அரட்டை அடித்ததில்லை.. கதையும் பேசியதில்லை.. எந்த நேரம் பத்மநாபனின் அறையை விட்டு அவர் வெளியே வருவார் என்று யாருக்குமே தெரியாது என்பது ஒரு புறம்.. கதை பேசவும் அரட்டையடிக்கவும் யாருக்குமே நேரம் இருக்காது என்பது மறுபுறம் என்று சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் கம்பெனி அது..

நகரத்தின் அதி முக்கிய கண்ஸ்ட்ரக்சன் கம்பெனிகளில் ஒன்றான மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் முதலாளியான பத்மநாபன் தனது மனைவி மோகனாவின் பெயரில்தான் முதலில் கம்பெனியை ஆரம்பித்தாராம்.. 'மோகனா கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி..' என்பதை உச்சரிக்கவே நான் சின்ங்காக இருக்கிறது என்று தலையில் அடித்துக் கொண்ட அவரது மனைவி மோகனா கம்பெனியின் பெயரை..

'மேக்னோ கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனி' என்று மாற்றியமைத்தாளாம்.. அவள் மாற்றியமைத்த நேரம் சென்னையில் ஐ.டி கம்பெனி ஒன்றை ஆரம்பிக்க

வந்த வெளிநாட்டுக் கம்பெனி ஒன்று அவர்களது அலுவலகத்திற்கான பலமாடிக் கட்டிடத்தைக் கட்டும் வேலைக்கு மேக்னோ கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனியுடன் ஒப்பந்தம் போட்டார்கள்.. அதை அதி நவினமாக பத்மநாபன் கட்டி முடித்துத் தந்ததில் அடுத்தடுத்து அதுபோன்ற பில்டிங்குகளைக் கட்டித் தருவதற்கான ஆர்டர்கள் குவியத் தொடங்கியது..

ஐ.டி கம்பெனிகள் கொடி கட்டி பறக்க ஆரம்பித்திருந்த காலம் அது.. அனைத்திலும் நவினத்தை விரும்பும் ஐ.டி

கம்பெனிக்காரர்கள் அவர்கள் எதிர்பார்த்ததை விட படு சிறப்பாகவும் நேர்த்தியாகவும் மேக்னோ கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனி கட்டிடங்களைக் கட்டித் தந்த விதத்தில் மகிழ்ந்து போய் வெளி மாநிலங்களில் அவர்கள் ஆரம்பிக்கும் கம்பெனிகளுக்கான கட்டிடங்களைக் கட்டித் தரும் வேலையையும் பத்ம நாபனிடமே ஒப்படைத்தார்கள்..

சென்னை, பெங்களூர், ஹைதராபாத் என்று பல நகரங்களில் மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதன் தலைமை அலுவலகமான சென்னை அலுவலகம் எப்போதும் பரபரப்பாகவும், சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கும்..

இந்த அதிவேக வளர்ச்சிக்கு பத்மநாபனின் தொழில திறமைதான் காரணம் என்பாள் மோகனா.. இல்லை.. மோகனா என்ற மனைவியின் பெயரின் சாயலில் 'மேக்னோ' என்று கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு பெயர் வைத்ததுதான் காரணம் என்று சாதிப்பார் பத்மநாபன்.. அவர்களது அன்யோன்யமான காதல் வாழ்க்கையைப் பார்த்து வளர்ந்தவன்தான் பிரசன்னா.. அவர்களையும் மிஞ்சிய காதல் வாழ்வை தானும் தன் மனைவியும் வாழ வேண்டுமென்ற ஆசை அவனுக்குள் உண்டு..

'அந்த ஆசை நிறைவேறுமா..?'

பத்மநாபனின் மனதை துயரம் கவ்வியது.. எதிரில் அமர்ந்திருந்த பெண்ணை உற்றுப் பார்த்தார்..

மெலிதான உடல்வாகு.. கொடி போல இருக்கிறாள் டாடி என்பான் பிரசன்னா.. மாசு மருவற்ற, கள்ளம், கபட மில்லாத வெள்ளை மனதை பிரதிபலிக்கும் முகம்..

அதை நிலவு முகம் என்பான்.. அமைதியான அவளது பார்வையை நேர் கொண்ட பார்வை என்பான்.. இப்படி அவளின் அத்தனை தன்மைகளையும் வியந்து காதலித்தவனைத்தான் அவள் வேண்டாம் என்று உதறி விட்டாள்..

"எந்த டிசிசனும் ஃபைனல் டிசிசன் ஆகிடாது அம்மா.. நாம் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பேசலாம்.. இதற்கு ஒரு சொலுசன் கிடைக்காமல் போகாது.."

"எதற்காக எல்லோரும் உட்கார்ந்து பேசி முடிவெடுக்கனும் அங்கிள்..? இது என் வாழ்க்கை..

முடிவை நான்தான் எடுக்கனும்.. தீர்வையும் நான்தான் சொல்லனும்.."

'இது முடிவேயில்லாத சுற்று..'

போன தலைவலி மீண்டும் வரவா என்று கேட்டதும்.. எங்கு சுற்றினாலும் அவள் இறுதியாக ஒரே பதிலில் மற்றவர்களைக் கொண்டு வந்து நிறுத்துவதில் அவருக்கு பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது..

ஆனானப்பட்ட மேக்னோ கண்ட்ஸ்டரக்சன் கம்பெனியின் முதலாளியான பத்மநாபனையே தலையால் தண்ணீர் குடிக்க வைத்துக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணின் சக்தி எப்பேற்பட்டது என்பதை அறியாமல் படு சுவராஸ்யமாக ரோஜாவிடம் ரூபா கதை பேசிக் கொண்டிருந்தாள்..

## 3

"நீ அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கனும்.." ஆரம்பித்தாள் ரூபா..

"நான்தாண்டி முதலில் பார்த்தேன்.." அறிவித்தாள் ரோஜா..

"என்னது..? எனக்கும் முன்னால் நீ பார்த்துட்டியா.. எப்படிடி.. ஹௌ இஸ் இட் பாஸிபிள்..? நான்தானே எம்.டியோட செக்கரட்டரி..?" ரூபா படபடத்தாள்..

"உனக்கே உன் போஸ்ட் எதுன்னு சந்தேகம் வந்திருச்சு பார்த்தியா.. எம்.டியோட செக்கரட்டரின்னு வாய் கிழிய சொல்லிக்கிட்டா மட்டும் போதுமா..? அவருக்கும் முன்னால்

சீட்டில் வந்து உட்கார்ந்திருக்க வேணாமா..?" ரோஜா சொல்லிக்காட்டினாள்..

"அதுக்குத்தான் நீ இருக்கியே.. ஆளுக்கு முந்தி ஆபிசுக்கு வந்து ரிசப்சனிஸ்ட் சீட்ல எண்ட்ரி கொடுத்துருவியே.."

பொறாமையுடன் சொன்னாள் ரூபா.. ரோஜாவுக்கு எம்.டியின் செக்கரட்டரி போஸ்ட்டுக்கு வர வேண்டுமென்ற ஆசை அடி மனதில் இருந்தது.. அதை ரகசியம் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்க.. சூட்சுமப் புத்தி கொண்ட ரூபா மிக எளிதாக அவளது ஆசையை இனம் கண்டு விட்டாள்.. அலுவலகத்தில் நுழைந்தவுடன் வரவேற்புப் பகுதியைக் கடந்து செல்லும் போதே பிரகாசமான முகத்துடன் பத்மநாபனுக்கு..

"குட் மார்னிங்.." சொல்லி விடுவாள் ரோஜா..

மற்ற அலுவலர்களை அவர் பார்க்கிறாரோ இல்லையோ.. ரோஜாவைப் பார்த்து விடுவார்.. அதே சமயம் அவருக்குப் பெர்சனல் செக்கரட்டரியாக பணி புரியும் ரூபாவை அவளது சீட்டில் அவரால் பார்க்க முடிந்ததே இல்லை..

'எப்படி பார்க்க முடியும்..? பத்து மணி ஆபிசுக்கு ஒன்பதரைக்கே வந்து உட்கார்ந்தா அடிச்சுப் பிடிச்சு ஆபிசுக்கு ஓடி வருகிற லேடிஸ் என்ன பண்ணுவாங்க..'

இந்த நியாயத்தை பத்மநாபனிடம் கேட்க முடியாமல் ரோஜா ஒன்பதேகாலுக்கே அலுவலகத்திற்குள் எண்ட்ரி கொடுத்து ரூபாவை சோதித்துக் கொண்டிருந்தாள்..

'இவ என் சீட்டை கைப்பற்றாம விட மாட்டா போல இருக்கே..'

மனதில் இருக்கும் புழுக்கத்தில் ரூபா ரோஜாவிடம் அவ்வளவாக பேசிக் கொள்ள மாட்டாள்.. அதிலும் அவள் வருவதற்கு முன்னால் ரோஜா வந்து உட்கார்ந்து அவளது வேலைகளைப் பார்த்து வைத்து விடுவதில் வேகு வேகு என்று இருக்கும்.. அதனால் அவள் என்ன வேலைகளைப் பார்த்து வைத்திருக்கிறாள் என்று கேட்கவே மாட்டாள்.. பார், உன் வேலைகளை நான் பார்த்து வைத்திருக்கிறேன் என்ற

ரீதியில் முகத்தை வைத்துக் கொண்டு ரோஜா பேசுவது இவளுக்குப் பிடிக்காது.. நாராசமாக இருக்கும்..

"உனக்கும் முன்னால் நான் வந்தாகனுமே ரூபா.. ரிசப்சன் என்பது என்கொயரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய இடம்.. செக்கரட்டரி போஸ்ட்டை விட இது கேர் எடுத்துச் செய்ய வேண்டிய வேலை.. ஸோ.. நான் சீக்கிரமா வந்து விடுகிறேன்.. அப்படி வந்ததினால்தான் உனக்கும் முன்னால் நான் அந்த யங் லேடியை ரிஸீவ் பண்ற சான்ஸ் கிடைச்சது.."

ரோஜா அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறாள் என்பதில் மனதில் இருந்த கசப்புகளை மறந்து விட்டு ஆர்வமானாள் ரூபா..

"படு சிமிபிள் லேடி.. இந்த பெண்ணுக்காக தி கிரேட் பிஸினெஸ் மேன் நீலமேகம் சாரை நம்ம எம்.டி வெயிட் பண்ண வைத்துக்கிட்டு இருக்கார்.. இன்றைக்குத்தான் நீலமேகம் சாரோட கண்ஸ்ட்ரக்சனுக்கான அக்ரிமெண்ட் சைன் ஆகப் போகுது.."

"அவர் நம்ம கம்பெனியோட இம்பார்ட்டண்ட் கிளையண்டாச்சே.."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்.. இவரை விடவா அந்தப் பெண் இம்பார்ட்டண்ட்..?"

"டு யு நோ ரூபா..? அந்தப் பெண்ணிடம் எம்.டி சாரின் பெர்சனல் விசிட்டிங் கார்டு இருந்தது.."

"என்னவோ போ.. ஒரே மர்மமா இருக்கு.."

"எனக்கென்னவே அந்தப் பெண்ணைப் பார்த்தால் யோகி போலத் தோணுது ரூபா.."

"மர்ம யோகிங்கிறயா..?"

"ஊஹீம்.. சாந்த யோகி..! முகத்தில் என்னவொரு அமைதி.. எல்லாவற்றையும் கடந்து விட்டதைப் போல அப்படியொரு பக்குவம், நிதானம்.. ஐ லைக் ஹெர்.."

"ஐ ஹேட் ஹெர்.. இவளாலே எனக்குத்தான் டென்சன்.."

"அந்தப் பெண் எவ்வளவு பிரண்ட்லி தெரியுமா..?"

"தெரியும், தெரியும்.. காபியைக் கொண்டு போன எனக்கு தேங்க்ஸ் சொல்லுச்சு.."

"அதுக்கப்புறமும் கரிச்சுக் கொட்டறியே.."

"இவளாலே தேவையில்லாம எம்.டியிடம் பாட்டு வாங்க வேண்டியதாப் போச்சு ரோஜா.."

எரிச்சலுடன் முகம் சுளித்தாள் ரூபா.. அவளது எரிச்சலுக்கும் கோபத்துக்கும் ஆளாகியிருந்த அந்த இளம் பெண்ணோ அது பற்றி அறியாமல் எம்.டி பத்மநாபனின் அறையில் அமைதியாக காபியைக் குடித்து முடித்து விட்டு பத்மநாபனை ஏறிட்டாள்..

"தேங்க்ஸ் அங்கிள்.."

"எதுக்கும்மா..?"

"காபிக்கும், வேலை போட்டுக் கொடுத்ததிற்கும்.."

அமைதியான அவளது பதிலில் துயரம் கொண்டார் பத்மநாபன்.. ஒரு துறவியைப் போலப் பற்றுக்களை அறுத்தெரிந்திருக்கிறாளே இந்த இளம் பெண்.. இந்தச் சின்ன வயதில் இப்படியொரு பக்குவம் எப்படி இவளிடம் வந்தது..? காதலுக்காக அனைத்து உறவுகளையும் உதறி விடுபவர்களை அவர் பார்த்திருக்கிறார்.. அனைத்து உறவுகளுடன் காதலையும் சேர்த்து உதறி விட்ட ஓர் காதலியை இப்போதுதான் பார்க்கிறார்..

"பிரசன்னா அமெரிக்காவில இருந்து கிளம்பிட்டான்ம்மா.."

"இதை எதுக்காக என்னிடம் சொல்கிறீங்க அங்கிள்..? ஆண்ட்டியிடம் சொல்லுங்க.. அவங்க சந்தோசப் படுவாங்க.."

"அவன் உனக்காகத்தான் கிளம்பி வருகிறான்.."

"வேஸ்ட் ஆஃப் டைம்ன்னு சொல்லுங்க அங்கிள்.. என் மனது மாறாதுங்கிறதைப் புரிய வையுங்க.."

"சிலவற்றைச் சொல்லித் தெரிய வைக்க முடியாதும்மா.. பட்டுத்தான் தெரிந்துக்கனும்.."

"இதை யாருக்காக சொல்கிறீங்க அங்கிள்..?"

"பிரசன்னாவுக்காக.. அவன் பட்டுத் தெரிந்துக் கட்டும்.."

அவர் பெருமூச்சு விட்டார்.. அவரது துயரமும், பேச்சும், பெருமூச்சும் அவளைத் துளியளவும் பாதிக்க வில்லை..

"நான் கிளம்பட்டுமா அங்கிள்.." என்றாள்..

'நீ மாறவே மாட்டாயா..?' நிராசையுடன் அவர் பார்த்த பார்வை அவளது நெஞ்சைத் துளைக்கவில்லை.. சாந்தமாக பார்த்து வைத்தாள்..

"ஓகே.. நீ டிசைட் பண்ணிட்ட.. நான் பேசி ஆகப் போகிறது எதுவுமில்லை.. மீறிப் பேசினா உன்னை ஃபோர்ஸ் பண்ணுகிறதைப் போல ஆகி விடும்.. நீ கோபித்துக்கிட்டு இங்கே வேலை பார்க்க மாட்டேன்னு சொன்னாலும் சொல்லி விடுவாய்.."

'தெரியுதில்ல.. அப்புறமும் ஏன் வாதாடுகிறாய்..' என்பதைப் போன்ற சின்னச் சிரிப்பை சிரித்து வைத்தாள் அவள்..

எதுவும் செய்ய முடியாத இயலாமையோடு அவர் இருப்பதை உணர்ந்து கொண்டவளாக அவள் எழுந்து கொண்டாள்..

"என்னம்மா..?"

"நான் கிளம்புகிறேன் அங்கிள்.."

"எங்கேம்மா..?"

"நான் குடியிருக்கும் வீட்டிற்கு.."

"அதுதான் எங்கேன்னு கேட்கிறேன்.."

அவள் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்ததில் ஆயாசமாக சேரில் சாய்ந்தார்.. வருத்தத்துடன் அவளை நோக்கியவரின் விழிகளில் அளவொண்ணாத் துயரம் இருந்தது..

"உன் வீடு மாளிகைம்மா.. நீ அங்கே இளவரசி.. உன்னை மகாராணி போல வாழ வைக்க ஒருவன் காத்திருக்கிறான்.."

"நான் சராசரிப் பெண்ணாக வாழ விரும்புகிறேன் அங்கிள்.. இளவரசிப் பட்டம் எனக்கு வேண்டாம்.. இளவரசிகள்தான் மகாராணியாக முடியும்.. ஸோ.. மகாராணியாகும் வாழ்க்கையும் எனக்கு வேண்டாம்.. எனக்காக யாரும் காத்திருக்க வேண்டாம் அங்கிள்.. வேறு ஒரு இளவரசியைத் தேடச் சொல்லுங்கள்.."

"உன்னைத் தேடி அவன் வரும்போது இதை நீயே அவனிடம் சொல்லி விடும்மா.. எனக்கு அந்தத் திராணி இல்லை.."

"எனக்கான அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் எப்போது கிடைக்கும் அங்கிள்..?"

"இது உன் கம்பெனி அம்மா.. உனக்கு நான் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கொடுப்பதா..?"

"ஊஹீம்.. இது உங்கள் கம்பெனி அங்கிள்.. கம்பெனியின் புராஜிஜர் எதுவோ அதைத்தான் நீங்க ஃபாலோ பண்ணனும்.. எனக்கு எந்தவிதமான எக்ஸெம்பசனும் தேவையில்லை.."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்க.. அறைக்கு வெளியே காத்திருந்த நீலமேகம் அதற்கு மேலும் பொறுமை காக்க முடியாது என்று பொங்கி எழுந்தார்.. ரோஜாவிடம் கதை பேசிவிட்டு ஆடி அசைந்து வந்த ரூபா அவர் வேகமாக எழுந்து கொள்வதைக் கண்டதும்..

'இந்தக் கம்பெனியோட டீலிங்கே வேண்டாம்ன்னு டிசைட் பண்ணிக் கிளம்புகிறார் போல.. அப்படித்தான் செய்யனும்.. அப்போதுதான் இந்த எம்.டிக்கு புத்தி வரும்..' என்று மனதுக்குள் திருப்தி அடைந்தபடி வெளியில்..

"சார்.. ப்ளீஸ்.. ஜஸ்ட்.. ஃபியு மினிட்ஸ்.. வெயிட் பண்ணுங்க சார்.. கோபப்பட்டு அக்ரிமெண்டைக் கேன்சல் பண்ணிராதீங்க சார்.." என்று கெஞ்சுவதைப் போலப் பாவனை செய்தாள்..

அவர் வெளியில் போவார் என்று அவள் நினைத்தால், அவர் வேகமாக பத்மநாபனின் அறைக்குள் சென்று விட்டார்.. பதறிப்போன ரூபா அவர் பின்னாடியே ஓடி வர அறைக்குள் வந்து..

"வாட் இஸ் திஸ் பத்மநாபன்..? உன் கம்பெனியில் எனக்குக் கிடைக்கும் ரெஸ்பெக்ட் இதுதானா..?" என்று உறுமியவர் அங்கே நின்று கொண்டிருந்த பெண்ணைக் கண்டதும் அப்படியே நின்று விட்டார்..

"நீ.. நீ.. நீ.." அவர் திக்கித் திணற அமைதியாக பத்பநாபனைப் பார்த்த அந்த இளம்பெண்..

"நான் ரிசப்சனில் வெயிட் பண்றேன் அங்கிள்.." என்று சொல்லி விட்டு வெளி நடப்பு செய்து விட்டாள்..

"வெயிட்.. வெயிட்.. நீ.. நீ.." நீலமேகம் வழி மறிக்க அவள் நடையை நிறுத்தாமல் அவளுக்கே உரித்தான மெல்லிளம் புன்னகையுடன்..

"நான்.. நான்தான் அங்கிள்.." என்றபடி நிற்காமல் சென்று விட்டாள்..

'அங்கிளா..?' ரூபாவுக்கு தலையைச் சுற்றியது..

காபி கொடுக்க அவள் வந்து போனபோது அந்தப் பெண் பத்மநாபனை அங்கிள் என்று அழைப்பதைக் கவனித்திருந்தாள்..

'ஏதாச்சும் தூரத்து உறவுக்காரப் பெண்ணா இருக்கும்.. படிச்சிருக்கு.. உங்க கம்பெனியில வேலை போட்டுக் கொடுங்கன்னு கேட்டிருப்பாங்க.. எம்.டி சாரும் வேறு வழியில்லாமல் ஓகேன்னு சொல்லியிருப்பார்.. தூரத்துச் சொந்தம்ங்கிறதினால தட்ட முடியாம போயிருக்கும்.. இது உடனே ஆபிசுக்கு வந்து எம்.டி சார்கிட்ட அங்கிள்

உறவுமுறை சொல்லிக் கூப்பிட்டுக் கெத்து காண்பிக்கப் பார்க்குது.. எம்.டி யோட ரிலேட்டிவ்ன்னு செம இம்பார்ட்டன்ஸ் கிடைக்கும்ங்கிற கால்குலேசன்தான்... வேறு என்ன..?'

அந்தப் பெண்ணின் எளிமையான தோற்றம் ரூபாவை அப்படித்தான் நினைக்க வைத்திருந்தது.. இப்போது நீலமேகத்தையும் அவள் 'அங்கிள்' என்று சொன்னதில் இவள் அயர்ந்து விட்டாள்..

'நீலமேகம் சார் இருக்கிற லெவல் என்ன..! இவ இவரையும் அங்கிள்ங்கிற.. இவ யாரா இருப்பா..?'

ரூபாவுக்கு மர்மம் தாங்கவில்லை.. நீலமேகமோ அந்தப் பெண்ணைத் தொடர்ந்து செல்ல ஆரம்பித்து விட்டார்.. பத்மநாபன்தான் அவரை இழுத்துப் பிடித்து வைக்க வேண்டியதாக இருந்தது..

"விடு நீலமேகம்.. அவள் போகட்டும்.."

"இவ எங்கேடா இங்கே வந்தா..?"

"வேலை பார்க்க.."

"யாரு இவளா..?"

நீலமேகத்தின் ஆச்சரியமான கேள்வியில் வந்திருக்கும் இளம்பெண் 'படு தத்தி போல' என்று நினைத்துக் கொண்டாள் ரூபா.. மக்காக இருப்பவளை வைத்து வேலை வாங்க வேண்டுமென்ற தலைவிதி எம்.டிக்கு வர வேண்டுமா என்ற அனுதாபம் அவள் மனதில் எழுந்தது.. அதை அவரிடம் சொன்னால் உன்னை வைத்து வேலை வாங்க வேண்டுமென்ற தலைவிதி எனக்கு வேண்டாம்மா என்று சொல்லி உடனடியாக ரூபாவின் சீட்டைக் கிழித்து வேலையை விட்டு அனுப்பி விடும் அபாயம் இருந்ததால் அதை வெளியில் சொல்லாமல் மனதுக்குள் புதைத்துத் தன் வேலையைக் காப்பாற்றிக் கொண்டாள்..

"ஆர் யு ஷ்யூர் பத்மநாபன்..?"

"யெஸ்.. ஐ ஆம் ஷ்யூர் நீலமேகம்.. அவள் என்னோட கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியில வேலை பார்க்கத்தான் வந்திருக்கிறா.."

எதையோ சொல்ல வாயெடுத்த நீலமேகம் தோள்களைக் குலுக்கிக் கொண்டு..

"ஸோ ஸேட்.. ஸோ ஸேட்.." என்று வருத்தப்பட்டார்..

'இதைக் கேட்டுமா எம்.டிக்கு புத்தி வரவில்லை..?' இமைகொட்டி விழித்தாள் ரூபா..

'அவளுக்கு வேலை கொடுப்பது எத்தனை சோகமானதுன்னா நீலமேகம் சார் இந்த அளவுக்கு வருத்தப் படுவார்.. இது எம்.டி சாருக்கு புரியலையே..'

ரூபா அறையை விட்டு வெளியேறாமல் அங்கேயே நின்று வாய் பார்த்துக் கொண்டிருப்பதில் அதிருப்தி கொண்ட பத்மநாபன் அவளைக் குறிப்பாக பார்த்து வைத்தார்.. குறிப்பை உணராத நெடுமரமாக அவள் அசையாமல் நின்றதில் அவர் மனதில் குபுகுபுவென கோபம் மூண்டது..

"என்ன படித்திருக்கா..?" நீலமேகம் கேட்டார்..

"பி.ஈ. சிவில் என்ஜினியரிங்.."

"அவ குடும்பத்தில இதைத்தான் படிக்க வைப்பாங்க.."

"யெஸ்.."

"மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியில இந்தப் பெண் என்ஜினியரா வேலை பார்க்கப் போகிறாளா..?"

"அப்படித்தான் அவ சொல்கிறா.. அதுக்காகத்தான் இங்கே இன்றைக்கு என்னைப் பார்க்க வந்திருக்கிறா.. அவளுடன் பேசுவதற்காகத்தான் நான் உன்னை வெயிட் பண்ண வைக்க வேண்டியதாப் போச்சு.. ஐ ஆம் ஸாரி நீலமேகம்.."

"போடா ஃபூல்.. சாருலதாவை விட நான் உனக்கு முக்கியமா..?"

நீலமேகத்தின் கேள்வியில் ரூபா மனதுக்குள்..

'அவ பெயர் சாருலதாவா..?' என்று கேட்டுக் கொண்டாள்..

4

ஆம்.. அவள் பெயர் சாருலதாதான்..!

சாருலதா நேர்கொண்ட பார்வையும், நிதானமான நடையுமாக அறையை விட்டு வெளியேறியிருக்க.. அவளை நீலமேகமும் அறிவார் என்பதில் அலுவலகம் முழுவதும் பரப்ப ரூபாவுக்கு இன்னுமொரு தகவல் கிடைத்து விட்டது..

'பார்த்தா படு சிம்பிளா இருக்கிறா.. ஆனா.. விவிஐபியெல்லாம் இவளுக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுத்து உச்சத்தில தூக்கி வைக்கிறாங்க..'

வானத்தில் இருக்கும் நிலவை அண்ணாந்து பார்ப்பதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்த நீலமேகம் பத்மநாபனிடம் திரும்பி..

"சாருலதாதான் உள்ளே இருக்கிறாள்னு சொல்கிறதுக்கு என்ன..? நான் டிஸ்டர்ப் பண்ணியிருக்க மாட்டேனில்ல.." என்று கடிந்து கொண்டார்..

"ம்ப்ச்.. சொல்கிறதைப் போல என்ன இருக்கு..?" சோர்வாகக் கூறினார் பத்மநாபன்..

"ஸாரி பத்மநாபன்.. என்னைக் காக்க வைத்துட்டங்கிற கோபத்தில உள்ளே வந்து விட்டேன்.."

"இட்ஸ் ஆல்ரைட் நீலமேகம்.. அவ கிளம்பிக் கிட்டுத்தான் இருந்தா.. நீ உட்காரு.. நம்ம டிஸ்கசனை ஆரம்பிக்கலாம்.."

"உன்னுடன் பேசிக்கிட்டு இருக்கிறது சாருலதாதான்னு தெரிந்திருந்தா நான் நாள் முழுக்க வெயிட் பண்ணியிருப்பேனே.."

'என்னது..' காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாத பிரமிப்புடன் நீலமேகத்தைப் பார்த்தாள் ரூபா..

அவர் எத்தனை பெரிய தொழிலதிபர்..! சாருலதாவுடன் பத்மநாபன் பேசும் பேச்சை இடையூறு செய்யக் கூடாது என்பதற்காக நாள் முழுவதும் காத்திருப்பாராமே..

'இந்த சாருலதா என்ன அத்தனை பெரிய அப்பா டக்கரா..?'

யார் அந்த சாருலதா என்று அறியும் ஆவல் ரூபாவுக்குள் அலைமோதியது.. அவள் மனதைப் படித்து விட்டதைப் போல..

"அவள் பெயர் சாருலதா.." என்று பத்மநாபன் அவளிடம் சொல்லியதில் திகில் பிடித்துக் கொண்டது..

'ஹைய்யோ.. நான் அந்த சாருலதாவை நோட் பண்ணுகிறேன் என்கிறதை எம்.டி கண்டு பிடிச்சிட்டாரோ.. காலையில வாங்கின மண்டகப்படி போதாதா.. இன்னும் வாங்கனுமா..? ரூபா.. நீ காலிடி..' அவளுக்கு அழுகையே வந்து விட்டது..

"சார்.." அவள் நாத்தழுதழுக்க மன்னிப்புக் கோர யத்தனிக்க.. பத்மநாபன் அவளது முகபாவத்தைக் கவனிக்காமல்..

"பி.ஈ, சிவில் என்ஜினியர்.. இன்னையில இருந்து நம் கம்பெனியில வொர்க் பண்ணப் போறா.. அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டரை டைப் பண்ணி விடுங்க.." என்றார்..

'ஓ.. இதைச் சொல்லத்தான் அவள் பெயரைச் சொன்னாரா..' ரூபாவின் சுவாசம் சீரானது..

"ஓகே சார்.." என்றவள் தயங்கி நின்று..

"அவங்க செர்டிபிகேட்ஸ், புல் நேம் அண்ட் அட்ரஸ் மத்த டீடெயில்ஸ் எல்லாம் வேண்டுமே சார்.." என்று பவ்யமாக வினவினாள்..

"ரிசப்சனில்தான் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கா.. தேவையான டீடெயில்ஸை கேதர் பணிக்கங்க.." என்ற

பத்மநாபன் கதவோரமாக சென்று விட்ட ரூபாவிடம்..

"ஒன் மினிட்.." என்று நிறுத்தினார்..

"சார்..?"

இப்போது என்ன சொல்லப் போகிறாரோ என்ற பயத்துடன் நின்றாள் ரூபா.. ஒருமுறை தப்பி விட்டாள் என்பதற்காக எப்போதுமே அவள் தப்பித்துக் கொண்டிருக்க முடியாது என்ற பல அனுபவ பாடங்களைக் கற்றவள் அவள்.. பத்மநாபன் எப்போது எதைச் சொல்வார் என்று அந்த அலுவலகத்தில் பணி புரியும் எவருக்குமே தெரியாது.. அவரது மனநிலையைக் கணிப்பது மிகவும் கடினம்..

பத்மநாபனின் முகத்தில் இருந்த கடுமை அவளது பயத்தை அதிகரித்து வைத்தது..

"டோன்ட் ஆஸ்க் ஹெர் அன்னெசஸரி கொஸ்டின்ஸ்.." கடினமான குரலில் எச்சரித்தார்..

"ஓகே சார்.." தலையாட்டி விட்டு அறையை விட்டு வெளியே வந்த ரூபாவுக்கு சாருலதாவின் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. அன்றைய நாளின் இனிமையை சாருலதா தன் வரவால் கெடுத்து விட்டாள் என்று அவள் நினைத்தாள்.. சாருலதாவினால்தான் எம்.டி ரூபாவைக் கோபித்துத் திட்டினார் என்ற வன்மம் அவள் மனதில் வந்தது..

'இவ பெரிய மகாராணி.. இவகிட்ட நான் அன்னெசஸரியா கொஸ்டின் பண்ணக்கூடாது.. வேலை பார்க்கத்தானே வந்திருக்கிறா..? இந்தக் கம்பெனியை விலைக்கு வாங்க வரலையே.. இவ்வளவு பில்ட்-அப் கொடுக்கிறாங்க.. ஆள் ஆளுக்கு இவளுக்கு குடை பிடிக்கிறாங்களே..'

பொருமிய ரூபாவிற்குத் தெரியாது.. சாருலதா இளவரசிக்கு நிகரானவள், அந்தக் கம்பெனியை விலைக்கு வாங்கும் அளவிற்கு வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவள், மகாராணியைப் போல வாழ வேண்டியவள் என்பது..

ஆசையைத் துறக்க வேண்டும் என்று அனைத்தையும் துறந்த மன்னன் சித்தார்த்தன் போதி மரத்தடியில் புத்தனாகித் துறவியானான்..

சாருலதாவும் ஒரு வகையில் துறவிதான்.. பெண் துறவி..! பிறந்த வீட்டின் சுகபோகங்களைத் துறந்தவள்.. அவளுக்காகக் காத்திருக்கும் வளமான வாழ்க்கையைத் துறந்தவள்.. பற்றற்று தவம் செய்யும் பெண் யோகி..! ஞானி..!

அவள் போல யாருண்டு..? அவளுக்கான மதிப்பு அவளுடைய பணத்தில் இல்லை.. குணத்தில் இருக்கிறது.. அதை அறிந்தவர்கள் ஆராதனை செய்வார்கள்.. ரூபா இன்னும் சாருலதாவைப் பற்றி அறியவில்லையே..

ரோஜாவின் பக்கத்தில் இருந்த சேரில் அமர்ந்திருந்தவளை நோக்கி விரைந்தாள் ரூபா.. எம்.டியின் பிரத்யேக கவனிப்பில் இருப்பவள் என்பதால் உடனடியாக அப்பாயிண்மெண்ட் ஆர்டரை அடித்துக் கொடுத்து விட வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு.. ரோஜா சாருலதாவிடம் வெகு நாள்கள் பழகியவளைப் போல இணக்கமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தில் அடிவயிற்றில் நெருப்புப் பற்றிக் கொண்டது..

'பாவி..! படுபாவி..! அது எப்படித்தான் ஒருத்தரை பார்த்த அடுத்த செகண்டிலே கபால்ன்னு பாய்ந்து பிரண்டாகிடறாளோ.. இந்த வித்தை எனக்குத் தெரியலையே.. யாருன்னு தெரிந்துக்கிறதுக்கு முன்னாடியே வேண்டாதவளா ஆகித் தொலைச்சிடறேனே..'

விதியை நொந்தபடி அவர்களுக்கு அருகில் சென்றவள் வலிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சாருலதாவிடம் 'ஹலோ' சொல்ல முனைந்தாள்.. என்ன கழுதையினாலோ தொண்டையில் வார்த்தை சிக்கிக் கொண்டது.. அதை இழுத்துப் பிடித்து வெளியே தள்ளுவதற்குள் ரோஜா ரூபாவை ஏறிட்டுப் பார்த்து விட்டாள்..

"வா.. வா.. உனக்காகத்தான் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன்.." என்றபடி கம்யூட்டரில் பிரிண்ட் ஆகி வெளியே

வந்த பேப்பரை எடுத்து ரூபாவின் கையில் கொடுத்து..

"க்விக்.. இம்மீடியட்டா இதைக் கொண்டு போய் எம்.டியிடம் காண்பித்து சைன் வாங்கிட்டு வா.. மோஸ்ட் அர்ஜன்ட்.." என்று விரட்டாத குறையாகச் சொன்னாள்..

இதையெல்லாம் சாருலதா கவனித்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் ரூபாவுக்கு மிளகாயை அரைத்து உடலில் பூசியதைப் போல எரிச்சல் வந்தது.. ரூபா எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரி.. ரோஜாவோ ரிசப்சனிஸ்ட்... எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரி போஸ்ட் சக்தி வாய்ந்தது.. அவளைத்தாண்டித்தான் யாரும் எம்.டியின் அறைக்குள் சென்றாக வேண்டும்.. எம்.டியின் மனநிலை சந்தோசமாக இருக்கிறதா இல்லை கடித்துக் குதறி விடுவதைப் போன்ற ஆத்திரத்துடன் இருக்கிறதா என்பதை பற்றி அறிய ரூபாவின் தயவு வேண்டும்..

அப்படியிருக்க புதிதாக வேலைக்குச் சேரப் போகும் பெண்ணின் முன்னால் ரிசப்சனிஸ்ட்டான ரோஜா ரூபாவை விரட்டுவதா..?

"கொஞ்சம் அடங்கறியா.. எனக்கு இதைவிட அர்ஜண்டா வேற ஒரு வொர்க் இருக்கு.. உன் வேலையை நீயே பார்த்துக்கப் பழகிக்க ரோஜா.. அதுதான்

உனக்கு நல்லது.. உன் டெஸிக்னேசன் ரிசப்சனிஸ்ட் அப்படிங்கிறதை மறந்து விடாதே.. நான் எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரி.. மைண்ட் இட்.."

எடுத்த எடுப்பிலேயே சாருலதா ரூபாவை எளிதாக நினைத்து விடக் கூடாது.. அதற்கு இடம் தந்து விடக் கூடாது என்ற தோரணையுடன் சொன்னாள் ரூபா.. ரோஜாவிடம் அந்தத் தோரணை எடுபடவே இல்லை..

அவள் ரூபாவை மேலும் கீழும் அடையாளம் பார்ப்பதைப் போல பார்த்து விட்டு..

"இது என்ன புதுசா இருக்கு..? ஊம்..?" என்று உதட்டை வளைத்தாள்..

ரூபாவுக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவேயில்லை.. சகட்டு மேனிக்கு ரோஜாவை மனதுக்குள் திட்டித் தீர்த்தாள்..

"நான் ரிசப்சனிஸ்ட்.. நீ எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரிங்கிறது இப்பத்தான் மேடத்துக்கு ஞாபகத்துக்கு வந்ததாக்கும்..? இத்தனை நாளா நீ பதினொரு மணி வாக்கில சீட்டில வந்து உட்காருகிற வரைக்கும் உன் வேலையை நான் பார்த்து வைத்தேனே.. அப்போதெல்லாம் இது ஞாபகமே வருதே, ஞாபகம் வருதேன்னு ஞாபகத்துக்கு வரலையாக்கும்.. சும்மா ஜோக்கடிக்காதேடி.. இவ எம்.டியோட பெர்சனல் செக்கரட்டரியாம்.. நான் எழுந்து நின்று கும்பிடு போடனுமாம்.. எம்.டி கூட இந்த அளவுக்கு பந்தா பண்ணினதில்லை.. போ.." ரோஜா அலட்டிக் கொள்ளாமல் ரூபாவை ஒரு வழியாக்கித் திணற வைத்தாள்..

"எதைச் சொன்னா நீ எதைச் சொல்கிற.. எனக்கு அர்ஜண்ட் வொர்க் இருக்கு ரோஜா.. டோன்ட் டிஸ்டர்ப் மி.."

"அப்ப நீ இந்தப் பேப்பரை வாங்கிக்கிட்டுப் போய் எம்.டியிடம் சைன் வாங்கிட்டு வரமாட்ட..?"

"உன் வேலையை நீதான் பார்த்துக்கனும்னு சொன்னேனா இல்லையா..? ஐ ஆம் நாட் யுவர் செக்கரட்டரி யு நோ.."

"யெஸ்.. ஐ நோ.. ஐ நோ.. நீ எம்.டியோட பெர்சனல் செக்கரட்டரி.. நான் மறந்தாலும் மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்லி நீ அதை நினைவு படுத்திவிட மாட்ட..?"

"நினைவு படுத்தினாலும் உன் மரமண்டையில அது ஏற மாட்டேங்குதே.."

"ஏற மாட்டேன்னு அதுதான் அடம் பிடிக்குதே.. நான் என்ன செய்யட்டும்..?"

"நீதான் ஏத்தி விடனும்.."

"என்னால முடியலை ரூபா.. நீதான் ஏணியிருந்தா கொண்டு வந்து வைத்து அதைக் கொஞ்சம் ஏத்தி விடேன்.."

"அதுக்குத்தான நானிருக்கேன்..?"

"வேற எதுக்கு இருக்க ரூபா..?"

"ஊம்..? எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரி வேலையைச் செய்கிறதுக்காக இருக்கிறேன்.. போதுமா..?"

"வேலையா..? நீயா..? செய்கிறயா..? உனக்குத்தான் வேலை செய்யனும்னா உடம்பு வணங்காதே ரூபா.."

"ஆமாண்டி.. இது கல்லுடைக்கிற வேலை பாரு.. உடம்பு வணங்கி வேலை செய்ய.."

"இல்லைல்ல..?"

"இதை நான் சொல்லி நீ தெரிஞ்சுக்க வேண்டியதா இருக்கு பாரு.. நீயெல்லாம் மத்தவங்களுக்கு அட்வைஸ் பண்ண வாயைத் திறக்கவே கூடாது ரோஜா.."

"அதுக்கென்ன.. வாயை இறுக மூடி வலது கை ஆள்காட்டி விரலை உயர்த்தி வாய்க்குக் குறுக்கே வைத்துக்கிட்டாப் போகுது.."

"இது கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனியோட ஹெட் ஆபிஸ் ரோஜா.."

"ஆமாமில்ல.."

"ஊம்.. இங்கே மூளைக்கு வேலை கொடுக்கனும்.. மூளை இருக்கில்ல மூளை.. இதோ இங்கே இருக்குமே.."

ரூபா ரோஜாவைக் கிண்டல் செய்வதாக நினைத்துக் கொண்டு தன் தலையைச் சுற்றி வட்டம் போட்டுக் காண்பிக்க..

"நீ லூஸீங்கிறதை தெரிந்து வைத்து அதை மத்தவங்களிடமும் ஒப்புக்கிற பாரு.. அந்த நேர்மையை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு ரூபா.." என்று ஒரே நொடியில் ரூபாவை மண்ணைக் கவ்வ வைத்தாள் ரோஜா..

செய்து வைத்த சிலை போல முகத்தில் எந்த விதமான சலனமும் இல்லாமல் உட்கார்ந்திருந்த சாருலதாவைப் பார்க்கப் பார்க்க ரூபாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. அனைத்தும் அவளால்தான் என்று மறுபடியும் ரூபா

நினைத்தாள்.. ரோஜாவுடன் ரூபா வம்பு வைத்துக் கொள்ள மாட்டாள்.. சண்டையென்று வந்து விட்டால் ரோஜா

ஒரு கை பார்க்காமல் விடமாட்டாள்.. கிண்டல் கேலி செய்வதென்றால் அவளுக்கு அல்வா சாப்பிடுவதைப் போல அத்தனை பிடித்தமானதாக இருக்கும்.. பலசாலியுடன் மோதித் தன் பலவீனத்தை வெளிப்படுத்தி விடக் கூடாது என்பதில் வெகு கவனமாக இருக்கும் அதி புத்திசாலி ரூபா..

அப்படிப் போர்க்களமே போகாமல் வெற்றி வாகை சூடிக் கொண்டிருந்த ரூபாவை சொற்போரில் இழுத்து விட்டது யார்..? சாருலதாவின் வரவுதானே..

"ஏய்ய்.. உனக்கு மூளையிருக்கான்னு நான் கேட்டா நீ அதை உல்டா பண்ணி என் பக்கமே திருப்பி விடப் பார்க்கறியா..?" ரூபா குப்புறக் கவிழ்ந்ததை ஒப்புக் கொள்ளாமல் மண்ணைத் தட்டி விட்டு வாதுக்குத் தயாரானாள்..

வாடியம்மா வாடி, வாதுக்கு வாடி என்று சண்டைக்குத் தயாராக இருந்த ரோஜா..

"ஓ.. நீ அதைக் கேட்டியா.. ஆமாம்.. எனக்கு மூளையிருக்குதான்.. பட்.. ஐ ஆம் வெரி ஸாரி.. மூளையில்லாத உனக்கு என் மூளையைக் கடன் கொடுக்க முடியாது.."

"ரோஜா.."

"காம்டவுன் ரூபா.. உனக்கு என் மூளையைக் கொடுத்துட்டா நான் எப்படிடீ வேலை பார்க்கிறது..?"

"ரோஜா.." ரூபா பல்லைக் கடித்தாள்..

எத்தனை மணி நேரமானாலும் சரி.. ரோஜாவுடன் மோதி அவளை வீழ்த்தவே முடியாது என்பதைக் கண்டறிந்து வைத்திருந்த ரூபா அவளுடன் கை குழுக்கி நட்பைப் பலப்படுத்திக் கொள்வதிலேயே கவனமாக இருப்பாள்.. இன்றைக்கு அதை மறந்து மோதியதில் எக்கச்சக்கமான சேதாரத்துக்கு ஆளாகி விட்டாள்..

ரோஜா கலாய்த்த கலாய்ப்புகளைக் கூட எனக்கு எந்த ஒரு சிராய்ப்பும் ஏற்படவில்லை என்று தட்டி விட்டுப் போக ரூபா தயாராகத்தான் இருந்தாள்.. ஆனால் நடந்த சொற்போரை அமைதியின் சிகரமாக இதழ் பிரியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சாருலதா ரோஜாவின் பதில்களில் ஈர்க்கப் பட்டவளாக தன்னையும் அறியாமல் மெந்நகை புரிந்து விட்டதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

சாருலதா நிமிர்ந்து ரோஜாவைப் பார்த்து சன்னமாக இதழ்பிரித்து மெல்லிய சிரிப்பொன்றைச் சிந்தியது ரோஜாவுக்கு நிலவின் துகள்கள் சிந்துவதைப் போலவே இருந்தது.. ரூபாவுக்கோ மிளகாய்ப் பொடியைத் தூவியதைப் போல இருந்தது..

## 5

'அவ என்னை கலாய்ப்பா.. இவ அதை ரசிச்சுச் சிரிப்பாளா..? எம்.டிக்கு வேண்டியவங்கிற திமிரை முதல் நாளே காட்டிட்டாளே..'

சாருலதாவைத் துவேசத்துடன் பார்த்தாள் ரூபா.. அவளால் அவளது குரோதத்தை மறைத்து தோழமை பூண்டவளைப் போல நடிக்க முடியவில்லை.. அன்று அவள் வாங்கும் ஒட்டு மொத்த தர்ம அடிகளுக்கும் சாருலதா மட்டுமே காரணம் என்று அவள் மனம் அபாண்டமாக குற்றப் பத்திரிக்கை வாசித்தது..

"இவ அடிக்கிறது ஜோக்குன்னு நீங்க சிரிக்கறிங்களா..?" ரூபா சாருலதாவிடம் முறைப்பாக வினவியதில் ரோஜாவுக்கு கோபம் வந்து விட்டது..

"முட்டாளாடி நீ.. இப்ப எதுக்காக இவங்க மேல காண்டாகிற..?"

"ஆக்சுவலா இவங்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் பண்ண டீடெயில் வாங்கத்தான் நான் இங்கே வந்தேன்.. இம்மீடியட்டா அதை பிரிபேர் பண்ணனும்ங்கிறது எம்.டியோட ஸ்ட்ரிக்ட் ஆர்டர்.. அது புரியாம நீ ஒரு பேப்பரை நீட்டி எம்.டியிடம் சைன் வாங்கிக்கிட்டு வரச் சொல்கிற.. என்னைப் பார்த்தா உனக்கு எப்படித் தெரியுது..? லேடி மாணிக்கம் போலத் தெரியுதா..?"

"முதலில் என் கையிலிருக்கிற பேப்பரைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரியுது..?"

"ஒரு மண்ணும் தெரியலை.."

"இவங்களோட அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்ன்னு தெரியலையா..?"

ரோஜா படு நிதானமாகக் கேட்டபடி பிரிண்ட் அவுட் எடுத்து வைத்திருந்த பேப்பரை இறுக்கிப் பிடித்தபடி எழுந்தாள்..

"எங்கேடி போற..?" ரூபா பதறினாள்..

"எம்.டியிடம் சைன் வாங்கப் போறேன்.."

"கொடுடி.. நான் வாங்கிட்டு வர்றேன்.."

"நோ, நோ, நோ.. என் வேலையை நான் தான் பார்க்கனும்.. இது எம்.டியோட பெர்சனல் செக்கரட்டரி ரூபா மேடத்தோட ஸ்ட்ராங் ஆர்டர்.. நான் ஒபே பண்ணியே ஆகனும்ப்பா.."

"இது அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் ரோஜா.."

"இல்லேன்னா நான் சொன்னேன்..?"

"இது நான் செய்ய வேண்டிய வேலை.."

"பட்.. இது நான் செய்து முடித்துவிட்ட வேலை.."

"உன்னை யாருடி செய்யச் சொன்னது..?"

"எம்.டிதான்.. இண்டர்காமில் ஆர்டர் போட்டார்.."

"எம்.டியா..?"

"எம்.டியேதான்.. ரூபாவிடம் சாருலதாவுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அடித்துக் கொண்டு வரச் சொன்னேன்.. அவங்க அந்த டீடெயில் வேணும், இந்த டீடெயில் வேணும்ன்னு சொல்கிறாங்க.. சாருலதா ரிசப்சனிலதான் இருக்கா.. அவளிடம் தேவையான டீடெயில்ஸைக் கேட்டு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் பண்ணி கொடுத்து விடுங்க.. இல்லேன்னா ரூபா அன்னெசஸரியா கொஸ்டின் கேட்டு சாருலதாவை டிஸ்டர்ப் பண்ணிருவாங்கன்னு சொன்னார்.. மேட்டர் இஸ் வெரி அர்ஜண்ட்டுன்னு அவர் சொன்னதாலே சாருலதாவிடம் டீடெயில்ஸை கேதர் பண்ணி ஃபாஸ்ட்டா அப்பாயிண்ட் ஆர்டரை பிரிபேர் பண்ணி பிரிண்ட் அவுட் எடுத்துட்டேன்.. நீ வந்தியா.. உன்னிடம் அதைக் கொடுத்து எம்.டியிடம் சைன் வாங்க வைக்கிறதுதான் முறைன்னு தோணுச்சு.. அது தப்புன்னு நீயே உன் வாயால் சொல்லி விட்ட பின்னால் உன்னிடம் இதைக் கொடுத்து விட்டா முறையா இருக்காது ரூபா.."

"அடிப்பாவி.."

ரூபாவுக்கு நெஞ்சுவலியே வந்து விட்டது.. சாருலதாவின் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டருக்காக இத்தனை விரைவாக எம்.டி செயல்படுவார் என்று அவளுக்குத் தெரியாமல் போய் விட்டதே... ரூபா அறையிலிருந்து வெளியே வருவதற்குள் ரோஜாவை இண்டர்காமில் அழைத்து விவரம் சொல்லியிருக்கிறார்..

அதைக்கூட ரூபாவினால் தாங்கிக் கொள்ள முடிந்தது.. எம்.டியின் உத்தரவைக் கேட்ட அடுத்த நொடியில் மின்னல் வேகத்தில் செயல் பட்டு சாருலதாவுக்கான அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை ரோஜா டைப் அடித்து பிரிண்ட் அவுட் எடுத்து விட்டதைத்தான் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

'கொலைகாரி..! இப்படி இவ ஸ்பீடா வேலை செய்தா அதே வேகத்தில் நானும் வேலை செய்யனும்னு இந்த எம்.டி என் உயிரைக் குறைப்பாரே..'

"பாவ, புண்ணியம் பார்த்துத்தான் உன்னிடம் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கொடுத்தேன்.. உனக்கு இதைப் பயன்படுத்திக்கத் தெரியலை.. வாட் கேன் ஐ டு மை டியர் பிரண்ட்..?"

ரோஜா புள்ளி மானைப் போல எம்.டியின் அறையை நோக்கித் துள்ளி குதித்து ஓடிப் போனாள்..

'அடுத்த மண்டகப்படி கன்பர்ம்..'

ரூபாவுக்கு வாய்விட்டு அழ வேண்டும் போல இருந்தது.. அன்றைய நாளைப் போல கொடுமையான நாள் வேறு எதுவுமில்லை என்ற ஆங்காரத்துடன் சாருலதாவை முறைத்துப் பார்த்தாள்.. இவளது பார்வையில் பாதிக்கப் படாமல் அவள் அமைதியாகப் பார்த்ததில்..

'பெரிய புத்த பிட்சிணின்னு மனதுக்குள் நினைப்பு..' என்று மனதுக்குள் வெகுண்டாள்..

"ஸோ.. யு ஆர் சாருலதா.." வேண்டுமென்றே கேட்டாள்..

ஆமாம் என்று கூடச் சொல்லாமல் அவள் மௌனமாக தலையை மட்டும் அசைத்ததில்..

'இவளுக்கு நான் இணையில்லைன்னு நினைக் கிறாளா..?' என்ற கோபம் ரூபாவின் மனதுக்குள் வந்தது..

போன வேகத்தில் திரும்பி வந்த ரோஜா சாருலதாவிடம் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கொடுத்து விட்டு கை குலுக்கினாள்..

"நவ், யு ஆர் அப்பாயிண்ட்டெடு அஸ் எ ஜீனியர் என்ஜினியர் இன் மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி.. கங்கிராஜீலேசன்ஸ்.."

ரோஜாவின் பாராட்டுக்கு சாருலதா வெறும் புன்னகையை மட்டுமே பரிசாகத் தருவாள் என்றுதான் ரூபா நினைத்தாள்.. அப்படி அவள் செய்யும்போது ரோஜாவை இகழ்ச்சியாக ஒர் பார்வை பார்க்க வேண்டும்.. சாருலதா அந்தப் பக்கமாக நகர்ந்தவுடன் இந்தப் பக்கம் ரோஜாவிடம் சாருலதாவைப் பற்றி..

"பார்.. பார்.. இவளுக்காகத்தானே நீ என்னைக் கூட மைண்ட் பண்ணிக்காம அவசர அவசரமாக அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் பண்ணி அதை எம்.டியிடம் சைன் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த.. அதுக்கு ஓர் தேங்க்ஸ் சொல்லலைன்னாலும் பரவாயில்லை.. அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கையிலேnயும் கொடுத்து கங்கிராஜீலேசன்ஸ் சொல்லி கை கொடுக்கறியே.. அதுக்காவது ஓர் தேங்க்ஸ் சொல்கிறாளான்னு பார்.. திமிர் ரோஜா.. எம்.டிக்கு வேண்டப்பட்டவங்கிற திமிர்.."

என்றெல்லாம் சொல்லி உருவேற்றி விட வேண்டும் ரோஜாவை தன் பக்கமாக இழுத்துக் கொண்டு சாருலதாவிற்கு எதிராக திருப்பி விட்டு விட வேண்டும்.. அதற்கப்புறம் தினம் தினம் ரோஜாவும் அவளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு சாருலதாவைக் கலாய்க்கும் கலாய்ப்பில் அவள் கூறாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு வேறு ஒரு கம்பெனிக்கு ஓடிவிடவேண்டும்..

இப்படியெல்லாம் பலவிதமான திட்டங்களை மனதுக்குள் தீட்ட ஆரம்பித்தாள் ரூபா.. சாருலதா எம்.டிக்கு வேண்டப்பட்டவள்.. என்ஜினியர், என்பதையெல்லாம் அவள் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை.. ரூபா தன்னைத் தவிர வேறு எவரையும் உயர்வாக நினைக்க மாட்டாள்..

ரூபாவின் மனதில் ஓடிய சதியாலோசனைகளைப் பற்றி அறியாமல் ரோஜாவின் கைகுலுக்கலுக்கு மென்மையாக புன்னகையுடன்..

"தேங்க்ஸ்.." சொன்னாள் சாருலதா..

'என்கிட்டப் பேச மாட்டாளாம்.. ரோஜாவுக்கு மட்டும் தேங்க்ஸ் சொல்லுவாளாம்.. என்னிடம் பேசினா இவ வாயில இருக்கிற முத்தெல்லாம் உதிர்ந்து விடுமோ..' காண்டானாள் ரூபா..

"ஸோ.. இன்னையில இருந்து நீங்களும் எங்க கம்பெனியில ஒரு அங்கம்.. இதைக்

கொண்டாடியாகனுமே.."

ரோஜா தன் ஹேண்ட்பேகைத் திறந்து ஒரு சாக்லெட் கவரை எடுத்து சாருலதாவிடம் நீட்டி..

"ஸ்வீட் எடு.. கொண்டாடு.." என்று கண்சிமிட்டினாள்..

'சண்டாளி..! எப்படியெல்லாம் பேசி இந்த சாருலதாவைக் கைக்குள்ள போட்டுக்கிறா.. எம்.டிக்கு வேண்டப்பட்டவளைக் காக்கா பிடித்து வைத்துக் கொள்ளனும்ங்கிற தொலை நோக்குப் பார்வை.. நானும் இருக்கேனே.. சரியான தத்தி..'

ரூபாவுக்கு அங்கு நிற்கக்கூடப் பிடிக்கவில்லை.. ரோஜாவின் வெகு இயல்பான அணுகுமுறை சாருலதாவைக் கவர்ந்திருக்க வேண்டும்.. அவள் சாக்லெட்டை இரண்டாக உடைத்து ரோஜாவிடம் பாதியை நீட்டி..

"ஃபிப்ட்டி.. ஃபிப்ட்டி.." என்று பதிலுக்கு கண்சிமிட்டினாள்..

'பாருடா.. சோகச்சித்திரம் போல இருக்கிறவ இந்த ரோஜாகிட்ட மட்டும் சிரிக்கிறா.. கண்ணைச் சிமிட்டறா.. இதுக ரெண்டு மட்டும் பிப்டி, பிப்டின்னு சாக்லெட்டை ஷேர் பண்ணிக்குங்களாம்.. இங்கே நான் ஒருத்தி கல்லுக் குண்டாட்டம் நின்றுக்கிட்டே இருக்கேனே.. என்னைக் கண்டுக்க மாட்டாங்களாம்..'

ரூபா மனதுக்குள் பொருமிக் கொண்டிருக்க ரோஜா சாக்லெட்டை மென்றபடி ரூபாவை அப்போதுதான் பார்ப்பவளைப் போல ஓர் பார்வை பார்த்து..

"நீ இன்னுமா இங்கேயே நின்றுக்கிட்டு இருக்க..?" என்று கேட்டு வைத்தாள்..

"ஏன்..? எனக்குச் சாக்லெட் கொடுக்க முடியலை- யேன்னு வருத்தப்படறியா..?" ரூபா பல்லைக் கடித்தாள்..

"நோ.. நோ.. எம்.டி உன்மேல செம காண்டில இருக்கார்.. உன்னை உடனடியா அவரோட கேபினுக்கு வரச் சொன்னார்.. அநேகமா உனக்கு இன்க்ரிமெண்ட் கட்டாகும்ன்னு நினைக்கிறேன்.. நீ இங்கிருக்கிறதைக்

கவனிக்காததில ஸ்வீட் எடுத்துக் கொண்டாட ஆரம்பிச்சுட்டேன்.. பார்த்திருந்தா அப்பவே சொல்லி யிருப்பேன்.. உன் சீட்டில போய் உட்கார்ந்து வேலையைக் கவனிக்காம இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க..? அதான் இவங்களுக்கான அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை நான் பிரிபேர் பண்ணி சைன் வாங்கிக் கொடுத்துட் டேனில்ல.. அதுக்கப்புறமும் உனக்கு இங்கே என்ன வேலை..? ஓடு.. ஓடு.. அங்கே எம்.டியோட அர்ச்சனை உனக்காக காத்துக்கிட்டு இருக்கு.." ரோஜா வெறியேற்றி விட்டாள்..

ரூபாவுக்குத் தலையைச் சுற்றியது.. எம்டியின் அறைக்கு ஓடாமல் வீட்டுக்கு ஓடிவிட்டால் தேவலை யென்று தளர்வாக இருந்தது..

"நோ பிராப்ளம்.." என்றாள் சாருலதா..

'பிராப்ளமே நீதாண்டி..' ரூபா சாருலதாவை சொந்தமில்லாத பார்வை பார்த்தாள்..

"அங்கிளிடம் நான் பேசுகிறேன்.."

தானாக முன்வந்து ரூபாவைக் காப்பாற்ற முனைந்த சாருலதாவின் பெருந்தன்மையில் ரூபா ஒன்றும் மெய்சிலிர்த்துப் போய்விடவில்லை.. மாறாக எதிரியைப் பார்ப்பதைப் போல சாருலதாவைப் பார்த்து வைத்தாள்..

"யு ஆர் ஸோ ஸ்வீட்டுன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்.. ஸோ ஸ்வீட்டுன்னு ஃப்ரூவ் பண்ணிட்டிங்க.." மனம் விட்டுப் பாராட்டியது ரோஜாதான்..

'இவள் காப்பாற்றி நான் வேலை செய்வதா..?' ரூபாவின் சுயமரியாதை தையாத்தக்கா என்று குதித்து வைத்ததில்..

"நோ தேங்க்ஸ்.. என் பிராப்ளத்தை நான் சால்வ் பண்ணிக்குவேன்.. நீங்க இன்றைக்குத்தான் ஜாயின் பண்ணியிருக்கீங்க.. உங்க வேலையைப் பாருங்க.." என்று கெத்தாக சொல்லி வைத்தாள்..

மறைமுகமாக தான் சீனியர், சாருலதா அன்றைக்குத்தான் வேலைக்குச் சேர்ந்திருக்கும் ஜீனியர் என்று சொல்லி விட்டதில் பரம சந்தோசம் ரூபாவுக்கு.. ரோஜா அவளை..

'அடி.. இவளே..' என்று பார்த்த பார்வையில் அந்த சந்தோசம் பொசுங்கி விட்டது..

"ஏண்டி.. அவங்க நம்ம எம்.டியோட ரிலேடிவ்.. அவங்க உனக்காக ஒரு வார்த்தை சொன்னா எம்.டி விடற டோஸில இருந்து நீ தப்பிச்சிருவ.. நீ கேட்காம தானா ஹெல்ப் பண்றேன்னு சொல்கிறாங்க... ஆஹான்னு மகிழ்ந்து போய் தப்பிக்கப் பார்க்காம தானாத் தலையைக் கொடுத்துத்தான் ஆவேன்னு பிடிவாதம் பிடிக்கறியே.. எங்கேயாச்சும் ஆடு தானாத் தலையை நீட்டிப் பிரியாணி போடுங்கன்னு சொல்லுமா..? நீயேண்டி அந்த வேலையைச் செய்து வைக்கிற..? எம்.டியிடம் பரேடு வாங்கிக் கட்டிக்கனும்னு வேண்டுதலாடி உனக்கு..?" ரோஜா டிரில் வாங்கி விட்டாள்..

"நீ கொஞ்சம் சும்மா இருக்கியா..? எம்.டி கோபப் படறது என்ன புதுசா..? எம்.டியோட செக்கரட்டரிங்கிற பவர்ஃபுல் போஸ்டில் இருக்கிறவங்க இதையெல்லாம் மைண்ட் பண்ணிக்க முடியாது ரோஜா.. நீ ரிசப்சனிஸ்ட்.. உனக்கு என் வேலையின் லெவலைப் பற்றி என்ன தெரியும்..?" ரூபா விடாமல் கெத்தை கட்டிக் கொண்டு மல்லுக் கட்டினாள்..

"இன்னைக்கு உனக்கு என்னடி ஆச்சு..? மந்திரிச்சு விட்ட கோழி போல ஒரு மார்க்கமாவே அலையறியே.. உன் வேலையைப் பத்தின பவரைப் பத்திப் புதுசாப் பேசற.. என்ன..? புதுசா சேர்ந்திருக்கிற ஜே.ஈ. முன்னாடி சீன் போடறியா..?" ரோஜா கண்டுபிடித்து விட்டாள்..

'இவளுக்கு உடம்பெல்லாம் மூளை..'

அப்படியெல்லாம் புத்திசாலித்தனம் தனக்கில்லையே என்ற ஆதங்கத்துடன் எம்.டியிடம் பாட்டு வாங்கப் போனாள் ரூபா..

"மொத்து வாங்கப் போறா.." ரோஜா சிரித்தாள்..

சாருலதா மெல்லிய சிரிப்புடன் தலையசைத்து விட்டு எழுந்தாள்..

"உங்க சீட் அங்கே இருக்கு..?" ரோஜா வழிகாட்ட எழுந்தாள்..

"இருக்கட்டும்.. பர்ஸ்ட் அங்கிளுக்கு தேங்க்ஸ் சொல்லிட்டு வந்து விடுகிறேன்.. நெக்ஸ்ட் என் சீட்டில் உட்கார்ந்து வேலையை ஸ்டார்ட் செய்கிறேன்.." சாருலதா பத்மநாபனின் கேபினை நோக்கி நடந்தாள்..

ரூபாவை பத்மநாபனின் கோபத்திலிருந்து காப்பாற்றத்தான் நன்றி சொல்லப் போவதைப் போல சாருலதா பத்மநாபனின் அறைக்குப் போகிறாள் என்று ரோஜாவுக்குப் புரிந்தது..

'வாட் எ கைண்ட் பிஹேவியர்.. இது அந்த ரூபா தத்திக்குத் தெரியலையே..' ஆற்றாமையுடன் தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள்..

சாருலதா உள்ளே போன போது நீலமேகம் அங்கு இருக்கிறார் என்று கூடப் பார்க்காமல் ரூபாவைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார் பத்மநாபன்.. சாருலதாவைக் கண்டதும் வியப்புடன்..

"என்னம்மா..?" என்றார் கனிவாக..

"இன்றைக்குத்தான் நான் உங்க கம்பெனியிலே ஜாயின் பண்ணியிருக்கேன் அங்கிள்.. வேலைக்குச் சேர்ந்த முதல் நாளிலேயே என் கூட வேலை பார்க்கிறவங்க திட்டு வாங்கறதை நான் பார்க்கனுமா..?" மென்மையாக அவள் கேட்ட விதத்தில்..

"சூப்பர்ம்மா.." என்று தலையாட்டி அவளது சமயோசித பேச்சை ரசித்தார் நீலமேகம்..

சாருலதாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு ரூபாவை போகச் சொல்லி விட்டார் பத்மநாபன்.. நீலமேகத்தின் நல விசாரிப்புக்கு மேம் போக்காக பட்டும் படாமலும் பதில் சொல்லி விட்டு கேபினை விட்டு வெளியே வந்தாள் சாருலதா.. அவள் வருவதைக் கவனிக்காததைப் போல ரூபா அசட்டையாக முகத்தை வைத்துக் கொண்டு கம்யூட்டரை நோக்க அதை கண்டுகொள்ளாமல் சாருலதா ரோஜாவை நோக்கி நடந்தாள்..

# 6

'அழகம்மை குழந்தைகள் காப்பகம்..' என்ற போர்டு மாட்டப் பட்டிருந்த கட்டிடத்திற்கு முன்னால் ஸ்கூட்டியை நிறுத்தினாள் சாருலதா.. சின்னக் காம்பவுண்டு சுற்றி வளைத்திருக்க நடுவில் இருந்த வீடு குழந்தைகள் காப்பகமாக மாற்றப் பட்டிருந்தது.. வீட்டைச் சுற்றிலும் தோட்டம் போடப்பட்டு முறையாகப் பராமரிக்கப் பட்டிருந்ததில் பூச்செடிகளும் பழ மரங்களும் இலைகளை அசைத்து அவளை வரவேற்றன.. காம்பவுண்டு கேட்டைத் திறந்து வீட்டை நோக்கிப் போடப் பட்டிருந்த சிமிண்ட் நடைபாதையில் நடந்தாள்.. தோட்டத்தின் பசுமை மனதுக்கு இதத்தைத் தருவதைப் போல இருந்தது..

"வாங்க சாரு.." வரவேற்றாள் அழகம்மை..

மெலிதாக சிரித்து வைத்தாள் சாருலதா..

"எப்பவும் சிரிப்புத்தான்.. பேசக் கூலி கேக்கறிங்க.. வேலை கிடைச்சிருச்சா..?"

"ம்ம்ம்.. இன்றைக்கே ஜாயின் பண்ணச் சொன்னாங்க.. ஜாயின் பண்ணிட்டேன்.."

"ஆச்சரியமா இருக்கே.. அவங்கவங்க நாக்குத் தள்ள வேலை தேடறாங்க.. கிடைக்க மாட்டேங்குது.. நீங்க இன்னைக்குத்தான் இண்டர்வியூவுக்குப் போனிங்க.. வேலையில ஜாயின் பண்ணி வேலை செய்ய ஆரம்பிச்சுட்டேன் அழகம்மைங்கறிங்க... நம்பவே முடியலைங்க.."

அதிசயப்பட்டுப் போன அழகம்மைக்குத் தெரியாது.. சாருலதா அவளுக்குக் கிடைத்திருக்கும் வேலையைப் போல பலருக்கு வேலை கொடுக்கும் இடத்தில் இருப்பவள் என்பது..

அவளது இடத்தை விட்டு இறங்கி அவள் தரையில் கால் பதித்திருக்கிறாள்.. விண்மீது பவனி வரும் முழு நிலவு

மண்மீது பாதம் பதித்து வாழ வந்தது எதற்காக என்பதை காலமே அறியும்.. வாழ்க்கை அவள் எதிர்பாராத திசையில் அவளை இழுத்துச் சென்று விட்டது.. விதியின் தீர்மானம் இதுவென்றால் சாருலதாவால் என்ன செய்ய முடியும்..?

சாமானிய வாழ்வை வாழும் முடிவை அவள்தான் எடுத்தாள்.. காலம் அவளுக்கிட்ட கட்டளையாக அதை ஏற்றுக் கொண்டாள்.. வாழ்வின் திருப்பத்தில் மயங்கி விழ்ந்து விடாமல் மனதில் உரமேற்றி நிமிர்ந்து நின்றாள்.. இதுதான் எனது விதியென்ற தீர்மானத்தை அவளே தீர்மானித்தாள்..

அவளைத் தாங்கி நிற்கப் பலர் இருந்தார்கள்.. வேண்டாம் இந்த முடிவு என்று தடுத்தார்கள்.. பணத்தைக் கொடுக்கலாம்.. சொத்தை எழுதி வைத்து விடலாம் என்றெல்லாம் சொன்னார்கள்..

அவள் மறுத்துவிட்டாள்.. வாழ்வைக் காப்பாற்றிய வனுக்குத் தன் வாழ்வை அளிப்பதுதான் தர்மமாகும் என்று சொன்னாள்.. வைரங்களைத் தவிர்த்தாள்.. உயர்ரக உடைகளைத் தவிர்த்தாள்.. எளிமையான வாழ்வை வாழ வீட்டை விட்டு வெளியேறினாள்..

அழகம்மைக்கு சாருலதாவின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றி என்ன தெரியும்..? அவளுக்குத் தெரிந்ததெல்லாம் சாருலதா வேலை தேடிக் கொண்டிருக்கிறாள் என்பதுதான்.. இன்னும் கூடக் கொஞ்சம் தெரியும்.. அவையாவும் சாருலதா சொல்லி அவள் தெரிந்து கொண்டதல்ல.. அவளாக அனுமானித்துக் கொண்டது.. அதை சாருலதா ஒப்புக் கொள்ளவும் இல்லை.. மறுக்கவும் இல்லை.. மெல்லிய புன்னகையுடன் நின்றிருந்தாள்..

சாருலதா அதிகம் பேசி அழகம்மை பார்த்ததில்லை.. அவளுக்கு அமைதியான சுபாவம் போல என்றுதான் அழகம்மை நினைத்தாள்.. சரசரவென வெடித்துச் சிதறும் சரவெடியைப் போன்றவள் சாருலதா.. பேச ஆரம்பித்தாள் வாயை மூடவே மாட்டாள்.. சளசளவெனப் பேசித் தள்ளி விடுவாள் என்பதெல்லாம் அழகம்மைக்குத் தெரியாது..

அவளின் அந்த துறுதுறுப்பும் சுட்டித்தனமும்தான் பிரசன்னாவை கவர்ந்து இழுத்து அவளைக் காதலிக்க வைத்தது.. அவளும் பிரசன்னாவைக் காதலித்தாள்.. வெறும் காதலல்ல.. உயிருக்குயிரான காதல்.. அப்பேற்பட்ட காதலியாக அவள் இருந்தாள் என்பதை அழகம்மையிடம் யார் சொன்னாலும் அவள் நம்ப மாட்டாள்..

"அதுவா..? பேசவே பயப்படும்.. அதுவாவது.. காதலிச்சதாவது.. சும்மா கதை விடாதே..." என்று சண்டைக்குக் கிளம்பியிருப்பாள்..

அவளறிந்த சாருலதா கையில் இரண்டு வயதுக் குழந்தையுடன் அழகம்மை காப்பகத்தில் வந்து நின்றவள்.. ஏற இறங்கப் பார்த்த அழகம்மையிடம்..

"இவனைப் பார்த்துக்கனும்.." என்று சொன்னவள்..

"உங்க பேரென்னம்மா..?"

"சாருலதா.."

"வேலை பாக்கறிங்களா..?"

"வேலை பாக்கப் போகிறேன்.."

வினோதமான அந்தப் பதிலில் விசித்திரமாக அவளைப் பார்த்தாள் அழகம்மை.. சாருலதாவின் அமைதியான தோற்றத்தில் அவளுக்குப் பிழையேதும் தெரியவில்லை..

"புரியலையே.."

"அடுத்த வாரம் இண்டர்வியு.. அதற்கப்புறம்தான் வேலையில சேரனும்.."

"அதுக்குள்ளே புள்ளயக் கொண்டு வந்து கிரஷ்ஷில விட வந்திருக்கீங்களே.. விசாரிச்சுட்டுப் போகலாம்ன்னு வந்தீங்களா..?"

"இல்லைங்க.. சேர்த்து விட்டுப் போகத்தான் வந்தேன்.."

"நீங்கதான் வேலையில இன்னும் சேரலையேம்மா.."

"வேற வேலை இருக்குங்க.."

"என்ன வேலை..?"

"வீடு மாறனும்.."

"எந்த ஏரியாவில வீடு பார்த்திருக்கீங்க..?"

"அடுத்த தெருவில இருக்கிற 'ஹ 2 ஷ்' அபார்ட்மெண்ட் தாங்க.."

"அங்கேயா..? அங்க நிறைய வீடுக இருக்குதேம்மா.. குட்டி ஊர் போலயில்ல இருக்கும்.. ஒத்தைப் பெட்ரூம் வீட்டில ஆரம்பிச்சு பத்து பெட்ரூம் வரைக்கும் கட்டியிருக்காங்களே.. அங்க இருக்கிற அத்தனை அபார்ட்மெண்டிலயும் வேலைக்குப் போகிற பொம்பளைக இருக்காங்கம்மா.. அவங்க புள்ளைக எல்லாம் இங்கதான் இருக்குதுக.."

"தெரியும்ங்க.. சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்டில இருந்து டென் பெட்ரூம் பங்களாவரை இருக்கிற காம்பவுண்டுதாங்க அது.. அதனால தான் 'ஹ 2 ஷ்' ன்னு

பெயர் வைத்திருக்காங்க.. அதில சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்டுட்டுக்கு நான் குடிவரப் போகிறேங்க.. குழந்தையைப் பார்த்துக்க பக்கத்தில நல்ல கிரஷ் இருக்கான்னு விசாரித்தப்ப எல்லோரும் உங்க கிரஷ் பெயரைத்தான் சொன்னாங்க.."

"சொல்லாம என்ன செய்வாங்க.. அம்புட்டு புள்ளைகளையும் நான்தானே பார்த்துக்கறேன்.."

பெருமையாக சிரித்த அழகம்மைக்கு சாருலதாவைப் பிடித்து விட்டது... ஒற்றை வரியில் பதிலளித்துக் கொண்டிருந்தவளை நீளமாகப் பேச வைத்து விட்டதாக மனதுக்குள் பெருமைப் பட்டுக் கொண்டாள்..

"அது சரிம்மா.. புள்ளைய நான் பார்த்துக்கறேன்.. நீங்க.. வீட்டை மாத்தற வேலையைப் பாருங்க.. உங்ககூட யார் யாரெல்லாம் இருக்காங்க.."

"தனியாத்தான் இருக்கேன்.."

"மாமனாரு, மாமியாரு..?"

"இல்லை.."

"இந்தப் புள்ளையோட அப்பா..?"

அழகம்மையின் கேள்விக்கு நிமிர்ந்து பார்த்த சாருலதாவின் முகத்தில் இருந்தது விசனமா, துயரமா என்று தெரியாததில் திகைத்துப் போனாள் அழகம்மை..

"அவர் உங்ககூட இல்லையா..?"

"இல்லை.."

"இல்லைன்னா..?"

அழகம்மையின் பார்வை சாருலதாவை ஆராய்ந்தது.. கண்ணியமான தோற்றமும் கழுத்தில் மெல்லிய சங்கிலியுமாக இருந்தவளைச் சந்தேகப்பட முடியவில்லை..

"வெளிநாட்டில வேலை பார்க்கிறாரா..?"

சாருலதாவின் மெல்லிய புன்னகையை ஆமாம் என்ற பதிலாக அர்த்தப் படுத்திக் கொண்டு..

"அப்பச் சரி.." என்று அமைதியானாள் அழகம்மை..

அடுத்த ஒரு வாரமும் சாருலதா காலையில் குழந்தையைக் கொண்டு வந்து அழகம்மையிடம் ஒப்படைத்து விட்டுப் போவாள்.. மாலையில் களைத்த தோற்றத்துடன் வந்து குழந்தையை வாங்கிக் கொள்வாள்.. வீடு மாற்றும் வேலையில் களைத்திருப்பதாக அழகம்மை யூகம் செய்து கொள்வாள்..

புதிதாக குடி வந்திருக்கும் சாருலதாவைப் பற்றி மற்ற அபார்ட்மெண்ட் வாசிகளுக்கு எதுவும் தெரிந்திருக்க வில்லை..

"அடுத்த பிளாட்டில குடியிருக்கிறது யாருன்னே தெரியலை.. இதில சிங்கிள் பெட்ரூம் பிளாட்டில யார் குடி வந்திருக்கிறாங்கன்னு எங்களுக்கு எப்படித் தெரியும்..?" என்று கேட்டார்கள்..

சாருலதா அந்த அபார்ட்மெண்டின் சிங்கிள் பெட்ரூம் பிளாட்டிற்கு குடி வந்திருப்பதை அபார்ட்மெண்டின் வாட்ச்மேன் வைரவேல் உறுதி செய்தான்..

"தங்கமான பொண்ணு.. அதிர்ந்து ஒரு வார்த்தை பேசாது.."

"அதிகாரமாவும் ஒரு வார்த்தை பேசறதில்ல வைரம்.. பேசக் கூலி கேக்குது.."

"இந்தக் காலத்தில இப்படியொரு பொண்ணு.. இரக்க சுபாவம்.. உதவி செய்யப் போன என் கையில ரெண்டாயிரம் ரூபாத் தாளைத் தருதுன்னா பாரேன்.."

அழகம்மை அயர்ந்துதான் போனாள்.. ஐம்பது நூறை இனாம் கொடுக்கலாம்.. இரண்டாயிரம் ரூபாயை யார் தருவார்கள்..

சாருலதா தருவாள்.. அவள் இரண்டாயிரம் ரூபாய்க் கட்டையே தானமாகத் தந்தாலும் அவள் வீட்டில் ஏனென்று கேட்க மாட்டார்கள்..

அவள் இளவரசி..! கோடிஸ்வரக் குடும்பத்தின் செல்ல மகள்.. வானத்தில் பவனி வந்த முழுநிலவு..

சாருலதா கோடிஸ்வரி.. அவள் பெயரில் மிகப்பெரும் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியே இருக்கிறது.. அது அவளுக்காக அவள் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.. அந்தக் கம்பெனியை நிர்வாகிக்கத்தான் அவள் சிவில் என்ஜனியரிங் படித்தாள்.. மேலே எம்.பி.ஏ படிக்கும் எதிர்காலத்திட்டத்துடன் இருந்தாள்.. என்பதெல்லாம் 'ஹ 2 ஷ்' அபார்ட்மெண்ட் வாசிகளுக்கும் தெரியாது.. அழகம்மைக்கும் தெரியாது..

கையில் இரண்டு வயதுக் குழந்தையும், எளிமையான தோற்றமுமாக சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்ட்டில் குடியிருக்கும் சாருலதாதான்..

'சார்ஸ் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி..'யின் முதலாளி என்பதை மட்டும் ரூபா அறிந்திருந்தால் சாருலதாவிடம் அலட்சியம்

காட்டியிருக்க மாட்டாள்.. விழுந்தடித்து மன்னிப்புக் கேட்டு தோழமை பூண்டிருப்பாள்..

அதை பத்மநாபனால் சொல்ல முடியாது.. மிகப் பெரிய கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் முதலாளியான அந்த கோடிஸ்வரி அவரிடம் வேலை கேட்டு வந்து நின்ற போது அவரது மனம் துடித்த துடிப்பை யாரறிவார்..?

சாருலதா அறிவாள்தான்.. அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் அமைதியாக ஒரு வேலையை அவரிடம் யாசகம் கேட்டும் யாசகியாக கையேந்தி நின்றாள்..

தானமளிக்கும் கை தானம் கேட்பதா..?

"இதை மட்டும் பிரசன்னா பார்த்திருக்கனும்.." அவர் மனம் குமுறினார்..

"அவர்தான் இங்கே இல்லையே அங்கிள்.."

"அமெரிக்காவுக்குப் போனவன் அங்கேயே இருந்து விடுவானா அம்மா..? திரும்பி வர மாட்டானா..?"

"தங்கமாக திரும்பி வரட்டும் அங்கிள்.. உங்களுடனும்.. ஆண்ட்டியுடனும் சேர்ந்து இருக்கட்டும்.. அதை நான் வேண்டாம்ன்னு சொல்வேனா அங்கிள்..?"

"அவனை மட்டும் வேண்டாம்ன்னு சொல்வாய்.."

பத்மநாபனின் கேள்விக்கு நான் என்ன செய்யட்டும் என்ற சோகத்துடன் பெருமூச்சு விட்டாள் சாருலதா.. பத்மநாபனின் துயரம் அதிகரித்தது..

"ஏன் இந்தத் துன்பம் சாரு..?" பொருமினார்..

"விதி அங்கிள்.."

"உன் வாழ்க்கையில் மட்டும் விதி விளையாடலை சாரு.. அதன் மூலம் பிரசன்னாவின் வாழ்க்கையிலும் சேர்த்து விளையாடுதே.. அவன் மனசு புண்ணாகியிருக்கே.."

"காலம் அவர் மனப் புண்ணை ஆற்றி விடும் அங்கிள்.."

"எனக்கு ஆறுதல் சொல்கிறாயா அம்மா..?"

"இல்லை அங்கிள்.. எனக்கே நான் ஆறுதல் சொல்லிக்கறேன்.."

"இந்த வேதனை உனக்குத் தேவையா சாரு..?"

"தேவைன்னு ஆகிப்போன பின்னாலே இந்தக் கேள்வி தேவையில்லை அங்கிள்.."

"பிரசன்னா உனக்குத் தேவையில்லையா அம்மா..?"

"உங்களுக்கும் ஆண்ட்டிக்கும் அவர் தேவை அங்கிள்.."

"இந்தக்கம்பெனி உன் கம்பெனி அம்மா... பிரசன்னாவின் மனைவியாக இதன் முதலாளியாக எம்.டி சேரில் உட்கார வேண்டியவள் நீ.. இங்கே வேலை கேட்டு வந்திருக்கிறாய்.. இது கொடுமையிலும் கொடுமை அம்மா.."

"இந்தக் கம்பெனி பிரசன்னாவிற்குத்தான் சொந்தம் அங்கிள்.. நான் இதில் உரிமை கொண்டாட முடியாது.. சார்ஸ் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியே எனக்கு வேண்டாம்ன்னு தூக்கிப் போட்டுவிட்டு வந்திருக்கிறேன்.. மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் மீதா ஆசைப்படப் போகிறேன்..?"

"இதெல்லாம் எதற்காகம்மா..? காதலுக்காகவா..?"

"கடமைக்காக.."

"அந்தக் கடமை பெத்தவங்களுக்காகன்னு இல்லையா..? உன் கூடப் பிறந்தவனுக்காகன்னு இல்லையா..? உன்னைக் காதலித்தவனுக்காகன்னு இல்லையா..?"

"இன்று புதிதாய் பிறந்தோம்ங்கிறதைப் போல நான் அன்றைக்குப் புதிதாய் பிறந்தேன் அங்கிள்.. அந்த நாளில் இருந்து என்னைப் பெத்தவங்களுக்கும், கூடப் பிறந்தவனுக்கும், காதலித்தவருக்கும் நான் சொந்தமில்லை.. ஏன்.. எனக்கே நான் சொந்தமில்லை.. என்மீது எனக்கு உரிமையில்லை.."

அழுத்தம் திருத்தமாகச் சொல்லித் தன்னைச் சேர்ந்தவர்களைத் தள்ளி நிறுத்தி விட்டுத் தனித்து கிளம்பி

வந்தவள் சாருலதா என்பது அழகம்மைக்குத் தெரியாது..

## 7

"உங்க குணத்துக்கு உடனடியாக வேலை கிடைக்கலன்னாத்தான் ஆச்சரியப் படனும்.. தங்கமான பொண்ணுல்ல.."

மனதாரச் சொன்னாள் அழகம்மை.. அதற்கும் மெலிதான புன்னகையை மட்டும் பதிலாக தந்த சாருலதா..

"தயா எங்கே..?" என்றாள்.

"கிரஷ்ஷீக்குள்ள வந்ததும் புள்ளையைப் பாத்தாகனும்.. புள்ள மேல உயிராய் இருக்கறீங்க.. தயா எங்கேயும் போயிடலை.. பின்னாடி ஆயாம்மா கூட விளையாடிக்கிட்டு இருக்கான்.."

அழகம்மையின் குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள இரண்டு இளம் பெண்களும், காப்பகத்தைச் சுத்தமாகப் பராமரிக்க ஒரு ஆயாவும் வேலை செய்தனர்.. குழந்தைகளைக் கவனித்துக் கொள்பவர்கள் குழந்தைகளின் வயதுக்கேற்ப விளையாட விடுவார்கள்.. பேசத் தெரிந்த குழந்தைகளுக்குப் கார்ட்டூன் படம் போட்டு அதன் மூலம் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள்.. விளையாட்டுடன் கூடிய கல்வி என்பதில் அழகம்மையின் குழந்தைகள் காப்பகத்திற்கு அந்த ஏரியாவில் நல்ல பெயருண்டு.. அவளும் அதற்கேற்ப மற்ற காப்பகங்களில் வாங்கும் கட்டணத்தைவிடச் சற்று அதிகமாகவே கட்டணம் வசூலிப்பாள்.. வாங்கும் கட்டணத்திற்கு ஏற்றபடி அங்கு பணி புரியும் இளம் பெண்கள் இருவருக்கும் தனியார் பள்ளிகளில் ஆசிரியைகளுக்குக் கொடுக்கும் சம்பளத்தின் அளவு சம்பளம் கொடுக்கிறாள்.. ஆயாவுக்கும் அப்படித்தான்..

வேதாவும், ராகினியும் 'ஹ 2 ஷ' அபார்ட்மெண்டில் இரண்டு படுக்கையறைகள் கொண்ட பிளாட்டுகளில் குடியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான்.. ஆசிரியை பயிற்சி முடித்திருந்தவர்கள் அரசு வேலை கிடைக்கும் வரை அருகில் உள்ள தனியார் பள்ளிகளில் வேலை பார்க்கலாம் என்று நினைத்திருந்தார்கள்.. அதே சம்பளம் அழகம்மையின் குழந்தைகள் காப்பகத்தில் கிடைத்ததில் பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்து விட்டதைப் போல அகம் மகிழ்ந்து அங்கேயே வேலைக்குச் சேர்ந்து விட்டார்கள்.. அரக்கப் பறக்க பஸ் பிடிக்க ஓட வேண்டியதில்லை.. மதிய உணவை டப்பாவில் அடைத்துக் கொண்டு போய் சாப்பிட வேண்டியதில்லை.. அடுத்த தெருவில் இருக்கிறது அழகம்மை குழந்தைகள் காப்பகம்.. நாள் முழுவதும்

இருக்க வேண்டிய அவசியமின்றி ஷிப்ட் முறையில் வேலை.. காலை எட்டு மணிக்கு வரும் வேதா மதியம் இரண்டு மணிக்கு வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று மதிய உணவை உண்டு விட்டு உறக்கம் போட ஆரம்பித்து விடுவாள்.. மதிய உணவை வீட்டிலேயே உண்டு விட்டு இரண்டு மணிக்கு வேலைக்கு வரும் ராகினி இரவு

எட்டு மணிவரை இருப்பாள்.. ஆறே மணி நேர வேலை.. அடுத்தடுத்த ஷிப்ட் என்பதில் இடைவெளியோ சோர்வோ இல்லாமல் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வார்கள் என்பதால் இப்படியொரு முறையை வகுத்து செயல் படுத்திக் கொண்டிருந்தாள் அழகம்மை..

அவள் கெட்டிக்காரி.. சாட்டையை எடுக்காமல் மாட்டிடம் வேலை வாங்கும் நுட்பம் அறிந்தவள்.. அவளது குழந்தைகள் காப்பகத்தின் பெருமையைக் குன்ற விடாமல் பாதுகாத்து மென்மேலும் வளர வைக்கும் வித்தையறிந்தவள்..

குழந்தைகள் காப்பகத்தின் வாட்ச்மேனும், ஆயாவும் கணவன் மனைவி... குழந்தைகள் இல்லாத அந்த தம்பதியை குழந்தைகள் காப்பகம் நடத்திக் கொண்டிருந்த வீட்டின் தோட்டத்தில் கட்டப் பட்டிருந்த அவுட் ஹவுஸில் குடி

வைத்து விட்டாள் அழகம்மை.. இருக்க இடம் இலவசம்.. நல்ல சம்பளம்.. வேறு எங்கும் வேலை

தேடிச் செல்லாமல் குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடியபடி அங்கேயே அந்தத் தம்பதி தங்கிவிட.. அழகம்மை குழந்தைகள் காப்பகத்தின் பராமரிப்புக் குறித்தும் பாதுகாப்பு குறித்தும் கவலையில்லாமல் அழகம்மையால் இருக்க முடிந்தது..

'ரங்கா' என்று அழைக்கப்படும் ரங்கநாதன் வாட்ச் மேன் வேலையை மட்டும்தான் பார்ப்பேன் என்று அடம் பிடிப்பதில்லை.. ஐம்பது வயதிலும் திடகாத்திரமாக இருப்பவனின் தோற்றம் மல்யுத்த வீரனைப் போல இருக்கும்.. அழகம்மை குழந்தைகள் காப்பகத்தின் 'ஆல் இன் ஆல் அழகுராஜா..' அவன்தான்.. கிரஷ்ஷிற்குத் தேவையான பொருள்களை வாங்கி வருவதிலிருந்து அழகம்மையின் காருக்கு காரோட்டியாக மாறுவதிலிருந்து அத்தனை வேலைகளையும் முகம் சுளிக்காமல்

செய்வான்..

அடிக்கடி அவனால்..

"அடி என்னடி ராக்கம்மா..

பல்லாக்கு நெளிப்பு..

என் நெஞ்சு குழுங்குதடி..

சிறு கண்ணாடி மூக்குத்தி

மாணிக்க சிகப்பு

மச்சானை இழுக்குதடி..

அடி ராக்கு.. என் மூக்கு.. என் பல்லு..

அடி ராஜாத்தி.."

என்று கொஞ்சப்படும் ராக்கம்மா நாற்பத்தியிரண்டு வயதிலும் கட்டுக் குலையாத இளமையழகுடன் பதினாறு வயதுக் குமரியைப் போல இருப்பாள்.. குழந்தையில்லாத

குறையை அழகம்மை குழந்தைகள் காப்பகத்தில் இருக்கும் குழந்தைகளைக் கொஞ்சிச் சீராட்டுவதன் மூலம் தீர்த்துக் கொள்பவள்.. குழந்தைகளைக் கீழே விடவே மாட்டாள்..

தன்னிடம் வேலை பார்ப்பவர்களைத் தன் குடும்பம் போல எண்ணும் மனது அழகம்மையிடம் இருந்தது.. சம்பளம் கொடுப்பதில் கணக்குப் பார்க்க மாட்டாள்.. அதனால் அவளிடம் வேலை பார்ப்பவர்கள் வேறு இடத்தில் வேலை தேடும் எண்ணமின்றி முழு மனதாக அர்ப்பணிப்போடு வேலை பார்த்தார்கள்.. அதிலும் 'ரங்கா'வும் ராக்கம்மாவும் அவர்களின் மூச்சு உள்ள வரை அழகம்மை குழந்தைகள் காப்பகத்தில்தான் இருப்பார்கள் என்று கற்பூரம் ஏற்றிச் சத்தியம் பண்ணாத குறையாக அடித்துச் சொல்லியிருக்கிறார்கள்..

ராக்கம்மாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம்.. 'தயா' என அழைக்கப்படும் இரண்டு வயது தயானந்தனின் மீது தனிப்பிரியம்.. எப்போதும் அவனை இடுப்பில் தூக்கி வைத்தபடி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருப்பாள்..

அழகம்மையின் பங்களா அதே தெருவில்தான் இருந்தது.. குழந்தைகள் காப்பகம் நடத்தும் வீடு அவளுடைய தாய் வீட்டுச் சீதனம்.. வீட்டை வாடகைக்கு விடாமல் ஏதேனும் ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்கலாமே என்று யோசித்தாள் அழகம்மை.. அவளது பிறந்த வீடு வியாபாரத்தில் பிரசித்தி பெற்றது.. அவர்களின் இனத்தில் ஏதேனும் ஒரு வியாபாரத்தைக் குலத் தொழிலாக கொண்டிருப்பார்கள்.. நர்சரிப் பள்ளி ஆரம்பிக்க நினைத்தவள் அந்த ஏரியாவில் வேலைக்குச் செல்லும் பெண்கள் குழந்தைகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்லத் தகுந்த குழந்தைகள் காப்பகமின்றி அல்லாடுவதைக் கவனத்தில் கொண்டு அழகம்மை குழந்தைகள் காப்பகத்தை ஆரம்பித்தாள்.. இப்போது அது அந்த ஏரியாவின் அடையாளமாகவே மாறி விட்டது..

"கைக்குழந்தையை கிரஷ்ஷில் விட்டுட்டு வேலைக்குப் போகனும்ங்கிற சிச்சுவேசன் இருந்தா அழகம்மை

குழந்தைகள் காப்பகத்தில விட்டு விட்டுப் போங்க.. மார்னிங் எயிட் டு நைட் எயிட் வரை வொர்க்கிங் டயம்.. குழந்தைகளைச் சுத்தமா வெந்நீரில் குளிக்க வைத்து வேளா வேளைக்கு பிஸ்கெட், பால், பழம்ன்னு கொடுத்து பசியாற வைத்து.. அந்தந்த சமயத்திலே தூங்க வைத்துக் கூடவே விளையாட்டுக் காட்டியபடி பாடமும் சொல்லித் தர்றாங்க.. பிள்ளைகளோட ஷேப்டிக்கு ஹண்ட்ரெண்ட் பெர்செண்ட் கேரண்டி உண்டு.. சோப்பு, டவல், பவுடர், பால், பிஸ்கெட், பழம்ன்னு குழந்தைகளுக்குத் தேவையான எதையும் நாம் கொண்டு போய் கொடுக்க வேண்டியதில்லை.. அவங்களே பார்த்துக்கிறாங்க.. ஜாயின் பண்றப்ப பத்து செட் டிரஸ் மட்டும் கேட்பாங்க.. அதை அவங்களே வாஷ் பண்ணி அயர்ன் பண்ணி வைத்துக்கிட்டு அப்பப்ப டிரஸ் சேன்ஜ் பண்ணி விடுவாங்க.. என்ன ஒன்னு ஃபீஸ் மட்டும் அதிகம்.."

இவ்வளவு சிறப்புகள் இருக்குமிடத்தில் பணம் அதிகம் வாங்குவதைப் பற்றி எந்தத் தாய் கவலைப் படுவாள்..?

"என்னப்பா இப்படிச் சொல்கிறீங்க.. பணமா முக்கியம்..? பிள்ளையோட ஷேப்டியும் கவனிப்பும்தான் முக்கயிம்.. நான் சம்பாதிக்கிறது யாருக்காக..?"

குழந்தைகளுக்கு என்று தனியாக பால், பழம், பிஸ்கெட், உணவு, டவல், பவுடர், மெடிசன், சோப், மாற்றுடை என்று மெனக்கெட்டு அடுக்கி எடுத்துக் செல்ல வேண்டிய அவசியமில்லாமல் அனைத்தையும் அழகம்மை குழந்தைகள் காப்பகமே கவனித்துக் கொண்டதில் சிரமம் குறைந்து சீராக மூச்சுவிட முடிந்த வேலைக்குச் செல்லும் இளம் தாய்மார்கள் அழகம்மை கேட்ட பணத்தை முகம் சுளிக்காமல் மனப்பூர்வமாக கொடுத்தார்கள்.. மற்ற ஏரியாக்களில் இருக்கும் தாய்மார்களும் அழகம்மை குழந்தைகள் காப்பகத்தைத் தேடி வந்து தங்கள் குழந்தைகளை விட்டுச் சென்றார்கள்..

'இதுவும் ஒரு வகையான தொண்டுதான்..' சாருலதா நினைத்துக் கொண்டாள்..

அதனாலேயே அழகம்மையிடம் தோழமையுடன் பேசிப் பழகுவாள்.. மற்றவர்களிடம் நின்று பேசாத சாருலதா அழகம்மையிடம் மட்டும் சற்று அதிக அளவில் பேசிப் பழகுவதற்கு அழகம்மையின் மீது அவள் வைத்திருக்கும் மதிப்புத்தான் முக்கிய காரணம்..

"ம்மா.."

குழந்தையின் மழலையில் வேகமாகத் திரும்பினாள்.. ராக்கம்மாவின் இடுப்பிலிருந்து அவளது கைகளுக்குத் தாவினான் தயா.. குழந்தையை இறுக்கி அணைத்து உச்சி முகர்ந்தவளுக்குள் தாய்மை சுரந்தது..

பெற்றால்தான் பிள்ளையா..?

"நீயென்ன கன்னித்தாயா..?"

செல்போனில் கொந்தளித்தான் பிரசன்னா.. அவள் செய்வது முட்டாள்தனம் என்றான்.. தயானந்தனைப் பாதுகாப்பதில் அவனுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லையென்றான்.. அவனுக்குத் தாயாக சாருலதா மாறுவதில்தான் அவனுக்கு கடலளவு ஆட்சேபனை இருக்கிறது என்று பல்லைக் கடித்தான்..

"இது என் முடிவு பிரசன்னா.. இதை அப்ஜெக்ட் பண்ண நீங்கள் யார்..?"

சாருலதா அன்று கேட்ட கேள்விதான் அவனை அமெரிக்காவில் இருக்கும் அனைத்துத் தொழில்களையும் சொத்துக்களையும் தூக்கிப் போட்டு விட்டு இந்தியாவுக்கு வரும் முடிவை எடுக்க வைத்தது..

"இது என் வாழ்க்கை... இதில் உங்களின் அப்ஜெக்சன்களுக்கு இடமில்லை.."

ஆணித்தரமாக சாருலதா பேசிய வார்த்தைகளின் அழுத்தம் எத்தகையதாக இருக்கும் என்பதை உணராதவளல்ல சாருலதா.. மிக அழுத்தமான காதல் அவர்கள் இருவருக்குமிடையே இருந்தது.. அது இன்னமும்

இருக்கிறது என்கிறான் பிரசன்னா.. இல்லை என்பதில் உறுதியாக நிற்கிறாள் சாருலதா..

கடலைவிட ஆழமானது பெண் மனதின் பாசம்.. கடமை.. கடன்பட்ட உணர்வு..

காதலை இவை ஜெயித்து விட்டன.. அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் செல்போனில் போராடிப் பார்த்தான் பிரசன்னா அது வேலைக்கு ஆகவில்லை.. சாருலதாவை விட அவனுக்கு எதுவும் பெரிதல்ல என்று அமெரிக்க வாழ்வைத் துறந்து இந்தியாவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான்..

'வந்து என்ன செய்யப் போகிறீங்க பிரசன்னா..?'

துயரத்துடன் பெருமூச்சு விட்டாள் சாருலதா... அந்தப் பெருமூச்சும் துயரமும் பிரசன்னாவுக்கானது.. அவன் மீதிருந்த காதலால் சாருலதா துயரம் கொள்ளவில்லை.. அவளது மனதைப் புரிந்து விலகிச் செல்லாமல் அவன் தன்னை வருத்திக் கொள்கிறானே என்றுதான் அவள் துயரம் கொண்டாள்..

"உன் வாழ்வை நீ உன் மனதின் ஆசைப்படி வாழ வேண்டும் சாரு.. யாருக்கோ பட்ட நன்றிக்கடனுக்காக உன் வாழ்க்கையை பாழடித்துக்கக் கூடாது.."

"என் வாழ்க்கையைத்தான் நான் வாழ்கிறேன்.. அதை நீங்களும் என் ஃபேமிலியும் புரிந்துக்காம என்னை டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டு இருக்கீங்க.."

"நான் உனக்குத் தொந்தரவா ஆகிட்டேனா சாரு..?"

மனம் வலிக்க அன்று பிரசன்னா கேட்ட கேள்வியில் சாருலதாவின் மனம் வலித்தது.. இருந்தாலும் தன் முடிவில் சற்றும் மனம் தளராமல் அவள் நிமிர்ந்து நின்றாள்..

"வேண்டாம் சாரு.. நான் சொல்வதைக் கேள்.."

"நான் ஒன்றும் முட்டாளில்லை பிரசன்னா.. என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும்.. நீங்கள் சொல்வதை நான் ஏன் கேட்க வேண்டும்..?"

இப்படி நெஞ்சைத் துளைப்பதைப் போலக் கேட்ட சாருலதா ஒரு காலத்தில் பிரசன்னா சொல்வதை மட்டும் தான் கேட்பாள்.. அவனுக்காக எதையும் செய்வாள்..

"அந்தச் சாருலதாவா நீ..?"

"இல்லை.."

நலிந்த குரலில் வலிமையாக மறுத்தாள் சாருலதா..

"அந்தச் சாருலதா தொலைந்து போனாள் பிரசன்னா. இதை நீங்க ஏற்றுக்கிட்டுத்தான் ஆகனும்... இப்போது இருக்கும் சாருலதா தயானந்தனின் அம்மா... சதானந்தனுக்காக காத்திருப்பவள்.."

"அவன் பெயரைச் சொல்லாதே.."

கோபத்துடன் உறுமினான் பிரசன்னா.. அவனது குரலில் தெரிந்த கொலைவெறியில் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்து விட்ட சாருலதாவின் மனக் கண்ணில் சதானந்தன் வந்து நின்றான்..

ஆறடிக்கும் மேல் உயரம்.. வாட்ட சாட்டமான உடல்வாகு.. பிரசன்னாவைப் போல சிவந்த நிறமாக கவர்ச்சிகரமான தோற்றத்துடன் இல்லாமல் மாநிறமும் கம்பீரமான தோற்றமுமாக காட்சி தந்தான்..

முரட்டு உருவமும் பெரிய மீசையுமாக இருக்கும் சதானந்தனுக்கும் சாருலதாவுக்கும் யாதொரு சம்பந்தமும் இருந்ததில்லை.. அவனிருந்த குப்பத்தின் வழியாக சாருலதா கல்லூரிக்குக் காரில் சென்று வந்த சம்பந்தம் மட்டுமே இருந்தது..

## 8

தன்னைப் போல் பிறரையும் நினைக்கும் குணம் கொண்டவள் சாருலதா... வன்முறைகளை அவள் அறிந்ததில்லை.. மென்மையான மனமும், குணமும்

கொண்டவள்.. இப்படிப்பட்டவள் வெளியுலகில் கால் பதிக்காமல் வீட்டுக்குள்ளே இருந்திருக்கலாம்.. போராடும் சூழல் வந்தால் போராடத் தெரிந்திருக்க வேண்டும்.. மகளைப் பொத்திப் பொத்தி வளர்த்த சுமதி மகளுக்குள் போர்க் குணத்தை விதைக்காமல் விட்டு விட்டாள்..

சுமதி வீட்டுப் பறவையாய் இருந்து பழகி விட்டவள்.. வெளியுலகை அறிய விரும்பாதவள்.. கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவளுக்கு அவளது குடும்பத்தில் வீணை, பாடல் என்று சொல்லிக் கொடுத்தார்கள்.. டிகிரி படிக்க வைத்தார்கள்.. பல கோடி மதிப்புள்ள சொத்துக்களை அவளுக்கு சீர்வரிசையாகக் கொடுத்து சக்ரபாணிக்கு மணம் முடித்து அனுப்பினார்கள்..

சுமதியைப் போலவே சக்ரபாணியும் கோடிஸ்வரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான்.. வீட்டுக்கு ஒரே மகன்.. சுமதி மருமகளாக அவரது மாளிகையில் காலடி வைத்ததும் சக்ரபாணியின் அம்மா குடும்பப் பொறுப்பை மருமகளிடம் ஒப்படைத்து விட்டார்.. வீட்டை நிர்வகிக்கப் பயிற்றுவிக்கப் பட்டிருந்த சுமதி அதை செவ்வனே செய்து குடும்பத்தை நிர்வகித்தாள்.. குழந்தைகளைப் பெற்றுக் கண்ணும் கருத்துமாக வளர்த்தாள்.. அவர்களைக் கவனித்துக் கொண்டாள்.. இதுதான் பெண்மைக்கு அடையாளம் என்று அவள் நினைத்தாள்..

சுமதியைச் சொல்லியும் குற்றமில்லை.. அவள் பிறந்தது முதல் அவளுக்கு அப்படித்தான் சொல்லிக் கொடுக்கப் பட்டிருந்தது.. அதன்படிதான் அவள் வளர்க்கப் பட்டிருந்தாள்.. அவள் பட்டம் பெற்றது கூட ஹோம் சயின்ஸ் படிப்பில்தான்.. சுமதியின் தமையன் எம்.பி.ஏ படித்து குடும்பத்தொழிலின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள இவள் மட்டும் சமத்தாக வீணை இசையைக் கற்றுக் கொண்டிருந்தாள்..

சக்ரபாணி சுமதியின் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் பிள்ளைகளின் விசயத்தில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தார்.. அவரது மகன் சதீஷ் எப்படி கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று வேலை

செய்வானோ, அதைப் போல மகள் சாருலதாவும் அவளுக்கென்று ஆரம்பிக்கப்படும் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் செயல்பட வேண்டும் என்பது அவரது எண்ணம்.. அதை கட்டளையாகவே சொல்லியிருந்தார்..

சதீஷ் பிறந்த எட்டு வருடம் கழித்துப் பிறந்தவள் சாருலதா.. சக்ரபாணியைப் போல சதிஷீம் குடும்பத்திற்கு ஒற்றை மகனாக இருக்கிறான் என்று எல்லோரும் நினைத்திருக்க அதைப் பொய்ப்பிக்கும் விதமாக சாருலதா ஜனித்தாள்.. பல தலைமுறைகளுக்குப் பின் குடும்பத்தில் உதித்த பெண் வாரிசு என்பதினால் சாருலதாவை சக்ரபாணியின் குடும்பமும், சொந்த பந்தமும் கொண்டாடினார்கள்.. சக்ரபாணியின் தாய், தந்தைக்கு பேத்தியென்றால் உயிர்.. அவளை தேவதையாக அவர்கள் கண்டார்கள்..

சாருலதா தேவதைதான்.. மென்மையான குணங்களைக் கொண்ட தேவதை.. மெல்லியலாள்.. அவள் வளர, வளர குடும்பத்தினர் அவள்மீது வைத்திருந்த பிரியமும் வளர்ந்து கொண்டேயிருந்தது.. தனக்குத் தெரிந்த கலைகளை மகளுக்குச் சொல்லிக் கொடுக்க முற்பட்டாள் சுமதி.. தனது தொழிலை மகளுக்கு கற்றுக் கொடுக்க முனைந்தார் சக்ரபாணி.. அவள் கட்டிடப் பொறியியலைக் கற்க வேண்டும் என்றார்..

"என் தாத்தா காலத்தில் வீடு கட்டி விற்கும் தொழிலாக இருந்தது.. அப்பா காலத்தில் அது வளர்ந்து அபார்ட்மெண்ட்களைக் கட்டி விற்க ஆரம்பித்தார்.. என் காலத்தில் அது 'சக்ரபாணி கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி'யாக மாறியது.. சதிஷ் அதை இன்னும் விரிவு படுத்தி 'சாகர் கண்ஷ்ட்ரக்ஷன் கம்பெனி..' என்று பிரம்மாண்டமாய் உருவாகியிருக்கிறான்.. சாருலதாவும் அவனைப் போல பிஸினெஸில் சக்சஸ் பண்ணிக் காட்ட வேண்டும் சுமதி.. அவளுக்காக நான் 'சார்ஸ் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி..'யை ஆரம்பிக்கப் போகிறேன்.. அதில் அவ எம்.டியா உட்காரப் போகிறா.. பி.ஈ சிவில் என்ஜினியரிங் படிக்கிறவளை வீணை, பாட்டுன்னு உன் வட்டத்தில் இழுக்காதே.."

எத்தனைதான் சக்ரபாணி கண்டித்தாலும் சாருலதாவின் மனம் வீணையையும், பாடலையுமே சுற்றிச்சுற்றி வந்தது..

"இது என் ஹாபி டாட்.. அப்ஜெக்ட் பண்ணாதீங்க ப்ளீஸ்.."

மகள் கெஞ்சினால் சக்ரபாணி எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுத்து விடுவார்.. மகள் மீதான அவரது பாசம் அளவு கடந்தது.. எல்லையில்லாதது.

சாருலதா இசையிலே தன்னை மறப்பவள்.. அருமையான குரல் வளம் கொண்டவள். அவளது கல்லூரியில் வீணை, பாடலில் நடக்கும் போட்டிகள் அனைத்திலும் முதல் பரிசு இவளுக்குத்தான்.. இவள் சந்தோசமாக வெற்றிக் கோப்பையுடன் வீட்டுக்கு

வந்தால்..

"ம்ஹீம்.. இதில மெடல் வாங்கறதுக்குப் பதிலா நீ உன் சப்ஜெக்டில மெடல் வாங்கியிருந்தா சந்தோசமாயிருக்கும்.." என்பார் சக்ரபாணி..

சாருலதாவின் அண்ணன் சதிஷ் அவருக்கும் மேல் இருப்பான்.. தங்கைக்கு உபதேசம் பண்ணுவான்..

"லெசர் டயத்திலயும், வீக் எண்டிலேயும் பாட்டுக் கச்சேரி, டான்ஸீன்னு சபாக்கள் பக்கம் படையெடுக்காம என் கம்பெனிக்கு வா சாரு.. உனக்கு பிஸினெஸ்ஸை கற்றுக் தருகிறேன்.. ஒரு செகண்டைக் கூட வீணடிக்கக் கூடாதுன்னு உனக்கு அப்பத் தெரியும்.."

'என்ன தேவைக்கு..?'

மனதில் தோன்றுவதைச் சொல்லாமல் பேச்சை மாற்றி விடுவாள் சாருலதா.. வாழ்க்கை வாழ்வதற்காக.. பணத்தைத் துரத்திக் கொண்டு ஓடுவதற்காக அல்ல என்பது அவளது எண்ணம்.. அதை தந்தையிடமும், தமையனிடமும் சொல்ல மாட்டாள்.. அவர்கள் சொல்வதை மறுத்துப் பேசாமல் புன்னகையுடன் தற்காத்துக் கொள்ளும் திறமை சாருலதாவிடம் இருந்தது..

மழையும் நீயே.. வெயிலும் நீயே என்பதைப் போல மென்மையான மனமும், இரக்க சுபாவமும் கொண்ட சாருலதா துறுதுறுப்பாகவும், சுட்டித்தனமாகவும் இருப்பாள்.. அவளால் அமைதியின் சிகரமாக ஆழ்ந்து பாடலை ரசிக்கவும் முடியும்.. தோழிகளுடன் கலகலத்து சிரித்தபடி கடற்கரையை ஒரு வழியாக்கவும் தெரியும்..

அவளது இந்த இரு வேறுபட்ட குணாதிசியத்தை ரசித்தான் பிரசன்னா... சுமதியின் ஒன்று விட்ட அண்ணனான பத்மநாபனின் ஒரே சீமந்த புத்திரன் அவன்.. அமெரிக்காவில் எம்.பி.ஏ படிக்கப் போனவன் அங்கே மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் கிளை ஒன்றை உருவாக்கி விரிவாக்கினான்.. அதி விரைவில் அவனது கம்பெனி வெற்றிகளை ஈட்டியதில் வேறு சில தொழில்களையும் ஆரம்பித்து அமெரிக்காவிலேயே மாளிகை கட்டி, சொத்துக்களை வாங்கித் தங்கி விட்டான்.. பத்மநாபன் வருந்தி வருந்தி மகனை இந்தியாவுக்குத் திரும்பி வரும்படி அழைத்து ஓய்ந்து போனார்..

"டாட்.. நீங்க இந்தியாவில் ஏர்ன்பண்ணி வைத்திருக்கிற புராப்பர்டிஸைவிட பல மடங்கு அதிகமான புராப்பர்ட்டிஸை நான் அமெரிக்காவில் ஏர்ன் பண்ணியிருக்கேன்.. எனக்கு இந்த கிளைமேட் பழகி விட்டது.. இயர்லி ட்வைஸ் இந்தியாவுக்கு வந்து உங்களையும், அம்மாவையும் பார்த்து விட்டு வருகிறேன்.. என் கூடவே இருக்கனும்னா நீங்களும், அம்மாவும் இங்கே வந்து விடுங்க.. நம்ம சென்னை பங்களாவைவிட இங்கே பெரிய பங்களா நமக்கு இருக்கு.."

இப்படிச் சொல்லி மறுத்துக் கொண்டிருந்த பிரசன்னா இப்போது அனைத்துத் தொழில்களையும், சொத்துக் களையும் அவனிடம் வேலை பார்ப்பவர்களின் மேற்பார்வையில் விட்டு விட்டு இந்தியாவுக்கு ஓடி வருகிறான் என்றால் அதற்கு அவன் சாருலதாவின் மீது வைத்திருந்த ஆழ்ந்த காதல்தான் காரணம்.. பெற்றவர்களின் வேண்டுகோளுக்கு செவி சாய்க்காதவன்.. அவனது காதலின் வேண்டுகோளுக்கு செவி சாய்க்க

மறுத்து விட்ட சாருலதாவிற்காக இந்தியாவுக்கு பறந்து வருகிறான்..

சதிஷின் திருமணத்தில்தான் பிரசன்னா சாருலதாவை முதல் முறையாக சந்தித்தான்.. சிறுவயதில் ஊட்டி கான்வெண்ட்.. வளர்ந்த பின்னால் அமெரிக்கப் படிப்பு.. அதன் பின்னால் அங்கேயே தொழில் என்று சுற்றிக் கொண்டிருந்தவன் உறவினர் வீட்டு விசேசங்களில் கலந்து கொண்டதில்லை.. அதற்கெல்லாம் அவனுக்கு நேரமிருக்காது... சதிஷின் திருமணத்திற்கு அவன் நேரத்தை ஒதுக்கிக் கிளம்பி வந்தது சதிஷின் மீது

இருந்த பாசத்தினால் அல்ல.. சதிஷ் மணந்து கொண்டது பிரசன்னாவின் சித்தி சாதனாவின் மகள் சோபனாவை என்பதற்காக..

பிரசன்னாவின் அம்மா மோகனாவும், சோபனாவின் அம்மா சாதனாவும் உடன் பிறந்த சகோதரிகள்.. அவர்களைப் பெற்றவர்களுக்கு இரண்டே மகள்கள்தான் என்பதினால் இருவருக்குள்ளும் பாசப் பிணைப்பு அதிகம்.. பிறந்த வீட்டின் சொத்துக்களுக்கு இவர்கள் மட்டுமே வாரிசு என்பதினால் இரு குடும்பங்களும் ஒன்றுபட்டு பல முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்..

அதனால் பிரசன்னாவும், சோபனாவும் ஒன்று விட்ட அண்ணன் தங்கையைப் போல இல்லாமல் உடன் பிறந்த அண்ணன், தங்கையைப் போல பாச மலர்களாக இருப்பார்கள்.. மோகனாவும், சாதனாவும் தங்கள் பிள்ளை என்று பிரித்துப் பார்க்காமல் இருவரிடமும் ஒன்று போல தாய்ப்பாசத்தைக் காட்டி வளர்த்தார்கள்.. அந்தத் தங்கையின் திருமணத்தில் கலந்து கொள்வது பிரசன்னாவின் அதி முக்கிய கடமை என்பதால் சோபனாவின் திருமணத்தில் அவளது அண்ணனாக முன்னே நின்றான்..

அந்தத் திருமணத்தில் சிரிப்பும், துறுதுறுப்புமாக வளைய வந்த சாருலதா அவனைக் கவர்ந்து விட்டாள்.. அவளது பேச்சும், சிரிப்பும், அழகும் அவன் மனதை மயக்கியதில்

அவளுடன் வாய் வளர்த்து வம்புக்கு இழுத்தான்.. அப்போது சாருலதா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்..

"என்ன படிக்கிற..?" என்ற பிரசன்னாவின் கேள்விக்கு..

'என்ஜினியரிங் படிக்கிறேன்..' என்று சொல்லாமல் கையில் வைத்திருந்த நாவலின் பெயரைச் சொல்லி ஒன்றும் அறியாத பெண்ணைப் போல இமைகளைக் கொட்டினாள்..

"ஊஹீம்..?" உதட்டைச் சுழித்துச் சிரித்து அவன் பார்த்த கள்ளப் பார்வை அவள் மனதை கொள்ளை கொண்டு விட்டது..

அதன்பின் அவன் அடிக்கடி சென்னைக்கு வந்து போனான்.. வருடத்திற்கு இருமுறை வந்து போக கூலி கேட்கும் மகன் மாதம் ஒருமுறை வந்து போக ஆரம்பித்ததில் விவரம் என்ன என்பதைக் கண்டு பிடித்து விட்ட பத்மநாபனும், மோகனாவும் மகிழ்ந்து போனார்கள்.. ஒருபக்கம் சக்ரபாணி மோகனாவுக்கு ஒன்றுவிட்ட அண்ணன்.. இன்னொரு பக்கம் மோகனாவின் தங்கை சாதனாவின் மகளை சக்ரபாணியின் மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள்..

இறுக்கமான சொந்தம் என்பதில்

"நம்ம சோபியோட நாத்தனாரை நம்ம பிரசன்னா மேரேஜ் பண்ணிக்கிட்டா ஒன்றுக்குள்ளே ஒன்றாக ஆகி விடுவோம்ங்க.." என்றாள் மோகனா..

பத்மநாபன் அதை ஆமோதித்தார்.. இவ்வாறு இரு குடும்பத்தாரும் ஒரு மனதாக ஆதரித்து வரவேற்றதில் எந்தவித எதிர்ப்பும் இன்றி சாருலதா, பிரசன்னாவின் காதல் செழித்து வளர்ந்தது.. அது திருமணத்தில் முடியும் என்று இரு குடும்பமும் காத்திருக்க சாருலதா வேறு ஒரு முடிவை எடுத்து அனைவரின் மனங்களையும் ஒடித்து விட்டாள்..

எறும்புக்கும் தீங்கு நினைக்காதவள் அவள்.. இரும்பு மனதுடன் இப்படிப்பட்டக் கனல் கங்குகளை அவளது சுற்றத்தாரின் மீதும் காதலனின் மீதும் வீசி விட்டாள்..

இப்படியெல்லாம் அவள் குடும்பத்தாரை தூக்கி எறிவாள்.. வீட்டை விட்டு வெளியேறி ஒரு சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்டில் குடியேறுவாள்.. எந்தக் கம்பெனியின் உரிமையாளரின் வீட்டுக்குள் மருமகளாக காலடிவைக்க இருந்தாளோ அந்த பத்மநாபனின் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கே வேலை கேட்டுப் போவாள் என்ற அவள் அறிவாளா என்ன..?

வாழ்க்கை எவரை எங்கே எப்படி நிறுத்தும், எவருக்கு எதிராக ஆயுதம் தூக்க வைக்கும் என்பதை எவராலும் கணித்துக் சொல்ல முடியாது..

அது விதியின் கட்டளை.. இன்னார்க்கு இன்னார் என்று தலைவிதியில் எழுதப்பட்டிருக்கும் போது சாருலதா சதானந்தனை விடுத்து பிரசன்னாவைக் காதலித்து விட முடியுமா..?

காலம் என்பது கடவுளால் வகுக்கப்பட்ட நியதி.. காலச்சக்கரம் சுழலும் சுழற்சியில் எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் மாறும்..

வாழ்க்கையும், விதியும், காலமும் சாருலதாவை சதானந்தனை சந்திக்க வைத்தன.. பிரசன்னாவை அவளிடமிருந்து பிரித்து தள்ளி நிறுத்தின..

இது சதானந்தன் தன் மனதில் புரிந்த தவத்திற்கான வரமாகவும் இருக்கக் கூடும்.. அவன் சாருலதாவின் உபாசகன்..!

9

சதானந்தனை அவள் பார்த்திருக்கிறாள்.. அவள் காரோட்டிப் போகும் குப்பத்தின் சாலை முனையில் இருக்கும் டீக்கடை பெஞ்சில் அவன் இருப்பான்.. முரட்டு ஜீன்ஸீம், காட்டன் முழுக்கை சட்டையும், அடர்ந்த கரிய நிற கலைந்த முடியும், மாநிறமும், செதுக்கப் பட்டதைப் போன்ற கம்பீரமான தோற்றமும், சிவந்த கண்களுமாக இருப்பான்.. முரடன் என்பதை முதல் பார்வையிலேயே சொல்லி விட முடியும்.. காரோட்டியபடி யதேச்சையாக அவள் பார்ப்பாள்... அவளை மட்டும் அவன் பார்த்துக் கொண்டிருப்பான்.. அதை அவள் உணர்ந்ததில்லை..

அன்றாட வாழ்க்கையில் தினம், தினம் திரும்பத்திரும்பச் சந்திக்கும் பல மனிதர்களில் ஒரு மனிதனாகத்தான் சதானந்தனை சாருலதா நினைத்தாள்.. ஆனால் அவன் அவளை அப்படி நினைக்கவில்லை.. அவளைப் பார்க்கும் அந்த சில நிமிடங்களுக்காகத்தான் அவன் நாள் முழுவதும் காத்திருந்தான்.. அவளைக் கண்ட நொடியிலேயே அவள் அவன் மனதில் கோவில் கட்டிக் குடியேறி விட்டாள்.. அவன் மனக் கோவிலின் தேவதையாக அவளை அவன் இருபத்தி நான்கு மணி நேரமும் நினைவுப் பூக்களால் அர்ச்சித்து ஆராதித்தான்..

இது சாருலதாவுக்குத் தெரியாது.. அவனை அவள் பார்த்திருக்கிறாள்.. ஒரு மனிதன்.. எவருக்கும் அஞ்சாதவன் என்றுதான் அவனைப் பற்றி அவளால் சொல்ல முடியும்.. அவன் அந்தக் குப்பத்தில் வசிப்பவன்.. நல்லவன்... அஞ்சா நெஞ்சன்.. அநியாயத்தைத் தட்டி கேட்பவன்.. நியாயத்தின் காவலன் என்று மட்டுமே அவள் அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள்..

அவனோ அவளை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான்.. அவள் எங்கே வசிக்கிறாள், எங்கே படிக்கிறாள் அவளது பிண்ணனி என்ன என்பது போன்ற அத்தனை விவரங்களும் அவனுக்கு அத்துபடி.. அவற்றையெல்லாம்

இம்மிகூட நழுவ விடாமல் விசாரித்து சேகரித்து வைத்திருந்தான்.. அவனுக்கு எட்டாத உயரத்தில் வானத்தில் மின்னும் தாரகையாக அவள் இருந்தாள்.. அவளை எட்டிப் பிடிக்க அவனும் நினைத்ததில்லை.. கிட்ட நெருங்கவும் முயன்றதில்லை.. அண்ணாந்து பார்த்து ஆராதிக்கவே விரும்பினான்.. அவளது உயரத்திலிருந்து அவளை கீழே இறக்கிவிட வேண்டுமென்று ஓர்நாளும் அவன் நினைத்ததில்லலை.. விண் மீது மண் ஆசைப்பட்டு ஏக்கம் கொள்ளலாம்.. அதனால் மட்டும் விண்ணை மண் எட்டிப் பிடித்து விட முடியாது என்ற நிதரிசனத்தினால் மட்டும் அவன் ஒதுங்கவில்லை.. விண்ணைத் தொட்டு விடக் கூடிய வீரன்தான் அவன்.. நொடிப் பொழுதில் சாருலதாவை சிறையெடுத்து தாலிகட்டி விட அவனால் முடியும்..

அவன் அதைச் செய்யவில்லை.. செய்யவும் மாட்டான்.. அவளைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்து வைத்திருப்பவன் பிரசன்னாவின் மீதான அவளது காதலைப் பற்றி மட்டும் அறியாமல் இருப்பானா..? சாருலதாவின் காதலை அறிந்ததும் அவன் மனம் வலித்த வலியை வார்த்தைகளால் சொல்லி விடமுடியாது..

சதானந்தன் தனிப்பறவை.. அவனுடைய கூடு போன்ற சின்னஞ்சிறு வீட்டில் அவன் மட்டுமே தனித்து இருக்கிறான்..

அவனுக்கென்று ஒரு குடும்பம் இருக்கத்தான் செய்தது.. அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி என்று கூட்டுக் குடும்பமாக அவர்கள் இருந்தார்கள்.. அந்த சின்னஞ்சிறு வீட்டின் ஒற்றைப் படுக்கையறையில் சதானந்தனின் அண்ணனும் அண்ணியும் இருக்க... மற்றவர்கள் ஹாலில் வரிசையாக பாய் விரித்துப் படுத்து உறங்குவார்கள்.. சிறிய சமையலறை.. ஹாலை ஒட்டி சிறிய அளவிலான திறந்தவெளி.. சிமிண்ட் தரையும் துவைக்கும் மேடையும் அருகில் குழாயுமாக இருக்கும் அந்தப் பகுதியில் பாத்ரூம் கட்டப்பட்டிருக்கும்.. அனைவருக்கும் பொதுவாக அந்த ஒரே ஒரு பாத்ரூம்தான்.. அவர்கள் குடியிருந்த பகுதியில்

சதானந்தனின் வீடுதான் வசதியான வீடு.. சொந்த வீடு.. மற்ற வீடுகள் குப்பத்து வீடுகளின் அனைத்து சிறப்பம்சங்களுடன் இருப்பவைதான்..

சுகாதாரக் குறைபாடுகள் நிறைந்த குப்பத்தில் அடிக்கடி பரவும் விசக்காய்ச்சல் சதானந்தனின் தாய், தந்தையை கொண்டு சென்று விட்டது.. அண்ணன், அண்ணியுடன் இருந்தான் சதானந்தன்.. அந்தக் கொடுப்பினையும் சில நாள்கள் வரைதான் நிலைத்தது.. நிறைமாத கர்ப்பிணியாக இருந்த கல்பனா, சதானந்தனின் அண்ணி, தண்ணி லாரி வருகிறது என்று குடத்துடன் நடு ரோட்டுக்கு ஓட எதிரே வந்த லாரி அவளை மோத நெருங்கி விட்டது.. மனைவியைக் காப்பாற்ற சாலையின் குறுக்கே பாய்ந்த சிவானந்தன், சதானந்தனின் அண்ணன், கல்பனாவை சாலையோரமாக தள்ளி விட்டு லாரியின் அடியில் மாட்டிக் கொண்டான்.. கண்ணெதிரே நடந்த அந்த கொடுமையில் கல்பனாவிற்கு பிரசவ வலி வந்துவிட சதானந்தன் அண்ணனையும், அண்ணியையும் அள்ளிக் கொண்டு மருத்துவ மனைக்கு ஓடினான்.. சிகிச்சை பலனளிக்காமல் சதானந்தனின் அண்ணன் கண்களை மூடிவிட அவனது குழந்தையைப் பெற்று சதானந்தனின் கைகளில் கொடுத்து விட்டுக் கல்பனாவும் கணவனைத் தொடர்ந்து கண்களை மூடி விட்டாள்..

கலகலப்பாக இருந்த வீட்டில் ஒற்றை மரமாக கையில் குழந்தையுடன் தனித்து வாழ ஆரம்பித்தான் சதானந்தன்.. அண்ணன் மகனுக்கு 'தயானந்தன்..' என்று பெயர் வைத்தான்.. இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களை பழுது பார்க்கும் வொர்க் ஷாப்பை வைத்திருந்தவன் வொர்க் ஷாப்பின் ஓரமாக அண்ணன் மகனுக்கு தொட்டில் கட்டிப் போட்டு தாலாட்டுப் பாடியபடி தன் வேலையை பார்த்துக் கொண்டிருப்பான்..

இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களைப் பிரித்துப் போட்டு பழுது பார்ப்பதில் கை தேர்ந்த தொழில் வல்லுனன் அவன்.. எப்படிப்பட்ட பழுதாக இருந்தாலும் நொடிப் பொழுதில் சரி செய்து விடுவான்.. அவனும் சிவானந்தனும்

கூட்டாக ஆரம்பித்த வொர்க் ஷாப் அது.. அதிலிருந்து வந்த வருமானத்தில்தான் சொந்த வீடு கட்டினார்கள்.. சொந்தமாக இடம் வாங்கி அங்கே வொர்க் ஷாப்பை மாற்றினார்கள்..

சிவானந்தனுக்கு சதானந்தனின் தொழில் திறமைதான் மூலதனம்.. படிப்படியாக வொர்க் ஷாப்பை பெரிதாக்கி பெரிய அளவில் உயர வேண்டும் என்றெல்லாம் தம்பியுடன் அவன் திட்டம் போடுவான்.. திட்டம் போட்டவன் உயிரை விட்டு விட்டதில் சதானந்தன் தனி மரமானான்.. தாய், தந்தை, அண்ணன், அண்ணியென்று ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் இழந்து விட்டவனை சோகச் சுமை அழுத்த ஆரம்பித்தது.. அதை மறக்க குடியை நாடும்படி அவனைச் சுற்றியிருந்தவர்கள் வற்புறுத்தினார்கள்.. சூழலும் அதை ஆதரித்தது..

சதானந்தன் குடிக்க மறுத்து விட்டான்.. அவனை நம்பி அவன் மடியில் நிச்சிந்தையாக உறங்கும் குழந்தையின் பாதுகாப்பிற்காக அவன் குடியைத் தவிர்த்து விட்டான்.. குடிக்கு அடிமையாகி விட்டால் குழந்தையை சரிவர வளர்க்க முடியாது என்ற சுயகட்டுபாடு அவனிடம் இருந்தது..

குழந்தையுடன் இருப்பவன் அதிக வேலைகளை ஏற்றுக் கொள்வதில்லை... சிவானந்தனுடன் சேர்ந்து வேலை செய்தபோது இருந்த உற்சாகம் தொலைந்து விட்டது... சுதந்திரமாக இருந்தவன் குழந்தையை வளர்க்கும் கடமையில் சிக்குண்டதில் வேலை அவனுக்கு இரண்டாம் பட்சமாகி விட்டது..

சதானந்தன் பெரிய வேலைகளை ஏற்றுக் கொள்வதில்லை.. உடனே சரி செய்யக் கூடிய சிறுசிறு பழுதுகளை மட்டுமே சரி செய்து கொடுப்பான்.. அன்றாடச் செலவிற்கு பணம் கிடைத்தால் மட்டும் போதும் என்ற விரக்தி அவனுக்கு வந்து விட்டது..

அப்படிச் சென்ற நாள்களில் ஓர்நாள் அவன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது குழந்தை தயானந்தன்

தவழ்ந்து தெருவில் இறங்கி விட்டான்.. சிவானந்தனைப் போலவே இவனும் சாலை விபத்தில் சிக்கி விட்டான்.. சிவானந்தனை அடித்துப் போட்டது லாரி என்றால் அவனது குழந்தையை அடித்துப் போட்டது மோட்டார் சைக்கிள்..

"டேய்.. டேய்.." என்று குப்பத்து ஜனங்கள் கத்தியபடி ஓடி வந்து கூடுவதற்குள் அகப்பட்டால் சட்னியாகி விடுவோம் என்று அவன் சிட்டாக பறந்து விட்டான்..

அந்த வழியில் காரை ஓட்டி வந்த சாருலதா என்ன, ஏது என்று கூட விசாரிக்காமல் ரத்த வெள்ளத்தில் கிடந்த குழந்தையைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு அருகில் இருந்த மருத்துவ மனைக்கு விரைந்தாள்.. செய்தியறிந்து சதானந்தன் மருத்துவ மனைக்கு ஓடி வந்த போது தயானந்தன் பிழைத்திருந்தான்..

"சரியான நேரத்தில அந்தப் பொண்ணு கொண்டு வந்து சேர்ந்து விட்டதா டாக்டரய்யா சொன்னாரு.." என்றாள் தயானந்தனுடன் காரில் ஏறி வந்த குப்பத்து பெண்.

தயானந்தன் கண் விழித்துப் பார்த்து சிரித்த பின்புதான் சாருலதா மருத்துவ மனையை விட்டுக் கிளம்பினாளாம்.. தயானந்தனுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான பணத்தையும் சாருலதாவே மருத்துவ மனையின் ரிசப்சனில் கட்டி விட்டுப் போனாளாம்..

அவள் பெயர் சாருலதா என்று சதானந்தனுக்கு அப்போது தெரியாது.. ஏன்.. அவளையே அவனுக்குத் தெரியாது.. அவன் பெண்களை உற்றுப் பார்க்கும் ரகமல்ல.. விலகி நிற்பவன்.. பெண்களிடம் அதிகமாக பேச மாட்டான்..

"நம்ம குப்பத்து ரோட்டு வழியாத்தான் அந்தப் பொண்ணு காரில போகும்.. வரும்.. நீ பார்த்ததில்லையா..?" என்ற கேள்விக்கு..

"இல்லை.." என்றுதான் பதிலளித்தான்..

"அந்தாண்டை இருக்கிற மெயின் ரோட்டுக்கு அப்பாலே பெரிசு பெரிசா பங்களாக்களா கீதே.. அங்க இருந்துதான் இந்தப் பொண்ணு காரோட்டிக்கிட்டு வரும்.. பாரேன்..

ஏழைப்பட்ட சனங்களுக்கு இல்லாத பெரிய மனசு பங்களா வூட்டுல கீற பொண்ணுகிட்ட கீது.. இன்னாங்கிற.."

ஆமாம்ங்கிறேன் என்று சொல்லத்தான் அவன் ஆசைப் பட்டான்.. மறுநாள் சாருலதாவின் கார் வரும் நேரம் பார்த்து அவன் காத்திருந்தான்.. குழந்தையுடன் சாருலதாவின் காரில் ஏறிப் போன பெண்மணி சாருலதாவின் காரை அவனுக்கு அடையாளம் காட்டினாள்.. நொடிப் பொழுதில் அவனைக் கடந்து சென்ற காரை ஓட்டிக் கொண்டிருந்தவளின் முகம் அவன் மனதில் பதிந்து விட்டது.. அவன் மனதைக் கொய்த நிலவு முகம் அது.. அவளைப் பார்த்த அந்த நொடியில் அவன் தொலைந்து போனான்..

அவள் யார் என்று அறிந்து கொள்ள ஆசைப்பட்டான்.. கிடைத்த விவரங்கள் அவனைத் தள்ளி நிற்க வைத்தன..

'ஏண்டா, இவனோட அண்ணன் மகனைக் காப்பாற்றப் போய் வம்பிலே மாட்டிக்கிட்டோம்ன்னு அவ நினைச்சிரக் கூடாது..'

முதலில் வந்தது இந்த எண்ணம்தான்.. அடுத்து வந்ததுதான்..

'வேற ஒருத்தனை மனசார நினைக்கிறவளை என் நினைப்பு தொந்தரவு செய்து விடக் கூடாது..' என்ற உறுதி..

சதானந்தன் மறந்தும் அவளது நிழலைக் கூட நெருங்கி விடக் கூடாது என்று கவனமாக இருந்தான்.. அவள் வரும் வழியில் கூடத் தென்பட மாட்டான்.. சுய கட்டுப்பாட்டில் கரை கண்டவன் அவன்.. அப்படி விலகி நின்றவனை அவள் வரவை எதிர்பார்த்து தினந்தோறும் டீக்கடை பெஞ்சில் தவமிருக்கவைத்தது மற்றொரு நிகழ்வு..

அவன் குடியிருந்த குப்பத்தில் ஓர் திருமணம் நடந்தது.. திருமணக் கூட்டத்துடன் கூட்டமாக அவன் நின்று கொண்டிருந்த போது அவனுக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தவளாய் காரில் வந்து இறங்கினாள் சாருலதா..

'இவளா..? இவ எப்படி இந்தக் கல்யாண வீட்டுக்கு வந்திருக்கா..?' சதானந்தனின் கண்கள் மின்னின..

கல்யாணப் பெண்ணின் அம்மா சாருலதாவின் வீட்டில் வீட்டு வேலை செய்பவளாம்.. அவளது அழைப்பை மதித்து சாருலதா வந்து நின்றதில் அவளுக்குத் தலைகால் புரியவில்லை.. சாருலதாவை உபசரிக்க அவள் ஓடியோடி பரபரக்க தனக்காக மெனக்கெட வேண்டாம் என்று தடுத்து விட்டாள் சாருலதா..

அவளின் அந்த எளிமையான இயல்பு சதானந்தனை வசீகரித்தது... தேவதைகள் அன்பை மட்டுமே அடையாளமாக கொண்டவர்கள்..

## 10

தனக்காக போடப்பட்ட நாற்காலியில் கூட உட்காராமல் மணமேடை அருகே கூட்டத்தோடு கூட்டமாக கலந்த நின்றாள் சாருலதா.. அவளுக்காக ஏங்கித் தவிப்பவன் என்பதை அறியாமலே சதானந்தனின் அருகில் அவள் நின்றதில் மயங்கிப் போனான் சதானந்தன்.. கடைக் கண்ணால் நோட்டமிட்டான்.. அவர்களுக்கு அருகாமையில் மணமக்களின் பெற்றோர் நின்றிருந்தார்கள்.. வயதான அந்த ஜோடிகளின் மத்தியில் இவர்கள் இருவரும் ஜோடியாக நின்றிருந்ததில் எப்பேற்பட்ட வரம் இது என்று சிந்தை முழுதும் இன்பம் நிரம்பியது..

மணமேடையென்று தனித்து எதுவும் இல்லை.. வீட்டின் அருகாமையில் இருந்த திறந்தவெளியில் கீற்றுக்கொட்டகை போடப்பட்டு அங்கே ஜமுக்காளங்களும் சேர்களும் போடப்பட்டிருந்தன.. கொட்டகையின் மத்தியில் விரிக்கப்பட்டிருந்த புது ஜமுக்காளத்தில் மணமக்கள் உட்கார வைக்கப் பட்டிருந்தனர்..

இதுதான் ஏழைகளுக்கான திருமண மண்டபமும், மணமேடையும்.. சாருலதா எதையும் புதிது போலப்

பார்க்கவில்லை.. அலட்டிக் கொள்ளவில்லை.. இயல்பாக இது போன்ற பல திருமணங்களில் கலந்து கொண்டவளைப் போல நின்றிருந்தாள்..

"இது ஆரு கண்ணம்மா..?"

"ஆங்..? நான் வூட்டுவேல செய்யற பங்களாக் காரம்மாக்கா.. நான் பத்திரிக்க வைக்கிறப்ப கட்டாயம் கண்ணாலத்துக்கு வரனும்மான்னு சொன்னேனா.. ஆகட்டும் கண்ணம்மான்னு சொல்லிச்சு.. சொன்ன வார்த்தயக் காப்பாத்த நேரில வந்து நின்னிருச்சு பாரேன்.."

"ஆச்சரியந்தான் போ.. நானும்தான் நாலு வூட்டுல வேல செய்யறேன்.. வூடா அது..? ம்ஹீம்.. நல்ல மனுசாளு வூட்டுல வேல செய்யறதுக்கும் கொடுத்து வச்சிருக்கனும் போல.. இன்னாங்கிற..?"

"அஆங்.. தங்கமான பொண்ணுக்கா.. இது தொட்டா பட்ட மரமும் பூப்பூத்திரும்ல்ல.."

'அப்படியா..?' சாதானந்தனின் பார்வை பக்கவாட்டில் நின்ற சாருலதாவின் முகத்தை வருடியது..

'நான் பட்ட மரம்தான்.. என் மனதைத் தொட்டு என் வாழ்வை இவள் தழைக்க வைப்பாளா..? இடி விழுந்த எந்தன் வீட்டில் பூக்கள் பூக்கச் செய்வாளா..?'

இந்தக் கிறக்கம் தீராக்கிறக்கம் என்ற ஏக்கம் கொண்டான் அவன்.. மாய நதித் தீரத்திலே நீராட மனம் ஏங்கினால் அது நடந்திடும் செயலா..?

அருகில் ஒருவன் அவளுக்காக உயிர் உருக ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பதை அறியாதவளாய் கல்யாண வீட்டின் கலகலப்பை படு சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் சாருலதா..

தாம்பாளத்தில் அட்சதைக்கான மஞ்சளில் தோய்க்கப்பட்ட அரிசி, தேங்காயுடன் மாங்கல்யம் வைக்கப்பட்டு திருமணத்திற்கு வந்திருந்தவர்களின் ஆசிக்காக அனுப்பப்பட்டது.. அனைவரும் அட்சதையை எடுத்துக்

கொள்ள மணமக்களிடம் தாம்பாளம் வந்து சேர்ந்தது.. அய்யர் தாலியை எடுத்து மணமகனிடம் நீட்டி..

"கட்டுங்கோ.." என்றார்..

தாலியை மணமகனுக்குப் பதில் அவனது அப்பா கைப்பற்றிக் கொண்டு மாப்பிள்ளையைப் பார்த்து..

"எந்திரிடா.." என்றார்..

கல்யாணவீடு களேபர வீடானது.. ஆளாளுக்கு சத்தம் போட அங்கே கலகலப்பு மறைந்து கை கலப்பு ஏற்படும் சூழல் உருவானது... பயந்து போன சாருலதா தன்னிச்சையாக நகர்ந்து அருகில் நின்ற சதானந்தனின் முதுகிற்குப் பின்னால் ஒன்றிக் கொண்டாள்... சதானந்தனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. அவளது தளிர் விரல்கள் பட்ட இடமெல்லாம் சில்லென்ற மழைத் துளிகளின் சாரல் தெளித்து விழுந்ததைப் போல இருந்தது.. யுகத்துக்குண்டான இன்பம் மொத்தமும் அவளது விரல்கள் அவனது உடலில் படர்ந்திருந்த அந்த சில நிமிடங்களில் கிடைத்து விட்டதைப் போல அவன் உணர்ந்தான்.. மனது தித்தித்தது.. அந்த நிமிடங்கள் நீளாதா என்று மனம் ஏக்கம் கொண்டது..

எளிதில் கிட்டாத அந்த மாயநதி தீரத்திலே அவன் மூழ்கித் திளைக்க முடியாமல் கல்யாணப் பெண்ணின் கண்ணீர் அவனை பாதித்தது..

சதானந்தன் சாருலதாவை மறந்தான்.. கண்ணெதிரே நடந்த அக்கிரமத்தில் கோபம் கொண்டவன்..

"டேய்.. இடத்தை விட்டு அசையக் கூடாது.. உங்கப்பன் கூப்பிடறான்னு கொஞ்சம் அசைஞ்சாக் கூடப் போதும்.. உன்னுசிரு உனக்குச் சொந்தமில்ல.. பாத்துக்க.." என்று மணமகனை எச்சரித்தான்..

அபயம் என்று அவனை அணுகி முதுகுப்புறமாக மறைந்து நின்றிருந்த சாருலதா விலகி அவனை ஆச்சரியமாக பார்த்தாள்.. அவளது அந்தப் பார்வையில் அவன் மனது தாம்தரிகிட தோம் என்று சந்தோசம் கொண்டாடியது..

அவனது இயல்பான கோபத்தில் அவள் பிரமிக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.. எளிய மனிதர்கள் அவர்களின் நியாயமான கோபங்களை உடனடியாக வெளிப்படுத்தி விடுவார்கள்.. மனதுக்குள்ளே பொத்திப் பத்திரப் படுத்தி வன்மம் வைக்க மாட்டார்கள்..

மேட்டுக்குடியில் பிறந்த சாருலதாவிற்கு இது எப்படித் தெரியும்..? அதனால் அவள் புதிதான ஒன்றைப் பார்ப்பதைப் போல சதானந்தனின் கோபத்தை விழி விரியப் பார்த்து வைத்தாள்..

'என்னடா இது.. இவ இப்படிப் பார்க்கிறா.. இப்ப நான் சத்தம் போட்டா நான் என்னவோ இவ பார்க்கிறா அப்படிங்கிறதுக்காக ஹீரோ வேசம் கட்டினதப் போல இல்ல ஆகிரும்..'

எவரும் அப்படிச் சொல்ல மாட்டார்கள்தான்.. ஏன் சாருலதாவே அப்படி எண்ண மாட்டாள்தான்.. யாருக்கும் சதானந்தனின் மனதில் உள்ள காதலைப் பற்றித் தெரியாதே..

அதை தெரிந்து வைத்திருக்கும் சதானந்தனின் மனச்சாட்சி கேள்வி கேட்கும்.. அவன் வேண்டுமென்றே அவளது கவனத்தைக் கவர சீன் சிரியேட் பண்ணுகிறான் என்று சொல்லும்..

'என்ன செய்கிறது..?'

அவன் மானசீகமாக தலையைச் சொரிந்து கொண்டிருப்பதை அறியாமல் மாப்பிள்ளையின் தந்தை தாலியைத் தன் கையில் சுழற்றியபடி..

"வாங்கடா.. டாய்.." என்று தன் பக்கத்து சொந்தங்களுக்கு சவுண்டு விட்டு அழைத்தார்..

தாலியை அந்த மனிதர் சுழற்றிய சுழற்றலில் சதானந்தன் சாருலதாவையும், மனச்சாட்சியையும் மறந்து விட்டுத் தன் முழுக்கை சட்டையின் முன்பக்க கைப்பகுதியை மடித்து ஏற்றி விட்டபடி..

"வாங்கடா... எத்தனை பேருடா வர்றீங்க... வர்றவனையெல்லாம் பந்தாடி வெத்தல பாக்கு போட்டுக்க வைத்துக்கலன்னா என் பேரு சதானந்தன் இல்லடா.. ஒண்டிக்கு ஒண்டி வேண்டாம்டா.. என் ஒருத்தனுக்கு நீங்க அத்தன பேரும் பதில் சொன்னாப் போதும்.. வந்து பாருங்கடா.." என்று முன்னேறினான்..

நிஜ வாழ்க்கையில் ஓர் கதாநாயகனின் சாகசத்தைப் பார்க்கப் போகும் ஆவலுடன் சாருலதா உற்சாக மடைந்தாள்.. மணமகனின் தந்தையோ சதானந்தனுடன் மல்லுக்கு நின்றால் வேலைக்கு ஆகாது என்று சமரசப் பேச்சு வார்த்தைக்கு வந்தார்..

"யோவ்.. இன்னா..? ஒங்குப்பத்தில பெண்ணெடுக்க வந்திட்டா நீ இன்னா வேணும்னாலும் செய்வியா..? இந்தாப்பாரு.. நாய, அநியாயத்துக்கு கட்டுப்பட்டுப் பேசு.. ராங்காப் பேசாத.. அஆங்.."

"எதுய்யா நியாயம்...? மணவறையில தாலி கட்ட உட்கார்ந்திருக்கிற உன் மகனை எழுந்திருக்கச் சொல்றியே.. இதுதான் உன் நாயமா..? தாலிய என்னவோ வில்லனைப் போல விரலில கோத்துச் சுத்திக்கிட்டு இருக்கியே.. பெரிய மனுசனாய்யா நீ..?"

"இன்னாத்துக்கு இம்மாங் கூவு கூவற..? இன்னா நடந்துச்சுன்னு உனக்குத் தெரியுமா..?"

"என்ன நடந்திருந்தாலும் எனக்கு அதப் பத்திக் கவலையில்ல.. மணவறையில எங்க குப்பத்துப் பொண்ணு வந்து உட்கார்ந்தாச்சு.. பக்கத்தில உன் மகனும் உட்கார்ந்தாச்சு.. இனி அவன் தாலி கட்டாம எழுந்திருச்சா அது எங்க குப்பத்துப் பெண்ணோட வாழ்க்கையையும் பாதிக்கும்.. எங்க குப்பத்தோட மரியாதையையும் பாதிக்கும்.."

"இத மட்டும் விலாவாரியாப் பேசறியே.. பொண்ணுக்கு பத்துப்பவுன்னு நக போடறேன்னு சொல்லிட்டு வெறும் அஞ்சு பவுனு நகய மட்டும் போட்டுக் கட்டிக் கொடுக்கப் பாக்கறாங்களே.. அது உனக்குத் தப்புன்னு தெரியலயா.."

'இதுக்காடா இந்த ஆட்டம்..?'

மாப்பிள்ளையின் தகப்பனை ஒரு புழுவைப் பார்ப்பதைப் போல பார்த்து விட்டு கண்ணம்மாவின் பக்கம் திரும்பிய சதானந்தன் தலையில் அடித்துக் கொண்டு..

"இன்னாக்கா இதெல்லாம்..? பொண்ணோட குணத்தப் பாக்காம பவுனு, பவுனுன்னு அடிச்சிக்கிறவன் வூட்டுல போய் சம்பந்தம் பேசித் தொலைச்சிருக்கயே.. போடறேன்னு சொன்ன பவுன போடனுமா, வேண்டாமா..?" என்று கடிந்து கொண்டான்..

"நான் இன்னாத்த செய்யட்டும் சதா..? இந்த மாசம் சீட்ட எடுத்து மொத்தப் பவுனையும் போட்டுப் புடலாம்ன்னுதான் இருந்தேன்.. முனிம்மா வூட்டுல அவ பொண்ணு தலைச்சன் பிரவசத்துக்கு வந்துட்டா.. அக்கா இந்த மாச சீட்ட நான் எடுத்துக்கறேன்.. அடுத்த மாச சீட்ட நீ எடுத்துக்கன்னா.. பொண்ணப் பெத்த ஆத்தாளுக்குத்தான் அந்த கஷ்ட நஷ்டமெல்லாம் தெரியும்.. இப்ப இன்னா.. கண்ணாலத்தில போடற பவுன, மறுவீட்டு விருந்து முடிஞ்சு போறப்ப போட்டு விட்டாப் போச்சுன்னு ஆகட்டும் மினிம்மாக்கான்னு சொல்லிப் பூட்டேன்.. ஏழைக்கு ஏழைதான் விட்டுக் கொடுக்கனும் சதா.. இது உனக்குத் தெரியாதா..?"

"எனக்குத் தெரிஞ்சு இன்னா செய்ய..? இந்த பெரிய மனுசனுக்குத் தெரியனுமே.. கேட்டுக்கிட்டியாய்யா.. உன் பவுனு எங்கேயும் ஓடிப் போயிராது.. அடுத்த மாச சீட்டுப் பணத்த எடுத்து அக்கா போட்டிரும்.."

"அப்ப, அடுத்த மாசமே கண்ணாலத்த வைச்சுக்கலாம்.."

"அடிங்..! நானும் போனாப் போகுது.. வயசில பெரிய மனுசனாச்சேன்னு பொறுமையாப் பேசினா நீ செல்லமா கொஞ்சற..? இப்ப.. இந்த நிமிசம் இங்கே கண்ணாலம் நடந்தாகனும்.. மாத்திக் கீத்திப் பேசின.. நடக்கிறதே வேற.."

"இன்னா.. மிரட்டறியா..?"

"ஆமாய்யா.. அப்படித்தான்.. இன்னாங்கிற.. இப்ப உன் மகன் கையில தாலியக் கொடுக்கப் போறியா இல்iலியா..?"

சதானந்தன் போட்ட சத்தத்தில் பயந்து போன மாப்பிள்ளை உட்கார்ந்த வாக்கிலேயே எம்பி தகப்பன் கையிலிருந்த தாலிக் கயிறை பறித்து மணமகளின் கழுத்தில் கட்டி விட்டான்.. கல்யாணம் நடக்குமா, நடக்காதா என்ற திகிலுடன் தன்னை தற்காத்துக் கொள்ள ஒரு சேரின் பின்னால் ஒளிந்திருந்த அய்யர் தலையை நீட்டி..

"நான் மாங்கல்யம் தந்துனானேனென்னு மந்திரத்தைச் சொல்லலையே.." என்று குரல் கொடுத்தார்..

"யோவ் அய்யரு.. நீ அங்கே ஒளிஞ்சிருக்கிறயா..? இன்னா அய்யருய்யா நீ..? மந்திரம் சொல்ல வந்த மனுசன் ஓடி ஒளிஞ்சுக்கிட்டா நீ மந்திரம் சொல்ல வருகிற வரைக்கும் கல்யாணம் காத்திருக்குமா..? வா.. வா.. அடுத்த மந்திரத்தைச் சொல்லு.." வெகு இலகுவாகச் சொன்னான் சதானந்தன்..

நிற்க இருந்த திருமணத்தை நடத்தி விட்ட எக்களிப்பு சிறிதும் இல்லாமல் எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் சதானந்தனின் இயல்பில் மனம் லயித்தாள் சாருலதா..

அரிதான எதுவும் ஆகர்ஷிப்பதுதான்.. சதானந்தன் அரிதானவன் என்று அவளுக்குத் தோன்றியது.. அவனுக்கு அவளைத் தெரியும்.. அவனுடைய அண்ணன் மகனை அவள் காப்பாற்றியிருக்கிறாள் என்பதெல்லாம் அவளுக்குத் தெரியவே தெரியாது..

மணமக்களை வாழ்த்த கண்ணம்மா சாருலதாவை அழைத்தபோது அருகில் சென்று அட்சதையைத் தூவிய சாருலதா புன்னகையுடன் தன் கழுத்தில் இருந்த தங்க ஆரத்தைக் கழட்டி மணமகளின் கழுத்தில் போட்டு விட்டாள்..

எதிர்பாராமல் கழுத்தில் விழுந்த தங்க ஆரத்தில் மணமகள் பிரமித்துப் போக, கண்ணம்மா..

"அம்மா.." என்று கையெடுத்துக் கும்பிட்டாள்..

"ச்சூ.. இதெல்லாம் பண்ணக்கூடாது.. ஆக்சுவலா இந்தக் கல்யாணத்துக்கு கிப்ட் செக்கா ஒன் லெக் பணம்

கொடுக்கலாம்ன்னுதான் கொண்டு வந்தேன்.. இப்ப செக்கைவிட ஜ்வல்லைக் கிப்ட்டாக் கொடுக்கிறதுதான் பெட்டர்ன்னு தோணிருச்சு.. புதிதாப் போய் வாங்கி வர நேரமில்லை கண்ணம்மா... இதுவும் புதிதுதான்..

வாங்கி டென் டேஸ்தான் ஆகுது.. இன்றைக்குத்தான் போட்டுக்கிட்டேன்.."

"இன்னாம்மா இது.. இந்தக் கழுதைக்கு நகையை அவுத்துப் போட்டு விட்டுட்டு அது பழசில்லன்னு சொல்றீக இது அதிகம்மா.."

"அதிகமெல்லாம் ஒன்னுமில்ல கண்ணம்மா.. பத்து சவரன்தான்.."

சுற்றியிருந்த குப்பத்து ஜனங்கள் 'ஆ'வென்று வாய் பிளக்க அதைப் பொருட்படுத்தாமல் புன்னகையுடன் கிளம்பிப் போய்விட்டாள் சாருலதா..

"இன்னாய்யா.. சம்பந்தகாரய்யா.. நீ பத்துப் பவுனு நகதான் கேட்ட.. இப்ப பதினைஞ்சு பவுனு நக கணக்கில வந்து நிக்குது.. அஞ்சு பவுனு நகய கழட்டிக்கிட்டு பொண்ண அனுப்பி வைக்கிற ஜனங்க இல்ல நாங்க.. எங்க பொண்ணுக்கு செய்யறோம்ன்னு பெருந்தன்மையா அனுப்பி வைக்கிறோம்.. உன் மகனையும் மருமகளையும் உன் வூட்டுக்குக் இட்டுக்கிட்டுப் போ.."

கைபிசைந்து நின்ற கண்ணம்மா குரல் உயர்த்திப் பேசினாள்.. கை கட்டி வாய் பொத்தாத குறையாக பணிந்து பேசினார் மாப்பிள்ளையைப் பெற்ற மகராசன்..

மணமாகிப் புகுந்த வீட்டிற்குச் செல்லும் பெண்ணை பாதுகாப்பது வலிமையும், வளமையும்தான்.. தட்டிக் கேட்க ஆளிருக்கிறது என்ற பயமும், கேட்டதை விட அதிகமான சீர் கொண்டு வந்தவள் என்ற மரியாதையும்தான் அந்தப் பெண்ணுக்கு நிம்மதியான மணவாழ்க்கைக் கொடுக்கும்.. சதானந்தனும், சாருலதாவும் அவ்விரண்டையும் அந்தப் பெண்ணுக்கு அளித்தார்கள்..

11

"பார்த்த விழி பார்த்தபடி..

பூத்துக் கிடக்க..

காத்திருந்த காட்சி இங்கு

காணக் கிடைக்க..

ஊன் உருக உயிர் உருக

தேன் தரும் தடாகமே..!

வழி வருக.. வழி நெடுக..

ஒளி நிறைக வாழ்விலே.."

குப்பத்தின் கோவில் திருவிழாவில் மேடையில் ஏறிக் கண்மூடிப் பரவசத்துடன் பாடினான் சதானந்தன்.. கண்ணம்மாவின் வேண்டுகோளுக்காக சில நிமிடங்கள் வந்திருந்த சாருலதா திரும்பி மேடையைப் பார்த்தாள்..

'குணா கமலை மிஞ்சறானே..'

அவனது பரவசம் மிகுந்த பாடலின் லயத்தை வியந்தவளுக்குத் தெரியாது சதானந்தனின் அபிராமி அவள்தான் என்பது..

"நல்லாப் பாடறாரே.." பொதுவாக சொல்லி வைத்தாள்..

"சதா பாடினா அழுகிற புள்ளைகூட அழுகையை நிப்பாட்டிட்டு அது பாட்டைக் கேட்கும்.. அப்படிப் பாடும்.." பெருமையாகச் சொன்னாள் குப்பத்து இளம் பெண்களில் ஒருத்தி..

அவளது விழிகளில் இருந்த மையல் அவள் சதானந்தனின் பாடலுக்கு ரசிகையென்பதை உணர்த்தியது.. அந்த மையல் பாடலுக்கானதா.. இல்லை பாடலைப் பாடும் பாடகனுக்கானதா என்பதில் அவளுக்குச் சிரிப்பு வந்தது..

'பாடறவனும் நல்லாத்தான் இருக்கான்..'

சாருலதா சுமதியின் வளர்ப்பில் இசையைக் கற்றவள்.. சுருதி பிசகாத குரல் வளமும்.. தாளம் தப்பாத லயமுமாக உணர்வு பூர்வமாக சதானந்தன் பாடும் பாடலில் ஈர்க்கப்பட்டாள்..

"எங்க குப்பத்திலே எங்கே பாட்டுக்கச்சேரி வைச்சாலும் சதாவத்தான் முதல்ல பாடச் சொல்வோம்.. அது அதிகமா கூட்டம் கும்பல்ல கலந்துக்காது... திருவிழான்னா மட்டும் வந்து நிற்கும்.." கண்ணம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்..

"முறையாப் பாட்டுக் கத்துக்கிட்டாரா..?"

"ஆருக்குத் தெரியும்.. அதுங்க குடும்பமே குப்பத்துல ஒட்டாம தனிச்சு நின்ன குடும்பம்.. இத்தோட அண்ணன் சிவானந்தனுக்கு தம்பி மேல உசிரு.. அவன் மெக்கானிக்கு.. தம்பிய மெக்கானிக்கலு என்ஜினியருக்குப் படிக்க வச்சதாச் சொல்லுவாக.. காலேசில பாட்டக் கத்துக்குச்சோ என்னவோ.."

"வேலை பார்க்கிறாரா..?"

"எங்கேம்மா.. இத்தோட கதயக் கேட்டா உன் மனசு தாங்காது.."

"ஏன் கண்ணம்மா..?"

"படிச்சு முடிச்சு வந்த புள்ள அண்ணன்காரன் கூட கூட்டுச் சேர்ந்துக்கிட்டு அத்தோட மெக்கானிக் ஷாப்புலேயே வேலை செஞ்சுச்சு.. பெர்ச்சு பெர்ச்சா காரெல்லாம் வரும்.. அம்மாம் பெரிய பணக்காரங்க இவுங்க ஷெட்டிலதான் கார்களக் கொண்டு வந்து நிறுத்திட்டுப் போவாங்க.. தொழில் தெரிஞ்ச பசங்க.. நல்ல சம்பாத்தியம்.. ஆரு கண்ணு பட்டுச்சோ.. முதல்ல அப்பனும் ஆத்தாளும் போனாங்க.. அடுத்து அண்ணனும் அவன் பொண்டாட்டியும் போய்ச் சேர்ந்தாங்க.. இப்போ இத்தும் இதோட அண்ணன் புள்ள மட்டும்தான் கீதுக.."

சாருலதாவிற்கு மனம் தாங்கவில்லை... கண்ணம்மாவின் மகள் திருமணத்தில் அவன் முழுக்கை சட்டையின் முன்கை

பகுதியை மடக்கி விட்டு சப்தம் போட்டது நினைவுக்கு வந்தது..

அத்துனை ஆளுமை நிறைந்தவனின் வாழ்வில் இத்துனை சோகமா..?

அவளது கண்கள் கலங்கி விட்டதில்..

"இத்துக்குத்தான் சொன்னேன்.. உனக்கு ஈர மனசு.. கண்ணில தண்ணி வுடுவேன்னு.. கேட்டியா.. நான் ஒரு கிறுக்கச்சி.. உன்கிட்டப் போய் இத்தையெல்லாம் சொல்லுவேனா..?" என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள் கண்ணம்மா..

"சதான்னு பெயரா..?"

"முழுப்பேரு சதானந்தன்ம்மா.. குப்பத்தில எல்லோரும் இத்தை 'சதா, சதா'ன்னுதான் கூப்பிடறது.."

"ஓ.."

மேடைப் பாடகனைப் போல இல்லாமல் பேண்ட், சட்டையுடன் கால்களை மடித்து உட்கார்ந்து அவன் பாடிக் கொண்டிருந்த விதம் ரசிக்கத்தக்கதாக இருந்தது..

இன்னும் ஒரு பாடலை அவன் பாடக்கூடாதா என்று தன் மனம் ஏங்கியதில் ஆச்சரியம் கொண்டாள் சாருலதா.. பிரசன்னாவிற்கு பாட்டும் பிடிக்காது.. பாடவும் பிடிக்காது.. ஆனால் சாருலதாவை மிகவும் பிடிக்கும்..

இப்போது எதற்காக பிரசன்னாவின் நினைவு வருகிறது என்று திகைத்துப் போனாள் சாருலதா.. மிக நூதனமான ஓர் உணர்வு அவள் மனதை ஆட்டிப் படைத்தது.. அது சதானந்தன் பாடிய பாடலினாலா இல்லை.. அந்தப் பாடலை அர்த்தத்துடன் அவளைப் பார்த்தபடியே அவன் பாடியதாலா என்று இனம் காண முடியாமல் தடுமாறினாள்..

"எங்கேயோ பார்த்த மயக்கம்..

எப்பொழுதோ வாழ்ந்த நெருக்கம்..

தேவதை இந்த சாலையோரம்..

வருவதென்ன மாயம்.. மாயம்..

கண்திறந்து இவள் பார்க்கும் பொழுது

கடவுளை இன்று நம்பும் மனது.."

செவியில் வழுக்கிக் கொண்டு இதயத்தில் இறங்கிய பாடலை மீறி நடக்கும் துணிவு சாருலதாவுக்கு இல்லை.. அவள் நிற்கிறாளே என்று கண்ணம்மா கொண்டு வந்து போட்ட நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.. அவளை நகரவிடாமல் கட்டிப் போட்டது அவனது பாடலா இல்லை அவன் பாடிய பாடலின் வரிகளா என்று தனக்குள் அவள் கேட்டுக் கொண்ட கேள்விக்கு விடை கிடைக்கவில்லை..

"இன்னும் கண்கள் திறக்காத சிற்பம்

ஒருகோடி பூப்பூக்கும் வெட்கம்

ஆண் மனதை அழிக்க வந்த சாபம்

அறிவை மயக்கும் மாய தாகம்.."

இப்படிப்பட்ட பெண் எப்படியிருப்பாள் என்று சாருலதா யோசிக்க.. அது நீதான் பெண்ணே என்று கரைந்து உருகிப் பாடிக் கொண்டிருந்தான் சதானந்தன்..

"இவளைப் பார்த்த இன்பம் போதும்

வாழ்ந்து பார்க்க நெஞ்சம் ஏங்கும்.."

அவனது நெஞ்சத்தின் ஏக்கத்தைப் பிழிந்து கண்களில் அவன் வடித்ததில் இவன் யாரோ ஒரு பெண்ணைக் காதலிக்கிறான் போல என்று யூகித்தாள் சாருலதா.. அவள் யாராக இருந்தாலும் அதிர்ஷ்டம் செய்தவள் என்றது அவள் மனது.. இப்படியொரு பிரேமையை ஏற்றுக் கொள்ள ஓர் கொடுப்பினை இருக்க வேண்டும்.. அந்தக் கொடுப்பினை அவளுடையதாக இருக்கக் கூடும் என்று மட்டும் அவள் சிந்திக்கவில்லை..

"கனவுகளில் வாழ்ந்த நாளை

கண்ணெதிரே பார்க்கிறேன்..

கதைகளிலே கேட்ட பெண்ணை

திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்.."

மேடையின் முன்னால் அமர்ந்திருந்த இளம் பெண்களின் கூட்டத்தில் சதானந்தனைத் திரும்பித் திரும்பிப் பார்க்க வைத்த பெண் இருப்பாளோ என்ற சம்சயத்தில் சாருலதா திரும்பித் திரும்பிப் பார்த்தாள்.. அனைத்து இளம் பெண்களின் கண்களிலும் மையுடன் கூடிய மையல் தீற்றப்பட்டிருந்ததில் அவனது மனம்

கவர்ந்த பெண் எவள் என்று அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை..

"அங்கும் இங்கும் ஓடும் கால்கள்

அசைய மறுத்து வேண்டுதே..

இந்த இடத்தில் இன்னும் நிற்க

இதயம் கூட ஏங்குதே.."

சாருலதா சாய்ந்து மர நாற்காலியின் கைபிடியில் கரத்தையூன்றி உள்ளங்கையில் முகவாயை வைத்துத் தாங்கிக் கொண்டாள்.. பாடலைக் கேட்பதைப் போல இல்லாமல் ஏதோ கதையைக் கேட்பதைப் போல இருந்தது அவளது செய்கை.. ஏனோ அவன் பாடிய பாடலில் கதையென்று பொதிந்திருப்பதைப் போல அவளுக்குத் தோன்றியது..

"என்னானதோ.. ஏதானதோ..

கண்ணாடி போல் உடைந்திடும் மனது.."

சாருலதாவின் மனம் ததும்பியது.. பாடல் வரிகளுக்குள் கலந்து கரைந்து உருகி மருகி அவன் பாடும் பாடலின் சுவையில் தன்னை மறந்து லயித்தாள் அவள்..

"கவிதையொன்று பார்க்கப் போக..

கண்கள் கலங்கி நானும் ஏங்க

மழையின் சாரல் என்னைத் தாக்க

விடைகள் இல்லாக் கேள்வி கேட்க.."

ஓர்விதமான தாளலயத்துடன் வெளிப்பட்ட பாடல் அவளைத் தலையை ஆட்டி ரசிக்க வைத்தது.. அவளைப் போலவே அவனும் விடையில்லாத கேள்விகளின் வலையில் சிக்குண்டு தடுமாறுகிறான் என்பதில் என்னைப் போல் இவன் என்ற சந்தோசம் அவளுக்குள் துளிர்த்தது..

"ஆதி அந்தம் மறந்து உன்னருகில்

கரைந்து நான் போகிறேன்..

ஆண்கள் வெட்கப்படும் தருணம்

உன்னைப் பார்த்த பின்புதான் கண்டு கொண்டேன்.."

'அப்படியா..?' அவளது இதழ்களில் இளநகை அரும்பியது.. அவனது முரட்டுத்தனமான தோற்றத்திற்கும் அவனது பாடல் வரிகளுக்கும் சற்றும் பொருந்தி வராததில் அவளது சுவராஸ்யம் கூடியது..

"இடி விழுந்த வீட்டில் இன்று

பூச்செடிகள் பூக்கிறதே..

இவள்தானே உந்தன் பாதி..

கடவுள் பதில் கேட்கிறதே.."

சாருலதா இமைகளை மூடிக் கொண்டாள்.. சொல்லொண்ணாத துயரம் அவள் மனதை வாட்டியது.. பட்ட மரம் தளிர்க்கும்.. பால் நிலத்தில் செடி வளரும்.. பாறையிலும் பூப் பூக்கும்.. என்றெல்லாம் படிக்கும் போதும் கேட்கும் போதும் உணராத ஓர் துயரத்தை அவன் பாடும் பாடல் வரிகளில் அவள் உணர்ந்தாள்..

"வியந்து வியந்து

உடைந்து உடைந்து

சரிந்து சரிந்து

மிரண்டு மிரண்டு.."

பாடலின் வரிகள் ஜதி சொல்லி நாட்டியமாடின.. இப்பாடலின் வரிகளை எழுதிய கவிஞரைப் பாராட்ட வேண்டும் போல அவளுக்கு இருந்தது... உணர்வு பூர்வமான ஆழத்தில் இறங்கி மூழ்கி மூச்சுத் திணறினால் தான் இதுபோன்ற நர்த்தனமிடும் பாடல் வரிகள் ஜனிக்கும்..

அப்படியொரு உணர்வு பூர்வமான கவிஞரின் பாடலுக்கு உணர்வை ஊட்டிக் கொண்டிருந்தான் சதானந்தன்.. வசியத்திற்கு கட்டுப்பட்டவர்களைப் போல குப்பத்து ஜனங்கள் அமர்ந்திரக்க அவர்களை வசியப் படுத்தும் வசியக்காரனாக வேய்ங்குழலை இசைக்கும் நந்தகுமாரனாக மேடையிலே வீற்றிருந்தான்..

சாருலதாவிற்கு அது குப்பம் போலத் தோன்ற வில்லை.. யமுனா நதிக்கரையின் தீரம் போல தோன்றியது.. அங்கே ஆயர்பாடி மாளிகையில் குழலூதும் கண்ணன் நின்றிருந்தான்.. அவனது குழலிசையில் மயங்கிய ஆயர்பாடி வாழ் யாதவர்கள் அவனைச் சுற்றிக் குழுமியிருந்தார்கள்..

'எப்பேற்பட்ட அனுபவம் இது..!' மெய் சிலிர்த்தாள் சாருலதா..

மிக அற்புதமான அனுபவமாக அவன் பாடலைக் கேட்டதை உணர்ந்தாள்.. பாடலைக் கேட்டுக் கைதட்டிய குப்பத்து ஜனங்களின் ஆரவாரத்துக்கிடையே மேடையை விட்டு இறங்கினான்.. இவ்வளவுதானா என்று மனதில் இழையோடிய ஏமாற்றத்துடன் காரில் ஏறப் போன சாருலதாவை அவன் கடந்தபோது இருவர் பார்வையும் சந்தித்தன..

ஒர் நொடிக்கும் குறைவாக இருக்கக் கூடும்.. கண் சிமிட்டும் நேரத்துக்கு சாருலதாவின் இதழ்களில் புன்னகை அரும்பி மறைந்தது.. சடுதியில் திரும்பி அவள் காரில் ஏறிப் பறந்து விட அந்த இடத்தில் அசையாமல் நின்று விட்டான் சதானந்தன்..

'அவ என்னைப் பார்த்துச் சிரிச்சா..'

அந்த அரைநொடியில் அமிழ்ந்து போக விரும்பினான் அவன்.. அதில் உறைந்து கரைந்து மறைந்து போய் விடவேண்டும்.. அவனுக்காக அவள் சிந்திய சின்னச் சிரிப்பின் சிதறல்கள் போதும்.. வேறு எதுவும் வாழ்வில் இனி வேண்டாம்..

உணர்வுகளில் உறைந்து நின்றவனை உலுக்கி எழுப்பியது தயானந்தனின் அழுகுரல்.. அவனுக்கான கடமையை நினைவுபடுத்துபவனைப் போல கனவுலகத்திலிருந்து நனவுலகிற்கு அவளை இழுத்து வந்து தாவினான் சிவானந்தனின் மகன்..

அண்ணன் மகனை இறுக்கி அணைத்துக் கொண்ட சதானந்தன் அவனை உயரத் தூக்கிப் போட்டு விளையாட்டுக் காட்டினான்.. அழுகையை மறந்து சிரித்த பாலகனின் சிரிப்பு அவனுக்கு சாருலதாவை ஞாபகப் படுத்தியது..

'அவ என்னைப் பார்த்துச் சிரிச்சா..'

இரவும் பகலும் இந்த நினைவு அவனுக்கு போதையை ஊட்டிக் கவலைகளை மறக்கச் செய்தது.. அவனுடைய வொர்க் ஷாப்பிற்கு ரிப்பேருக்கு வந்த பெரிய காரை அவன் ஏற்றுக் கொண்டதில் அவனது உதவியாளன் வியந்து போனான்..

"என்னண்ணே.. சின்னச் சின்ன வேலைகளை மட்டும்தான் பார்ப்பேன்னு அடம் பிடிப்பீங்க.. இன்னைக்கு இம்மாம் பெரிய வேலையை அசால்ட்டா ஒப்புக்கிட்டிங்க.."

பதில் சொல்லாமல் சிரித்து வைத்த சதானந்தனை அதிசயமாக அவனது உதவியாள் பார்த்தான்..

'என்னாங்கடா இது.. கல்லு கூடச் சிரிக்குது..'

காதல் என்பது கல்லையும் கனிய வைக்கும் என்பது அந்த பொடிப் பையனுக்கு தெரியவில்லை..

"முடிவா என்னதான் சொல்கிறீங்க சக்ரபாணி..?"

அதட்டலாக கேட்டான் ராஜேந்திரன்.. முப்பது வயதில் இருப்பவன் அறுபது வயதைத் தொட்டுக் கொண்டிருக்கும் சக்ரபாணியை பெயர் சொல்லி அழைத்து அதட்டியதில் சதிஷ் கோபம் கொண்டான்.. அதை அவனது முகபாவனையிலிருந்து கண்டு கொண்ட சக்ரபாணி பார்வையிலேயே அவனை அதட்டி அடக்கி வைத்து விட்டு அழுத்தமான குரலில் ராஜேந்திரனின் அதட்டலுக்குப் பதில் சொன்னார்..

"ஐ ஆம் ஸோ ஸாரி ராஜேந்திரன்.. என் டாட்டருக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகிருச்சு.."

"யார்..? அந்த பிரசன்னாவைத்தானே மென்சன் பண்றீங்க..? மேரேஜ் எங்கேஜ்மெண்ட் ஒன்றும் நடக்கலையே.. ஹி இஸ் யுவர் ரிலேட்டிவ் ஒன்லி.. தட்'ஸ் தி பொசிசன்.. சும்மா பிலிம் காட்டாதீங்க.."

"பிரசன்னா எங்க ரிலேட்டிவ்ன்னு நீங்களே சொல்லிட்டீங்க.. சாருலதாவை பிரசன்னாவிற்கு மேரேஜ் பண்ணிக் கொடுக்கிற டிசிசனை எங்க இரு குடும்பமும் பேசி டிசைட் பண்ணினோம்.. பிரசன்னா அமெரிக்காவில பிஸினெஸ் பண்றார்.. அடிக்கடி இந்தியாவுக்கு வந்து போக முடியாத சிச்சுவேசன்.. ஸோ, எங்கேஜ்மெண்டைத் தள்ளிப் போட்டிருக்கிறோம்.. இது எங்க ஃபேமிலியின் பெர்சனல் ஆக்டிவிட்டீஸ்.. இதைப் பற்றிய ஃபுல் டீடெயில்ஸை உங்களுக்கு விளக்கிச் சொல்லனும்ங்கிற அவசியம் எதுவும் இல்லை ராஜேந்திரன்.."

"அப்படி ஈஸியா நீங்க நழுவி விட முடியாது சக்ரபாணி.. என் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு வந்த எத்தனையோ ஆர்டர்களை உங்க கம்பெனிக்கு நான் ரெகமண்ட் பண்ணியிருக்கிறேன்.. அத்தனையும் பல கோடி ரூபாய்களைக் கொட்டும் ஆர்டர்.. பதிலுக்கு உங்களிடமிருந்து எதையும் நான் எக்ஸ்பெக்ட் பண்ணினதில்லை.. என் இடத்தில் வேற எந்தக் கம்பெனி இருந்திருந்தாலும் பெருந்தன்மையா இன்னொரு

கம்பெனிக்கு ஆர்டரை இடம் மாற்றியிருக்காது.. யு நோ.. இது காம்பெடிசன் நிறைந்த பிஸினெஸ் வெர்ல்டு.. இங்கே நட்புக்கு இடமில்லை.."

ராஜேந்திரன் சொல்வது உண்மைதான் என்பதில் மௌனம் சாதித்தார் சக்ரபாணி.. அவருடைய மகளைப் பெண் கேட்பவன் ஒன்றும் சாமானியனல்ல.. அவரையும் ஏன் பிரசன்னாவையும் மிஞ்சிய கோடிஸ்வரன்... பிறந்தவுடன் வைரத் தொட்டிலில் துயில் கொண்டவன்.. அப்படிப்பட்டவன் பெண் கேட்கும் போது சக்ரபாணி அதைத் தட்டிக் கழிப்பதற்கான காரணம் பிரசன்னா மட்டுமல்ல..

ராஜேந்திரன் ஒரு கோடிஸ்வர பொறுக்கி.. இளம் வயதிலேயே தாய், தந்தையை இழந்து மிகப் பெரும் தொழில் சாம்ராஜ்யத்திற்கு அதிபதியானவனிடம் இல்லாத தீய பழக்கமே இல்லை.. உள்நாடு, வெளிநாடு என்றில்லாமல் கருத்தைக் கவரும் பெண்களிடம் முதலிரவு கொண்டாடுபவன்.. அவர்கள் பணத்திற்குப் பணிந்தால் பணம்.. சொத்து வேண்டுமென்று கேட்டால் அவர்கள் கை காட்டும் சொத்து அவர்களுக்குச் சொந்தமாகிவிடும்..

எவ்வளவு கரைத்தாலும் கரையாமல் ஏழு தலைமுறைகளுக்கு உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு கோடிஸ்வரனாக இருப்பவன் அவன்.. தொழிலில் கை தேர்ந்தவன்.. அவனது கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு வரும் அத்தனை ஆர்டரும் மிகப் பெரிய லாபத்தைக் கொட்டக் கூடிய ஆர்டர்களாகவே வரும்.. பலமாடிக் கட்டிடங்களைக் கட்டித்தர வேண்டும் வெளிநாட்டுக் கம்பெனிகளின் ஆர்டர்கள் அவை.. அவற்றில் பலவற்றை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்க முடியாத வேலைப் பளுவின் காரணமாக சக்ரபாணியின் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு இடம் மாற்றி விட்டிருக்கிறான்.. அவனே சொல்வதைப் போல அவன் இடத்தில் வேறு எந்தக் கம்பெனி இருந்தாலும் இதைச் செய்திருப்பது கடினம்.. அவன் அந்த வகையில் பெருந்தன்மையானவன்.. மற்றவர்கள் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் படாதவன்.. அதற்கு நாம் துணை செய்வதா என்று நினைக்காதவன்..

அவனது சொந்த வாழ்க்கையில் எப்படியிருந்தாலும் வியாபார உலகில் அவன் கண்ணியவானாக இருந்ததினால் சக்ரபாணி அவனிடம் ஆழ்ந்த நட்பு பாராட்டினார்.. சில ஆர்டர்களை ராஜேந்திரனின் கம்பெனியும் அவரது கம்பெனியும் இணைந்து ஏற்று வேலை செய்து கொடுத்ததில் அவர்களுக்கு இடையே இருந்த நட்பு பலப்பட்டது..

அடிக்கடி பார்ட்டி கொடுக்கும் வழக்கமுள்ளவன் ராஜேந்திரன்... அவன் அளிக்கும் பார்ட்டிகளுக்கு சக்ரபாணியும், சதிஷீம் மட்டும் போய் வருவார்கள்.. மறந்தும் வீட்டுப் பெண்களை அழைத்துச் சென்றதில்லை.. அவர் வீட்டில் கொடுக்கும் பார்ட்டிகளுக்கு அவனை அழைத்ததில்லை..

அந்த விசயத்தில் மிகக் கவனமாக இருந்தார் சக்ரபாணி.. ராஜேந்திரனின் குணநலன்களைப் பற்றி அவர் தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருந்ததினால் குடும்ப ரீதியாக பழக விடாமல் தள்ளியே நிறுத்தியிருந்தார்.. அப்படியிருந்தும் ராஜேந்திரன் சதிஷின் திருமண வரவேற்பிற்கு வந்திருந்த போது சாருலதாவை பார்த்து விட்டான்..

அடுத்தடுத்து வந்த வெளிநாட்டு ஒப்பந்தங்களில் அவன் பிணைக்கப்பட்டு வெளிநாடுகளுக்குப் பயணப் பட்டுவிட, இங்கே சாருலதா, பிரசன்னாவின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருவரின் மனதிலும் காதல் மலர்ந்து விட்டது..

இரண்டு வருடங்கள்.. சாருலதாவும் பிரசன்னாவும் காதலில் திளைத்த இரண்டு வருடங்கள்.. வேறு ஒருவனைக் காதலிப்பவள் என்பதற்காக மனதிற்குள்ளே அவளை ஆராதித்தபடி சதானந்தன் விலகி நின்ற இரண்டு வருடங்கள்.. சாருலதாவின் படிப்பு முடிய வேண்டும் என்பதற்காக இரண்டு குடும்பமும் திருமணத்தைத்

தள்ளிப் போட்டுக் காத்திருந்த இரண்டு வருடங்கள்.. பிஸினெஸ்ஸில் பிஸியாகி ராஜேந்திரன்

வெளிநாட்டிலேயே தங்கி விட்ட இரண்டு வருடங்கள்..

இரண்டு வருடங்கள் கழித்துத் திரும்பி வந்த ராஜேந்திரன் சக்ரபாணியை தொழில் நிமித்தமாக சந்தித்த போது அவர் மகள் மிக அழகானவள் என்பது நினைவுக்கு வந்து விட்டது..

"யுவர் டாட்டர்.." என்று அவன் ஆரம்பித்த போதே சக்ரபாணியின் முகம் கருத்து விட்டது..

"வாட் இஸ் ஹெர் நேம்..? ம்ம்ம்.. சாருலதா.. யெஸ்.. ஷி இஸ் சாருலதா.. ஆம் ஐ கரெக்ட்..?" என்று அவன் சொன்னபோது சக்ரபாணிக்கு வியர்த்து விட்டது..

'கடவுளே..! இவக் கண் என் மக மேல விழுந்திருக்கே..' பதட்டத்துடன் அவசரமாக..

"அவளுக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு ராஜேந்திரன்.. நம்ம மேக்னோ கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி பத்மநாபன் இருக்காரில்லையா..? அவருடைய சன் பிரசன்னாவிற்குத்தான் சாருலதாவை மேரேஜ் பண்ணிக் கொடுக்கப் போகிறோம்.. பிரசன்னா அமெரிக்காவில இருக்கிற கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியோட எம்.டி... டு யு நோ ஹிம்..?"

"யெஸ்.. ஐ நோ ஹிம்.."

ராஜேந்திரனின் கண்கள் இடுங்கின.. கடுமை நிரம்பிய அவனது வேட்டை பார்வை சக்ரபாணியை அச்சறுத்தியது..

"உங்க டாட்டர் என்ஜினியரிங் காலேஜ் ஸ்டூடண்ட் ஆச்சே.. ஸ்டடி பீரியடிலா மேரேஜ் பண்ணி வைக்கப் போறீங்க..?"

"ஷி இஸ் இன் ஃபைனல் இயர் ராஜேந்திரன்.. இந்த வீக் எண்ட்டில அவளோட எக்ஸாம்ஸ் முடியுது.. நெக்ஸ்ட் மன்த் பிரசன்னா இந்தியாவுக்கு வந்ததும் மேரேஜ்.."

"ஓ.. கிளியரா பிளான் பண்ணியிருக்கீங்க போல.."

'அதைப்பற்றி உனக்கென்னடா..?' பற்றிக் கொண்டு வந்த கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு பொதுவாக

தலையை ஆட்டி வைத்தார் சக்ரபாணி..

"பட்.. மிஸ்டர் சக்ரபாணி.. உங்க டாட்டரை மேரேஜ் பண்ணிக்கனும் என்கிறதில நான் ரொம்பக் கிளியரா இருக்கேன்.."

நிதானமாக அவன் தூக்கிப் போட்ட வெடி குண்டில் அதிர்ந்து போனார் சக்ரபாணி.. எது நடக்கக் கூடாது என்று ராஜேந்திரனின் கண்களில் அவர் வீட்டுப் பெண்கள் தட்டுப்பட்டு விடக் கூடாது என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தாரோ.. அது நடந்து விட்டது..

ராஜேந்திரன் அவரது மகளைக் குறி வைத்து விட்டான்..

உலகப்புகழ் பெற்ற கோடிஸ்வரன் அவர் மகளைப் பெண் கேட்கிறான் என்று அவரால் துளியும் சந்தோசப் பட்டு விட முடியாது.. ராஜேந்திரன் பெண்கள் விசயத்தில் மட்டடக் கேவலமானவன் என்பது மட்டும் காரணமல்ல..

அவன் இருமுறை திருமணம் செய்து விவாகரத்தும் செய்தவன்..

முதல் திருமணம் பிரான்ஸைச் சேர்ந்த பெண்ணுடன் நடந்தது.. நீலக்கண்களும் கரிய கூந்தலுமாக இருந்த வெள்ளை நிறப் பேரழகி அவள்... ராஜேந்திரனின் பணத்திற்கு இணையான பணம் படைத்தவள்.. முறைப்படி திருமணம் நடக்காமல் அவளை நெருங்க முடியாது என்பதினால் மட்டுமே அவளைத் திருமணம் செய்து கொண்டதாக விவாகரத்திற்குப் பின்னால் அளித்த பேட்டிகளில் ராஜேந்திரன் கூறினான்.. அந்தத் திருமணம் சில மாதங்கள் மட்டுமே நீடித்தது..

இரண்டாவது திருமணம் கொலம்பியாவைச் சேர்ந்த கோடிஸ்வரர் ஒருவரின் மகளுடன் நிகழ்ந்தது.. இந்தத் திருமணம் சில வாரங்கள் மட்டுமே நீடித்தது.. முதல் விவாகரத்தின் போது கூறிய அதே காரணத்தையே இந்த விவாகரத்திலும் அவன் கூறினான்..

"இது காஸ்ட்லி ரேட்.." என்றான்..

"மணி, புராப்பர்ட்டின்னு இல்லாம என்னிடம் பெரிய அளவில அவங்க பங்கு கேட்க முடியும்.. ஜீவனாம்சன்னு வாங்க முடியும்... தட் பர்ப்போஸ் அவங்க மேரேஜ் பண்ணிக்கனும்னு கண்டிசன் போட்டாங்க.. எவ்வளவு பணம் குறைந்தாலும் அதை விடப் பத்துமடங்கு அதிகமா ஏர்ன் பண்ணுகிற கெப்பாசிட்டி எனக்கு இருக்குங்கிறதினால நான் ஓகேன்னு மேரேஜ் பண்ணிக்கிட்டு என்ஜாய் பண்ணினேன்.. செர்டெயின் ஸ்டேஜில போரடிச்சதும் டைவர்ஸ் பண்ணி விட்டு அவங்க கேட்ட புராப்பர்ட்டிஸை கொடுத்தேன்.."

தோள்களைக் குலுக்கிக் கொண்டு அவன் சொல்லிய வியாக்கினத்தில் கொதித்துப் போன மாதர் சங்கத்தினர் மேடையேறிக் கூட்டம் போட்டு அவனைப் பற்றிக் காரசாரமாக விமரிசித்து தள்ளினார்கள்.. தொலைக்காட்சி சேனல்களின் விவாத மையமாக அவனது பேச்சு சுழன்றது.. வியாபார உலகின் நாளிதழ், வார இதழ், மாத

இதழ்களில் அவனைப் பற்றிக் கிழிகிழியென்று கிழித்து எழுதினார்கள்.

எதையும் அவன் கண்டு கொள்ளவில்லை.. எப்போதும் போலப் புட்டியும், குட்டியுமாக வாழ்ந்து கொண்டிருந்தான்... அப்படிப்பட்ட ராஜேந்திரன் சாருலதாவைப் பெண் கேட்டால் சக்ரபாணி மகிழ்ந்து போய் திருமண நாளை நிச்சயம் பண்ணி விடுவாரா என்ன..?

"உங்க டாட்டர் என்னை ரொம்பவே இம்ப்ரெஸ் பண்ணிட்டா.. இதுவரை எனக்கு வேண்டும்ன்னு நான் நினைத்ததை அடையாமல் விட்டதில்லை.. இப்போது உங்க டாட்டர் எனக்கு வேண்டும்ன்னு நினைக்கிறேன் சக்ரபாணி.. ஐ நீட் ஹெர்.."

மறந்தும் ஐ லவ் ஹெர் என்று அவன் சொல்ல வில்லை.. காதல் உணர்வுகள் எப்படிப்பட்ட உன்னதம் நிறைந்தவை என்பதை சதானந்தனால் சொல்ல முடியும்.. ராஜேந்திரனால் சொல்ல முடியுமா..?

திருமண வாழ்க்கையை 'காஸ்ட்லி ரேட்..' என்று கொச்சைப் படுத்தும் கேடு கெட்டவன் ராஜேந்திரன்.. அவனுக்கு திருமண வாழ்வின் மதிப்பு எத்தகையது

என்று எந்தக் காலத்திலும் தெரியாது.. தெரியவும் போவதில்லை..

13

ஒரு பெண்..! அவள் மீது மூன்று ஆண்கள் ஆசை கொள்கிறார்கள்.. ஒருவன் மிகப் பெரும் கோடிஸ்வரன்.. அவனுக்கு அவள்மீது இருப்பது காமம் கலந்த வெறி.. இன்னொருவன் அவளுக்கு இணையான கோடிஸ்வரன்.. அவனுக்கு அவள்மீது இருப்பது காதல்.. கடைசியில் நிற்பவனோ குப்பத்துவாசி.. அவனுக்கு அவள் மீது இருப்பது பக்தியுடன் கூடிய அதி உன்னதமான காவியக் காதல்..

இம்மூவரின் எண்ணங்களிலும் சாருலதாவே இருந்தாள்.. ஒவ்வொருவரும் அவரவரின் மனப் போக்குப்படி அவளை நினைத்துக் கொண்டிருந்தார்கள்.. அவளோ முடிவுறப் போகும் என்ஜினியரிங் படிப்பை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தாள்.. இறுதியாண்டுத் தேர்வுகளில் கும்முரமாக இருந்தாள்..

"இப்போதெல்லாம் நீ என்னை நினைப்பதே இல்லை சாரு.." பிரசன்னா போனில் குற்றம் சாட்டினான்..

என்னவோ அவன் பக்கத்தில் நின்று காதோரமாக குனிந்து ரகசியம் பேசுவதைப் போலக் கன்னம் சிவந்தாள் சாருலதா..

"உங்களையே நினைத்துக்கிட்டு இருந்தா எக்ஸாமில் எப்படி பாஸ் பண்ணுகிறதாம்..?" சிணுங்கினாள்..

"என் நினைப்புக்கும் உன் படிப்புக்கும் என்ன சம்பந்தம்..?"

"ஹையயோ.. ஐயாவுக்கு இது தெரியாதாம்.. நான் நம்பனுமாம்.."

"ஹேய்.. உன்னை பாஸ் பண்ணுகிற அளவுக்குப் படிக்கச் சொன்னா கோல்டு மெடல் வாங்குகிற அளவுக்கு ஏன் உருப் போடற..?"

"நுனிப்புல் மேயச் சொல்கிறீங்களா..?"

"இதையெல்லாம் எங்கே கத்துக்கிட்டுப் பேசற..?"

"எல்லாம் நம்ம வீட்டில் வேலை செய்கிற வேலையாள்கள் பேசுகிறதை வைத்து இம்ப்ரூவ் பண்ணிகிறதுதான்.."

"அவங்க இப்படியெல்லாம் கூடப் பேசுவாங்களா..?"

"இதுக்கும் மேலேயே பேசுவாங்க.. அவங்க பேசுகிறதில ஆயிரம் அர்த்தங்கள் இருக்கும்.."

"என்னவோ போ.. இதையெல்லாம் நான் கேட்ட தில்லை.."

"நீங்க ஹைடெக் சொசைட்டியிலேயே இருக்கறிங்க பிரசன்னா.. உங்கஸ்டேட்டஸ்க்கு ஈக்குவலா இருக்கிறவங்க கூட மட்டும் பேசிப் பழகறிங்க.."

"நம்ம ஸ்டேட்டஸ்க்கு அதுதான் ஸேஃப் சாரு.."

இந்த ஒன்றில் மட்டும் பிரசன்னாவும் அவளும் எதிரும் புதிருமாக இருந்தார்கள்.. பிரசன்னா ஒருவரின் தராதரத்தை அவர்களின் பொருளாதார நிலையை வைத்து நிர்ணயம் செய்தான்.. சாருலதாவோ மனிதர்களின் குண நலன்களை வைத்து அவர்களின் தாரதரத்தை நிர்ணயம் செய்தாள்.. பொடித்தனம் கொண்ட கோடிஸ்வரனை விட பரந்த மனம் கொண்ட ஏழை தரத்தில் உயர்ந்தவன் என்பது அவளது கருத்து.. பிரசன்னா அவளுக்கு நேர் எதிர் மறையானக் கருத்தைக் கொண்டவன்..

"வொர்க்கர்ஸை அவங்களுக்கான பிளேஸில் வைத்து நீ தள்ளி நிற்கப் பழகிக்க சாரு.. ஈக்குவலாப் பேசிப் பழகாதே.. இட்'ஸ் நாட் பெய்ர்.." என்று கடிந்து கொண்டான்..

"ம்ப்ச்.. உங்களுக்கு அவங்களைப் பற்றித் தெரியாது பிரசன்னா.. பாசம் வைத்துட்டா அவங்களுக்காக உயிரையே கொடுப்பாங்க.."

இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது அவர்களைப் பற்றிய மதிப்பீட்டைத்தான் சொன்னாள் சாருலதா.. அதைக் கண்கூடாகப் பார்க்கப் போகிறாள் என்று நினைத்தும் பார்க்கவில்லை..

"ஓகே.. லீவ் தட் டாபிக்.. நாம பேசறதுக்கு நம்ம பியூச்சர் இருக்கு.. லைஃப் இருக்கு.. உனக்காக இங்கே ஒரு பேலஸை கட்டிக் கொண்டிருக்கிறேன்.. டாட் அதை 'வசந்தமாளிகை'ன்னு கிண்டல் பண்றார்.. டு யு நோ எபௌட் தட்.. 'வசந்தமாளிகை..'?"

"'வசந்தமாளிகை' என்கிறது சினிமா பிரசன்னா.. நம்ம தாத்தா, பாட்டி காலத்துப் படம்.."

"ஓ.. லவ்லி.."

"அது காதலைப் பற்றின படம்தான்.."

"ஸோ.. உனக்கான வசந்தமாளிகை அமெரிக்காவில் காத்துக்கிட்டிருக்கு சாரு.. ரிமம்பர் இட்.."

நினைவில் வைத்துக் கொள்ளச் சொன்ன அந்த வசந்தமாளிகையை மறது போனாள் சாருலதா.. அவள் அதை மட்டுமா மறந்தா..? அவளைப் பெற்றவர்களை மறந்தாள்.. உடன் பிறந்தவனை மறந்தாள்.. உற்றவர்களை மறந்தாள்.. ஏன், அவளையே அவள் மறந்து விட்டாளே..

அப்படி அனைத்தையும் மறக்க வைத்த சம்பவம் அவள் கடைசித் தேர்வை எழுதி விட்டு வீடு திரும்பிய பின்மாலைப் பொழுதில் நடந்தது..

மற்ற தேர்வுகளைப் போல இல்லாமல் அது இறுதியாண்டின் இறுதித் தேர்வாக இருந்ததினால் சாருலதா கல்லூரி வளாகத்தின் மரத்தடியில் குழுமியிருந்த தோழர், தோழிகளுடன் சங்கமித்து விட்டாள்.. அடுத்த தேர்விற்குத் தயாராக வேண்டும் என்ற பரபரப்பு

எதுவுமின்றி பிரியப் போகும் உணர்வுடன் அவர்கள் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்..

உள்ளூரில் இருப்பவர்களை விட வெளியூரில் இருந்து படிக்க வந்திருந்த மாணவ, மாணவியரின் துயரம்தான் சொல்லில் அடங்காததாக இருந்தது..

"டச்சிலேயே இருங்கப்பா.."

மற்ற தோழர், தோழிகளிடம் உருக்கமாக வேண்டு கோள் விடுத்தார்கள்.. படிப்பு முடிந்ததும் எதிர்கொள்ள வேண்டிய வாழ்க்கையைப் பற்றிய கலந்துரையாடலும் நிகழ்ந்தது.. கல்லூரிக் காலத்தில் உருவான காதல்களும், காதலர்களும் கண்ணீருடன் பிரியாவிடை பெற்றுக் கொண்ட தருணம் அது..

அவற்றில் எத்தனை காதல்கள் திருமணத்தில் முடியும் என்று யோசித்துப் பார்த்தாள் சாருலதா.. விடை கிடைக்கவில்லை.. வரும் காலத்தில் வாழ்க்கைப் பாதையில் எந்த நேரம் எது நடக்கும் என்பதை விதிதான் நிர்ணயிக்கும் என்று நினைத்துக் கொண்டாள்..

'எனக்கும், பிரசன்னாவுக்கும் அப்படியில்லை.. எங்க காதலுக்கு எந்தவிதமான எதிர்ப்புமில்லை.. நாங்க ரிலேட்டிவ்ஸ்.. என் படிப்பு முடிவதற்காகத்தான் பிரசன்னா வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கார்.. நைட் போன் பண்ணும் போதே அவர் நெக்ஸ்ட் பிளைட்டைப் பிடித்து இந்தியாவுக்கு வரப் போகிறதா சொல்லிருவார்.. நெக்ஸ்ட் மன்த் மேரேஜ்ன்னு ஏற்கனெவே ஃபிக்ஸ் பண்ணி வைத்திருக்காங்களே..'

இனிக்கும் நினைவை நினைத்தவளுக்கு வீடு திரும்புவதற்குள் அந்த நினைவு மாறி விடும் என்று விதி நிர்ணயித்திருக்கிறது என்று தெரியவே தெரியாது..

மலரும் நினைவுகளின் நினைவுகூறல்கள், கண்ணீர், பிரிவின் துயரம், முகவரிகளின் பரிமாற்றம், பிரியாவிடை என்ற அனைத்தும் முடிந்து அவள் காரில் ஏறியபோது பின்மாலைப் பொழுதாகி விட்டது.. அது போல அவள்

வருவது ஒன்றும் புதிதல்ல.. ஸ்பெசல் கிளாஸ், கல்ச்சுரல் புரோக்ராம் என்று இருக்கும் சமயங்களில் இருட்டிய பின்னால்கூட வீடு திரும்பியிருக்கிறாள்.. நள்ளிரவைத் தொடும் ஆண்டு விழா போன்ற நாள்களில் சக்ரபாணியோ, சதீஷோ அவளை அழைக்க வந்து விடுவார்கள்.. அவர்கள் வீட்டு டிரைவர் வந்து சாருலதாவின் காரை ஓட்டிச் சென்று விடுவான்..

பத்திரமாகத்தான் அவள் வீட்டில் பெண்ணைப் பார்த்துக் கொண்டார்கள்.. தனித்து ஒரு கம்பெனியை நிர்வகிக்கும் தைரியமும் தகுதியும் தன் மகளுக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் அவளைத் தனித்துக் காரில் சென்று வர அனுமதித்திருந்தார் சக்ரபாணி.. அவளது கல்லூரிக் காலத்தில் எந்தவிதப் பிரச்னையும் ஏற்பட்டதில்லை.. படிப்பு முடிந்து தேர்வுகளும் முடிந்த கல்லூரியின் கடைசி நாளில்தான் அவளை மிகப் பெரும் ஆபத்து சூழ்ந்து கொண்டது..

விளக்குகள் ஒளிர்ந்த சென்னை மாநகரத்தின் சாலைப் போக்குவரத்தில் கலந்து பயணித்தவரை சாருலதா பாதுகாப்பாகத்தான் இருந்தாள்.. குப்பத்துப் பாதையில் திரும்பிய போது அவளை ராஜேந்திரனின் கார் வழி மறித்து நிறுத்தி விட்டது..

சாலையின் போக்குவரத்திலிருந்து விலகிச் செல்லும் பாதை குப்பத்தை அடையும் வரை கொஞ்சம் ஜன நடமாட்டம் இல்லாமல் அமைதியாக இருக்கும்.. குப்பத்தை அடைந்து விட்டால் போதும்.. மாநகரத்தையும் மிஞ்சும் அளவில் சாலையோரக் கடைகளும் வீடுகளின் வாசல்களில் அமர்ந்திருக்கும் மனிதர்களுமாக வெளிச்சத்துடன் 'ஜே ஜே' என்று இருக்கும்.. இரவிலும் தூங்காமல் உலா வரும் குப்பத்து மனிதர்கள் அவர்கள்.. அந்தச் சாலையில் பயணிப்பது வெகு பாதுகாப்பானது.. பிரதானச் சாலையிலிருந்து விலகி குப்பத்துக்குள் நுழையும்வரை இருக்கும் பாதைதான் பாதுகாப்பில்லாதது.. தூரம் குறைவு என்பதால் அதை சாருலதா பொருட்படுத்தியதே இல்லை..

ஆள் நடமாட்டம் இல்லாத சாலையில் விளக்கு வெளிச்சம் கண்களை கூச வைக்க மோதப் போவதைப் போல எதிரே வந்து அரை வட்டமடித்துத் திரும்பி சாலையை மறித்து நின்றது அந்த வெளிநாட்டுக் கார்..

'எப்படி வர்றான் பாரு..'

கண்கள் கூச காரை சடன் பிரேக் போட்டு நிறுத்தி விட்டு கண்களைக் கசக்கியபடி சாருலதா விழித்துப் பார்த்தபோது மோத வந்த கார் சாலையை மறித்து நின்றிருந்தது..

அன்னப்பட்ஷியைப் போல நீண்டிருந்த அந்த வெளிநாட்டுக் கார் சாலையை முழுவதுமாக மறித்து நின்று விட்டதில் கோபத்துடன் காரின் கண்ணாடிக் கதவை இறக்கி விட்டு எட்டிப் பார்த்தாள் சாருலதா.. அது அவள் செய்த முதல் தவறு..

ஒளிர்ந்து கொண்டிருந்த முன் பக்க விளக்குகளை அணைத்து விட்டுக் காரை விட்டு இறங்கினான் ராஜேந்திரன்..

'இப்படி டிப்டாப்பா கோட்டும் சூட்டுமா இருக்கான்.. இந்த இடத்தில் வந்து பாதையை மறிச்சுக் காரை நிறுத்தறான்..' என்று எண்ணமிட்ட சாருலதா அவன் அவளை மடக்கத்தான் காரை நிறுத்தியிருக்கிறான் என்பதை அறியவில்லை.. மாறாக..

'காரில் ஏதோ பிராப்ளம் போல இருக்கு..' என்று தான் நினைத்தாள்.. ராஜேந்திரனின் உடையும், தோற்றமும், முகபாவனையும் அப்படி நினைக்க வைத்தன..

"ஹலோ.. ஐ திங்க்.. யு ஆர் மிஸ் சாருலதா.." அவன் காரின் ஜன்னலருகே குனிந்து பேசினான்..

"யெஸ்.. ஐ ஆம்.. பட் ஹூ ஆர் யு..?"

அவனை எங்கேயோ பார்த்த நினைவில் புருவங்களை நெரித்து யோசித்தாள் சாருலதா.. சதிஷின் திருமண வரவேற்பில் அவனைப் பார்த்திருந்த நினைவு வந்தது..

அவன் வந்தபோது சக்ரபாணியும் மற்றவர்களும் பரபரத்துப் போனார்கள்.. மிகப்பெரிய தொழிலதிபன் அவன் என்று விருந்தினர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டதை சாருலதா கேட்டிருந்தாள்..

"என்ன இப்படி விழிக்கறிங்க..? ஐ ஆம் ராஜேந்திரன்.. உங்க ஃபேமிலி பிரண்ட்.. சதிஷ் வெட்டிங் ரிசப்சனுக்கு வந்திருந்தேன்.. ஆர் யு ரிமம்பர் மி..?" அவன் விளக்கியதும்..

"யெஸ்.. ஐ ரிமம்பர் இட்.. வாட்'ஸ் தி பிராப்ளம்..? கார் ஏன் இப்படி நிற்குது.." என்று கேட்டாள் சாருலதா..

"ம்ம்ம்..? உங்களை ஏற்றிக்கிட்டுப் போகத்தான் நிற்குது.."

அவன் என்ன பேசுகிறான் என்று புரியாமல் அவள் விழிக்க அவன் இயல்பாக திறந்திருந்த ஜன்னல் வழியாக கை விட்டு அவளது கார்ச்சாவியை கைப்பற்றி விட்டான்..

"ஹேய்.. மை கார் கீ.."

"உனக்கெதுக்கு இந்தக் கார்..? ஃபாரின் கார்களை கியூ வரிசையால் கொண்டு வந்து நிறுத்துகிறேன்.. என்னுடன் வந்துவிடு.."

அவளை ஒருமையில் அழைத்தபடி கார்க் கதவைத் திறந்து அவளை வெளியே இழுத்தான்.. அவன் இப்படியெல்லாம் செய்வான், பேசுவான் என்று எதிர்பார்த்திராத அதிர்ச்சியில் ஸ்தம்பித்துப் போன சாருலதாவைக் கட்டிப் பிடித்து விட்டான்.. அவளைக் காருக்குள் போட்டுக் கடத்திக் கொண்டு போகும் அளவிற்கெல்லாம் அவனுக்கு பொறுமை இல்லை.. என்னதான் ஸ்தம்பித்து நின்று விட்டாலும் மாற்றானின் தொடுகையை அனிச்சையாக பெண்ணானவள் எதிர்த்து விட மாட்டாளா..?

"ச்சீ.. விடுடா என்னை.. ராஸ்கல்.." சாருலதா திமிறினாள்.. போராடினாள்..

ஊஹீம்.. காட்டெருமை போன்ற உடல்வாகுடன் இருந்த மூர்க்கனான ராஜேந்திரன் பிடியிலிருந்து அவளால் இம்மியளவும் விலக முடியவில்லை..

"ஒழுங்காய் நான் பெண் கேட்ட போதே உன் டாடி உன்னை எனக்கு மேரேஜ் பண்ணிக் கொடுத்திருந்தா என் பெட்ரூமில் நம்ம பர்ஸ்ட் நைட் நடந்திருக்கும்.. ஒன் ஆர் டூ இயர்ஸ் என்னோட வொய்ப் என்கிற பெருமையும் உனக்குக் கிடைத்திருக்கும்.. அதற்குப் பின்னால் நான் உன்னை டைவர்ஸ் பண்ணினாலும் ஏகப்பட்ட பணமும் புராப்பர்ட்டீஸீம் கிடைச்சிருக்கும்.."

ராஜேந்திரன் சொல்லச் சொல்ல சாருலதாவுக்குத் தலையைச் சுற்றியது..

14

'இந்த நாய் என்னைப் பெண் கேட்டதா..?'

"ஏய்ய்.. நீயென்ன பிரின்ஸஸாடி..? எத்தனையோ பிரின்ஸஸ் என்னுடைய கேர்ள் பிரண்டா இருந்தாக் கூடப் போதும்ன்னு சுற்றிச் சுற்றி வந்திருக்கிறாங்க.. உன்னோட லக், நான் உன்னைப் பார்த்து ஆசைப்பட்டேன்.. ஐ நீட் யுவர் டாட்டர்ன்னு சொன்னேன்.. உன் டாடி முடியாதுன்னு சொன்னான்டி.. இந்த ராஜேந்திரனை யார்ன்னு நினைத்தான்..? எனக்கு ஒன்று வேண்டும்ன்னு நினைச்சா அது கிடைத்தே ஆகனும்டி.. நான் என்னவோ டைவர்ஸியாம்.. ரெண்டு டிரிப் டைவர்ஸ் பண்ணினவனாம்.. யெஸ்.. ஐ டு தட்.. உன்னை மூன்றாம் முறையாகத்தான் மேரேஜ் பண்ணிக்கக் கேட்டேன்.. உன் டாடி ஓகேன்னு சொல்லி உன்னை என்னிடம் தள்ளி விட்டிருந்தா இங்கே, இப்போ, இந்த சிச்சுவேசனில நம்ம பர்ஸ்ட் நைட் நடந்திருக்காது.."

சாருலதா திகிலானாள்.. உதடுகள் ஒட்டி உலர்ந்து போய் விட்டன.. அவள் சப்தம் போட முனையும் போதே அவள் வாயை அவன் பொத்தி விட்டான்..

"ஊஹீம்.. நான்தான் பேசனும்.. உன் சவுண்டே வரக்கூடாது.." என்ற கண்டிப்பு வேறு..

கண்களைக் கட்டிக் கொண்டு மயக்கம் வருவதை உணர்ந்தாள் சாருலதா.. அவள் மயங்கிப் போனால் என்ன ஆகும் என்பதை அளது அறிவு அறிவுறுத்தியது.. கண் விழிக்கும் போது அவளின் மரியாதை பறிக்கப் பட்டிருக்கும்.. அதன் பின் அவள் உயிர் வாழ்வாளா..?

'அதற்கு முன்னால் செத்துவிட வேண்டும்..'

தன் உடலின் சத்தியையெல்லாம் ஒன்று திரட்டி அவனை உதறிய சாருலதா விடுபட்டு ஓட முயன்றாள்.. அவன் வெகு எளிதாக அவளது முடியைப் பிடித்து அவளை இழுத்து நிறுத்தினான்.. அவன் ஓங்கி விட்ட அறையில் அவளுக்கு பொறி கலங்கியது.. அவளது திட சித்தத்தை அவன் குலைக்க முயல்வது தெரிந்தாலும் அவளால் எதிர்த்துப் போராட முடியவில்லை..

"மேரேஜோட வேல்யூ எனக்குத் தெரியாதாம்.. கரெக்டாத்தான் சொன்னான் உன் டாடி.. அதுக்கு என்னடி வேல்யூ இருக்கு..? காஸ்ட்லி ரேட்.. தட்ஸ் ஆல்.. இதுக்கு முன்னால் எனக்கு வொய்பா இருந்த இரண்டு பேருக்குமே நான் அவங்களை ஒன் ஆர் டூ இயரில டைவர்ஸ் பண்ணிடுவேன்னு தெரியும்.. தெரிந்தே என்னை மேரேஜ் பண்ணிக்கிட்டாங்க.. வொய்..? மணி.. புராப்பர்ட்டி.. வெல்த் மீன்ஸ் ஆல்.. என்னுடன் பெட்டை ஷேர் பண்ணிக்கிட்டா அவங்களுக்குக் கிடைக்கும் பணத்தை விட மேரேஜ் பண்ணி டைவர்ஸ் வாங்கிக்கிட்டா கிடைக்கும் பணமும் புராப்பர்ட்டிஸீம் அதிகம்.. உனக்கும் அது கிடைத்திருக்குமேடி.. பூவர் கேர்ள்.. உனக்குக் கிடைக்க இருந்த வெல்த்தை உன் டாடி கெடுத்துட்டான்.. இப்போப் பாரு.. இந்த ஒன்லி ஒன் நைட்டிற்கான ரேட்தான் உனக்குக் கிடைக்கப் போகிறது.."

அவளுக்கு அவன் விலை வைத்ததில் இப்படியே மண்ணில் புதைந்து விட மாட்டோமா என்று அவள் ஏங்கிப் போனாள்.. அவளைப் பிடித்திருந்த அவனது கையைப் பற்களால் கடித்தாள்.. முகத்தை கைவிரல் நகங்களால் பிறாண்டினாள்.. உன் கற்பிற்கு ஆபத்து வரும் போது உன் பற்களையும், நகங்களையும் ஆயுதமாக்கிப் போராடு

என்று மகாத்மா காந்தி சொன்ன வார்த்தைகள் அவளது மனதுக்குள் எதிரொலித்தன.. தோற்றுப் போய் விடக் கூடாது என்று மனதுக்குள் ஜபித்தபடி போராடினாள்..

அவன் அவளது கூந்தலைப் பற்றி இழுத்துக் காரின் பின்பக்கக் கதவைத் திறந்து அவளைச் சரித்து அவள்மீது சரிந்தான்.. எதிர்க்க முடியாத அந்த கொடிய நொடிகளில் சாருலதா தனக்குள் செத்துப் போனாள்..

'இனிப் பிழைத்து வீடு திரும்ப மாட்டேன்..'

உணர்வுகள் மயங்கும் நிலை வந்த போது அவள் மீது கவிழ்ந்திருந்த ராஜேந்திரன் வெளியே இழுக்கப் பட்டான்.. நம்ப முடியாமல் சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்த சாருலதாவின் கண் முன்னே சதானந்தன் நின்றிருந்தான்.. வேட்டை நாயைப் போல அவன்மீது பாய்ந்த ராஜேந்திரனுடன் கட்டி உருண்டான்..

'இவனா..?'

தெய்வமே துணைக்கு வந்து விட்டதைப் போல நன்றிப் பெருக்குடன் கைகளைக் குவித்தாள் சாருலதா.. சதானந்தன் அதைக் கவனிக்கும் நிலையில் இல்லை.. அவனுக்கு இணையான உடல்பலம் கொண்ட ராஜேந்திரனுடன் சரிக்குச் சரியாக மல்லுக் கட்டிக் கொண்டிருந்தான்..

"ஆப்டர் ஆல்.. யு ஆர் எ லோ கிளாஸ் மேன்.. நீ

வந்து என்மேலே கை வைக்கிறயா..? இவ கூட இந்த நைட்டை ஸ்பெண்ட் பண்ணிட்டுக் கூலா ரேட்டை விட்டெரிஞ்சுட்டுப் போய்கிட்டே இருப்பேன்.. இவளோட டாடியாலேயே என்னை எதுவும் செய்ய முடியாது.. இந்த நேரத்தில் நான லண்டனில் இருந்ததா

ஃப்ரூப் காட்டுவேன்.. இவளுக்கே இந்தக் கதின்னா உன்னையெல்லாம் விட்டு வைப்பேன்னா நினைத்த..?"

"வாயை மூடுடா நாயே.. பணமிருந்தா எதை வேணும்னாலும் செய்து விடுவியா..? யாருக்கு ரேட்

வைக்கிற..? இவங்களுக்கா..? இவங்க தேவதைடா.."

"ஏஞ்சல்..? இவளா ஏஞ்சல்..? ஷி இஸ் எ வுமன்.. பியூட்டிஃபுல் வுமன்.. யு நோ.. ஐ நீட் ஹெர்.."

"ஓடிப் போய் உயிர் பிழைச்சுக்க.. தேவையில்லாமப் பேசி எனக்கு வெறியேத்தாதே.."

"எனக்குத்தான் வெறி ஏறிக்கிட்டு இருக்குது.. இவளை பெட்ரூமில் அனுபவிக்கனும்னு பிளான் பண்ணினேன்.. இவளோட டாடி காரோட பின்சீட்டே போதும் என்று என்னை டிசைட் பண்ண வைத்துட்டான்.. இப்ப நீ வந்து காரோட பின்சீட்டும் வேண்டாம்.. இந்த ரோடுதான் அதுக்கு பெஸ்ட்டுன்னு டிசைட் பண்ண வைக்கிற.. உன் முன்னாலே லைவ் ஷோ நடத்தவா..?"

நொடிப் பொழுதில் சதானந்தனின் நெஞ்சில் உதைத்துத் தள்ளி விட்ட ராஜேந்திரன் காரிலிருந்த சாருலதாவை ரோட்டுக்கு இழுத்து அவள்மீது

படர்ந்தான்..

மறுநொடியில்தான் அது நிகழ்ந்தது.. அவனது கால்களைப் பிடித்துத் தரதரவென இழுத்துத் தள்ளிப் புரட்டிப் போட்ட சதானந்தன் ராஜேந்திரனின் மீது

பாய்ந்து விட்டான்.. தொடர்ச்சியாக நடந்த போராட்டத்தின் முடிவில் ராஜேந்திரன் பேச்சு மூச்சற்று அடங்கிவிட நீண்ட மூச்சுக்களும், வியர்த்து சட்டையெல்லாம் நனைந்த உடம்பும், கலைந்த தலையுமாக எழுந்த சதானந்தன் சாருலதாவிடம்..

"உடனே இங்கேயிருந்து போய் விடுங்க.." என்றான்..

"அவன்..?"

"அதைப்பற்றி உங்களுக்கு என்ன..? நீங்க இங்கேயிருக்கக் கூடாது.. கிளம்புங்க.. சீக்கிரம்.."

அப்போதும் சாருலதா கிளம்பவில்லை.. தயங்கி நின்றாள்..

"சொல்கிறேனில்ல.." சதானந்தன் அதட்டினான்..

"நீங்க..?"

"நான் போய்க்குவேன்.. முதல்ல நீங்க இடத்தைக் காலி பண்ணுங்க.. எந்த நேரமும் இந்த வழியா சைக்கிள், பைக், கார்ன்னு வந்து விடலாம்.. அவங்க உங்களை இந்த இடத்தில் பார்த்து விடக் கூடாது.."

"ஏன்..?"

"அது அப்படித்தான்.."

வாயால் சொன்னால் வேலைக்கு ஆகாது என்று சதானந்தன் சாருலதாவின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று அவளது காரின் டிரைவர் சீட் பக்கக் கதவைத் திறந்து உள்ளே தள்ளி விட்டான்.. அப்போதும் அவள் மலங்க மலங்க விழித்தபடி அமர்ந்திருக்கத் தலையில் அடித்துக் கொண்டவன்..

"காரைக் கிளப்புங்க.." என்றான்..

சாருலதா இயந்திரம் போலக் காரைக் கிளப்பினாள்.. எப்படி ஓட்டினாள், எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்ற எதுவுமே அவளுக்கு ஞாபகம் இல்லை.. அவளது பங்களாவின் வாசல் கேட்டில் காரை மோதி நிறுத்தி விட்டு அப்படியே ஸ்டிரியங்கில் சரிந்தவள் மயக்கமாகி விட்டாள்.. கேட்டைத் திறக்க வந்த செக்யூரிட்டி அலறியடித்துக் கொண்டு சக்ரபாணிக்கு போனைப் போட மறு நொடியில் அவளது குடும்பத்தார் வாசலில் குவிந்தார்கள்..

மயங்கிக் கிடந்த சாருலதாவை சதிஷ் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டு வீட்டுக்குள் விரைந்து விட்டான்.. காரில் ஏறிய சக்ரபாணி காரை உள்ளே நிறுத்திப் பூட்டினார்.. வாசல் கேட்டின் கதவை இழுத்து மூடும்படி செக்யூரிட்டி பணிக்கப்பட கேட் இழுத்து மூடப்பட்டது.. சில நிமிடங்களில் அனைத்துச் சந்தடிகளும் அடங்கிவிட செக்யூரிட்டி கேட்டோரமாக போடப்பட்டிருந்த சேரில் அமர்ந்து காவல் காக்கத் தொடங்கினான்..

சாருலதாவின் படுக்கையறையில் குடும்பத்தார் கூடி நின்றார்கள்.. மயக்கத்திலிருந்த சாருலதாவின் முகத்தில்

சக்ரபாணி தண்ணீரைத் தெளிக்க, சுமதி மகளின் அருகில் உட்கார்ந்து அவளது கன்னத்தைத் தட்டி..

"சாரு.. சாரு.." என்று அழைத்தாள்..

ஷோபனா சூடான காபியுடன் வந்தாள்.. சதிஷ் கவலையுடன் தகப்பனாரிடம் சன்னக்குரலில் விவாதித்துக் கொண்டிருந்தான்..

"வாட் ஹேப்பன்.. டாடி..?"

"ஐ டோன்ட் நோ.. ஐ திங்க்.. சரியாத் தூங்காம எக்ஸாமுக்குப் படித்த களைப்பா இருக்கலாம்.."

"ஆர் யு ஷ்யூர்..?"

"அப்படித்தான் நாம எடுத்துக்கனும் சதிஷ்.. அதுக்கும் சான்ஸ் இருக்கில்ல.."

சதிஷ் அமைதியடையவில்லை.. சாருலதாவின் உடை கிழிந்திருந்ததையும், தலை கலைந்திருந்ததையும் சக்ரபாணி கவனிக்கவில்லையா என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது.. அதை வாய் விட்டுக் கேட்க அவனால் முடியவில்லை.. ஷோபனாவும் அவன் நிலையில்தான் இருந்தாள்.. எதைப் பேசினாலும் தவறாகப் போய் விடும் சூழலில் அமைதியாக இருப்பதே உசிதம் என்று அவளது அறிவு எச்சரித்ததில் வாய்க்கு இறுக்கமான பூட்டைப் போட்டு மூடித் தாழ்ப்பாள் போட்டு விட்டாள்..

சதிஷ் கவனித்ததை சக்ரபாணியும் சுமதியும் கவனிக்காமல் இருப்பார்களா..? அவர்கள் பெற்றவர்கள் ஆயிற்றே.. மனதில் மூண்ட கலவரத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் களைப்பினால்தான் சாருலதா மயங்கியிருக்கிறாள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சுமதியின் கன்னம் தட்டுதலில் சாருலதா கண் விழிக்க..

"சாரு.." என்று பரவசமானாள் சுமதி..

போன உயிர் மீண்டு வந்ததைப் போல இருந்தது அவளுக்கு.. மகள் பேச்சு முச்சில்லாமல் விழுந்து கிடந்ததில் அவள் உயிர் அவளிடத்தில் இல்லை..

"என்னடா ஆச்சு..? ஏண்டா மயக்கம் போட்ட..? உனக்கு என்னடா செய்யுது..?"

பதட்டப்பட்ட சுமதியைக் கையமர்த்திய சக்ரபாணி மகளைத் தாங்கிப் பிடித்துத் தூக்கி உட்கார வைத்தார்..

"மயக்கத்தில இருந்து கண் விழிச்சிருக்கா.. குடிக்க சூடா காபியைக் குடு சுமதி.. மத்ததை அப்புறமா பேசிக்கலாம்.."

"சரிங்க.."

கண்களைத் துடைத்துக் கொண்ட சுமதி மருமகளின் கையிலிருந்த காபிக் கோப்பையை வாங்கி சாருலதாவிற்குப் புகட்டினாள்.. சூடான காபி உள்ளே இறங்கியதும் தெம்பு வரப் பெற்ற சாருலதா..

"டாடி.." என்று விம்மினாள்..

ஏதோ நடந்திருக்கிறது என்று அனைவருக்கும் புரிந்து விட்டது.. சுமதி மகளைத் தன் தோளில் சாய்த்துக் கொள்ள பக்கத்தில் அமர்ந்து மகளின் கைவிரல்களைப் பிடித்து அழுத்தி தைரியம் கொடுத்தார் சக்ரபாணி.. ஷோபனாவிற்கு அங்கு இருப்பதா வேண்டாமா என்று தெரியவில்லை... இருந்தால் மாமனார் வீட்டில் வெளிப்படையாகப் பேசிக் கொள்ளத் தயங்குவார்களோ என்று இருந்தது.. வெளியேறினால் அதுவும் குற்றமாகி விடுமோ என்று பயந்தாள்.. குடும்பமே அல்லோகப் பட்டுக் கொண்டிருக்கும் போது எனக்கென்ன என்று அவள் வெளியேறி விட்டாள் என்று ஆகி விடாதா..? என்ன செய்வது என்று கணவனைக் கேட்கலாம் என்று பார்த்தால் அவன் கைகளை மடித்துக் கட்டியபடி மித மிஞ்சிய கவலையுடன் தங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அந்த நிலையில் அவனைத் தொந்தரவு செய்தால் என்ன ஆவது என்ற நடுக்கம் ஏற்பட்டதில் அவள் பேசாமல் அங்கேயே நின்று விட்டாள்..

"நான் காலேஜில இருந்து ரிட்டர்ன் ஆகி வர்றப்ப குப்பத்து ரோடில் எவனோ ஒரு நாய்.. ராஜேந்திரனாம்.. என் காரை மறித்து என்னிடம்.. என்னிடம்.."

சாருலதா கதறி அழ ஆரம்பிக்க.. சக்ரபாணி மித மிஞ்சிய கோபம் கொண்டார்.. சதிஷோ துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ராஜேந்திரனை சுட்டுத் தள்ளக் கிளம்பி விட்டான்..

15

"பொறு சதிஷ்.."

கண்டிப்புடன் மகனைத் தடுத்து நிறுத்தினாள் சுமதி.. கணவரை ஒர் பார்வை பார்த்தாள்.. மனைவியின் மௌனப் பார்வைக்குக் கட்டுப்பட்டு பல்லைக் கடித்தபடி பேசாமல் இருந்தார் சக்ரபாணி.. ஷோபனா திகிலடித்துப் போனவளாக அப்படியே நின்று விட்டாள்..

"சாருவைப் பேச விடுங்க.. அவ முழுதாப் பேசி முடிக்கட்டும்.."

"அம்மா.. அந்த ராஸ்கல்.. நம்ம சாருவை.."

"எதுவும் நடந்திருக்காது சதிஷ்.. நம்ம சாரு பத்திரமாத்தான் வீடு திரும்பியிருக்கிறா.."

பெண் நிலையை பெண்ணே அறிவாள்.. சாருவின் புடவை கிழிந்திருந்தாலும், அதன் மடிப்புக் கலையாமல் பின் செய்யப் பட்டது பின் செய்யப்பட்டதாகவே இருந்ததை சுமதியின் புத்தி கணக்கிட்டு விட்டது.. தலை கலைந்திருந்தாலும் பின்னலில் போடப்பட்டிருந்த ஹேர் பேண்டு கழலவில்லை.. சாருலதா சண்டையிட்டு வந்தவளைப் போல களைப்படைந்திருந்தாலும் அவளது கையில் கட்டப்பட்டிருந்த வாட்ச் அவிழ்ந்து விழாமல் அப்படியேதான் இருந்தது..

"எதை வைத்து அப்படிச் சொல்கிற சுமதி.."

"என் மகள் வீட்டுக்கு வந்திருக்கிறாளே.. அதை வைத்துச் சொல்கிறேன்.. வேறு ஏதும் நடந்திருந்தா சாரு வீட்டுக்கு வந்திருக்க மாட்டா.. அங்கேயே அவனைக் கொன்று புதைச்சிருப்பா.."

சுமதியின் பேச்சில் சாருலதாவின் அழுகை அதிகமானது..

"அம்மா.." என்று கதறியழுதாள்..

"நான் செய்ய வேண்டியதை அவன் செய்துட்டான்ம்மா.. என்னால் எதுவும் செய்ய முடியலை.. அந்த ராஜேந்திரன் காண்டா மிருகம் அம்மா.. அவனைக் கொல்வது அத்தனை சுலபமில்லை.. என் சுண்டு விரலைக்கூட அசைக்க முடியலை.. தோற்றுப் போயிருப்பேன்ம்மா.. அவனைச் சாகடிக்க முடியாமல் நான் செத்துப் போயிருப்பேன்ம்மா.. எனக்கு விலை சொன்னான்.. அவன் பேசப்பேச எனக்கு உடம்பும் மனசும் கூசிப் போச்சும்மா.. எதிர்க்க முடியாம நான் சாக ஆரம்பிச்சப்ப அவன் வந்து விட்டான்ம்மா.. ராஜேந்திரனை இழுத்துப் போட்டு அவன் அடித்த அடியில ராஜேந்திரன் மூச்சுப் பேச்சில்லாம ரோட்டில கிடக்கிறான்ம்மா.. அவன் என்னைப் போய் விடுங்கன்னு சொன்னான்ம்மா.. அந்த இடத்தில் நான் இருக்கக் கூடாதுன்னு சத்தம் போட்டான்ம்மா.. எனக்காக ராஜேந்திரனை அடித்துப் போட்டு விட்டு நிற்கிறான்.. என் மானத்தையும் உயிரையும் காப்பாற்றியிருக்கிறான்.. அவனை மட்டும் தனியே விட்டு விட்டு எப்படிம்மா நான் வருவேன்..? முடியாதுன்னு மறுத்தேனே.. அவன் விடவில்லையேம்மா.. என் கையைப் பிடித்து இழுத்து வந்து காருக்குள் தள்ளிக் காரைக் கிளப்புங்கன்னு

சத்தம் போட்டான்ம்மா.. காரைக் கிளப்பனும்னு நான் நினைக்கலைம்மா.. என்னையே மறந்து போய் பித்துப் பிடித்தவளாய் காரைக் கிளப்பியிருக்கனும்.. எப்படிம்மா நான் இங்கே வந்தேன்..?"

"சாரு.. என் மகளே.."

நடுங்கும் மகளை தன் அணைப்புக்குள் அடக்கிச் சமாதானப் படுத்த முயன்றாள் சுமதி.. சாருலதாவின் உடல் ஜன்னி கண்டதைப் போலத் தூக்கித் தூக்கிப் போட்டது.. சாருலதா விவரித்த நிகழ்வுகளில் சக்ரபாணியும், சதிஷீம் யோசனையுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்களுக்கு இன்னும் சில விவரங்கள் தேவைப்பட்டன..

"அவன்னா யாரு சாரு..? உனக்கு அவனைத் தெரியுமா..?"

"ஏங்க.. கேள்வி கேட்கிற நேரமா இது..? நம்ம மக பத்திரமா எந்தவிதச் சேதாரமுமில்லாம திரும்பி வந்துட்டா.. அது போதும் நமக்கு.. மத்ததைக் காலையிலே கேட்டுக்கலாமே.."

சுமதி கணவரை அடக்க முயன்றாள்.. அவர் அடங்கினாலும் சாருலதா அடங்கவில்லை.. அவள் திமிறினாள்..

"அம்மா.. என்னை விடுங்க.. நான் போகனும்.."

"எங்கேம்மா..?"

"அந்த ராஜேந்திரன் அடிபட்டுக் கிடக்கும் இடத்துக்கு.. அங்கே அவன் மட்டும் தனியே நிற்கிறான்ம்மா.."

'கேட்டாயா..?' மனைவியை முறைத்தார் சக்ரபாணி..

சுமதியின் முகத்தில் கவலை சூழ்ந்தது.. பிரச்னையை மறக்காமல் சாருலதாவின் மனம் அதிலேயே மையம் கொண்டிருப்பதில் சுமதி அச்சம் கொண்டாள்.. இந்த மனநிலை நீடிக்கக் கூடாதே..

"அவன் யாரும்மா..?" கணவர் கேட்ட அதே கேள்வியை சுமதியும் கேட்டாள்..

"அவன் சதானந்தன்ம்மா.."

"உனக்கு அவனைத் தெரியுமா..?"

"குப்பத்திலே குடியிருப்பவன்ம்மா.. அது மட்டும் தான் தெரியும்.."

'அப்பாடி..' குடும்பத்தினரின் முகங்களில் நிம்மதி வந்தது..

குப்பத்து ஜனங்களைப் பற்றி அவர்கள் அறிவார்கள்.. அவர்களின் பங்களாவில் வேலை செய்யும் கண்ணம்மா அங்கிருந்துதானே வருகிறாள்..? கண்ணுக்கு எதிரே அநியாயம் நடந்தால் யார், எவர் என்று கூட விசாரிக்காமல் அநியாயத்தை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள்.. நியாயத்திற்கு ஆதரவாக களம் இறங்குபவர்கள்..

"அந்தப் பக்கமா அந்த சதானந்தன் வந்திருப்பான்.. சாருவிடம் ராஜேந்திரன் வம்பு செய்வதைப் பார்த்திருப்பான்.. தூக்கிப் போட்டு மிதித்திருப்பான்.. தட்ஸ் ஆல் டாடி.."

சதிஷ் முணுமுணுத்ததை ஆமோதிப்பதைப் போலத் தலையை ஆட்டிய சக்ரபாணிக்கு அந்த முகம் தெரியாத சதானந்தனின் மீது வாத்சல்யம் உண்டானது... நன்றியுணர்வு மனதில் பொங்க..

"அவன் யாருன்னு விசாரி சதிஷ்.. படித்திருந்தா நம்ம கம்பெனியில் வேலை போட்டுக் கொடுக்கலாம்.. இல்லைன்னா அவனுக்குத் தெரிந்த தொழிலை ஆரம்பித்துக் கொடுக்கலாம்.. நம் சாருவைக் காப்பாற்றியிருக்கிறான்.. அவனுக்கு எவ்வளவு செய்தாலும் தகும்.. பிரதிபலன் எதிர்பார்க்காம ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றியிருக்கிறானே.. ஹி இஸ் ஸோ கிரேட்..! நாம் அவன் வாழ்க்கைக்குத் தேவையான உதவிகளைச் செய்யனும்.." என்றார்..

"ஷ்யூர்.. டாட்.." மனதார அதை ஒப்புக் கொண்டான் சதிஷ்..

இப்படிச் சொன்னவர்கள் இரண்டே நாள்களில் சதானந்தனை சபித்தார்கள்.. சாருலதாவின் மானத்தைக் காப்பாற்ற வந்தவன் என்று போற்றிப் புகழாரம் சூட்டியவர்கள்தான் அவளது வாழ்வைப் பாழடிக்க வந்தவன் என்று சதானந்தனின் மீது வெறுப்பை உமிழ்ந்தார்கள்..

"நான் போய் பார்த்து விட்டு வர்றேன் சாரு.. டோன்ட் வொர்ரி.. இந்த ஹெல்த் கண்டிசனோடு நீ அலையக் கூடாது.."

தங்கைக்கு வாக்குக் கொடுத்து விட்டு வெளியே சென்றவன் திரும்பி வர வெகு நேரமாகி விட்டது.. தமையன் வரும் வரை சாப்பிட மறுத்து விட்டு உறங்காமல் காத்திருந்தாள் சாருலதா.. திரும்பி வந்தவனின் முகம் வெளிறியிருந்ததை அவள் கவனிக்கவில்லை.. தங்கையின் முகம் பார்க்காமல் எங்கோ பார்த்தபடி..

"நான் போனப்ப அங்கே யாரும் இல்லை சாரு.. காரும் பைக்குமா போய்க்கிட்டு இருந்தது.. ஐ திங்க்.. நீ வந்தவுடன் சதானந்தனும் போயிருப்பான்.. அந்த ராஜேந்திரன் ரோட்டில கிடக்கிறதை யாராவது பார்த்துட்டா அவனுடைய இமேஜ் டேமேஜாகிரும்ன்னு காரை எடுத்துக்கிட்டு ஓடியிருப்பான்.." என்றான்..

"அவன் அடிபட்டு பேச்சு மூச்சில்லாமக் கிடந்தான் அண்ணா.."

"அப்படியே இருக்க முடியுமா சாரு..? நினைவு திரும்பியிருக்காதா..? அவ்வளவு அடி வாங்கியவன் ட்ரீட்மெண்ட் எடுக்க ஹாஸ்பிடலுக்குப் போயிருக்க மாட்டானா..?"

"ஆமாமில்ல.."

அமைதியான சாரு சுமதி ஊட்டி விட்ட இரவு உணவை மறுக்காமல் சாப்பிட்டாள்.. பாலைக் குடித்து விட்டு உறங்கிப் போனாள்.. மகளின் நிம்மதியான உறக்கத்தில் கண்கள் பனிக்க விளக்கை அணைத்து இரவு விளக்கைப் போட்டு விட்ட சுமதி மகளின் அறைக் கதவைப் பூட்டி விட்டு வெளியில் வந்தாள்..

மாடி ஹாலில் போடப்பட்டிருந்த சோபாக்களில் அருகருகே உட்கார்ந்து ரகசியம் பேசிக் கொண்டிருந்த சதிஷீம் சக்ரபாணியும் சுமதியைக் கண்டதும் பேச்சை நிறுத்தி விட்டார்கள்.. இறுகியிருந்த அவர்களது முகங்கள் ஏதோ ஒரு விபரீதம் நடந்திருப்பதை உணர்த்தியதில் கலவரம் கொண்ட சுமதி..

"என்ன.. ஏன் நீங்க இங்கே உட்கார்ந்திருக்கீங்க..?" என்று பரபரத்தாள்..

"சுமதீ.." அலுப்புடன் எழுந்து மனைவியின் அருகே வந்த சக்ரபாணி..

"ஏன் டென்சன் ஆகிற..? நம்ம சாரு மிகப் பெரிய ஆபத்திலிருந்து தப்பி வந்திருக்கிறா.. நடந்திருக்கிறது என்ன சாதாரண விசயமா..? அதைப் பத்தித்தான் பேசிக்கிட்டு இருந்தோம்.. ம்ப்ச்.." என்று மனைவியின் பரபரப்பிற்கான தன் அதிருப்தியை தெரிவித்தார்..

"அவ்வளவுதான்.. வேறு ஒன்றும் இல்லையே.." நம்பாத பார்வையுடன் கேட்டாள் சுமதி.

"வேறு ஏதாவது இருந்தா உன்னிடம் சொல்ல மாட்டோமா..? வா.. தூங்கப் போகலாம்.. ஐ ஃபீல் ஸோ டயர்டு.." சக்ரபாணி விட்ட கொட்டாவியில் சுமதி சமாதனமாகி விட்டாள்..

மனைவியுடன் நடந்த சக்ரபாணியின் விழிகள் மகனிடம் சூசகமாக ஏதோ ஓர் செய்தியை உணர்த்தின.. புரிந்து கொண்டதற்கு அடையாளமாக இமைகளை மூடித் திறந்தான் சதிஷ்..

அன்றைய இரவில் சாருலதாவைத் தவிர வேறு யாரும் ஆழ்ந்த நித்திரையில் அமிழவில்லை.. உறங்கியதாக பெயர் பண்ணி விட்டு விடிந்தும் விடியாத காலைப் பொழுதிலேயே எழுந்து விட்டார்கள்..

சாருலதா விழித்து எழுந்ததும் குளித்து உடைமாற்றி விட்டுக் கார்ச் சாவியைக் கையிலெடுத்தாள்.. ஹாலில் பேப்பர் படிப்பதைப் போல பேப்பரினால் முகத்தை மறைத்துக் கொண்டு மகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்த சக்ரபாணி.. பேப்பரை தாழ்த்தி மடித்து டீப்பாயில் வைத்தபடி இயல்பாக ஏறிட்டுப் பார்ப்பதைப் போல மகளை ஏறிட்டுப் பார்த்து..

"இப்ப எப்படியிருக்கு சாரு.. ஸ்லீப்பிங் டெண்டன்ஸி இருக்கா..? ஆர் யு ஓகே..?" என்று வினவினார்..

"ஐ ஆம் ஃபைன் டாடி.. ஐ ஃபீல் பெட்டர் நௌ.." என்றாள் சாருலதா..

"அப்படின்னா நாம இன்றைக்கு ஜ்வல்ஸ் வாங்கப் போய் வரலாமா..?"

"ஜ்வலா..? இன்றைக்கா..?"

சதானந்தனைப் பார்க்கப் போக வேண்டுமே என்ற நினைவுடன் மறுத்துச் சொல்லப் போனாள் சாருலதா..

"ஜ்வல்ஸ் நாம வாங்கலை சாரு.. உனக்கும் பிரசன்னாவுக்கும் எங்கேஜ்மெண்ட் நடக்கப் போகுதில்ல.. அப்ப பிரசன்னாவின் அம்மா உனக்கு ஜ்வல்ஸ் பிரசண்ட் பண்ணனுமில்ல.. அதற்காக அவங்க வாங்கப் போகிறாங்க சாரு.. உன்னையும் அழைத்துக் கொண்டு போய் உனக்குப் பிடித்ததாக வாங்கனும்னு பிரசன்னாவோட ஆர்டராம்.. காலையிலேயே மோகனா போன் பண்ணிட்டாங்க.. நானும் ஓகேன்னு சொல்லிட்டேண்டா.."

பிரசன்னாவின் பெயர் வந்ததில் சாருவால் மறுத்துப் பேச முடியவில்லை... சதிஷீக்கும் ஷோபனாவிற்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்தபோது சாருலதாவின் வீட்டில் வரப் போகும் மருமகளுக்காக வைர நகைகளை வாங்கினார்கள்.. அதை நிச்சயதார்த்த விழாவின் போது ஷோபனாவுக்கு பரிசளித்தார்கள்..

அது ஒரு சம்பிரதாயம்.. அந்த சம்பிரதாயத்தை பிரசன்னாவின் குடும்பத்திலும் செய்தாக வேண்டும்.. அதற்காக அழைக்கும் வருங்கால மாமியாரின் அழைப்பை சாருலதா எப்படிப் புறக்கணிப்பது..?

செல்போன் ஒலித்தது.. பிரசன்னாதான் அழைத்தான்..

"ஹேய்.. எக்ஸாம் முடிஞ்சிருச்சு.. இனியும் எனக்கு நீ டேக்கா கொடுக்க முடியாது மை டியர் ஸ்வீட் ஹார்ட்.."

கிசுகிசுப்பான அவனது பேச்சில் கன்னம் சிவந்தாள் சாருலதா.. உலகமே மறந்து விட்டது.. உலகமே மறக்கும்

போது அதில் ஜீவிக்கும் சதானந்தன் மட்டும் அவள் நினைவில் இருப்பானா என்ன..?

"என்ன..? இன்னைக்கு ஐயாவுக்கு குஷி பொங்குது..?"

"பொங்காதா பின்னே..? இந்த மன்த் எங்கேஜ்மெண்ட்.. நெக்ஸ்ட் மன்த்தில மேரேஜ்.. நினைத்தாலே இனிக்குதுடி.."

"யாருக்காம்..?"

"எனக்குத்தான்.. வேற யாருக்கு இனிக்கும்..? ரோட்டில் டிராவல் பண்றவனுக்கா..?"

"ஓ.. பேச்செல்லாம் தூள் பறக்குது.. மேரேஜ் யாருக்கும் யாருக்குமாம்..?"

"சென்னையில ஒரு வாயாடி இருக்கிறா... என் தங்கைக்கு நாத்தனார்.. அவளை என் தங்கைக்கு அண்ணியாக்கிடனும்னு பிளான் பண்ணியிருக்கேன்.."

"பக்கா பிளான்தான்.. வொர்க்-அவுட் ஆகுமா..?"

சாருலதா என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டாள்.. அவள் கேட்டதைப் போல அது வொர்க் அவுட் ஆகாமல் போய் விடும் என்று கனவா கண்டாள்..?

"இது வொர்க் அவுட் ஆகலைன்னா வேற எதுதான் வொர்க் அவுட் ஆகும்..?"

பிரசன்னாவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொப்பளித்தன.. அவனது காதலி அவனது கைக்குள் அடங்கியிருப்பவள் என்ற அதீத நம்பிக்கை... உறவினர்களான இரு வீட்டிரும் ஒரு மனதாக நடத்தி வைக்கப் போகும் திருமணத்திற்கு எந்தத் தடை வரப் போகிறது என்ற அலட்சியம்.. அவனது காதலியே அவர்களது திருமணத்திற்கு தடையாக மாறி தடை விதிப்பாள் என்று அவனும் கனவு காணவில்லையே..

சாருலதா சந்தோசமாக நகைக்கடைக்குச் சென்றாள்.. காத்திருந்த மோகனாவிடம் பணிவாகப் பேசினாள்.. மோகனா காட்டிய நகைகளை உடனுக்குடன் வாட்ஸ்-

அப்பில் அனுப்பி பிரசன்னாவிற்குப் பிடித்தமான நகையை தனக்குப் பிடித்தமான நகையென்று தேர்வு செய்து கொடுத்தாள்.. திருமணக் கலகலப்பில் மகளை இழுத்து விட்ட சக்ரபாணி நகைக்கடையிலிருந்து நேரே மோகனாவின் வீட்டிற்கு சாருலதாவை அழைத்துச் சென்று விட்டார்..

பத்மநாபன், மோகனா ஒரு புறம்.. சக்ரபாணி, சுமதி எதிர் புறம் என்று சோபாக்களில் அமர்ந்து வரப் போகும் திருமணத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றித் தீவிரமாக பேச ஆரம்பிக்க.. சாருலதா வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறப்பதைப் போன்ற இன்பமான அவஸ்தைக்கு ஆளானாள்.. இரவு விருந்தை பத்மநாபன் வீட்டில் அளித்தார்கள்.. சதிஷீம் ஷோபனாவும் இரவு விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்ததால் சதிஷ் மனைவியோடு பத்மநாபனின் வீட்டிற்கு வந்து விட்டான்.. சாருலதாவிற்காக மோகனா வாங்கி வைத்திருந்த வைர நகைகளின் வேலைப்பாடையும், அமைப்பையும் பார்த்து விட்டு வியந்து பாராட்டினாள் ஷோபனா.. அதைத் தேர்ந்தெடுத்தது தன் மருமகள்தான் என்று பெருமைப் பட்டாள் மோகனா.. அப்போதே அந்த வீட்டின் மருமகளாக தன்னை உணர்ந்தாள் சாருலதா..

அன்றைய தினத்தின் கலகலப்பான இனிய நிகழ்வுகளில் முதல்நாளின் நினைவுகளை சாருலதா முற்றிலுமாக மறந்து விட்டிருந்ததில் சக்ரபாணியும், சதிஷீம் நிம்மதியடைந்தார்கள்.. சாருலதாவை வெளியூருக்கு அனுப்பி வைத்து விட்டால் என்ன என்று சதிஷ் கேட்டான்.. திருமண நிச்சயதார்த்தம் நடக்கும் போது அவள் திரும்பி விடலாம் என்றான.. அடுத்த இரு வாரங்களில் திருமணம்.. அதற்குப் பின்னால் அவள் பிரசன்னாவுடன் அமெரிக்காவுக்கு பறந்து விடுவாள் என்பதில் மகனின் யோசனையை வரவேற்று ஆதரித்தார் சக்ரபாணி.. தனித்துப் போகச் சொன்னால் அவள் சந்தேகம் கொள்வாள்.. சுமதியும் ஆட்சேபிப்பாள் என்பதால் சதிஷீம், ஷோபனாவும் சிம்லாவில் உள்ள ரிசார்ட்டிற்கு ரெஸ்ட் எடுக்கப் போகிறார்கள் என்றும் கூடவே தேர்வுகளை

எழுதிக் களைத்திருக்கும் சாருலதாவையும் அழைத்துக் செல்கிறார்கள் என்றும் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப் பட்டது.. கன கச்சிதமான திட்டத்தைத் தீட்டிவிட்ட மனநிறைவுடன் தூங்கப் போன தகப்பனும், மகனும் காலையில் கண்விழித்த போது சாருலதா அவர்களது பங்களாவில் இல்லை..

## 16

அன்றை தினத்தின் இனிய நிகழ்வுகளில் முதல் நாள் நடந்த கசப்பான நிகழ்வை சாருலதா முற்றிலுமாக மறந்திருந்தாள்தான்.. இல்லம் திரும்பியதும் எப்போதும் போலக் குளித்து நைட்டிக்கு மாறி படுக்கப் போனவள் ஜன்னல் திறந்திருந்ததில் அதை அடைக்கச் சென்றாள்.. ஜன்னல் வழியே வீசிய மெல்லிளம் தென்றல் காற்றில் முகத்தைக் காட்டியவள் அப்படியே சில நொடிகள் நின்றாள்.. அவளது பார்வை தூரத்தில் தெரிந்த சாலையின் மீது பதிந்தது.. வானத்தில் பிரகாசித்த ஒளி வெள்ளத்தில் சாலையின் வாகனப் போக்குவரத்தின் நெரிசலை உணர்ந்தவளின் மனதில்..

'அந்த ரோட்டுக்கு அந்தப் பக்கம்தான் குப்பம் இருக்கு..' என்ற நினைவு வந்து விட்டது..

'சுளீர்..' என்ற சாட்டையடி உடலில் விழுந்தைப் போலத் துடித்துப் போய் விட்டாள் சாருலதா..

சதானந்தனுக்கு அவள் நன்றி சொல்லவே இல்லையே.. ராஜேந்திரனை அடித்துத் துரத்தி விட்டு அவன் தன் வேலையைப் பார்க்கப் போயிருப்பான்தான்.. ஆனாலும் அவளைக் காப்பாற்றியதற்கு அவள் ஓர் வார்த்தை நன்றி சொல்ல வேண்டாமா..?

மனதுக்குள் குற்ற உணர்வு எழுந்தது.. அன்றைய நாளில் அவளால் வருங்கால மாமியாரின் உத்தரவை மீற முடியாமல் போய் விட்டதே.. மறுநாளும் அப்படி நடக்காது

என்று என்ன நிச்சயம்..? திருமண நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.. நிச்சயதார்த்தம் வரை சிம்லாடூர் போய்விட்டு வரலாம் என்று அவளுடைய அண்ணனும் அண்ணியும் அழைத்திருக்கிறார்கள்..

சதானந்தனை நேரில் சந்தித்து நன்றி சொல்ல முடியாமலே போய் விடுமோ..

'என்ன செய்யலாம்..'

எது நடந்தாலும் சதானந்தனுக்கு நன்றி சொல்லியே ஆக வேண்டும் என்ற வேகம் வர அவள் செல்போனை எடுத்துக் கண்ணம்மாவை அழைத்தாள்.. கண்ணம்மாவிடம் சதானந்தனின் போன் நம்பரை வாங்கிப் போனில் பேசி விடலாமே..

மறுமுனையில் ரிங் போய் கொண்டே இருந்தது.. ஒருவேளை அவள் வீட்டு வேலை செய்த களைப்பில் தூங்கி விட்டாளோ என்று சாருலதா யோசித்துக் கொண்டிருந்தபோது கண்ணம்மாவின் குரல் கேட்டது..

"ஹலோவ்.."

"கண்ணம்மா.. நான் சாருலதா பேசறேன்.. எனக்கு ஒரு ஹெல்ப் செய்யனும்.."

"சொல்லுங்கம்மா.."

"நாளைக்கு வேலைக்கு வர்றப்ப சதானந்தன் இருக்காரில்ல.. அவரோட செல்போன் நம்பரை வாங்கிக் கிட்டு வர்றீங்களா..? அவர் எனக்கு மிகப் பெரிய ஹெல்ப் ஒன்றைச் செய்தார்.. தேங்க்ஸ் சொல்லனும்.. நேரில் பார்க்க முடியுமான்னு தெரியலை.."

"நீங்க செல்போனிலயும் பேச முடியாதும்மா.."

கண்ணம்மாவின் குரல் புயலை உள்ளடக்கி யிருந்ததைப் போல சாருலதாவிற்குத் தோன்றியது.. பிரமையாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.. கண்ணம்மா சாருலதாவின் மீது ஆழ்ந்த அன்பும் பிரியமும் கொண்டவள்.. பூடகமாக எதையும் பேச மாட்டாள்..

"ஏன் கண்ணம்மா..?"

"சதானந்தனை போலிஸ் அரெஸ்ட் பண்ணிக்கிட்டு போயிருச்சும்மா.."

"வாட்..?"

சாருலதாவின் கையிலிருந்த செல்போன் நழுவியது.. அன்றைய நாளின் ஒட்டு மொத்த குதூகலமும் மிச்சம் மீதியில்லாமல் காணாமல் போய்விட நடுக்கத்துடன் செல்போனை கையிலெடுத்தாள்.. அவளது கல்யாணக் கனவுகள் தொலை தூரமாக ஒதுங்கிப் போய் விட்டன..

"எப்போ கண்ணம்மா..?" குரலும் நடுங்கக் கேட்டாள்..

"நேத்து ராத்திரி எட்டு மணியிருக்கும்மா.."

ஏழு மணியளவில்தான் சதானந்தன் ராஜேந்திரனை அடித்துத் துவைத்துப் போட்டான்.. அடுத்த ஒரு மணி நேரத்தில் கைதாகியிருக்கிறான் என்றால் ராஜேந்திரனுக்கு என்ன ஆனது..?

"எதுக்காக அரெஸ்ட் பண்ணினாங்களாம் கண்ணம்மா.."

"எவனோ ஒரு பேமானி.. ராஜேந்திரன்னு பேராம்.. அவனுக்கும் சதாவுக்கும் தகராறு இருந்துச்சாம்.. அவனோட ஆபிஸ்ல சதா வேலை கேட்டுப் போனப்ப இன்னாடா மன்சன் நீ.. எங்கம்பெனியில வேல பாக்க உனக்கு இன்னா தகுதி கீதுடான்னு ராஜேந்திரன் கேட்டுப்புட்டானாம்.. அத மன்சில வச்சுக்கிட்டு அவன் இந்தப் பக்கமா காரில வந்தப்ப சதா அவனை அடிச்சுக் கொன்னிருச்சாம்.."

"ஐய்யோ.. அவன் செத்துட்டானா..?"

"கண்ணு..?"

கண்ணம்மாவின் சந்தேகக் குரலில் சாருலதா சுதாரிக்கவில்லை.. சுதாரிக்க வேண்டிய அவசியம்தான் என்ன..? அவள் சாருலதா.. உண்மையை ஒளித்து ஒர்நாளும் மறைந்து நிற்க மாட்டாள்..

"அவனை முன் விரோதத்தில சதானந்தன் அடித்துக் கொல்லலை கண்ணம்மா.. அதுக்கு நானே சாட்சி.. அந்த இடத்தில் நானும் இருந்தேன்.."

"நினச்சேன் கண்ணு.. இப்படித்தான் ஏதாச்சும் இருக்கும்ன்னு அப்பவே நினச்சேன்.. நேத்து ராத்திரி சதாவ போலிஸ் அரெஸ்ட் பண்ணி இட்டுக்கிட்டுப் போனப்ப இந்தக் குப்பமே அங்கதான் கூடி நின்னது.. போலிஸ் வண்டிய நகர விடாம வழி மறிச்சது.. அப்ப நம்ம சின்னய்யா காரில வந்தாரு கண்ணு.. என்னாண்ட வந்து என்ன, ஏதுன்னு விவரம் கேட்டுக்கினு இருந்தவரு சதா வேற ஏதாவது சொல்லுச்சான்னு கேட்டாரு.. நானு ஒரு விவரம் கெட்ட சிறுக்கி.. சின்னய்யா எதுக்காக இப்படி ஒரு கேள்வியக் கேக்கிறாருன்னு தெரியாம இன்னாய்யான்னு கேட்டேன்.. ஒன்னுமில்ல கண்ணம்மான்னு மழுப்பினவரு.. திடிர்ன்னு நம்ம சாரு இந்தப் பக்கமாத்தான் காரில வரும்ன்னு நீ யார்கிட்டயும் சொல்லாதே கண்ணம்மான்னாரு.. நம்ம புள்ள பேச்சப் போயி அனாவசியமா நான் பேசுவேனா ஐயான்னு கேட்டேன்.. எதுக்கும் சொல்லி வைக்கிறேன்னு சொல்லிட்டுப் போனவரு பத்துமணி வாக்கில காரைப் போட்டுக்கிட்டு வந்து சதாவோட குடும்பத்தில யார், யார் இருக்காங்கன்னு கேட்டாரு.. எதுக்குய்யான்னு கேட்டா சும்மாதான் கண்ணம்மாங்கிறாரு.. அதுக்கு யாரும் இல்லேங்கய்யா.. தனிமரம்.. அண்ணன் புள்ள ஒன்னு அதப் போலயே அனாதையா கீது.. அந்தப் புள்ள இனி என்ன ஆகுமோன்னு புலம்புனேன் பாரு.. கத்தையா ஒரு கட்டுப் பணத்த எடுத்து நீட்டறாரு.. நான் மிரண்டுட்டேன்.. இந்தப் பணத்த வைச்சுக்க கண்ணம்மா.. அந்தப் பையன ஏதாச்சும் அனாதை விடுதியில சேர்த்து விட்டிருன்னு சொன்னாரும்மா.."

சாருலதாவின் அடிவயிற்றில் தீப்பற்றியது.. அவள் மனது கொந்தளித்தது..

'பொய் சொல்லியிருக்கிறாங்க.. என்னிடமிருந்து டோட்டலா எல்லாத்தையும் மறைச்சிருக்காங்க.. மாற்றிச்

சொல்லியிருக்கிறாங்க.. பிரசன்னாவோட அம்மா ஜ்வல்ஸ் வாங்கக் கூப்பிடறாங்கன்னு சொல்லி சதானந்தனுக்கு என்ன ஆச்சுன்னு நான் தெரிந்துக்க விடாமப் பண்ணியிருக்காங்க.. இதனால்தான் சிம்லா டூருக்குப் பிளான் போட்டிருக்காங்களா..? உல்லாசமாய் நானிருக்க அங்கே எனக்காக ஒருவன் ஜெயிலுக்குப் போயிருக்கிறான்.. அவனோட அண்ணன் மகனை இவங்க அனாதை விடுதியில சேர்க்கச் சொல்லி அதுக்குப் பணத்தை அள்ளிக் கூலியாக் கொடுத்திருக்காங்க.. ஒரு வார்த்தை.. ஒரேயொரு வார்த்தை.. இப்படி ஆகியிருச்சு சாருன்னு சொல்லலையே.. உனக்காக ஜெயிலுக்குப் போனவனோட அண்ணன் குழந்தையை அவன் திரும்பி வருகிற வரைக்கும் நம் பொறுப்பில் நாம் வளர்க்கலாம்ன்னு சொல்கிற மனசு வரலையே.. இவங்க பெண் மட்டும் இன்னொருத்தனை பலிகடாவாக்கிட்டு அந்தக் கில்ட்டி கான்ஸியஸ் இல்லாம நிம்மதியா வாழனும்.. அந்தத் தியாகியோட அண்ணன் குழந்தை அனாதை விடுதியிலே சேரனும்.. என் குடும்பத்தாரைப் பத்தி எத்தனை உயர்வாய் நினைச்சிருந்தேன்.. இப்படி இதயமில்லாதவங்களா இருக்காங்களே..'

அந்த நிமிடங்களில்தான் அவளது குடும்பத்திற்கு அவள் எதிரியானாள்.. அவள் வேறு, அவர்கள் வேறு என்று மனதால் பிரிந்தாள்.. பிரசன்னாவின் மீதிருந்த மோகமும், காதலும்தானே சதானந்தன் என்ன ஆனான் என்று அறியச் செல்ல விடாமல் தடுத்து நகைக் கடைக்கு ஓட வைத்தது என்று வைராக்கியம் வைத்தவள் பிரசன்னாவின் மீதிருந்த காதலையும், சொந்தத்தையும் மனதிலிருந்து தூக்கி எறிந்தாள்.. புத்தம்புது சாருலதாவாக கண்ணம்மாவிடம் பேச ஆரம்பித்தாள்..

"நீங்க என்ன செய்தீங்க கண்ணம்மா..? அண்ணா கொடுத்த பணத்தை வாங்கிக்கிட்டு அந்தக் குழந்தையை அனாதை விடுதியிலே சேர்த்துட்டீங்களா..?"

"இன்னா கண்ணு.. இப்புடிக் கேட்டுப்புட்ட.. இந்தக் கண்ணம்மா சதாவுக்கு கூடப் பொறக்காத அக்கா கண்ணு..

எந்தம்பியோட அண்ணன் புள்ளய நான் அனாதை விடுதியிலே சேப்பேனா..? முடியாதுன்னு சொல்லிட்டேன் கண்ணு.. பேசாம நின்னவரு இனி நீ எங்க வூட்டுக்கு வேலைக்கு வர வேணாம்ன்னு சொல்லிட்டுப் பூட்டாரும்மா.."

"ஓ.. இன்னைக்கு நீங்க வேலைக்கு வரலியா..?"

"வரலியே கண்ணு.. மத்த வூட்டு வேலைகளைப் பாத்துப்புட்டு எங்க வூட்டுக்கு வந்துட்டேன்.. உங்களுக்கு இது தெரியாதா..?"

"தெரியாது கண்ணம்மா.. இது மட்டுமில்ல.. எதுவுமே தெரியாது.. காலையிலே வீட்டை விட்டுக் கிளம்பினவ இப்பத்தான் வீட்டுக்குத் திரும்பி வரேன்.. எதையும்

நான் தெரிந்துக்க விடாம இவங்க பண்ணிக்கிட்டு இருக்காங்க.."

சாருலதாவின் பேச்சிலிருந்து எதையும் முழுமையாக புரிந்து கொள்ள முடியாமல் கண்ணம்மா பேசாமல் இருந்தாள்.. சாருலதாவே நடந்தவை அத்தனையையும் கண்ணம்மாவிடம் கொட்டினாள்.. கண்ணம்மா விக்கித்துப் போனாள்..

"இம்புட்டு நடந்திருக்கு.. ஒரு வார்த்த உம் பேர சதா சொல்லவே இல்ல கண்ணு.. நான்கூட.. நினைச்சேன்.. சொந்தமா வெச்சிருக்கிற வொர்க் ஷாப்பில பெரிய வேலையை எல்லாம் ஏத்துக்கிட்டுப் பாத்தா சதா எங்கியோ போயிருமே.. இன்னாத்துக்கு இந்த அச்சுக் கெட்டவன் கம்பெனியில வேல கேட்டுப் போச்சுன்னு மருகுனேன்.. உங்களுக்காக சதா கொலை பண்ணிருச்சா..? அக்கா.. அந்தப் பொண்ணு தேவதைக்கான்னு சொல்லும்.. உம்மேல அம்புட்டு மருவாதி.. உம் பேச்சப் பேசறதுன்னா அதுக்கு சக்கரைக் கட்டியத் துண்றதப் போல.. முகம் பூவா மலர்ந்துரும்.. உம்பேரு வெளியில வந்துரக் கூடாதுன்னு தம்மேல பழியப் போட்டுக்கிட்டுப் போயிருச்சே கண்ணு.. அதுக்கு எம்மாம் பெரிய மனசு.."

"பட்.. எங்க வீட்டில இருக்கிறவங்களுக்குத்தான் சின்ன மனதாப் போயிருச்சு கண்ணம்மா.."

"நான் இன்னான்னு நாயம் சொல்வேன்..? பெத்தவுக மனசு எப்பவுமே புள்ளயக் காப்பாத்தனும்னுதான் நினைக்கும்.. உங்க வூட்டுலயும் அதத்தான் நெனைக்கிறாங்க.. அதில தப்பில்ல.. ஆனாக்க கண்ணு.. அந்தப் பச்சப்புள்ள பாவமில்லையா..? அத்தக் கொண்டு போயி அனாதை விடுதியிலே சேக்கச் சொல்லலாமா..? அது தப்பு கண்ணு.."

"சதானந்தனோட அண்ணன் குழந்தை அனாதை விடுதியில வளராது கண்ணம்மா.. அதுக்கு நான் கேரண்டி.. குழந்தை இப்ப எங்கே இருக்கான்..?"

"என் வூட்டுலதான் இருக்கான்.. சேலயில தூளி கட்டிப் போட்டிருக்கேன்.. தூங்கிக்கிட்டு இருக்கான்.. மதியத்தில சித்தப்பனைத் தேடினானாம்.. இல்லேங்கவும் அழுது ரகள பண்ணிட்டானாம்.. ஒஞ்சித்தப்பன் வேலக்குப் போயிருக்கு.. இப்ப வந்திரும்ன்னு ஏமாத்தி தூங்க வச்சிருக்கேன்.."

பெரிதாக எதையும் செய்து விட்டதைப் போல இல்லாமல் வெக இயல்பாகப் பேசினாள் கண்ணம்மா..

'எப்பேர்பட்ட மனுஷி இவள்..' சாருலதாவுக்கு பிரமிப்பாக இருந்தது..

வீட்டு வேலை செய்து பிழைப்பவள்.. கற்றையாக அவளிடம் நீட்டப் பட்டப் பணக்கட்டை மறுத்து விட்டு அனாதையாகி விட்ட குழந்தைக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறாள்.. அந்த மனது யாருக்கு வரும்..? அப்படிப்பட்ட மனது சாருலதாவின் குடும்பத்திடம் ஏன் இல்லாமல் போய் விட்டது..?

ஒருவன் என்னடாவென்றால் ஒரு பெண்ணின் மானத்தையும் உயிரையும் காப்பாற்றி விட்டு அதைப் பற்றி ஒற்றை வார்த்தைகூடச் சொல்லாமல் சிறைக்குச் செல்கிறான்.. அவனிருக்கும் குப்பத்தைச் சேர்ந்தவளோ அவனது அண்ணன் குழந்தைக்கு அடைக்கலம் கொடுத்து அந்தக் குழந்தையை அனாதை விடுதியில் சேர்க்கக்

கிடைத்த பணத்தை மறுத்து விட்டு அதைப் பற்றிப் பெரிதாக பேசாமல் அது தன் கடமை என்பதைப் போலப் பேசுகிறாள்..

இவர்கள் மனிதர்களா..? இல்லை.. சாருலதாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மனிதர்களா..? இப்படியும் மனிதர்கள் சுயநலமே உருவாக இருப்பார்களா..?

'முதலில் நான் மனுஷியா..?'

இந்தக் கேள்வி விடிய விடிய சாருலதாவை ஆட்டி வைத்தது.. தூக்கமில்லாமல் நகர்ந்த இரவுப் பொழுது நீளமானதாக இருந்தது.. விடிவதற்குள் குளித்து உடை மாற்றியவள்.. வெளிச்சம் பரவுவதற்குள் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்..

"எங்கே போகிறீங்கம்மா..?" என்ற செக்யூரிட்டியின் கேள்விக்கு..

"கோவிலுக்கு.." என்று பதிலைச் சொல்லி விட்டு நடந்தாள்..

சாருலதா வீட்டை விட்டு வெளியேறி விடக் கூடாது.. அவள் வெளியேறினால் தகவல் சொல்ல வேண்டும் என்ற கட்டளை எதுவும் செக்யூரிட்டிக்குப் பிறப்பிக்கப்பட வில்லை.. சாருலதாவிற்கு எதுவும் தெரியாது.. எதையும் அவள் அறிந்து கொள்வதற்கு முன் சிம்லாவிற்கு அவளை அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று குடும்பத்தார் திட்டம் தீட்டியிருந்ததால் எவ்விதமான தடைகளும் இல்லாமல் சாருலதா சாலையில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள்..

"காரில போகலைங்களா..?" அப்போதும் செக்யூரிட்டி கேள்வி கேட்டான்தான்..

"ஸ்ட்ரீட் முனையில இருக்கிற கோவிலுக்குப் போக கார் எதுக்கு..?" சாருலதா புன்னகையுடன் சென்று விட்டாள்..

குப்பத்துக்கு அவள் போனபோது குழந்தையுடன் காத்திருந்த கண்ணம்மா அவளை வரவேற்றாள்..

"காபி குடிங்கம்மா.."

கண்ணம்மா நீட்டிய காபியை.. வாங்கிக் கொள்ளாமல் குழந்தையை வாங்கிக் கொண்டாள் சாருலதா.. அதில் கண்ணம்மா நெகிழ்ந்து போனாள்..

"இவன் பால் குடித்தானா கண்ணம்மா..?"

"அப்பவே குடிச்சிட்டான்ம்மா.."

"பேரென்ன..?"

"தயானந்தன்.. இத்தோட அப்பா பேரு சிவானந்தன்.. அம்மா பேரு கல்பனா.. பாவப்பட்ட குழந்தைம்மா.. இதுக்குன்னு இருந்த ஒரே சொந்தம் சதா மட்டும்தான்.. அத்தும் இங்க இல்ல.."

"நானிருக்கேன் கண்ணம்மா.. இனி இவன் என் குழந்தை.."

"அம்மா..? உங்க வூட்டுல இதுக்கு ஒப்புக்குவாங்களா..?"

"நான் வீட்டை விட்டு வெளியே வந்துட்டேன் கண்ணம்மா.. எனக்கு சதானந்தன் வீட்டுச் சாவி வேணுமே.."

"இன்னாத்துக்கும்மா..?"

"இப்போதைக்கு இவனும் நானும் அங்கே தங்கிக்கறோம்.. இனிமேல் என்ன செய்யனும்னு இனிமேல்தான் யோசிக்கனும்.."

என்ன சொல்வதென்று தெரியாத திகைப்புடன் சதானந்தனின் வீட்டுச் சாவியை எடுத்துத் தந்தாள் கண்ணம்மா.. சாருலதாவின் முடிவை அவளால் ஆதரிக்கவும் முடியவில்லை.. மறுக்கவும் முடியவில்லை..

"உங்க வூட்டு மன்சாள நினச்சுப் பாருங்கம்மா.." என்று மட்டும் மன்றாடினாள்..

"இனி நான் நினைக்க வேண்டியது சதானந்தனைப் பற்றி மட்டும்தான்.." தீர்மானமாகச் சாருலதா சொல்லி விட்ட பின்னால் கண்ணம்மாவால் எதுவும் பேச இயலவில்லை..

சதானந்தனின் வீட்டைத் திறந்து உள்ளே போனவள் தயானந்தனை தரையில் விளையாட விட்டு விட்டு வீட்டைச்

சுற்றிப் பார்த்தாள்.. படுக்கையறையின்

சுவர் அலமாரியில் டைரிகள் அடுக்கப் பட்டிருந்தன.. அதையெடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தவள் அதிலிருந்த சதானந்தனின் ஒருதலைக் காதலின் கதையில் அதிர்ந்து போனாள்.. அவளைக் காணோம் என்று அவளது வீட்டார் அவளைத் தேட ஆரம்பித்த போது அவள் சதானந்தனின் டைரியை படித்து முடித்திருந்தாள்..

17

உனக்காக நான் எதையும் செய்வேன் என்று வார்த்தையில் சொல்லாமல் செயலால் உணர்த்தி விட்டுப் போயிருந்தான் சதானந்தன்..

'தேவதைகள் வரும் பாதையில்

பூப்பூக்க வேண்டும் என்பதற்காக

நீ வரும் பாதையோரம் நான்

தினந்தோறும் பூச்செடிகளை நட்டேன்..'

அவள் வந்து போன பாதையின் ஓரமாக தினமும் ஒரு பூச்செடிகள் நடப்பட்டதன் மர்மத்தை டைரியிலிருந்த கவிதை சொல்லியது.. அவளிருந்தது மிகப் பெரும் பணக்காரர்கள் வசிக்கும் பகுதி.. அதன் சாலையோரம் பூமரங்களாக அழகாக காட்சி தரும்.. சில மாதங்களாக குப்பத்துப் பாதையும் அதைப் போல மாறுவதை உணர்ந்திருந்தாள் சாருலதா.. சாலையோரம் பூச்செடிகளுடன் மிளிர்ந்தது.. வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்ற வாசகத்தைக் கேள்விப் பட்டிருக்கிறாள்... தெருவோரம் பூச்செடிகளை வளர்ப்போம் என்று யார் ஆரம்பித்திருப்பார்கள் என்று யோசித்திருக்கிறாள்.. நடப்பட்ட பூச்செடிகள் வளர்ந்து பூக்களுடன் அசைவதைக் காணும் போது அவளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.. மனதில் ஓர் புத்துணர்வு பரவும்..

அது குப்பத்துப் பாதையைப் போல இல்லாமல் பூங்காவின் பாதையைப் போல காட்சி தரும்..

'இதை இவன்தான் செய்தானா..?'

அவன் மெக்கானிக்கல் என்ஜினியர் என்று அவனுடைய சான்றிதழ்கள் இருந்த ஃபைல் சொன்னது.. சொந்தமாக வொர்க் ஷாப் வைத்து அதை வெற்றிகரமாக நடத்துபவன் என்று கண்ணம்மா சொல்லியிருந்தாள்..

'மெக்கானிக்கல் என்ஜினியர் வேலை மெனக் கெட்டு எனக்காக ரோட்டோரமா பூச்செடிகளை நட்டு வளர்த்திருக்கிறான்..'

இமைகளை மூடி அப்படியே நின்றவளின் இமையோரமாக கண்ணீர் வழிந்தது... துடைக்க மனமில்லை.. அந்தக் கண்ணீர் சதானந்தனுக்கானது.. அதைத் துடைக்கக் கூடாது... கண்ணீர் துளிகள் அவனுக்கான அர்ச்சனைப் பூக்கள்..

'ஓர் பார்வை பார்த்துவிடு..

அது போதும் எனக்கு..

மறு நொடியில் என்னுயிர் பிரிந்தாலும்

புன்னகையுடன் சாவேன்..'

அடுத்த கவிதை அவளது பார்வைக்காக அவன் ஏங்கிய ஏக்கத்தைச் சொன்னது.. தினந்தோறும் கடந்து செல்லும் டீக்கடையை நினைவு கூர்ந்தாள் சாருலதா.. அதன் வாசலில் போடப் பட்டிருக்கும் மரபெஞ்சில் சதானந்தன் அமர்ந்திருப்பான்.. யதேச்சையாக அவள் பார்ப்பாள்.. அவனோ அவளை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பான்..

அவளைப் பார்ப்பதற்காகத்தான் அவன் அங்கு காத்துக் கொண்டிருக்கிறான் என்று அவளுக்குத் தோன்றியதே இல்லையே..

ஏன் என்று யோசித்தபோது அவளை அவன் பார்ப்பதை அவள் உணர்ந்து விடாத கவனத்தோடு இயல்பாக

பார்ப்பதைப் போலதான் அவன் பார்த்து வைப்பான் என்பது நினைவுக்கு வந்தது..

'நீ விண்மீது பவனிவரும்

முழுநிலவு..!

மண்மீது உனைக் காண

என் கனவு..!

விண்ணைத் தாண்டி

நீ வருவாயா..?

மண்ணில் சொர்க்கம்

தருவாயா..?'

கவிதைகள்.. கவிதைகள்.. கவிதைகள்..

அவனது டைரியின் பக்கங்கள் கவிதைகளால் நிரம்பி வழிந்தன.. பாட்டுடை நாயகியாக அவளே இருந்தாள்.. அவள்மீது அவன் வைத்திருந்த நேசம் உன்னதம் கொண்டதாக இருந்தது.. எட்ட நின்று அவளைக் கண்டிருந்தான்.. தேவதையாய் அவளைப் பூஜித்திருந்தான்..

அவளிடம் பேச அவன் முயன்றதில்லை.. அவன் பார்வையை உணர்த்த நினைத்ததில்லை.. மனதில் பொங்கும் காதல் உணர்வுகளை மரியாதையாய் அணை கட்டி வைத்திருந்திருக்கிறான்..

அவனை சாருலதா கொலைகாரனாக்கி சிறைக்கு அனுப்பி விட்டாள்.. அவளுடைய குடும்பமோ அதை அவளிடமிருந்து மறைத்து ஊரை விட்டு அனுப்ப முயற்ச்சிக்கிறது.. அவளது அண்ணனோ அந்தத் தியாகியின் அண்ணன் மகனை அனாதை விடுதிக்கு அனுப்ப நினைத்திருக்கிறான்..

உன் பணமும் வேண்டாம்.. வேலையும் வேண்டாம் என்று சதிஷ் சொன்ன செயலை செய்ய மறுத்திருக் கிறாளே.. கண்ணம்மா..! அவளுக்கு சதானந்தன் என்ன

செய்திருக்கிறான்..? ஒரே ஏரியாவில் வசிக்கிறான் என்பதற்காக அவளுடைய குடும்ப விவகாரங்களில் உரிமையுடன் தலை கொடுத்திருப்பான்.. அந்த நன்றிக் கடனுக்காக அவனுடைய அண்ணன் குழந்தையை தன் வீட்டில் வைத்துப் பார்த்துக் கொண்டாளே..

அந்த நன்றியுணர்வு கூட சாருலதாவுக்கு இருக்கக் கூடாதா..? நன்றியுணர்வு ஏழைகளுக்கு மட்டும்தான் சொந்தமானதா..? பணம் இருந்தால் நன்றியுணர்வு தூர ஓடி விடுமா..?

"இந்த வூடுதான்.." வாசலில் கண்ணம்மாவின் குரல் கேட்டதது..

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் சாருலதா திரும்பிப் பார்த்தாள்..

"சாரும்மா.." என்றபடி கண்ணம்மா உள்ளே வந்தாள்..

அவளைத் தொடர்ந்து பரபரப்பாக வந்த சக்ரபாணியும் சதிஷீம் பதட்டத்துடன் கதவைச் சாத்தித் தாழிட்டார்கள்..

"வாசலில் கார் நிற்குது டாட்.."

என்னதான் கதவை அடைத்துத் தாழ் போட்டாலும் அவர்கள் அங்கு வந்திருப்பதை கார் காட்டிக் கொடுத்து விடும் என்பதை அறிவுறுத்தினான் சதிஷ்..

"ம்ப்ச்.. அதை யோசிக்கலை பாரு.." சக்ரபாணி வேகமாக சாருலதாவின் பக்கத்தில் வந்து கையைப் பிடித்து எழுப்ப முயன்றார்.. அவள் அசைந்து கொடுக்கவில்லை..

"என்ன வேலை செய்துக்கிட்டு இருக்கிற சாரு..? எங்கே வந்து உட்கார்ந்திருக்கிற..? யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க..?" சதிஷ் அதட்டினான்..

"நீ பார்த்ததை ஏன் என்னிடம் சொல்லலை..?" சாருலதா திருப்பிக் கேட்டாள்..

"எதைச் சொல்கிற..?"

"புரியாதவனைப் போல பேசாதே அண்ணா.. ராஜேந்திரன் கொலையாகி இருக்கிறான்.. சதானந்தனை போலிஸ் அரெஸ்ட் பண்ணியிருக்கு.. கொலைக்குக் காரணம் பெர்சனல் வென்ஜன்ஸ்ன்னு சதானந்தன் வாக்கு மூலம் கொடுத்திருக்கான்.. இது அத்தனையையும் நீ பார்த்திருக்க.. கேட்டிருக்க.. ஏன் என்னிடம் மாற்றிச் சொன்ன..? எதுவுமே நடக்கலை.. அவரவர் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போயிருப்பாங்கன்னு சொன்னியே அண்ணா.."

"நான் உன் அண்ணன் சாரு.."

"உன் தங்கைக்காக இன்னொருத்தன் தன்னை பலி கொடுத்துக்கிட்டு இருக்கான்.. நீ அவனைத் தடுத்துக் காப்பாத்தாம அவனோட அண்ணன் குழந்தையை அனாதை விடுதியிலே சேர்க்கச் சொல்லியிருக்க.. எப்படி அண்ணா..? உன்னால எப்படி அப்படிச் சொல்ல முடிந்தது..? உன் தங்கை வாழனும்.. அவளைக் காப்பாத்த வந்தவன் நாசமாப் போகனுமா..? அவனோட அண்ணன் குழந்தை அனாதையா வளரனுமா..?"

"சாரு.."

எப்படிச் சொல்லி தங்கைக்குப் புரிய வைப்பது என்று தெரியாமல் திணறிப் போனான் சதிஷ்.. சதானந்தனைக் காப்பாற்ற வேண்டுமானால் சாருலதாவுக்காகத்தான் அவன் அந்த கொலையைச் செய்தான் என்பதை ஊர் உலகம் அறிய சொல்ல வேண்டும்.. எதற்காக என்ற கேள்வி வரும் போது சாருலதாவை ராஜேந்திரன் பலவந்தமாக அடைய முயன்றதை ஒப்புக் கொண்டாக வேண்டும்.. அதைச் செய்ய முடியுமா..?

சதானந்தனின் அண்ணன் குழந்தையை எப்படி வளர்ப்பது..? வீட்டில் கொண்டு வந்து வளர்க்க முடியுமா..? கண்ணம்மாவையே வளர்க்கச் சொல்லிப் பணம் கொடுக்கலாம்தான்.. அந்தக் குழந்தை வளர்ந்த பின்னால் எதற்காக அவனை வளர்க்க சாருலதாவின் குடும்பம் பண உதவி செய்தது என்று துப்புத் துலக்காதா..?

இந்தக் காரணங்களினால்தான் கண்ணம்மா அனாதை விடுதியில் குழந்தையைச் சேர்க்கக் மறுத்து பணத்தையும் வாங்க மறுத்து விட்டதைக் காரணம் காட்டி அவளை வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லி விட்டான் சதிஷ்.. காலப் போக்கில் கண்ணம்மா சாருலதாவின் குடும்பத்தை மறந்து விடுவாள்.. அப்படியில்லாமல் அவள் சாருலதாவின் வீட்டுக்கு வேலைக்கு வந்து போய் கொண்டிருந்தால் ஒருநாள் இல்லாவிடினும் ஒருநாள் உண்மை வெளிப்பட்டு விடும்.. அது வேண்டாம் என்றுதான் கண்ணம்மாவை முற்றிலுமாக வேலையை விட்டு நிறுத்தினான்..

சாருலதாவுக்கு எதுவும் தெரியக் கூடாது என்று பார்த்துப் பார்த்துக் காவலிருந்தும் அவள் இருபத்தி நான்கு மணி நேரத்தில் அனைத்தையும் அறிந்து வீட்டை விட்டு வெளியேறத் துணிந்து விட்டாளே.. இதுதான் விதி என்பதா..?

சதிஷ் உடன் பிறந்த பாசத்தில் துடித்தான்.. பிரசன்னாவிற்கும் தங்கைக்குமான திருமணம் நடைபெறப் போகும் காலம் கனிந்து வரும்போது இப்படி சாருலதா வாழ்க்கையை வசப்படுத்திக் கொள்ளத் தெரியாதவளாக தேவையற்ற சிக்கல்களில் மாட்டிக் கொள்கிறாளே..

"இது எனக்குத் தேவையற்ற சிக்கலா அண்ணா..? வாட் எ ஸெல்பிஷ் மேன் யு ஆர்..! இந்தப் பச்சைக் குழந்தையை அனாதையாய் விட்டு விட்டு ஜெயிலுக்குப் போயிருக்கிறானே.. அந்த சதானந்தன்.. அவனுக்குத்தான் இது தேவையற்ற சிக்கல்.."

"போதும் சாரு.. அவனுக்குத் தேவையான ஹெல்ப்பைப் பண்ணலாம்.. இப்ப நீ வீட்டுக்கு வந்துவிடு.."

"திரும்பி வரவா வெளியே வந்தேன்..?"

"சாரு..?"

"சதானந்தனுக்கு என்ன ஹெல்ப்பைப் பண்ணுவ அண்ணா.. நடந்ததைச் சொல்லி அவனை வெளியே

கொண்டு வருவியா..?"

"சாரும்மா.. உனக்கு என்ன சொல்லி புரிய வைப்பேன்..? எதுக்காக நடந்ததைச் சொல்லனும்..? அவன் தான் வாக்குமூலம் கொடுத்துட்டானே.."

"என்ன வாக்குமூலம் அண்ணா.. அவனுக்கும் அந்த நாய்க்கும் பெர்சனல் வென்ஜன்ஸ் இருந்ததுங்கிற வாக்கு மூலம்தானே..? அந்த நாய் யார்ன்னே சதானந்தனுக்குத் தெரியாது.. இவனுக்கும் அவனுக்கும் பெர்சனல் வென்ஜன்ஸா..?"

"இப்படிச் சொல்லச் சொல்லி நாம் அவனிடம் சொல்லலை.. அவனே சொல்லியிருக்கிறான்.. அப்படியே விட்டு விடலாம் சாரு.."

"யாரை அண்ணா..? சதானந்தனையும் இந்தக் குழந்தையையும் அப்படியே விட்டு விடச் சொல்கிறியா..?"

"நான் உனக்கு வாக்குக் கொடுக்கிறேன் சாரு.."

"என்னன்னு.."

"சதானந்தனுக்காக பெரிய லாயரை ஏற்பாடு பண்றேன்.. இந்தக் குழந்தையை கண்ணம்மாவே வளர்க்கட்டும்.. அதுக்கான செலவை நாம் கொடுத்து விடலாம்.."

"பெரிய மனதுதான் உனக்கு.. நீ ஏற்பாடு பண்ணுகிற பெரிய லாயர் வாதாடி என்ன செய்வார்..? சதானந்தனை வெளியே கொண்டு வந்து விடுவாரா..?"

"அவனோட தண்டனை காலத்தை குறைப்பார்.."

"ஹ.. எப்பேற்ட்ட உதவி இது.. இந்தக் குழந்தையை நம் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் வளர்க்கலாமா..?"

"ம்ப்ச்.. முட்டாளா நீ..? அது எப்படி முடியும்..?"

"ஆக.. நீ சதானந்தனை வெளியே கொண்டு வரவும் மாட்ட.. அவனோட அண்ணன் குழந்தையை வளர்க்கவும் மாட்ட.. இது இரண்டையும் செய்யாம என்ன வாக்கு அண்ணா கொடுக்கிற..? நீ செய்கிற பிராமிஸ்ன்னாலே எது மாறப்

போகுது..? நீ சொன்னாத்தான் கண்ணம்மா இந்தக் குழந்தையை வளர்ப்பாங்களா..? நீ அனாதை விடுதியிலே சேர்க்கச் சொல்லியும் மாட்டேன்னு சொல்லிட்டுத் தன் வீட்டில வைத்திருக்காங்க.. உன் பணத்தையும் வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க.. இவங்களுக்கு இருக்கிற இரக்க குணம் கூட உன்கிட்ட இல்லாம போயிருச்சே அண்ணா.. பணத்தாலே இவங்களை விலை கொடுத்து வாங்க முடிஞ்சுச்சா..?"

அண்ணன், தங்கையின் வாக்குவாதத்தைப் பல்லைக் கடித்தபடி கவனித்துக் கொண்டிருந்த சக்ரபாணி..

"இப்ப என்னதான் சொல்ற நீ..?" என்று மகளை அதட்டினார்..

"இனி இதுதான் என் வீடுன்னு சொல்கிறேன்.."

சாருலதாவின் குரலில் இருந்த உறுதியில் கண்ணம்மாவே அயர்ந்து போய் விட்டாள்.. சதிஷீம் சக்ரபாணியும் ஸ்தம்பித்தனர்..

"முட்டாளா நீ..? உன்னை அவன் காப்பாற்றினா உன் வாழ்வையே நீ பலி கொடுப்பியா..? சக்ரபாணியின் மகள் குப்பத்து வீட்டில் இருக்கிறதா..? என் பிரஸ்டீஜ் என்னாகிறதுன்னு யோசிச்சுப் பார்த்தியா..? அந்த ரோட்டுக்கு அந்தப் பக்கம் இருக்கிற ஏரியா நம் ஏரியா சாரு.. என் தாத்தா, கொள்ளுத்தாத்தா காலத்தில இருந்து

எங்க குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏரியா.. வி.வி.ஐ.பிக்களின் ஏரியா.. பெரிய பெரிய கோடிஸ்வரர்கள் மட்டும்தான் அந்த ஏரியாவில குடியிருக்க முடியும்.. ஒரு ஸ்கொயர் ஃபீட் என்ன ரேட் போகுதுன்னு உனக்குத் தெரியும்தானே.. அங்கே இருக்கிறவங்க எல்லோரும் பரம்பரை பரம்பரையாய் அந்த ஏரியாவில இருக்கிறவங்க தான்.. இந்தக் குப்பத்தில நீயிருந்தா நான் அவங்க கேட்கிற கேள்விக்கு என்னன்னு பதில் சொல்வேன்..?"

"இதுதான் உங்க பிராப்ளம்ன்னா நானும் என் குழந்தையும் வேற ஏரியாவுக்கு குடி போயிடறோம்.."

"உன் குழந்தையா..? யாரைச் சொல்கிற..?"

"சதானந்தனோட அண்ணன் குழந்தையைத்தான் சொல்கிறேன்.."

"சட்..! சதிஷ், இவளைத் தூக்கிக் காரில போடுடா.. கூட்டம் கூட ஆரம்பிச்சிருச்சு.. இவ சொல் பேச்சு கேட்க மாட்டேங்கிறா.. சொல்லிப் புரிய வைக்கவும் முடியலை.."

"கிட்ட வராதே அண்ணா.."

சாருலதா சட்டென தன் கையை வெட்டிக் கொள்ள ரத்தம் கொட்ட ஆரம்பித்தது.. சதிஷ் பின்னடைந்தான்..

"எப்பவுமே என்னை நீ காவல் காத்துக்கிட்டு இருக்க முடியாது.. இந்தக் குழந்தையையும் சதானந்தனையும் விட்டு என்னைப் பிரிச்சா நான் உயிரோடு இருக்க மாட்டேன்.."

"ஏய்.. ஏய்.. என்ன பேச்சுன்னு இப்படிப் பேசற..? பிரசன்னா உனக்காக காத்திருக்கிறான் சாரு.."

"பட்.. நான் சதானந்தனுக்காக காத்திருக்கப் போகிறேன் அண்ணா.. இனி என் வாழ்வு அவனோடு தான்.."

பிள்ளையார் பிடிக்கப் போய் ஆஞ்சநேயராகி விட்ட கதையில் தலை முடியைப் பிய்த்துக் கொண்ட சதிஷீற்கும் சக்ரபாணிக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை.. சாருலதா பேசிய பேச்சைக் கூடி விட்ட குப்பத்துவாசிகள் தெளிவாக கேட்டு விட்டார்களே..

# 18

குப்பத்து மக்களின் நாயகன் சதானந்தன்.. அவன் கோபக்காரன்தான்.. கொலைகாரனல்ல.. மனதில் வஞ்சம் வைத்து அவன் ஒருவனைக் கொலை செய்து விட்டான் என்று சொல்லி போலிஸில் சரணடைந்ததில் குப்பத்து மக்கள் குழம்பிப் போயிருந்தார்கள்..

"இன்னாவோ நடந்துக் கீதுப்பா.. நம்ம சதா அப்படியெல்லாம் தகராறுக்கு போற ஆளில்லை.. அஆங்.."

இந்தப் பேச்சுதான் அவர்களுக்கு இடையே ஓடிக் கொண்டிருந்தது.. ஒருவர் தவறாமல் அனைவரும் இதே வார்த்தைகளைத்தான் சொன்னார்கள்.. அவர்களது

ஆதர்ச நாயகனை போலிஸ் பிடித்துக் கொண்டு போய் விட்ட கொதிப்பில் இருந்தவர்கள் அவன் சாருலதா-விற்காகத்தான் அந்தக் கொலையை பண்ணியிருக்கிறான், அதை சாருலதாவுக்குத் தெரிவிக்காமல் அவளுடைய குடும்பத்தார் மறைத்து விட்டார்கள் என்பதில் காண்டாகி விட்டார்கள்..

"இன்னாய்யா.. பெர்ய மன்சா.. உன் வூட்டுப் பொண்ணுக்காக எங்க சதா கொலயப் பண்ணிப்புட்டு ஜெயிலுக்கு போவான்.. நீ அத உன் பொண்ணுகிட்டேயே மறச்சிட்டுக் கண்ணாலம் கட்டி வப்பியா..? அதான் உன் பொண்ணு உன் வூட்டுக்கு வர மாட்டேன்னு சொல்லுதில்ல.. அத்தக் காரில தூக்கிப் போடச் சொல்ற..? தூக்கிப் போட்டிருவியா..? நாங்கதான் விட்டிருவோமா.. உன் கார் இங்கேயிருந்து ஒரு தம்பிடிகூட நகராது.. பார்த்துக்க.. எம்மாந் தைரியமிருந்தா எங்க சிவானந்தனோட புள்ளய அனாதை விடுதியில சேர்க்கச் சொல்லியிருப்ப.. அப்பன், ஆத்தா இல்லாத குற தெரியாம சதானந்தன் வளத்து வந்தான்யா.. அவன் உன் பொண்ணுக்காக ஜெயிலுக்குப் போவான்.. நீ அவன் வளக்கிற புள்ளய அனாதை விடுதிக்கு அனுப்புவியா..? சுத்த நன்னி கெட்ட மன்சன்ய்யா நீ.."

குப்பத்து மக்கள் பொங்கியெழுந்து கேட்ட கேள்விகளுக்கு சக்ரபாணியால் பதில் சொல்ல முடியவில்லை.. பேச்சோடு பேச்சாக அவர்கள் கண்ணம்மாவின் மீதும் பாய்ந்தார்கள்..

"இன்னாம்மே.. கண்ணம்மா..! இந்தப் பெர்ய மன்சன் வூட்டுல வேல பாத்துத்தான் உன் வயித்தைக் கழுவனுமா..?"

"இன்னா அண்ணாத்த.. என்னப் பாத்து இப்படிக் கேட்டுப் புட்ட.. இவுக வூட்டு வேலய நான் வுட்டு ரெண்டு நாளாகுது அண்ணாத்த.. எதுவும் தெரியாதப்பவே வேலய வுட்டு

நின்னாச்சு.. இப்ப இம்மாம் பெரிய விசயம் தெரிஞ்சிருக்கு.. இதுக்கு மேல இவுக வூட்டு வேலக்குப் போனா நான் மனுஷியில்ல அண்ணாத்த.."

"அதான பாத்தேன்.. சதா உனக்கு கூடப் பொறக்காத பொறப்பாச்சே.. நீ எப்புடி இவுக வூட்டு வேலைக்குப் போவ.."

சக்ரபாணியின் முகத்தில் ஈயாடவில்லை.. சதிஷ் போய் விடலாம் என்று சைகை செய்தான்.. தங்கையின் மீது அவனுக்கு கோபம், கோபமாக வந்தது.. அவளை அங்கே விட்டு விட்டுப் போகவும் முடியவில்லை.. குப்பத்து மக்களை மீறி அவளை இழுத்துக் கொண்டு சென்றாலும் அவளே சொல்வதைப் போல எப்போதும் அவளைக் காவல் காத்துக் கொண்டிருக்க முடியாதே.. இப்போது கையை வெட்டிக் கொள்ளத் துணிந்தவள் தயங்காமல் எதையும் செய்வாள்..

சாருலதா பிடிவாதக்காரி.. ஒரு முடிவெடுத்து விட்டால் அதிலிருந்து மாறவே மாட்டாள்..

'இப்படியா இவ முடிவெடுக்கனும்..?'

கண்ணுக்குள் வைத்து வளர்த்த தங்கையின் வாழ்வு கண்முன்னே மாறிக் கொண்டிருப்பதைக் கண்டும் எதுவும் செய்ய முடியாமல் தவித்தான் சதிஷ்..

"இதுக்காம்மா உன்னைப் பெற்று வளர்த்தோம்..?" ஆற்ற முடியாத ஆதங்கத்துடன் கேட்டு விட்டார் சக்ரபாணி..

"இப்படியொரு கொஸ்டின் பண்ற அளவுக்கு நான் எந்தத் தப்பும் பண்ணி விடலை டாடி.. என் மனச்சாட்சிக்கு எது நேர்மையோ அதைத்தான் நான் செய்கிறேன்.."

"நாங்களும் எங்க மனசுக்கு எது சரின்னு பட்டதோ அதைத்தாம்மா செய்ய நினைத்தோம்.. உன் கண்ணுக்கும் இந்த குப்பத்து மக்கள் கண்ணுக்கும் வேண்டுமானால் நானும் சதிஷீம் வில்லன்களாக தெரியலாம்.. பெத்த தகப்பன், கூடப் பிறந்த அண்ணன்ங்கிற பொசிசன்ல இருந்து பார்த்தாத் தெரியும்மா.. எங்களோட சிச்சுவேசன் எவ்வளவு கிரிட்டிகலானதுன்னு.. நாங்க என்ன சதானந்தனுக்கு பணம் கொடுத்து அந்த ராஜேந்திரனைக்

கொல்லச் சொன்னோமா..? சதானந்தன் யாருன்னே எங்களுக்குத் தெரியாதேம்மா.. உன்னை அவன் காப்பாற்றியதற்கு கைம்மாறா அவன் எதைக் கேட்டாலும் கொடுக்கத் தயாராத்தானேம்மா இருந்தோம்..? நீ உன்னையே கொடுக்கிறேங்கறியேம்மா.. இதைத்தான் வேணாம்ன்னு சொல்கிறோம்.."

"இது வேண்டும், இது வேண்டாம்ன்னு டிசைட் பண்ற சிச்சுவேசனை நாம கிராஸ் பண்ணியாச்சு டாட்.. எனக்கு இதுதான் வேண்டும்ன்னு நான் டிசைட் பண்ணியாச்சு.. நம்ம வீட்டை விட்டும் வந்தாச்சு.. டோன்ட் ஆஸ்க் எனி மோர் கொஸ்டின் ப்ளீஸ்.."

"நம்ம ஏரியாவுக்குப் பக்கத்தில இருக்கிற குப்பத்து வீட்டில நீயிருந்தா பார்க்கிறவங்க என்ன சொல்லுவாங்க..?"

"இந்த கொஸ்டினை ஏற்கனெவே நீங்க கேட்டுட்டிங்க.. இதுதான் உங்க பிரச்னைன்னா நானும் என் குழந்தையும் வேற ஏரியாவுக்கு குடி போயிடறோம்ன்னு நானும் பதில் சொல்லிட்டேன்.."

கும்பல் அதிகமானதில் சக்ரபாணியும் சதிஷீம் காரில் ஏறிப் போய் விட்டார்கள்.. மகள் இல்லாமல் அவர்கள் திரும்பி வந்ததில் பதறிப் போன சுமதி தான் போய் மகளை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிக் குப்பத்துக்கு ஓடினாள்.. அங்கே சாருலதா இல்லை.

"எங்கே போச்சுன்னு எங்களுக்குத் தெரியாதும்மா.."

கண்ணம்மா உட்பட அனைவரும் இதே பதிலைச் சொன்னதில் தோற்றுப் போனவளாக வீடு திரும்பினாள் சுமதி.. அவர்கள் சாருலதாவைத் தேட ஆரம்பித்தார்கள்..

"அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டுதான் போனாளாம் டாடி.."

"ஐ நோ.. அந்த சதானந்தனின் வீட்டைக் காலி பண்ணிட்டாளாம்.. வீட்டை வாடகைக்கு விடச் சொல்லிட்டாளம்.."

"இவளா..? இவளுக்கும் அந்த ஓட்டை வீட்டுக்கும் என்ன டாட் சம்பந்தம்..?"

"அந்த வீட்டுக்குச் சொந்தக்காரி இவதானாம்.. குப்பத்து ஜனமே ஒன்னு கூடிச் சொல்லுது.."

"தலையெழுத்து டாட்.. நீலாங்கரையில் இரண்டு பங்களா.. பெசண்ட் நகர் பங்களா.. ஆழ்வார் பேட்டையிலே சாருலதா அபார்ட்மெண்ட்.. சார்ஸ் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனின்னு கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு இவ சொந்தக்காரி.. அத்தனையையும் தூக்கிப் போட்டுட்டு ஒரு குப்பத்து குடிசை வீட்டைச் சொந்தம் கொண்டாடிக்கிட்டு இருக்கிறா.."

"என்னத்தைன்னு சொல்கிறது.."

சாருலதாவிற்குப் புத்தி பிசகி விட்டது என்று அவளுடைய குடும்பத்தினர் சொன்னார்கள்.. அதையே சதானந்தனும் சொன்னான்.. அவனைப் பார்க்கக் குழந்தையுடன் சாருலதா போன போது..

"இது நீங்க வர வேண்டிய இடமாங்க..?" என்று கண்சிவந்தான்..

"நீங்க இங்கே வந்திருக்கிறது யாராலே..?" சாருலதா நிதானமாகக் கேட்டாள்..

"அதுக்காக பைத்தியக்காரத்தனமா முடிவெடுப் பீங்களா..?"

"என் டாடியும், அண்ணாவும் சொல்கிறதைப் போலவே சொல்கிறீங்களே.. அவங்க இங்க வந்துட்டுப் போனாங்களா..?"

சாருலதா மடக்கி விட்டாள்.. சதானந்தன் அவளை ஓர் பார்வை பார்த்தான்.. பதிலுக்கு அவளது பார்வை சந்தித்ததில் வேறு பக்கம் பார்த்தான்.. அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான்..

"என்ன சொன்னாங்க..?"

"அவங்களோட நியாயத்தைச் சொன்னாங்க.."

"எது அவங்க நியாயம்..? நடந்ததை எனக்குச் சொல்லாம எதுவுமே நடக்கலைன்னு என்னை நம்ப வைச்சு டூருக்கு அனுப்பப் பார்த்தாங்களே.. அதுவா நியாயம்..? டூரில இருந்து வந்ததும் மேரேஜ்.. உடனே அமெரிக்காவுக்குப் பறக்கனும்.. கடைசிவரை எனக்காக நீங்க கொலைக்காரனாகி ஜெயிலுக்குப் போனது எனக்குத் தெரியவே கூடாதுன்னு பக்காவா பிளான் பண்ணினாங்களே.. அதுவா நியாயம்..?"

"உங்களுக்கு எது நல்லதோ அதை அவங்க செய்ய நினைத்தாங்க.. அதுதாங்க எனக்கு வேணும்.. நீங்க தேவதைங்க.. குப்பத்து வீட்டுக்கு நீங்க வரலாமா..?

எங்கே இருந்தாலும் நீங்க நல்லா இருக்கனும்ங்க.. எனக்கு அதுதான் வேணும்.. அதுக்காக எதையும் செய்வேன்..?"

"அதைத்தான் கொலை செய்து ஃப்ரூவ் பண்ணிட்டிங்களே.."

"அவன் போக வேண்டியவன்ங்க.."

"நானும் உங்க வீட்டுக்கு வர வேண்டியவள்.."

"வேண்டாம்ங்க இது சரியில்லை.."

"உங்க அண்ணன் குழந்தையை என் அண்ணன் அனாதை விடுதியில் சேர்க்கச் சொன்னாராம்.. அது மட்டும் சரியா..?"

இதைக் கேட்ட சதானந்தன் துடித்துப் போவான்.. கோபத்தில் கொதிப்பான் என்றெல்லாம் சாருலதா எதிர்பார்த்தாள்.. அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை.. அவன் அமைதியாக துறவியைப் போல பார்த்து வைத்தான்..

'கோபக்கார சதானந்தனா இவன்..?'

"அனாதைகள் அனாதை விடுதியில் தானேங்க வளரனும்..?"

அவனது கேள்வியில் சாருலதா அழுது விட்டாள்..

"அழுகாதீங்க.." அவன் ஆறுதல் சொன்னான்..

"எப்படிங்க இப்படிப் பேசறிங்க..? அவன் உங்க அண்ணன் மகன்.."

"இருக்கட்டுமே.. உங்க அண்ணன் ஒன்னும் அவனைத் தெருவில் விட்டு விடச் சொல்லலியே... பொறுப்பா அனாதை விடுதியில் சேர்க்கச் சொல்லிப் பணம் கொடுக்க டிரை பண்ணியிருக்காரே.."

"நீங்க தியாகியாகலாம் சதானந்தன்.. உங்க அண்ணன் மகன் அனாதையாகக் கூடாது.."

சதானந்தன் நெகிழ்ந்து போனவனாக அவளைப் பார்த்தான்.. அவளுக்காக அவன் செய்தது தியாகமல்ல.. சுயநலம்.. அவன் ஆராதிக்கும் தேவதையை ஒரு காமுகன் கசக்கி முகரப் பார்த்தான்.. அசிங்கமான வார்த்தைகளை அவளிடம் பேசினான்.. அந்தக் காமுகனோ பணக்காரப் பொறுக்கி.. எதையும் செய்யத் துணிந்தவன்.. அவன் உயிரோடு இருக்கும் வரை சாருலதாவிற்குப் பாதுகாப்பு இல்லை.. நினைத்ததை அடையாமல் விட மாட்டேன் என்பவன் சாருலதாவிற்குத் திருமணம் ஆனாலும் விட்டு வைப்பானா..? திருமணத்தின் மதிப்பு மரியாதையைப் பற்றி நாய் ஜென்மத்திற்குத் தெரியுமா..?

சதானந்தனுக்கு சாருலதாவின் நலன்தான் பிரதானம்.. அவள் நிம்மதியாக வாழ அவன் எதையும் செய்வான்.. அவளது பாதுகாப்பிற்காக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து விட்டான்..

"நான் தியாகியில்லைங்க.. சுயநலவாதி.."

"தயானந்தனைப் பற்றி நினைச்சுப் பார்த்தீங்களா..?"

"அவனுக்கென்ன..? அனாதை விடுதியில் வளர்ந்துப் படித்து எத்தனையோ பேர் பெரிய மனிதர்களாக ஆகியிருக்கிறார்கள்.. இவனும் அதைப் போல வருவான்.."

"நான் உயிரோடு இருக்கும் வரை உங்களையும், உங்க அண்ணன் மகனையும் அனாதைகளாக இருக்க விட மாட்டேன் சதானந்தன்.."

சாருலதாவின் உணர்ச்சி பொங்கும் வார்த்தைகளில் மனம் பொங்க அவளைப் பார்த்தான் சதானந்தன்.. அவனது இமையோரம் துடித்தது..

"வேண்டாம்ங்க.. நான் பட்ட மரம்.. என் கிட்ட வராதீங்க.. தள்ளிப் போயிருங்க.. நீங்க தழைச்சு வாழ வேண்டியவங்க.. இந்த துரதிஷ்டசாலியோட நிழலைக் கூட நீங்க நெருங்கக் கூடாது.."

"அப்படி நெருங்க முடியலைன்னா நான் உயிரோடு இருக்க மாட்டேன்.."

"சாருலதா.."

முதன் முறையாக அப்போதுதான் அவள் பெயரை உச்சரித்தான் சதானந்தன்.. அதை உணர்ந்தவளின் இதயம் படபடத்தது..

"நீங்க பிரசன்னாவைக் காதலிக்கறீங்க சாருலதா.."

"பிரசன்னாவைக் காதலித்தேன்.. அது பாஸ்ட்.. இப்ப இல்லை.."

"அவர் உங்க ரிலேட்டிவ்.."

"இப்ப நீங்களும் தயானந்தனும் மட்டும்தான் என்னோட உறவு, உலகம், வாழ்க்கை.. எல்லாமுமே.."

"அவருக்கும் உங்களுக்கும் மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு.."

"மேரேஜ் இன்னும் ஆகலை.. அது உங்களோடு தான் நடக்கும்.."

"வேண்டாம் சாருலதா.. நீங்க கோடிஸ்வரி... நான் குப்பத்துவாசி.. சாதாரண மெக்கானிக் ஷாப் வைத்திருக்கும் தொழிலாளி.. உங்க லெவலை விட்டு இறங்காதீங்க.. விண்ணைத்தாண்டி நிலவு இறங்கி மண்ணுக்கு வரக்கூடாது.. அது இருக்க வேண்டிய இடம் வானம் தான்.."

"நீங்கதான் என்னோட வானம் சதானந்தன்.."

சாருலதா பிடிவாதமாக இருந்தாள்.. சதானந்தன் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டான்.. போராடி விட்டான்.. அவள் மீது ஆணையென்று அவள் சொல்லி விட்ட பின்பு அவனால் எதையும் பேச முடியாமல் போய் விட்டது.. அவள் உயிரோடு இருக்க மாட்டேன் என்று பயமுறுத்துவதை எளிதாக எடுத்துக் கொள்ள அவனால் முடியவில்லை..

அதை சக்ரபாணியும் சதிஷீம் ஏற்றுக் கொள்ள வில்லை.. அவன் நன்றாக இருக்க மாட்டான் என்றார்கள்.. சாருலதாவின் வாழ்வைப் பாழடிக்கப் பிறந்தவன் என்றார்கள்.. அவனுக்கும் சாருலதாவிற்கும் ராக்கெட் விட்டால்கூட எட்டுமா என்றார்கள்.. அவன் திட்டம் போட்டு சாருலதாவின் மனதைக் கலைத்து அவன் பக்கமாக இழுத்துக் கொண்டான் என்றார்கள்..

சாருலதா எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.. குழந்தையுடன் 'ஹ 2 ஷ்' அபார்ட்மெண்டில் சிங்கிள் பெட்ரூம் பிளாட்டில் குடியேறினாள்.. பத்மநாபனிடமே வேலை கேட்டுப் பெற்றுக் கொண்டு வேலைக்கு போக ஆரம்பித்தாள்.. தயானந்தனுக்கு அழகம்மை குழந்தைகள் காப்பகம் பாதுகாப்பு கொடுத்தது.. சதானந்தனின் கேஸ் கோர்ட்டுக்கு வர இருந்த போது பிரசன்னா அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்து விட்டான்..

## 19

ரோஜாவுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்த நீபாதான் அவனை முதலில் பார்த்தாள்.. பார்த்தவுடன் அவளை ஈர்த்தது அவனுடைய அலட்சியம் கலந்த ஸ்டைலான தோற்றம்..

"வாவ்.." என்றாள்..

"என்னடி 'வாவ்'ன்னு வாயைப் பிளக்கிற..?" ரோஜா கேட்டாள்..

"சூப்பர் ஹீரோ ஒருத்தன் ஆபிஸீக்குள்ள எண்டராகிக்கிட்டு இருக்காண்டி.. என்ன ஒரு ஸ்டைல்.. என்ன ஒரு மேனரிசம்.." சொக்கிப் போனாள் நீபா..

"ஸ்டைலு.. ஸ்டைலுதான்.. இது

சூப்பர் ஸ்டைலுதான்.."

என்று பாட வேறு செய்தாள்..

அவளது கிறக்கப் பார்வையில் ஆர்வமான ரோஜா திரும்பிப் பார்த்து விட்டு அவசரமாக சீட்டை விட்டு எழுந்து நின்றாள்.. புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்த நீபாவுக்கு எதுவும் புரியவில்லை..

"எதுக்குடி இப்ப ஸ்டேண்ட்-அப்புக்கு மாறின..?" என்றாள்..

"அறிவு கெட்டவளே..! வந்துக்கிட்டு இருக்கிறது நம்ம ஜீனியர் எம்.டி..!" பல்லைக் கடித்தாள் ரோஜா..

"என்னது.. ஜீனியர் என்.டி ஆரா..?"

"சினிமா பைத்தியமே..! இவர் ஜீனியர் எம்.டி.. ஜீனியர் என்.டி.ஆர் தெழுங்கு தேசத்தில இருக்கார்.. சிங்காரச் சென்னையில இல்லை.. புரியுதா.."

"ஜினியர் எம்.டின்னா..?"

"நம்ம எம்.டியோட ஒன்லி ஒன் சன்.. மிஸ்டர் பிரசன்னா.."

"ஆள் டக்கரா இருக்காரேடி.."

ஏக்கத்துடன் சொன்னாள் நீபா.. அப்போதுதான் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வேலைக்கு வந்திருந்தவள்.. நிதரிசனம் புரியாத இளமைப் பருவம்..

"மனசை அலைய விடாதே.. இவரை வெறுமன சைட் அடிக்கக்கூட முடியாது.."

"ஸ்டைலா இருக்காரே.."

"அமெரிக்காவில பிஸினெஸ் பண்ணி அங்கேயே குடியிருக்கிறவர் வேறு எப்படி இருப்பார்..? நீ புதுசா ஜாயின்

பண்ணியிருக்க.. ஒன்றும் தெரியாது.. போகப் போக தெரிஞ்சுக்குவ.. இப்ப சீட்டை விட்டு எழுந்து நில்லு.."

"அவருக்கு ஷேக்-ஹாண்ட் கொடுக்கவா..?"

ஆசையுடன் கேட்டாள் நீபா.. அதற்குள் அவர்களை பிரசன்னா சமீபித்து விட..

"உன் ஆசையைக் கெடுப்பானேன்..? கொடுத்துப் பாரு.." என்று அவளிடம் முணுமுணுத்து விட்டு..

"வெல்கம் அண்ட் குட்மார்னிங் சார்.." என்று பிரசன்னாவுக்கு வணக்கம் வைத்தாள் ரோஜா..

நீபா மயங்கும் விழிகளோடு அவனுக்கு கைநீட்ட புருவங்களைச் சுருக்கி அவளை ஆட்சேபப் பார்வை பார்த்த பிரசன்னா நடையை நிறுத்தாமல் அவளைக் கடந்து விட்டான்..

நீபாவுக்கு அவமானமாகி விட்டது.. அலுவலகத்தில் இருக்கும் அனைவரும் அவளைக் கேலியாக பார்ப்பதைப் போல உணர்ந்தாள்.. கண்களில் திரண்டு விட்ட நீரை அடக்கப் படாத பாடு பட்டாள்..

"சொன்னேனில்ல.. யாரிடம் ஜொள்ளு விடனும், யாரிடம் தள்ளி நிற்கனும்னு தெரிந்து வைத்திருக்கனும்.. நம்ம எம்.டியாவது கொஞ்சம் தயவு தாட்சண்யம் பார்ப்பார்.. ஜூனியர் எம்.டி டைரக்டாய் சீட்டைக் கிழித்து விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பார்.. நெருப்பு அழகாக இருக்கிறதுன்னு தொட்டுப் பார்க்க ஆசைப்படக் கூடாது.."

ரோஜா உபதேசித்துக் கொண்டிருந்த போதுதான் அது நடந்தது.. வேக நடையுடன் சாருலதாவின் சீட்டருகே சென்ற பிரசன்னா..

"ஹலோ.. ஹௌ டு யு டு...?" என்று கை நீட்டினான்..

நீபாவுக்கு தாளவில்லை.. அவள் அந்தக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதங்களாகின்றன.. சாருலதா ஒரு மாதத்திற்கு முன்புதான் வேலைக்குச் சேர்ந்தாள்.. நீபாவுடன் கை குலுக்குவதை குறைவாக நினைப்பவன்

சாருலதாவிடம் வலியச் சென்று கை குலுக்கக் கை நீட்டுகிறான்..

'இவளுக்கு மட்டும் ஜாக்பாட் அடிக்குதே..'

நீபா பொறாமையுடன் பார்த்தாள்.. சாருலதா அவளுக்கு அடித்த ஜாக்பாட்டை கணப் பொழுதில் புறக்கணித்து கை குவித்தாள்.. நீபாவின் மனதில் ஓர்விதமான திருப்தி உண்டானது..

'வேண்டும் இவனுக்கு.. இவனையும் மட்டம் தட்ட இந்த ஆபிசில் ஓர் ஆள் இருக்குதே..'

அன்றுவரை சாருலதாவிடம் நெருங்கிப் பழகியிராத நீபாவுக்கு சாருலதாவின் மீது திடிர் பாசம் பொங்கியது..

"ஷி இஸ் ஸோ ஸ்வீட்.." என்றாள்..

"யாரைச் சொல்கிற..?" ரோஜா புருவங்களை உயர்த்தினாள்..

"நம்ம சாருவைத்தான் சொல்றேன் ரோஜா டியர்.."

"யு மீன் சாருலதா..?"

"யெஸ்.. மை டியர்.."

"என்னடா இது.. உலக அதிசயமா இருக்கு.. உனக்குத்தான் அவளைக் கண்டாலே ஆகாதே.. தலைக்கணம் பிடித்தவள்ன்னு சொல்லுவியே.."

"பின்னே.. இவ மட்டும் பெரிய இவளைப் போல கெத்தா மூஞ்சியை வைத்துக்கிட்டு யார் கிட்டேயும் பேசாம வேலை பார்த்தா என்னன்னு சொல்றதாம்..?"

"நீபா.. அதுக்குப் பேரு கெத்து இல்லேம்மா.. அமைதி.. உன்னைப் போல லொட, லொடன்னு ஓட்டைக் கிண்ணத்துக்குள்ள நண்டை விட்டாப்புல பேசாம அவங்க அமைதியா வொர்க் பண்றது காதுக்கு எவ்வளவு இதமா இருக்கு தெரியுமா..?"

நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள் என்று ரோஜாவின் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாமல் சற்று நேரம் வாயடித்து விட்டு நகர மனமில்லாமல் நகர்ந்த நீபா தன் சீட்டுக்குப் போகிற போக்கில்..

"ஹலோ.. யு லுக் ஸோ குட் டுடே..." என்று சாருலதாவிடம் சிரித்தாள்..

அதற்கு போனால் போகிறதென்று சிறு தலையசைவை மட்டும் சாருலதா பரிசாக தந்ததில் ரூபா நீபாவை அருகில் அழைத்து..

"அவதான் ஹைட்வெயிட் பிடிச்சவன்னு தெரியுமில்ல.. அப்புறமும் ஏன் அவளைப் போய் 'ஸோ குட்..'ங்கிற.." என்று முகம் சுளித்தாள்..

"விடுப்பா.. அவங்க கொஞ்சம் மூடி டைப்.. மற்றபடி ஸோ குட்தான்.. ஹௌ ஸ்வீட் ஷி இஸ்..! வாவ்.." என்று ரூபாவுக்கு எரிச்சலைக் கிளப்பி விட்டுப் போய் விட்டாள் நீபா..

'இவ ஒருத்திதான் இந்த சாருமேல காண்டா இருந்தா.. இவளையும் இந்த சாரு கவிழ்த்துட்டாளா..?'

இனி யாரிடம் சாருலதாவைப் பற்றிய பொறாமையைக் கொட்டிக் கவிழ்ப்பது என்ற பலத்த யோசனையில் ஆழ்ந்தாள் ரூபா.. இண்டர்காம் அலறியது.. உடனே வேலையா என்ற பொறுமலுடன் எடுத்து..

"சார்..?" என்றாள்..

"சாருலதாவை என் கேபினுக்கு வரச் சொல்லுங்க.." என்றான் பிரசன்னா..

'இப்பத்தான் ஆபிஸீக்குள் எண்ட்ரி கொடுத்திருக்கான்.. அதுக்குள்ள சாருலதாவை வரச் சொல்லனுமாம்.. ஏற்கனெவே இவனோட அப்பா குடை பிடிக்கிறதில அவ ஆபிசில யாரையும் மதிக்கிறதில்லை.. இப்ப பிள்ளை வந்து சாமரம் வீச அழைக்கிறான்..

இனிக் கொஞ்ச நஞ்ச தலையாட்டலையும் அவ நிறுத்திருவா.. இவங்கள்ளாம் சொந்த பந்தத்தை வீட்டோடு வைத்துக்கிட்டாத்தான் என்ன..? ஆபிஸ்வரை அதைக் கொண்டு வந்து சீராட்டனுமா..?' பல்லைக் கடித்தபடி பியூனை அழைத்தாள்..

"என்னம்மா..?" நின்ற இடத்திலிருந்தே கேள்வி கேட்டான் மாணிக்கம்..

"என்னன்னு நான் காட்டுக்கத்தலா கத்தட்டுமா..? எம்.டி காதில என் கத்தல் விழுந்து உன் சீட்டுக் கிழிஞ்சாப் பரவாயில்லையா..?" பல்லிடுக்கில் வார்த்தைகளைக் கடித்துக் கோபத்துடன் துப்பினாள் ரூபா..

"என் சீட்டைக் கிழிக்கிறதிலேயே குறியாய் இருங்க.." சலித்தபடி வந்து சேர்ந்தான் மாணிக்கம்..

"எனக்கும் உனக்கும் காம்பவுண்டு தகராறு பாரு.. காலையிலேயே எரிச்சலைக் கிளப்பாம சொன்னதை செய்.."

"இன்னும் நீங்க சொல்லவே இல்லையே.."

"சாருலதாவை ஜீனியர் எம்.டி வரச் சொல்கிறார்.."

"நம்ம சாரும்மாவை எம்.டி சார் வரச் சொன்னாரா..? நான்கூட உங்களுக்கு காபி கொண்டு வரச் சொல்றீங்களோன்னு நினைச்சேன்.."

விழுந்தடித்துக் கொண்டு ஓடினான் மாணிக்கம்..

'ஆபிஸே அவளுக்கு சலாம் போடுது..' ஆத்திரத்துடன் கம்யூட்டரின் திரையைக் கவனிக்க ஆரம்பித்தாள் ரூபா..

"மே ஐ கமின்.." சாருலதாவின் குரலில் நிமிர்ந்த பிரசன்னா..

"என் கேபினுக்குள்ள வர நீ பெர்மிசன் கேட்கனுமா சாரு..?" என்று குற்றம் சாட்டினான்..

"எம்.டியின் கேபினுக்குள்ள வர நிச்சயமா பெர்மிசன் கேட்கனும் சார்.." முகம் மாறாமல் சொன்னாள் சாருலதா..

பிரசன்னாவின் கலங்கிச் சிவந்திருந்த விழிகள் அவளை உறுத்துப் பார்த்தன.. அவனது பார்வையின் தீட்சண்யத்தைப் பொருட்படுத்தாமல் அசையா மரமாய் நின்றாள் சாருலதா..

"உட்கார் சாரு.."

"நோ தேங்க்ஸ்.. ஐ ஹேவ் சம் அர்ஜெண்ட் வொர்க்.. எதுக்காக கால் பண்ணினீங்கன்னு சொன்னால் தேவலை.."

"ஸ்ஸ்ஸ்.. போதும் சாரு.. என் பொறுமையை சோதிக்காதே.. வாட்'ஸ் ராங் வித் யு..? வீட்டை விட்டு வெளியில வந்து எவனோ ஒரு குப்பத்துக்காரனோட அண்ணன் குழந்தையை வளர்த்துக்கிட்டு.. முடியல.."

"முடியலைன்னா விட்டிருங்க சார்.. சதானந்தன் எவனோ ஒரு குப்பத்துக்காரனில்லை.. எனக்கு எல்லாமே அவன்தான்.."

"அவன் பெயரைச் சொல்லாதே.."

"ஐ ஆம் ஸாரி.. அவன் பெயரை மட்டும்தான் சொல்லுவேன்.."

"எனக்கென்ன பதிலைச் சொல்லப் போகிற..?"

"என்ன பதிலைச் சொல்லனும்..?"

"உனக்கும் எனக்கும் இடையே இருந்த காதலுக்கு என்ன பதில்..? உனக்கும் எனக்கும் நடக்கவிருந்த மேரேஜீக்கு என்ன பதில்..?"

"அது முடிந்து போன கதை.."

"எதுவும் முடியலை சாரு.. முடிய விடவும் மாட்டேன்.. இப்ப என்ன ஆகி விட்டது..? தூக்கிப் போட்டு விட்டு வா சாரு.."

"யாரை..?"

"அந்த சதானந்தனை.. அவனோட அண்ணன் குழந்தையை.. நாம் நம் லைஃபை பார்ப்போம்.."

"இப்படி அவன் அன்றைக்கு நினைத்திருந்தா இன்றைக்கு நான் உங்க முன்னாலே உயிரோடு நின்றிருக்க மாட்டேன்.."

"அதுக்காக காலமெல்லாம் அவன் காலடியில் கிடக்கப் போகிறாயா..?"

"ஆமாம்.."

உறுதியாகச் சொல்லி விட்டு வெளியேறி விட்டாள் சாரு.. அன்று முழுவதும் பிரசன்னா அடிக்கடி அவளை அழைத்துப் பேசினான்.. எதற்கும் அவள் பிடி கொடுக்க வல்லை.. மாலையில் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியவளை அவன் பின் தொடர்ந்தான்.. அழகம்மை குழந்தைகள் காப்பகத்தின் வாசலில் அவனது கார் நின்றதில் வாட்ச்மேன் வைரவேல் சந்தேகத்துடன் அவனை விசாரிக்க ஆரம்பித்தான்..

## 20

"ஆரு சாரு நீ..? உனக்கு இன்னா வேணும்..? எதுக்கோசரம் இங்க காரை நிப்பாட்டிக் குந்திக்கினு கீற..? உன் வூட்டுப் புள்ள ஏதும் இங்க இருக்கா..? உன்ன

நான் இதுக்கு முன்னால பாத்ததில்லயே.. கிரஷில விடற புள்ளகளோட அப்பாம்மா வந்தாத்தான் புள்ளயக் குடுப்போம்.. நீ கிளம்பு.. கிளம்பு.."

வாட்ச்மேன் விரட்ட ஆரம்பிக்க சாருலதா தயானந்தனுடன வெளியே வந்தாள்.. பிரசன்னாவைப் பார்த்ததும் அவள் முகம் மாறியதில் வைரவேல்..

"இந்தப் பெரிய மன்சன் இம்மா நேரமா காருக்குள்ள குந்திக்கினு ஆரையோ எதிர்பார்க்கிறதைப் போல நோட்டம் விட்டுக்குனு இருந்தாரும்மா.. அதான்.. விசாரிச்சேன்..

சாரு ஆரு..? உங்களுக்கு வேண்டப்பட்டவரா..?" என்று கேட்டான்..

"இல்லை.." பட்டெனப் பதில் சொல்லி விட்டு சாருலதா நடந்து விட்டாள்..

பிரசன்னாவின் முகம் கருத்து விட்டது.. அவன் சாருலதா நடந்த திசையில் காரை ஓட்டிக் கொண்டு போக வைரவேல்..

"இது சரியில்லயே.." என்றான்..

"இன்னா வைரம்.. தனக்குத்தான பேசிக்கிட்டு இருக்கிற..?" அழகம்மை கேட்டாள்..

"நம்ம சாரும்மாவத் தொடுத்துக்கினு ஒரு பெரிய மன்சன் காரப் போட்டுக்கிட்டு வந்து குந்திக்கினு இருந்தான்ம்மா.."

"அப்படியா சொல்ற..? பாவம் அந்தப் பொண்ணு.. குழந்தையோட தனியா இருக்கு.. மறுக்கா அந்த ஆளு இந்தப் பக்கம் வந்தா எழும்ப எண்ணிரு வைரம்.. விட்டு வைக்காத.."

"ஆகட்டும்மா.."

வைரவேல் கருவிக் கொண்டிருக்க பிரசன்னா சாருலதாவைத் தொடர்ந்து சென்று காரை நிறுத்தி விட்டு அவள் நுழைந்த அபார்ட்மெண்ட் வளாகத்திற்குள் நுழைந்தான்.. சாருலதா திரும்பிப் பார்த்தாள்.. அவளது பார்வையின் வேறுபாட்டில் திகைத்துப் போன பிரசன்னா..

"சாரு..?" என்றான்..

"என் பின்னால் ஃபாலோ பண்ணாதீங்க.. எனக்கு இது பிடிக்கலை.."

"எது பேசறதா இருந்தாலும் உள்ளே போய் பேசலாம்.." பிரசன்னா சொன்னான்..

"ஸாரி.. இது நான் குடியிருக்கும் வீடு.. குழந்தையும் நானுமா குடியிருக்கிற வீட்டில தேர்ட் பெர்சனை.. அதுவும் ஒரு ஆணை.. அனுமதிக்க முடியாது.." கறாராக மறுத்தாள் சாருலதா..

பிரசன்னாவின் தன்மானம் அடி வாங்கியது.. சீற்றத்துடன் அபார்ட்மெண்டை விட்டு வெளியேறி காருக்கு வந்தவனை அங்கே நின்றிருந்த வைரவேல் முறைத்தான்..

"யோவ்.. ஒரு பொம்பளை, புருசன் வெளிநாட்டில வேல பார்க்கிறதினால குழந்தையோட தனியா இருந்தா வாலாட்டலாம்ன்னு கிளம்பி வந்துருவீங்களா..? பிய்ச்சுப் புடுவேன் பிய்ச்சு.."

"புருசன் வெளிநாட்டில் வேலை பார்க்கிறானா..? இவ குழந்தையோட தனியா இங்க குடியிருக்கிறாளா..? அவ கதை சொன்னா நீங்க அத்தனை பேரும் நம்பிருவீங்களா..? அவளுக்கு இன்னும் மேரேஜே ஆகலை.. கல்யாணமே ஆகாதவளுக்கு குழந்தை எங்கேயிருந்து வந்ததாம்..?"

சாருலதா விரட்டிய விரட்டலில் கோபமடைந்திருந்த பிரசன்னா வைரவேலும் மிரட்டியதில் எரிச்சலடைந்து விட்டான்.. அவன் பேசிய பேச்சில் வைரவேல் வெகுண்டு.

"இங்கே பாரு.. அந்தப் பொண்ணு இங்க குடி வந்து ஒரு மாசமாகுது.. இந்த முப்பது நாளில அதும் மேல பொட்டுச் சந்தேகம் வந்ததில்ல.. குனிஞ்ச தல நிமிராம, அதிந்து பேசாத பொண்ணு அது.. அத்தத் தப்பாப் பேசுன, உன் வாய் வெத்தல பாக்கு போட்டுக்கும்.. ஆமா.. சொல்லிப்புட்டேன் பாத்துக்க.." என்று எச்சரித்தான்.

"அவளை ஏன் நான் தப்பாப் பேசப் போறேன்..? அவளுக்கு இன்னும் மேரேஜ் ஆகலை.. அவ கையில் இருக்கிற குழந்தை ஒரு கொலைகாரனோட அண்ணன் குழந்தை.. இதைத்தான் நான் சொன்னேன்.. இது தப்பா..? அவ யாரு தெரியுமா..? இங்கே இருக்கிற மொத்த பிளாட்டையும் ஒட்டு மொத்தமா வாங்கற கெபாசிட்டி இருக்கிற கோடீஸ்வரி.. எவனோ ஒரு தேர்டு ரேட் பொறுக்கிக்காக இங்கே சிங்கிள் பெட்ரூம் பிளாட்டில குடியிருக்கிறா.."

"இன்னாய்யா சொல்ற..?"

"நான் யாருன்னு கேட்டியே.. இப்போப் சொல்கிறேன்.. கேட்டுக்க.. நான் அவளோட லவ்வர்.. அவளை மேரேஜ்

பண்ணிக்க டேட் பிக்ஸ் பண்ணியிருந்தவன்.. அவளோட ரிலேட்டிவ்.."

பிரசன்னா காரில் ஏறிப் பறந்து விட்டான்.. அவன் கொட்டிக் கவிழ்த்த கதையை வைரவேல் அழகம்மை குழந்தைகள் காப்பகத்தில் சொல்ல ராக்கம்மா..

"இன்னாய்யா இது.. கோராமையா கீது.. அந்தப் பொண்ணைப் பாத்தா சாதுவா இருக்கு.. இவன் இப்படிச் சொல்லிப்புட்டு போறான்.. என்னவா இருக்கும்..?" என்று முகவாயில் கை வைத்தாள்..

பலத்த சிந்தனையில் ஆழ்ந்த அழகம்மை தலையை ஆட்டி விட்டு "அந்தப் பொண்ணுகிட்டேயே கேட்டு விடலாம் வைரம்.." என்றாள்..

மறுநாள் காலையில் வேலைக்குப் போகும் அவசரத்திலிருந்த சாருலதாவிடம் அவர்கள் எதையும் கேட்கவில்லை.. மாலையில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போக வந்த சாருலதாவிடம் பிரசன்னா சொன்னதைச் சொல்லி விவரம் கேட்டாள்..

"சந்தேகப்பட்டு விவரம் கேட்கலை.. என்னன்னு தெரிந்துக்கலாம்ன்னுதான் கேட்கிறோம்.."

"எனக்கு மேரேஜ் ஆகிருச்சுன்னோ, இவன் நான் பெற்ற குழந்தைன்னோ, என் ஹஸ்பெண்ட் அஃப்ராடில் வேலை பார்க்கிறார்னனோ நான் சொல்லவே இல்லைங்க.. நீங்களாச் சொன்னீங்க.. அதுக்கு மறுப்புச் சொல்லலை.. அவ்வளவுதான்.. தயா நான் பெற்ற குழந்தையில்லைதான்.. பிரசன்னா சொல்வது உண்மைதான்.. பட்.. சதானந்தன் பொறுக்கியில்ல.. நல்லவர்.. அவர் கொலைகாரனனானது என்னாலதான்.."

சாருலதா தனது அமைதியை உடைத்து உணர்ச்சிப் பிழம்பானாள்.. இவள் இந்த அளவுக்குப் பேசுவாளா என்று அழகம்மையும் மற்றவர்களும் ஆச்சரியப் பட்டுப் போனார்கள்.. ஒரிரு வார்த்தைகளுக்கு மேல் அவள் பேசியதே இல்லையே..

சாருலதா அனைத்தையும் ஒப்பித்து விட்டு ஓய்ந்து போனவளாக அமர்ந்திருந்தாள்.. வைரவேல் ஆக் ரோசத்துடன்..

"சதானந்தன்னா யாரைச் சொல்றீங்க..? சிவானந்தனோட தம்பியா..?" என்று கேட்டான்..

"ஆமாம்.. அவர்தான்.."

"சிவா என்னோட நண்பன்ம்மா.. அவன் தம்பி சதா கொலைகாரனா ஜெயில்ல இருக்கானா..? சிவா செத்த பின்னால நான் அவனோட வொர்க்ஷாப் பக்கம் போறத நிப்பாட்டிப்புட்டேன்.. அவனையா அந்தப் பெர்ய மன்சன் பொறுக்கின்னு சொன்னான்..?"

சாருலதா பெருமூச்சுடன் குழந்தையை தூக்கிக் கொண்டு போய் விட்டாள்.. வேதாவும், ராகினியும் தத்தம் வீடுகளில் சாருலதாவை வியந்து பேச விடிவதற்குள் அபார்ட்மெண்டின் மொத்தப் பிளாட்டுகளிலும் சாருலதாவின் கதை பரவி விட்டது..

"இஸ் ஷி எ ரிச் வுமன்..?"

"யா.. சார்ஸ் கண்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி, அபார்ட் மெண்ட்ஸ், பங்களான்னு எக்கச்சக்கப் புராப்பர்ட்டியாம்.."

"அத்தனையையும் விட்டு விட்டு சிங்கிள் பெட்ரூம் பிளாட்டில் இருக்கிறதுன்னா.. ம்ப்ச்.. ஷி இஸ் ஸோ கிரேட்.."

பிரசன்னா ஒன்றை நினைத்து உண்மையைச் சொல்ல அது வேறொன்றாய் முடிந்து அவனை மருட்டியது.. அவனை அபார்ட்மெண்ட் பக்கம் வரவிடாமல் எதிர்படுபவர்கள் எல்லாம் அவனை முறைத்ததில் அவன் அபார்ட்மெண்ட் பக்கம் வருவதை நிறுத்தி விட்டான்.. அலுவலகத்தில் சாருலதாவுடன் பேச முனைந்தால் அவள் பேச மறுத்தாள்.. என்ன செய்யலாம் என்று அவன் பல்லைக் கடித்துக் கொண்டிருந்த போது சதானந்தனின் கேஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்து விட்டது..

"சாருலதா கோர்ட்டில் நடந்ததைச் சொல்லிட்டா பிரசன்னா..." பத்மநாபன் இறுக்கமான முகத்துடன் சொன்னார்..

"ஸோ.. வாட் டாட்..? அவன் வெளியே வந்து தொலைச்சிட்டா சாருலதாவோட மனசில கில்ட்டி கான்ஷியஸ் போயிடுமில்ல.. நாம அவன் முஞ்சியில பணத்தை விட்டெறிஞ்சுட்டு சாருலதாவைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து விடலாமே.."

"அது அத்தனை ஈஸியில்லை பிரசன்னா.."

"வொய்..?"

மகனின் கேள்விக்குப் பெற்றவர்கள் பதில் சொல்ல வில்லை.. சதானந்தன் விடுதலையாகி விட்டான்.. வெளியே வந்தவன் தயானந்தனைத் தூக்கிக் கொண்டு குப்பத்து வீட்டுக்கு போக முனைய சாருலதா தடுத்து நிறுத்தி..

"எனக்கு என்ன வழின்னு சொல்லிட்டுப் போகச் சொல்லுங்க மேம்.." என்று அழகம்மையை பஞ்சாயத்துக்கு அழைத்தாள்..

"அதானே.. இன்னாபா.. சதா.. இம்மாங்காலமா உன் அண்ணன் புள்ளய வளத்துக்கினு இருந்த புள்ளய அம்போன்னு வுட்டுட்டுப் போகப் பாக்கறியே.. இது நாயமில்லேபா.." வைரவேல் அழைக்காமலே பஞ்சாயத்துப் பண்ண வந்தான்..

"அவங்களை நான் காப்பாத்தினேன்.. பதிலுக்கு என்னை அவங்க காப்பாத்திட்டாங்க.. உதவிக்கு உதவி சரியாப் போச்சுங்க.. இனி அவங்க வழியை அவங்க பார்த்துக்கட்டும்.. என் வழியில நான் போறேன்.."

"அவர் வழிதான் என்வழி.."

"அவங்க கோடிஸ்வரி.. நான் குப்பத்துக்காரன்.."

"இப்ப நான் கோடிஸ்வரியில்லை.. சாருலதா மட்டும்தான்.. சதானந்தனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற சாருலதா.."

"கல்யாணமா..?"

நம்ப முடியாத பிரமிப்புடன் நிமிர்ந்து சாருலதாவைப் பார்த்தான் சதானந்தன்.. உறுதியாக தலையை அசைத்து மறுத்தான்..

"அவங்க தேவதைப் பொண்ணு அண்ணாத்த.. இருக்க வேண்டிய இடத்திலதான் அவங்க இருக்கனும்.. வானத்தில இருந்தாத்தான் நிலாவுக்கு அழகு.."

"அதை நிலா முடிவு பண்ணனும்.."

"இதெல்லாம் பேச நல்லா இருக்கும்ங்க.. நடப்புக்கு உதவாது.."

"அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்கலைன்னா நான் கடலில் இறங்கி மூழ்கிருவேன் மேம்.. சொல்லி விடுங்க.."

"என்னது..?"

"நான் சொன்னால் சொன்னதைச் செய்வேன்னு அவருக்கு நல்லாத் தெரியும்.. ஒன்று அவர் என்னை ஏத்துக்கனும்.. இல்லைன்னா கடலைத் தேடி நான் போகிறேன்.."

விதிர்த்துப் போன சதானந்தனுக்கு வேறு வழியிருக்க வில்லை.. அவனுக்கும் சாருலதாவிற்கும் திருமணம் நடக்கப் போகும் செய்தியை அறிந்து சதிஷீம், பிரசன்னாவும் தடுக்க வருவதற்குள் திருமணம் நடந்து முடிந்திருந்தது..

சாருலதா ஒட்டாத பார்வையுடன் தமையனையும் பிரசன்னாவையும் பார்த்துவிட்டு சதானந்தனின் பின்னால் போய் விட்டாள்.. அவளும் தயானந்தனும் மட்டும்

இருந்த அந்த சிங்கிள் பெட்ரூம் பிளாட்டில் அவளுக்கும் சதானந்தனுக்குமான வாழ்க்கை ஆரம்பமானது..

தயானந்தன் தூங்கியிருந்தான்... அறைக்குள் மெல்லிய கொழுசொலி கேட்டது... சதானந்தன் மூச்சையடக்கித் தூங்குவதைப் போல அசைவற்றுப் படுத்திருந்தான்.. குப்பென்ற மல்லிகைப் பூவின் வாசனை அவனைத் தாக்கியது.. நாசியில் நுழைந்த நறுமணத்தில் கிறங்கிப் போனான்.. கொழுசொலியும், மல்லிகைப்பூவின் வாசனையும் அவனை சமீபித்தன.. புலன்களை அடக்கிக் கட்டை போலக் கிடக்க வெகுவாக பிரயத்தனப் பட்டான் அவன்.. சாருலதா குனிந்திருப்பாள் போல.. அவளது முந்தானை அவன் முகத்தின்மீது விழுந்து மூடியது.. அவன் வானத்தில் பறந்தான்.. இது போல ஒரு நாள் வரும் என்று அவன் நினைத்தாவது பார்த்திருப்பானா..? அவள் வேண்டும் என்று ஏங்கினான்தான்.. அவள் கிடைத்து விடுவாள் என்று நம்பியதில்லை..

விண்மீது வாழும் நிலவு.. மண்மீது துடிப்பவனுக்காக விண்ணைத் தாண்டி வந்து விடுமா..?

அவையவை இருக்க வேண்டிய இடத்தில்தான் இருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவன் சதானந்தன்.. அவன் விண்ணிலிருக்கும் நிலவை நேசிக்கலாம்.. அதற்காக நிலவு விண் தாண்டி அவனிடம் வந்து விட வேண்டுமென்று நினைப்பது சுயநலம் மிக்க பேராசையல்லவா..? அவனுடைய ஆசைக்காக விண்ணிலிருக்கும் நிலவை விண்ணைத் தாண்டி வரச் செய்வதா..?

அது கூடாது என்பதில் அவன் மிக, மிக உறுதியாக இருந்தான்.. அவனது நேசம் ஒரு போதும் சாருலதாவை வருத்தி விடலாகாது என்று ஒதுங்கியிருந்தான்..

இன்று அவனது ஒதுக்கத்தை உடைத்து சாருலதா அவனருகில் வந்திருக்கிறாள்.. மண்மீது துடிப்பவனுக்காக நிலவு விண்ணைத் தாண்டி வந்து விட்டது..

இது கனவாக இருக்குமோ என்றுதான் அவனுக்குத் தோன்றியது.. நனவில் இது நடந்து கொண்டிருக்கிறது என்று அவனால் நம்ப முடியவில்லை.. பசித்தவனின் முன்னால் பாலும் சோறும் வைத்தாலே அவன்

பேரானந்தப்பட்டுப் போவான்... இங்கே தங்கக் கிண்ணத்தில் தேவாமிர்தம் அல்லவா வைக்கப் படுகிறது..

சாருலதாவின் கூந்தலில் சூடப் பட்டிருந்த நீண்ட மல்லிகைச் சரம் அவனது நெற்றியின் மீது படிந்து வீழ்ந்தது.. அவளது தேகத்தின் ஸ்பரிசத்தை அவன் உணர்ந்தான்.. ஏறக்குறைய அவன்மீது அவள் குறுக்கு வாக்கில் படுத்து விட்டாள்..

எதற்காக இப்படி அமுக்குகிறாள் என்று புரியாவிட்டாலும்.. இனிய அனுபவத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தான் சதானந்தன்.. அவளது முந்தானையும், மல்லிகைப்பூவும் போட்டி போட்டுக் கொண்டு சுகந்த நறுமணத்தில் அவனை ஆழ்த்திக் கிறங்கடித்தன.. அவனது தேகத்தின் மீது அவள் படிந்திருந்ததில் அவன் உணர்ந்த ஸ்பரிசம் அவனை ஏதோ ஒரு மாயலோகத்திற்கு இட்டுச் சென்றது..

இன்ப லாகிரியில் ஆழ்ந்திருந்தவனிடமிருந்து அவள் விலகினாள்.. ஏமாற்றத்துடன் அவன் இமைகளை லேசாக விலக்கி அரைப் பார்வையாய் பார்த்தான்.. சாருலதாவின் கைகளில் தயானந்தன் இருந்தான்..

'என்ன செய்யறா..?'

குழப்பத்துடன் அவன் பார்த்துக் கொண்டிருந்த போதே அறையின் அந்தப் பக்கமாக இருந்த மரத் தொட்டிலில் அவனைப் படுக்க வைத்துப் போர்த்தி விட்டாள்.. கொசு வலையைக் கொண்டு தொட்டிலை மூடி விட்டுத் திரும்பினாள்.. சதானந்தனுக்கு மூச்சுத் திணறியது.. இதயம் படபடத்தது..

'இன்னும் கண்கள் திறக்காத சிற்பம்..

ஒரு கோடி பூப்பூக்கும் வெட்கம்..

ஆண் மனதை அழிக்க வந்த சாபம்

அறிவை மயக்கும் மாய தாகம்..'

அவன் மனதில் பாடல் வந்தது.. அவள் மாயநதி ஊற்றாக அவனருகில் வந்தாள்.. சதானந்தனுக்கு கண்களைக் கட்டிக் காட்டில் விட்டதைப் போல இருட்டிக் கொண்டு வந்தது..

சிறு கட்டிலைப் போலப் பெரிதாக இருந்த மரக் தொட்டிலில் கை, கால்களைப் பரப்பிச் சுகமாக தூங்கிக் கொண்டிருந்தான் தயானந்தன்... சதானந்தனின்

வீட்டில் அவனுக்குச் சேலையில்தான் தொட்டில் கட்டிப் போட்டிருப்பார்கள்.. அது என்னவோ.. தொட்டிலில் போட்டு ஆட்டி விட்டால்தான் அவன் தூங்குவான்..

இந்த அபார்ட்மெண்டிற்குள் வந்தவுடன் தயானந்தனுக்காக சாருலதா வாங்கி வைத்திருந்த இந்த அழகான மரத் தொட்டில்தான் சதானந்தனின் கவனத்தைக் கவர்ந்தது.. எளிதாக அங்கு மிங்கும் நகர்த்தும் வசதி.. அகன்று, நீண்டு சிறு கட்டிலைப் போல இருந்த தொட்டில் என்று வெகு நேர்த்தியாக அது வடிவமைக்கப் பட்டிருந்தது.. பெற்ற குழந்தைக்காகப் பார்த்துப் பார்த்து வாங்குவதைப் போலத் தயானந்துக்கான பொருள்களையும், உடைகளையும், பொம்மைகளையும் வாங்கிச் சேர்த்திருந்தாள் சாருலதா..

'இவன் யார், இவள் யார்..? பெற்றெடுத்த அன்னையைப் போலப் பேணிக் கொண்டிருக்கிறாளே..'

சாருலதாவின் பாசத்தில் நெகிழ்ந்து போனான் சதானந்தன்.. அவள் குழந்தையை மட்டுமா பேணினாள்..? சதானந்தனையும் சேர்த்து அல்லவா கவனித்துக் கொண்டாள்..? மாளிகையில் வாழ்ந்து கொண்டிருந்த மகாராணி.. அவனுக்காக அந்த சின்ன அபார்ட்மெண்டில் வாழ வந்திருக்கிறாளே..

சாருலதா விளக்கை அணைத்து விட்டாள்.. அறையில் பரவிய மெல்லிய வெளிச்சத்தில் நிழலோவியம் போல கட்டிலை நெருங்கினாள்.. ஜன்னல் வழி வந்த காம்பவுண்டு விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் தேவதையாக ஒளிர்ந்தாள்.. சதானந்தன் பிரமித்துப் போனான்.. அவனை நோக்கி அவள் வருகிறாள் என்பதில் முழுவதுமாக விழிகளைத் திறந்து விட்டான்.. அவளைப் பார்க்கப் பார்க்க

அவனுக்குத் தெவிட்டவேயில்லை.. அவள் மீதான பிரேமம் அணையுடைத்து அவனை ஆக்ரமித்தது..

'இவளைப் பார்த்த..

இன்பம் போதும்..

வாழ்ந்து பார்க்க

நெஞ்சம் ஏங்கும்..'

அவனது நெஞ்சம் ஏங்கிய ஏக்கத்தைக் கேட்டு விட்டவளைப் போல கட்டிலை நெருங்கியவள் அவனருகில் அமர்ந்து அவனது நெஞ்சத்தில் சாய்ந்து கொண்டாள்..

அதுவரைதான் அவனால் புலனடக்கத்தைக் கட்டிக் காப்பாற்ற முடிந்தது.. அதற்கு மேல் தாங்க மாட்டாதவனாக அவளைச் சுற்றிக் கைகளால் வளைத்து இழுத்துக் கொண்டான்..

இறுக்கமான அவனது அணைப்பில் இசைவாக அடங்கிக் கொண்டாள் சாருலதா.. பின்னிப் பிணைந்த அவனது கால்களுக்கு இடையே அவளது உடல் செறுகிக் கொண்டது.. தாபமும், தாகமும் ஒன்று சேர வெகு காலமாக தேக்கி வைத்திருந்த ஒட்டு மொத்த ஏக்கத்தையும் தீர்த்துக் கொள்ளும் வேட்கையுடன் குனிந்த அவனது வேக முத்தங்களில் அவளது முகம் நனைந்து மூச்சுத் திணறியது.. அவளது இதழ்களை.. கவ்விக் கொண்ட அவனது இதழ்களை மீறி வந்த அவனது முரட்டுப் பற்கள் பதிந்ததில் வழியை உணர்த்த சாருலதா விழிமூடி அவனது வேகத்திற்குள் தன்னை ஒப்புக் கொடுத்தாள்..

"சாரு.." அவளது காதோரமாக கரகரத்தான்..

"ம்ம்ம்.." எண்ணிப் பார்த்திராத நிகழ்வுகளின் ஆக்ரமிப்பில் பேச முடியாமல் முணு முணுத்தாள் சாருலதா..

"இது நிஜமா..?" அவனால் நம்ப முடியவில்லை..

"நான் பொய்யா..?" அவனது கழுத்தைக் கைகளால் வளைத்து முகம் பார்த்து வினவினாள் சாருலதா..

"நீ பொய்யென்றால் இந்த உலகமே பொய்.."

"அப்படியென்றால் இங்கு நடப்பது நிஜம்.."

"ஹ.."

அவளைக் கட்டிப் புரண்டான் சதானந்தன்.. அவள் மீதான அவனது வேட்கை வெறியில்லாத வெறி கொண்டதாக இருந்ததில் இன்பமான இம்சைக்குள் அவள் வீழ்ந்தாள்.. அவளைக் கட்டித் தழுவியவனுக்குள் சில நொடிகள் தயக்கம் வரும்.. இவள் தேவதையென்று விலக முனைவான்.. அந்த சில நொடிகளை வெகு எளிதாக அடையாளம் கண்டு கொள்ளும் சாருலதா கைகளால் அவனை வளைத்து விலக விடாமல் பின்னிக் கொள்வாள்.. அவளது நெருக்கத்தில் குழைந்துப் போய் அவளது காதருகே அவன் கெஞ்சுவான்..

"நீ தேவதை சாரு.."

"நீங்கள் கந்தர்வன்.."

"ம்ப்ச்.. நன்றியுணர்வில் நீ பேசுகிறாய்.."

"இருக்கட்டும்.. இது உங்களின் காதலுக்கான நன்றி.."

"அதற்காக.. உன்னையே நீ கொடுப்பாயா..?"

"நீங்க எடுத்துக்கத்தான் நான்.. வேண்டாம்ன்னு நீங்க மறுத்தா எதற்காக நான் இருக்கனும்..?"

"ஏய்.. என்னடி பேசற..?"

அவளின் மிரட்டலில் அவள் மீதான உரிமை அவனுக்குள் உறுதியாக நங்கூரமிட்டு விட்டது.. அதுவரை அவளைத் தேவதையென்று பூஜித்துப் பதறியவன்..

அவன் ஆள்வதற்காகத்தான் அவள் என்ற உறவினில் பிணைந்து விட்டான்.. தயக்கங்கள் அற்றுப் போய் விட்ட வேகத்துடன் அவன் அவளை முரட்டுத்தனமாக இழுத்து அணைத்து ஆள ஆரம்பித்ததில் இனி அவளுடன் குடும்பம் நடத்துவதில் அவனுக்கு எவ்விதமான தயக்கங்களும்

ஏற்படாது என்பதை புரிந்து கொண்டு இளநகையுடன் அவனுக்கு இசைந்து கொடுத்தாள் சாருலதா..

அவள் மீது படர்ந்த கைகள் எல்லைகளைக் கடந்தன.. அவளுக்குத் தெரியாத சங்கதிகள் தெரிய ஆரம்பித்தன.. பெண்மையின் வெட்கத்துடன் சில தருணங்களில் அவள் விலக முற்பட்டபோது அவன் கோபம் கொண்டான்.. விடாமல் வேட்டைக்காரனின் தீவிரத்துடன் அவளை வேட்டையாடி முடித்தான்..

நிலவு ஒளி அறைக்குள் பரவியிருந்தது.. கிட்டாது என்று அவன் நினைத்திருந்த வாழ்வு அவனுக்குக் கிட்டியிருந்தது.. உடலையும் மனதையும் மறைக்காமல் அனைத்தும் உனது என்று அவனிடம் ஒப்படைத்துச் சரணடைந்திருந்தாள் சாருலதா.. இரண்டையும் கண்டுணர்ந்து கலந்து முடித்தவன் ஆனந்தக் களைப்புடன் விலகிப் படுத்தான்.. சந்தோச அயர்வுடன் படுத்திருந்தவளின் முடிகோதி அவளுக்கு முத்தமிட்டான்..

## 22

சாருலதா இமைகளைத் திறந்து அவனைப் பார்த்தாள்.. அவனது முன்னுச்சி முடியில் விரல் கோதி அவன் முகம் பார்த்தவள் கட்டிலுக்குக் கீழே கிடந்த உடைகளை அள்ளிக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தாள்..

சதானந்தன் கைலியைக் கட்டிக் கொண்டான்.. ஜன்னலருகில் சென்று பார்த்தான்.. வரைபடம் போல தெரிந்த அபார்ட்மெண்டின் உள்புறச் சாலைகளோரம் இருந்த டூம் லைட்கள் இரவைப் பகலாக்கி வெளிச்ச வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன.. ஆங்காங்ககே வலம் வந்த வாட்ச் மேன்கள் சிரித்துப் பேசிக் கொண்ட சப்தம் சன்னமாகக் கேட்டது..

சதானந்தனின் முதுகு பஞ்சுப் பொதியைப் போன்ற ஸ்பரிசத்தை உணர்ந்தது.. அவனது தோள்களைத் தழுவிய தளிர் கரங்களை இழுத்து முத்தமிட்டான்.. அவனது முதுகில்

முகம் புதைத்துப் பின்னியிருந்த சாருலதாவின் பக்கமாகத் திரும்பி அவளை மார்பில் சாய்த்துக் கொண்டான்.. தலைமுடி கலைந்து, நெற்றியின் வகிட்டில் இட்டிருந்த குங்குமம் தீற்றி, நெருக்கமாகத் தொடுக்கப் பட்டுத் தலையில் சூடப்பட்டிருந்த பூச்சரம் கசங்கி நாராகத் தொங்க அவள் அண்ணாந்து அவன் முகம் பார்த்த கோலம் சற்று முன் கட்டிலில் நிகழ்ந்த நிகழ்வுக்கான சாட்சியங்களாக கட்டியம் கூறின..

'இவ என் பெண்டாட்டி..' சதானந்தன் போதையுடன் அவளது தோள் வளைவில் முகம் புதைத்தான்..

"அத்தான்.."

சாருலதாவின் கிறக்கமான அழைப்பில் ஆச்சரியமானவன்..

"என்னையா கூப்பிட்ட..?" என்று கேட்டான்..

"ம்ப்ச்.. என்ன கேள்வி இது..?" அவள் கடிந்து கொண்டாள்..

"இது என்னடி அத்தான்..? பாட்டி காலத்தில கூப்பிடறதைப் போல இருக்கு..?"

"யார் சொன்னது..? என் அம்மா டாடியை இப்படித்தான் கூப்பிடுவாங்க.. அண்ணி, அண்ணனை இப்படித்தான் கூப்பிட்டுக்கிட்டு இருக்கிறாங்க.."

பிரசன்னாவும் அவள் அவனை 'அத்தான்..' என்று அழைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டதுண்டு..

"அதில ஒரு கிக்கு இருக்குடி.." என்பான்..

சாருலதா அவனை 'அத்தான்..' என்று அழைத்ததில்லை.. அந்த நினைவு மனதில் முள்ளாய் உறுத்த சாருலதா விலகினாள்..

"ஏன்..?" சதானந்தன் உறுமினான்..

"ஒன்னுமில்ல.." சாருலதா ஜன்னலில் சாய்ந்து வெளியே வெறித்தாள்..

ஏஸியில்லாத ஒற்றை அறையைக் கொண்ட அபார்ட்மெண்ட்.. அவளது வீட்டில் அவளுடைய படுக்கையறை இதைவிட ஆறுமடங்கு பெரிதாக இருக்கும்.. இவையெல்லாம் அவளை வருத்தவில்லை.. பிரசன்னாவுக்கு அநீதி இழைத்துவிட்ட குற்ற உணர்வுதான் வருத்துகிறது..

அவள் மனம் அங்கு இல்லை என்பதை புரிந்து கொண்டான் சதானந்தன்.. அவளது முகத்தினில் படிந்திருந்த துயரம் அவனை வாள் கொண்டு அறுத்தது.. எதற்காக இத்துனை வருத்தம்..?

'இந்த வருத்தமும் துயரமும் யாருக்காக..?'

இனிய கனவு கலைந்ததைப் போல உணர்ந்தவன் குளியலறைக்கு நடந்தான்.. அவன் வெளியில் வந்த போது சாருலதா ஜன்னலருகில்தான் நின்றிருந்தாள்.. கசங்கியிருந்த கட்டிலின் மெத்தை விரிப்பு அவனைக் கோபப் படுத்தியது.. சற்று முன் அவளுடன் 'கூட' அவன் தயக்கம் காட்டிய போதெல்லாம் அவள் நெருக்கத்தை அதிகப்படுத்தி அவனுடைய தயக்கங்களை உடைத்தெறிந்ததை நினைத்துப் பார்த்தவனின் நெஞ்சம் கொதித்தது..

"இதுக்கு இது தேவையே இல்லையேடி.." அவன் கட்டிலைச் சுட்டிக் காட்டினான்..

அவனது குரலில் சிந்தனை கலைந்து திரும்பிப் பார்த்த சாருலதா திகைத்தாள்.. ஏன் இந்த கோபம்..?

"என்ன ஆச்சுங்க..? நீங்க எதைச் சொல்கிறீங்க..?"

"நீ பித்துப் பிடிச்சு நிற்கிறதைச் சொல்கிறேன்.. எதுக்கு இந்த வருத்தம்..? இவன்கூட குடும்பம் நடத்த வேண்டியதாகிருச்சேன்னு துயரப் படறியா..?" பட்டவர்த்தனமான அவனது கேள்வியில்..

"அத்தான்.." என்று துடித்துப் போனாள் சாருலதா..

"அப்படிக் கூப்பிடாதே.. சதான்னு கூப்பிடு.." அவன் சீறினான்..

"மாட்டேன்.." மறுத்தவள் அவன் பக்கத்தில் வந்தாள்..

"தாலி கட்டுடான்னு நீதாண்டி வற்புறுத்தின.. உன்னிடம் நன்றியை எதிர்பார்த்து நான் எதையும் செய்யலை.. உன்னை நான் காப்பாத்தினதுக்கு என்னை நீ கோர்ட்டில காப்பாத்திட்ட.. இரண்டு பேருமே ஒருவருக்கொருவர் உதவி செய்துக்கிட்டோம்.. சரிக்கு சரியாகி விட்டது.. இனி அவரவர் வழியில் போவோம்ன்னு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்.. நீ கேட்கலை.. நான் உன்னைக் கல்யாணம் கட்டிக்க மாட்டேன்னு மறுத்தா கடலில் குதித்திருவேன்னு பயமுறுத்தி என்னைத் தாலி கட்ட வைச்ச.. அதுக்குப் பின்னாடியும் தள்ளி நின்னவனை இழுத்துப் பிடித்துக் குடும்பம் நடத்த வைச்ச.. எல்லாத்தையும் மறந்துட்டு நீ என் பெண்டாட்டி.. நான் உன் புருசன்னு முதலிரவு நடத்தி முடிச்சவன் முன்னாலே இப்படி எதையோ பறி கொடுத்தவளைப் போல நின்னா என்னடி அர்த்தம்..? எதைடி பறி கொடுத்த..?"

அவன் கேட்க வந்ததை புரிந்து கொண்ட சாருலதா அடுத்த வார்த்தைகளை அவனைப் பேச விடாமல் எம்பி அவன் கழுத்தை வளைத்து தன் இதழ்களால் அவனது இதழ்களை மூடிவிட்டாள்..

வாயோடு வாய் பதித்து அவள் கொடுத்த முத்தத்தில் பேச்சு தடை பட கோபம் அடங்காதவனாக நின்றவனைக் கட்டிலுக்குத் தள்ளிக் கொண்டு போய் உட்கார வைத்த சாருலதா.. தரைமீது மண்டியிட்டு அவன் மடியில் தலை வைத்துக் கால்களைத் தன் கைகளால் பின்னிக் கொண்டாள்..

"வேண்டாம்டி.. தள்ளிப் போயிரு.. என் உணர்வுகளுடன் விளையாடாதே.. நான் கோபக்காரன்.." எச்சரித்தான் சதானந்தன்..

"அதுதான் எனக்குத் தெரியுமே.. கோபம் வந்தா என்ன செய்வீங்களாம்.. அடிச்சுருவீங்களோ.." சாருலதா

கொஞ்சினாள்..

"உன்னை என்னாலே அடிக்க முடியாதுங்கிற தைரியத்தில பேசறியா..?"

"ஏன் அடிக்க முடியாதாம்..? நீங்கதான் துணிச்சல் காரராச்சே.."

"உன்னை அடிச்சா எனக்குத்தான் வலிச்சுத் தொலைக்கும்.."

கோபத்துடன் அவன் சலித்துக் கொண்டதில் அவன் மீது அவளுக்குள் காதல் பெருக்கெடுத்தது.. தரையிலிருந்து எழுந்தவள் அவன் மடிமீது உட்கார்ந்து அவனது கழுத்தைக் கைகளால் வளைத்து முகத்தோடு முகம் வைத்துத் தேய்த்து..

"ஏனாம்..?" என்று குழைந்தாள்..

"ஏய்.." கிளர்ச்சியுற்றவனாக அவளை இறுக்கிக் கொண்ட சதானந்தனின் கோபம் குறைய மறுத்தது..

"அத்தான்.." சாருலதா கிசுகிசுத்தாள்..

"அப்படிக் கூப்பிடாதே.. சரசம் பண்ணி என்னைக் கவிழ்க்கப் பார்க்கிறயா..?"

"அட.. என் புருசனுக்கு இப்பத்தான் இது தெரிஞ்சிருக்கு.. சண்டைக்கார புருசனை மேரேஜ் பண்ணிக்கிட்டவ வேற என்ன செய்வாளாம்..? சரசம் பண்ணித்தானே அவனைக் கவிழ்க்கனும்..?"

"என்னைக் கவிழ்த்திருவியா..?"

"சேலன்ஜா..? இப்பத்தான கவிழ்த்தேன்..? நீங்க ஆல்ரெடி என்னிடம் சரண்டர் ஆகியாச்சு சதானந்தனே.. ச்சும்மா வெட்டி வீறாப்பைக் காட்டக் கூடாது.."

"உன்னை.."

அவன் கோபம் கொண்டவனாக ஆத்திரத்தை அவள் மீது காட்ட கட்டிலில் சரிந்தான்.. சண்டைக்கு வந்த அந்த

சண்டைக்காரனின் சண்டையை அவள் சரசத்தால்

எதிர் கொண்டாள்.. யுத்தத்தின் முடிவில் இருவருமே ஒருவரையொருவர் தோற்கடித்து ஒருவரையொருவர் வென்றார்கள்..

அவன் மீது பின்னிப் பிணைந்து அவன் மார்பில் தலை வைத்து இமை மூடியிருந்தவளைப் பார்த்த போது அவனுக்கு கோபம் வரவில்லை.. மீண்டும் ஓர்முறை அவள் அவனிடம் தன்னை கொடுத்து கலந்ததுதான் நினைவுக்கு வந்தது.. அவனுடன் கூடியபோது அவள் மனப்பூர்வமான காதலுடன்தான் கூடினாள்.. அதை அவன் உளமார உணர்ந்தான்.. சிறுவிலக்கமில்லை.. சின்னத் தயக்க மில்லை.. அவனுக்குப் பிடித்ததைப் போல நடந்து கொண்டாள்.. அவனது தேவைகளுக்கு உடன் பட்டாள்.. அவனது வேட்கைக்கு ஏற்றபடி இசைந்து கொடுத்தாள்..

'இவ என் பெண்டாட்டி..' கள்ளூரும் போதையுடன் அவளை கட்டிக் கொண்டவன் அவளது காதருகே கிசுகிசுத்தான்..

கணவனுக்கும் மனைவிக்கும் மட்டுமே புரியக் கூடிய அந்த அந்தரங்க உரையாடலில் அவள்..

"ச்சீய்.." என்று முகம் சிவந்தாள்..

அவன் அதை ரசித்துச் சிரித்தான்.. தயானந்தனின் உறக்கம் கலைந்து விடும் என்று அவள் எச்சரித்ததில் எழுந்து சென்று தயானந்தனின் தொட்டிலை நகர்த்தி ஹாலில் நிறுத்தி விட்டு வந்து கதவைத் தாழிடாமல் லேசான இடைவெளி விட்டு முடி வைத்தான்..

"இனி அவனோட தொட்டில் ஹாலிலேயே இருக்கட்டும்டி.." என்று அவன் சொன்னதில் அவள் வாய்மூடிச் சிரித்தாள்..

"ஏய்ய்.." வேட்கையுடன் அவளை அவன் நெருங்கினான்..

அவனது முடிகோதி அவன் நெற்றியில் முத்தமிட்டவளின் பிரியத்தில் அவன் மனம் நனைந்தது..

'இது ஒன்றைக் கண்டு வச்சிருக்கா..'

"பெண்டாட்டி வந்தவுடன் பிள்ளையை மறந்தாச்சு.."

"யார் மறந்தது..? அவன் லேசா அசைந்தாலும் நமக்குத் தெரிந்து விடும்.. கதவையென்ன தாழ் போட்டா வைச்சேன்..?"

தெளிவான அவனது நியாயத்தில் அவள் மீண்டும் சிரித்தாள்.. அறையில் குழந்தையில்லை யென்பதில் அவர்களது அத்து மீறிய பேச்சுக்கள் தடையின்றி தொடர்ந்தன.. கிளர்ச்சியுற்றவள் அவனிடம் சரணடைந்ததில் அவன் மூன்றாம் முறையாக அவளை வேட்டையாட ஆரம்பித்தான்.. இந்த வேட்டையாடல் அவளுக்கான வேட்டையாடல்..

அவளைக் கலைத்துப் போட்டு களைக்க வைத்து அள்ளிச் சுவைத்ததில் இருந்தது அவனது காதலின் ஆளுமை..

நான்காம் முறை 'கூட' அவன் அழைத்த போது அவள் போதும் என்று பொய்யாக மறுத்து விலகுவதைப் போல பாவனை செய்தாள்.. அவளை பலவந்தமாக இழுத்து எழும்புகள் நொறுங்கும் அளவுக்கு இறுக்கி அணைத்து, எதிர்த்துத் திமிறியவளை நிறுத்தி, அவள் எதிர்பாராத வகையில் வில்லனைப் போல புடவை முந்தானையை இழுத்து சேலையை உறுவி அவனது கழுத்தில் வளைவாக போட்டுக் கொண்டு, அவளது இடை பற்றி விரல்களால் இடையை வலி வர அழுத்திப் பிடித்து,

"ஏய்ய்.. எங்கேடி தப்பிச்சுப் போகப் பார்க்கிற..?" என்று அதட்டி அவளைக் காலோடு தலைவரை ஒட்டு மொத்தமாக ஒரு மேய்ச்சல் பார்வையை அவன் பார்த்த போது அவள் மறுபடியும் அவனிடம் சரணடைந்தாள்..

வேட்டையாட ஆரம்பித்த அந்த வேட்டைக்காரனின் சீரான மீசை ரோமத்தின் உராய்வில் சிக்கித் திணறியது அவளது உடல்..

அன்றைய இரவின் ஆரம்பத்தின் போது அரும்பாக இருந்தவளை மொட்டாக்கி மலர வைத்து முழுவதுமாக

முகர்ந்து விட்டான் சதானந்தன்.. அவன் மார்பில் சரிந்தவளிடம்..

"என்னை ஜெயிச்சுட்டடி.." என்றான்..

காதலுடன் அவனைப் பார்த்தவளின் விழிகளில் இரவு முழுவதும் அவன் கொடுத்த அனுபவங்களின் கிளர்ச்சியும், கிறக்கமும் இருந்தன.. அப்பார்வையில் அவன் கைதானானான்..

"யார், யாரை ஜெயித்ததாம்..?" மயக்கத்துடன் அவள் கேட்டாள்..

ஜன்னல் வழி பாய்ந்த விடியலின் வெளிச்சக் கீற்றுக்கள் அறை முழுவதும் பரவின..

"விடிஞ்சுருச்சுடி.." ஏக்கத்துடன் அவன் சொன்னான்..

அந்த ஏக்கத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.. இரவு முழுவதும் விரதம் காத்தவனைப் போன்ற அவனது முக பாவத்தில்..

"படவா.." என்றாள்..

"என்னது.. என்மீது படவாங்கிறயா..? என்னடி நீ.. இதுக்கு என்கிட்டப் பெர்மிசன் கேக்கனுமா..? இந்தா.. தொட்டுக்க.. பட்டுக்க.. உராய்ந்துக்க.. என்ன வேணும்னாலும் செய்துக்க.. நான் உன் புருசன்டி.." அவன் பறப்பாய் பறந்தான்..

"அடேங்கப்பா.. என்ன ஒரு தாராள மனது.. ஐ அப்ரிசியேட் யு அத்தான்.." சாருலதா கட்டிலை விட்டு இறங்கினாள்..

"எங்கேடி தப்பிக்கப் பார்க்கிற..?" அவன் தாவி அவள் கைபிடித்து தடுத்தான்..

"விடுங்களேன்.. தயா எழுந்துருச்சுடுவான்.." சாருலதா கெஞ்சினாள்..

"ஊஹீம்.. அவன் எழுந்துக்கும் போது பார்த்துக்கலாம்.. இப்ப நீ பக்கத்திலே வா.."

"பாலைக் காய்ச்சிக் காபி போடனும் அத்தான்.. தயாவுக்கு பாலை ஆத்தி வைக்கனும்.."

"அதுக்கென்ன அவசரம்..?"

"டிபன் பண்ண வேண்டாமா..?"

"இன்னும் முழுசாக்கூட விடியலை.. அதுக்குள்ள பறக்கிறா.."

"நான் வேலைக்குக் கிளம்ப வேண்டாமா..?"

மென்மையாகத்தான் அவள் வினவினாள்.. அவன் முகத்தில் கோபம் வந்து அப்பிக் கொண்டது.. தீட்சண்யமான அவனது விழிகளை அவளால் நேர் கொண்டு பார்க்க முடியவில்லை.. தீர்க்கமாக அவளை உறுத்துப் பார்த்தவனின் விழிகளில் மின்னிய உக்கிரம் அவளைச் சுட்டது..

"ஓ.. அதுக்குத்தான் இந்த அவசரமா..?"

எதற்கு என்று அவள் கேட்கவில்லை.. அவனது வார்த்தைகளில் தெறித்துச் சிதறிய கோபச் சிதறலின் வெம்மையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவனது சிறு விலகல்கூட அவளை பெரிய அளவில் பாதித்தது.. அவன் கேட்ட விதத்தில் தென்பட்ட இடக்கு அவளை மடக்கியது.. என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாதவளாய் அவள் திகைத்தாள்..

"நீ வேலைக்குப் போகக் கூடாது.."

சதானந்தன் உறுதியாகச் சொல்லி விட்டான்.. சாருலதா எதிர் வாதம் புரிவாள் என்று நினைத்தானோ என்னவோ.. அவள் பேசட்டும் என்ற காத்திருந்தான்.. அவள் பேசவில்லை.. நகர்ந்து அவன்மீது சரிந்து புரண்டு தலையனையை இழுத்து வாகாக வைத்துக் கொண்டு இமை மூடி விட்டாள்..

"ஏய்.. என்னடி..?"

"என்ன.. என்னடி..?"

"படுத்துட்ட.."

"வேற என்ன செய்ய..? அதுதான் நான் வேலைக்குப் போகக் கூடாதுன்னு ஆர்டர் போட்டுட்டிங்களே.. ஸோ.. அரக்கப் பறக்க எழுந்துக்காம நிதானமா எழுந்துக்கப் போறேன்.."

அவன் சொன்னதை எந்தவித மறுப்புமின்றி அவள் ஏற்றுக் கொண்டாளா..? அவனால் நம்பவே முடியவில்லை.. தீவிரமான வாக்குவாதத்தை எதிர்பார்த்து வேக மூச்சுக்களுடன் காத்திருந்தவன் வியந்து போனான்..

"சாரு.."

அவள்மீது கவிழ்ந்தான்.. அவள் மறுக்கவில்லை.. ஆனந்தத்துடன் அவளைக் கலைத்து அவன் கலந்ததற்கு விருப்பத்துடன் உடன்பட்டாள்.. வேகம் தணிந்து குழந்தையாகி அவள்மீது சரிந்திருந்தவனின் வியர்வையில் அவளுடல் நனைந்தது.. முந்தானை கொண்டு அவன் முகத்தைத் துடைத்து விட்டாள்.. விரிசல் வராத உறவு இது என்ற நம்பிக்கையை அவனுக்குள் விதைத்து விட்டவளின் முகம் பார்த்தவன்..

"என் மீது கோபமில்லையாடி..?" என்று கேட்டான்..

"இல்லையே.. எதுக்குக் கோபப்படனுமாம்..?"

அந்த ஒற்றைக் கேள்வியில் இற்றுப் போயின அவனது அனைத்துச் சந்தேகங்களும், சஞ்சலங்களும்..

## 23

"உன்னை வேலைக்குப் போக வேண்டாம்ன்னு தடுத்துட்டேனே.."

"ஸோ வாட்..? இது நம்ம வாழ்க்கை அத்தான்.. உங்களுக்குப் பிடித்ததைப் போல நான் இருக்கனும்.. எனக்குப் பிடித்ததை மட்டுமே நீங்க செய்யனும்.. வாழத்தான் நாம மேரேஜ்

பண்ணி வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கோம்.. போராடுவதற்காக இல்லை.."

தெளிவாக அவள் பேசிய பேச்சில் அவன் மனம் மூழ்கித் திளைத்தது.. விதி அவனை வஞ்சித்தது என்று நினைத்தானே.. காலம் அவனுக்கான பரிசுடன் காத்திருப்பதை உணராமல் போய் விட்டானே..

இதோ.. அவன் வானில் இருக்கிறாள் என்று அண்ணாந்து பார்த்த முழுநிலவு அவனது மடியினில் துயில் கொண்டிருக்கிறது.. எப்படிப்பட்ட வாழ்வை வாழ்ந்து பார்க்க அவனது நெஞ்சம் ஏங்கியதோ.. அப்படிப்பட்ட வாழ்வை இரவினில் ருசி பார்த்து விட்டான்.. வரமளித்த தேவதை அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டு அனைத்தும் நீயே என்று அவனிடம் அடைக்கலமாகியிருக்கிறாள்..

'இதற்கு மேல் என்ன வேண்டும்..?'

நெஞ்சம் வினவியது.. அடுத்தடுத்துக் கிடைத்த பரிசுகளில் அவன் பிரமித்துப் போயிருந்தான்.. அவனது காதல் வென்று விட்ட பிரமிப்பு அது.. அவனது காதலி அவனுக்கே அவனுக்கென்று கிடைத்து விட்டாள் என்ற பிரமிப்பு அது..

தயானந்தன் எழுந்து விட்டான்.. அவனது சிணுங்கல் சப்தத்தில் அவர்கள் இருவரும் விலக மனமில்லாமல் விலகினார்கள்.. சாருலதா குளியலறைக்குள் புகுந்து கொள்ள சதானந்தன் ஹாலுக்கு வந்து தொட்டிலை ஆட்டினான்..

"ம்மா.."

குழந்தையின் மழலை சாருலதாவைத் தேடியது.. தொட்டிலைச் சுற்றிக் கவிழ்த்திருந்த கொசுவலையை சதானந்தன் எடுத்து விட்டுக் குனிந்து அண்ணன் மகனைப் பார்த்தான்..

"கெட்டிக்காரண்டா நீ.. தெளிவா பாலிடிக்ஸ் கத்து வைச்சிருக்கிற.. ஆட்சிக்கு யார் வ்நதிருக்காங்களோ அவங்களைச் சொந்தம் கொண்டாடிக்கிற.. அம்மா வந்தவுடன் அப்பனை மறந்தாச்ச.."

சதானந்தன் சொன்னதைப் புரிந்து கொண்டதைப் போல தயானந்தன் சிரித்து மகிழ்ந்து போனான்.. அவன் முகத்தில் தெரிந்த மலர்ச்சியில் சதானந்தன் நெகிழ்ந்தான்.. அவனிடம் தயானந்தன் இருந்த போது இந்த மலர்ச்சி முகத்தில் இருந்ததில்லையே..

இறுக்கமான முகமும், முரட்டுத்தனமான கோபமும் கொண்ட சதானந்தன் வளர்க்கும் பிள்ளை எப்படியிருப்பானோ.. அப்படி அவன் இருந்தான்.. அழுக ஆரம்பித்தால் நிறுத்த மாட்டான்.. இப்போது என்னடாவென்றால் சாருலதாவிடம் கொஞ்சி விளையாடுகிறான்.. இரவில் படுக்க வைத்தால் சமர்த்தாக தூங்கி விடிந்த பின்னால் கண் விழிக்கிறான்..

"பிள்ளையைக் கண் வைக்காதீங்க.." சாருலதா வந்து விட்டாள்..

குளித்து முடித்த கூந்தலை ஈரம் உறிஞ்சும் துவாலையில் சுற்றிக் கொண்டு மங்களகரமாக இருந்தாள்.. அவனது பார்வையில் முகம் சிவந்தவள் குனிந்து தயானந்தனைத் தூக்கிக் கொண்டாள்.. அவளைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல அவனது கையும், காலும் பரபரத்தன.. சிவந்திருந்த அவளது விழிகள் தூக்கமில்லாத இரவைச் சொல்லின.. இருந்தும் அவனுடல் சூடேறியதில் இது தீராத தாகம் என்று அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்..

அவனது பார்வையில் விலகியவள் ஒற்றை விரலை உயர்த்திப் பத்திரம் என்ற பாவனையில் ஆட்டி விட்டுத் தயானந்தனை ஹாலில் இருந்த சோபாவில் உட்கார வைத்தாள்.. அவன் சொல்போச்சுக் கேட்கும் பிள்ளையாக அடங்கி உட்கார்ந்ததில் வியப்பு மேலிட..

"என்னிடம் இருந்தப்ப இப்படி உட்கார மாட்டாண்டி.." என்றான்..

"பொறாமை..?" சாருலதா வாசல் கதவைத் திறந்து கிரில் கதவில் கட்டப் பட்டிருந்த சிறு பையில் இருந்த பால் பாக்கெட்டை கையிலெடுத்துக் கொண்டு சமையலறைக்குப் போனாள்..

"ஒரு 'மை'யும் இல்லை.. நன்றிதான்.." சதானந்தன் அவனைத் தொடர்ந்தான்..

"தயாவுக்கு தேங்க்ஸ் சொல்றீங்களா..? எதுக்காம்..?" சாருலதா கேஸ் ஸ்டவ்வை பற்ற வைத்து பால் பாத்திரத்தை தூக்கி வைத்தாள்..

"நைட்டில தூங்க விட மாட்டான்.. அழுது ஊரைக் கூட்டுவான்.. பயபுள்ள நேத்து நைட் தூங்க வைச்சா விடிஞ்சப்புறம் கண்ணு முழிக்கிறான்.. எழுந்துக்கவே இல்ல.. அதுக்குத்தான் தேங்க்ஸ் சொன்னேன்.." சதானந்தன் ஒரு மார்க்கமாக பார்த்தபடி சொன்னான்..

"ச்சீய்.." வெட்கத்துடன் சிங்க் குழாயின் தண்ணீரை கையில் பிடித்து அவன் மீது வீசினாள் சாருலதா..

"ஏய்ய்.." சதானந்தன் சிரிக்க.. தயானந்தனும் சேர்ந்து சிரித்தான்.. சாருலதா காபி கலந்து கொடுத்தாள்.. தயானந்தனுக்கு பால் ஆற்றிக் குடிக்க வைத்தாள்.. அண்ணன் மகனை அள்ளிக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தான் சதானந்தன்.. அவனும் தயானந்தனும் குளித்து உடைமாற்றி வந்த போது இட்லியும், சாம்பாரும் ஆவி பறக்க டைனிங் டேபிளில் காத்திருந்தன..

இனிது, இனிது வாழ்வு இனிது என்பது இந்த வாழ்வுதானோ.

"அந்த டயரை இங்கே உருட்டிட்டு வாடா.."

சதானந்தன் காருக்கு அடியில் படுத்தபடி சப்தம் போட்டான்.. அவனுடைய உதவி ஆள் டயரை உருட்டிக் கொண்டு வர மல்லாந்து படுத்திருந்தவன் லேசாக நகர்ந்து காரை விட்டு வெளியே வந்தான்.. பாதி உடல் காருக்கு கீழே இருக்க மேலே பார்த்தவனின் முகத்துக்கு நேரே குனிந்து பார்த்தது பிரசன்னாவின் முகம்.. அந்த முகத்தில் தெரிந்த வெறுப்பில் சதானந்தனின் முகம் இறுகிப் போனது..

நேற்றுவரை இந்தக் கோபம் அவன் மனதில் இல்லை.. கண்ணியவானாகத்தான் இருந்தான்.. பிரசன்னாவிடம்

தன்மையாகத்தான் பேசினான்.. அவனது கோபத்தை தாங்கிக் கொண்டான்..

இன்று அந்தக் கண்ணியவான் காணாமல் போய்விட கோபக்கார சதானந்தன்தான் வெளியில் தெரிந்தான்.. பிரசன்னா சாருலதாவைக் காதலித்தவன்.. அவளைத் திருமணம் செய்து கொள்ள நிச்சயிக்கப் பட்டிருந்தவன்.. அவளால் காதலிக்கப்பட்டவன் என்ற கடந்த கால உண்மைகள் சதானந்தனுக்குக் கசந்தன.. முதல்நாள் இரவின் ஒவ்வொரு மணித்துளியிலும் நிரம்பியிருந்த கிறக்கம் நிரம்பிய இறுக்கமான தாம்பத்யத்தின் நினைவுகள் அவனைப் புது மனிதனாக்கியிருந்தன.. சாருலதாவின் மீதான உரிமை மனப்பான்மையை உண்டாக்கியிருந்தன..

சதானந்தன் முழுவதுமாக காரை விட்டு வெளியில் வந்து எழுந்து நின்றான்.. உதவியாள் நீட்டிய துவாலையில் முகத்தைத் துடைத்தபடி..

"சாருக்கு ஒரு சேரை இழுத்துப் போடுடா.." என்று அதட்டினான்..

பிரசன்னாவின் கேலிப்பார்வை சதானந்தனின் மெக்கானிக் ஷாப்பைச் சுற்றி வலம் வந்தது.. அந்தப் பார்வையில் சதானந்தன் முகம் கன்றிப் போவான் என்று எதிர்பார்த்தான் பிரசன்னா.. அதற்காகத்தானே அப்படியொரு இகழ்ச்சிப் பார்வையை அவன் பார்த்தது..

சதானந்தன் முகம் கன்றவில்லை.. கண்கள் இடுங்க பதிலுக்கு ஒரு கேலிப் பார்வையை பார்த்து வைத்ததில் பிரசன்னாவின் முகம் தான் மாறியது.. அவனுக்குள் கோபம் எழுந்தது.. சதானந்தனின் மனதைக் காயப் படுத்தியே ஆக வேண்டும் என்ற வெறியுடன்..

"இந்த மாதிரியான இடத்தில நான் கால் வைத்ததே பெரிய விசயம்.. இதில் இந்த ஓட்டை மெக்கானிக் ஷாப்பில நான் உட்காருவேன்னு வேற எக்ஸ்பெக்ட் பண்றியா..?" என்று இகழ்ச்சியாக கேட்டான்..

"டேய்.. சாருக்கான சேர் கேன்சல்.." அதே இகழ்ச்சிக் குரலுடன் என்னவோ 'டீ கேன்சல்..' என்பதைப் போலச் சொன்னான் சதானந்தன்..

உதவியாளுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவன் சிரித்துக் கொண்டே சேரைத் தூக்கிக் கொண்டு போனதில் பிரசன்னாதான் டென்சன் ஆனான்..

'என்னவொரு நக்கல்..' மனதுக்குள் வெகுண்டான்..

'கண்ட்ரி புரூட்..' மனதுக்குள் திட்டுவதைப் போல வாய் விட்டு முணுமுணுத்தான்.. அதுவாவது சதானந்தனின் மனதைத் தைக்காதா என்ற நப்பாசை அவனுக்கு..

ஊஹீம்.. சதானந்தன் செதுக்கி வைத்த சிலையைப் போல நின்றபடி..

"நாகரிகப் பொறுக்கி.." என்றான் செல்போனில்

'இவன் யாரைச் சொல்கிறான்..?' பிரசன்னா வெகுண்டான்..

நிச்சயமாக அவனைத்தான் சொல்கிறான் என்று தெரிந்தாலும் கேள்வி கேட்க முடியாது.. இது போன்ற அதி புத்திசாலித்தன அணுகுமுறையுடன் சதானந்தன் இருந்ததில் பிரசன்னாவின் ஆத்திரம் அதிகமானது..

"பொறுக்கித்தனத்தைப் பற்றி நீ பேசற பார்த்தியா..? குட்ஜோக்.. காதல்ங்கிற பெயரில கோடிஸ்வரக் குடும்பத்தில பிறந்த பெண்ணை ஏமாற்றி அவளோட பொசிசன்ல இருந்து இறக்கி குப்பத்தில உட்கார வைத்துட்டு அதைப் பற்றிய கில்ட்டி கான்சியஸே இல்லாமல் பேசறயே.. நீதாண்டா ரோக்..!" என்றான்..

சதானந்தனின் உதவியாள்கள் இருவரும் வேலையை நிறுத்திவிட அங்கே அமைதி நிலவியது.. சதானந்தன் உதவியாள்களை வெளியே போகச் சொல்வான் என்று பிரசன்னா நினைத்தான்.. இல்லை.. சதானந்தன் அவர்களை வெளியில் போகச் சொல்ல வில்லை.. அவர்கள் இருப்பதை கண்டு கொள்ளாமல் பிரசன்னாவை எதிர் கொண்டான்..

"எனக்கு 'ரோக்' பட்டம் கொடுக்கத்தான் காலங்கார்த்தாலே கிளம்பி என் வொர்க்ஷாப்புக்கு வந்திருக்கியா..? இங்கே கால் வைக்கிறதே பெரிய விசயம்ன்னு பீத்திக்கற.. நீ பெரிய ஆள்ன்னு மத்தவங்க சொல்லனும்.. அதை நீயே சொல்லிக்கக் கூடாது.. இம்மாம் பெரிய விசயத்தைச் செய்ன்னு உனக்கு வெத்தல, பாக்கு வைச்சு நான் அழைச்சேனா..? நீயா வந்துக்கினு இன்னாமா நாயம் பேசற.. இதுல எனக்கு ரோக்கு பட்டம் வேற.. போ சாரே.. போயி வேல, வெட்டி எதுனாச்சும் இருந்தா அத்தப் பாரு.. சும்மா சண்டை வலிக்கனும்னு வராதே.. எனக்கு ஜோலி இருக்கு.. அத்து இன்னா.. கோடிஸ்வரக் குடும்பத்தில பொறந்த பொண்ண நான் கணக்கு பண்ணி ஏமாத்திப் புட்டேன்னு பழியத் தூக்கிப் போடற.. பணக்காரிங்கிறது மட்டும்தான் அத்தோட அடையாளமா..? அது 'பூ' சாரே.. அத்தோட மதிப்பப் பத்தி உனக்கு இன்னா தெரியும்..?"

24

இந்தக் கேள்வி பிரசன்னாவுக்கு வெறியைக் கிளப்பி விட்டது.. அவனுக்கு நிச்சயம் செய்யப்பட்ட அவனது காதலியை கவர்ந்து கொண்டதுமில்லாமல் அவளைப் பற்றி பிரசன்னாவிற்கு என்ன தெரியும் என்று கேட்டு வைக்கிறானே.. இவனைக் கொன்று புதைத்தால் தான் என்ன..

"ஷட் அப்.. யாரைப் பற்றி யாருக்குத் தெரியுமான்னு கேட்கிற..? அவள் எனக்காக பிக்ஸ் பண்ணப்பட்டவ.. எமோசனல் பிளாக் மெயில் செய்து அவளைக் கடத்திக் கொண்டு வந்த ஷீட்டிங் ஃபெல்லோ நீ.. வானத்தில இருந்தவளை கீழே இழுத்து விட்டவன் நீ.."

இப்போதாவது சதானந்தன் பதட்டப் படுவான்.. உதவியாள்களின் முன்னிலையில் அவனுடைய சாயம் வெளுத்துப் போய் விட்டது என்று தலைகுனிவான் என்றெல்லாம் பேராசைப் பட்டான் பிரசன்னா.. அவ்வாறு நிகழ்ந்திருந்தால் கூட அவனது மனம் ஆறியிருக்கும்..

அப்படி ஏதும் நடக்கவில்லை.. சதானந்தன் கம்பீரம் குறையாமல்..

"ஓஹோ.." என்றான்..

"என்ன 'ஓஹோ..'? இதையெல்லாம் இல்லைன்னு உன்னால மறுக்க முடியுமா..?"

"ஏன் இல்லேங்கனும்..? சும்மா உனக்காக அவளை நிச்சயம் பண்ணினாங்கன்னு கூவிக்கிட்டு இருக்கறியே.. எதனால நிச்சயம் பண்ணினாங்க..? அவ உனக்கு உறவுக்காரி.. பணக்கார வூட்டில பங்களாவில பொறந்து வளந்தவ.. அதனால நிச்சயம் பண்ணின.. அவ மட்டும் இல்லாத வூட்டில வேற சாதி சனத்தில பொறந்திருந்தா நீ சம்பந்தம் பேசியிருப்பியா..? இருக்கப்பட்ட வூட்டில பொறந்து உன்னோட சாதி சனமா, சொந்தக்காரியா இருந்ததினாலதான சம்பந்தம் பேசின..? பணம் பணத்தோடன்னு நீதான் கணக்குப் போட்ட.. நான் ஒன்னும் கணக்குப் பண்ணலை.. எனக்கு அவ பணம் கண்ணுக்குத் தெரியலை.. குணம்தான் தெரிஞ்சது.. தேவதைப் பொண்ணு அவ.. வானத்தில இருந்த நிலாதான்.. அவள நான் மண்ணுக்கு இழுக்கல.. அவதான் எனக்காக மண்ணுக்கு இறங்கி வந்தா.. விண்ணைத் தாண்டி வந்தா.. முடிஞ்சா நீயும் உன் சாதி சனமும் அவளைத் தடுத்த நிறுத்தியிருக்கலாமில்ல..? ஆன மட்டும் முயற்சி பண்ணினீங்கள்ல.. நடந்ததா..? அவளத் தடுக்க முடிஞ்சதா..? எமோசனல் பிளாக் மெயில் பண்ணினது நீதாண்டா.. நானில்ல.. எனக்குத் தெரிஞ்ச தெல்லாம்

அவ நல்லா இருக்கனும்ங்கிறது மட்டும்தான்.. உன்னோடு வாழ்ந்தா அவ நல்லாயிருப்பான்னுதான் நான் நினைச்சேன்.. அவகிட்ட மன்றாடினேன்.. அவ மாட்டேன்னு சொல்லிட்டாளே.. என்னோட தான் அவ வாழ்க்கைன்னு பிடிவாதமாக கழுத்தை நீட்டினா.."

சதானந்தனின் பெருமையில் அவனது உதவியாள்களும் இணைந்து கொண்டு தலையை ஆட்டி அங்கீகரித்தனர்.. எப்படி பந்தை வீசினாலும் அவன் அதைத் திருப்பி

வீசியதில் பிரசன்னா களைப்படைந்து போனான்.. சாருலதா அவனுக்குச் சொந்தக்கார குடும்பத்தில் கோடிஸ்வரியாக பிறக்காமல் சாதாரண குடும்பத்தில் வேறு இனத்தில் பிறந்திருந்தால் அவளது அழகையும் குணத்தையும் மட்டுமே மனதில் கொண்டு பிரசன்னா அவளைக் காதலித்திருப்பானா என்ற கேள்விக்கு அவனிடம் பதிலில்லை..

'இதைக் கேட்க இவனுக்கு என்ன தகுதி இருக்கிறது..?' வெஞ்சினத்துடன் சதானந்தனை உறுத்துப் பார்த்த பிரசன்னா..

"இப்படிப் பேசிப் பேசித்தானே அவள் அறிவை மழுங்கடித்து உன் பின்னாலே வர வைத்த..?" என்று கேட்டான்..

"என் பின்னாலே வந்தாளா..? நான் ஜெயிலுக்குள்ள இருந்தேன்.. அவ வீட்டை விட்டு வெளியில் வந்தா.. ஜெயிலை விட்டு வெளியில் வந்த நான்தான் அவ பின்னாலே போனேன்.. நடந்த கதை ஊருக்கே தெரியும்.. உனக்குத் தெரியாதா..?"

"உனக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்துட்டு வந்தவளை நீ வீட்டில அடைப்பியா..? அவளை வசதி வாய்ப்பா வாழ வைக்கத்தான் உன்னால முடியாது..

ஆப்டர் ஆல் இந்த மெக்கானிக் ஷாப்பின் ஓனர் நீ.. ரிப்பேர் பார்க்கிறதில என்ன வருமானம் வந்து விடும்..? பசியாறச் சாப்பிடலாம்.. என் சாருலதாவுக்கு இது போதுமா..?"

"பாத்து பாங்காளி.. வார்த்தை பிசகுது.. அவ இப்ப என் பொண்டாட்டி.. இன்னொரு தடவை உன் சாருலதான்னு சொன்னேன்னு வைய்யு.. என் பொண்டாட்டியோட உறவுக்காரன்னு தயவு தாட்சண்யமெல்லாம் பாக்க மாட்டேன்... வெத்தல பாக்கு போட வச்சிருவேன்.. ஜாக்கிரதை.."

சதானந்தனாவது வாய் வார்த்தையில்தான் எச்சரித்தான்.. அவனுடைய உதவியாள்கள் கையிலிருந்த ஸ்பானரை ஆட்டிக் காண்பித்தார்கள்.. சாருலதாவைத் தான் இனி

உரிமை கொண்டாடிப் பேசக் கூட முடியாது என்ற நிதரிசனத்தை ஜீரணிக்க வெகுவாக சிரமப் பட்டான் பிரசன்னா..

"அப்புறம் இன்னொன்னு.. அதென்ன பங்காளி ஆப்டர் ஆல்ன்னு இளக்காரமாப் பேசற..? உன் தொழிலை நான் இப்படிப் பேசினா நீ சும்மாயிருப்பியா..?"

"ஏய்ய்.. உன் தொழிலும் என் பிஸினெஸ்ஸீம் ஒன்றா..? ஏன் பேச மாட்ட..? சாருலதா உன்னுடன் இருக்காள்ன்னு உன் கூடவெல்லாம் நான் பேச வந்திருக்கிறேன் பாரு.. நீ பேசத்தான் செய்வ.."

"ஏய்ய்.. உனக்கு உன் தொழில் உசத்தின்னா எனக்கு என் தொழில் உசத்தி.. தொழிலைப் பற்றிப் பேசற வேலையையெல்லாம் என்கிட்ட வைத்துக்காதே.. இப்ப இன்னாத்துக்கு இங்க வந்து கூவிக்கினு கீற..? அத்த சொல்லு நீ.. அத்த விட்டுட்டு எதையெதையோ பேசிக்கினு இருந்தேன்னு வைய்யு.. என் பொண்டாட்டியோட சொந்தக்காரன்னு பாக்க மாட்டேன்.. என் வேலையைக் காட்டிப் புடுவேன் ஆமா.. கட்டின பொண்டாட்டியை எப்படிக் கட்டிக் காப்பாத்தனும்னு எனக்குத் தெரியும்.. நீ ஆரு என் வூட்டைப் பத்திப் பேச..? போவியா.."

எடுத்தெறிந்து பேசி விட்டான் சதானந்தன்.. தான் இருக்கும் உயர்ந்த நிலைக்கு இது போன்ற பேச்சுக்களை அவசியம் கேட்க வேண்டுமா என்று நொந்து போனான் பிரசன்னா.. இதைத்தானே பத்மநாபனும் மோகனாவும் சொன்னார்கள்..

"நம்ம லெவலை விட்டு இறங்க வேண்டாம் பிரசன்னா.. தி கேம் இஸ் ஓவர்.. மைண்ட் இட்.. சாருலதா அவளோட லைஃபை தேர்ந்தெடுத்துட்டா.. நீ அவளை மறந்துதான் ஆகனும்.."

"பட் அவளோட லைஃப் ஸ்டைல் இது இல்ல டாட்.."

"ஸோ வாட்..? இது அவளோட டிசிசன்.."

"அப்படி அவளை விட்டு விடக் கூடாதும்மா.."

"சொல்வதைக் கேள் பிரசன்னா.. அந்த சதானந்தன் குப்பத்தில பிறந்து வளர்ந்தவன்.. மெக்கானிக் ஷாப் வைத்திருப்பவன்.. சாருவுக்காக கொலை செய்யவும் யோசிக்காதவன்.. அப்படிப் பட்டவனோட வம்பு வழக்கு நமக்கு எதுக்கு..? நீ யார் உன் லெவல் என்னங்கிறதை மனதில் வைத்து பிஹேவ் பண்ணு பிரசன்னா.. அவனுடன் ஈக்குவலா நின்று பேச வேண்டாம்.. உன் பொசிசனுக்கு அது அழகல்ல.."

தாய், தந்தை சொன்னதைக் கேட்டிருக்க வேண்டுமோ என்று தோன்றியது பிரசன்னாவுக்கு.. எதிரில் நிற்பவன் முரடன்.. சாருலதாவுக்காக கொலை செய்யவும் தயங்காதவன்.. அந்தச் சம்பவம் நிகழ்ந்த போது பிரசன்னா அங்கிருந்தால் என்ன செய்திருப்பான் என்று யோசித்துப் பார்த்தான்..

நிச்சயமாக ராஜேந்திரனை எதிர்த்துப் போராடியிருப்பான்.. தேக பலத்தில் அவனைத் தோற்கடிக்க முடியாத நிலையில் சாருலதாவைக் காருக்குள் இழுத்துப் போட்டுக் கொண்டு தப்பித்திருப்பான்.. கொலை செய்யும் அளவிற்கு போயிருக்க மாட்டான்..

"அவனிருந்தா சாருலதாவுக்கு என்னைக்குமே ஆபத்துதான் சார்.."

சாருலதா வீட்டை விட்டு வெளியேறி விட்டாள் என்பதை சதானந்தனிடம் சொல்லி அவளை வீட்டுக்குத் திரும்பி விடச் சொல்லுமாறு கேட்டுக் கொள்ளப்

போன சதிஷிடம் ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் இருந்தபடி சதானந்தன் இப்படிச் சொன்னானாம்.. சதிஷ் பிரசன்னாவிடம் சொல்லியிருந்தான்..

"அவன் சாருலதாவிடம் பேசின பேச்சை நீங்க கேட்டிருக்கனுமே.. அவன் உயிரோடு இருக்கிறவரை சாருலதாவைத் தொடுத்துக்கிட்டுத்தான் இருப்பான் சார்.. விட்டு வைக்க மாட்டான்.. அவன் பேச்சில இருந்து உங்களைவிட அவன் பணக்காரன், செல்வாக்கானவன்னு தெரிஞ்சது.. உங்களாலே அவனை ஒன்றும் பண்ண

முடியாதுன்னு அவனே சொன்னான்.. எனக்கு சாருலதாவோட பாதுகாப்பும் நிம்மதியும்தான் முக்கியம்.. சாருலதாவைக் காப்பாத்த எனக்கு வேறு வழி தெரியலை சார்.. இதை எனக்காகத்தான் நான் செய்தேன்.. என்னால் அவன் பேசினதைத் தாங்கிக்க முடியலை.. கவலைப் படாதீங்க.. இதைக் காரணமா வைத்து சாருலதாவிடம் உரிமை கொண்டாட மாட்டேன்.. அவங்க வழி அவங்களுக்கு.. என் வழி எனக்கு.."

தெளிவாகத்தான் அவன் பேசியிருக்கிறான்.. சாருலதாதான் அந்தத் தெளிவை உடைத்துக் குட்டையைக் குழப்பி அவனைக் கட்டாயப் படுத்தி தாலி கட்ட வைத்தாள்.. சதிஷ் கூட அன்று சொன்னானே..

"அந்த சதானந்தன் சொல்றதுதான் உண்மை பிரசன்னா.. ராஜேந்திரன் உயிரோட இருந்தா சாருவைத் துரத்திக் கிட்டுத்தான் இருந்திருப்பான்.. அமெரிக்கா என்ன.. உலகத்தின் எந்த மூலைக்கு அவள் தப்பிச் சென்றாலும் விட்டு வைக்க மாட்டான்.. ட்வெண்டி ஃபோர் அவர்ஸீம் உங்களாலே அவளைப் பாதுகாத்துக்கிட்டு இருக்க முடியாது.. ஹி டிட் எ குட் ஜாப்.. பட் அவன் செய்த உதவிக்கு அவனுக்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.. என் தங்கையை மட்டும் கொடுக்க முடியாது.. அவனோ பணத்தையும் நானென்ன அடியாளான்னு கேட்டு வாங்க மறுக்கிறான்.. சாருலதாவை அவன் கேட்கலை என்கிறான்.. ஹி இஸ் எ ஜெம் பிரசன்னா.. பிராப்ளமெல்லாம் சாருவிடம்தான் இருக்கு.."

அப்படிச் சாருலதாவை வசியம் செய்து விட்ட வசியக்காரன் அவன் என்பதினால்தான் பிரசன்னா வெறியாகி இருந்தான்.. இருந்திருந்து சதானந்தனிடம் அவன் தோற்றுப் போவதா..? பிரசன்னாவின், அழகு, படிப்பு, பணம் என்ற அனைத்தையும் புறக்கணித்து சாதாரண நிலையிலிருக்கும் சதானந்தனின் பின்னால் சாருலதா சென்று விட்டாளே..

"நான் யாரா..? நான் சாருலதாவின் ரிலேட்டிவ்.. அவளுக்காக அவளுடைய அப்பா 'சார்ஸ் கண்ஸ்ட்ரக்சன்

கம்பெனி..'யை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.. நீ என்னடான்னா உன் வீட்டு வேலைக்காரியா முடக்கிப் போட்டிருக்க.."

இதற்கு சதானந்தனால் என்ன பதிலைச் சொல்ல முடியும் என்ற எள்ளலுடன் கேட்டான் பிரசன்னா..

25

"வீட்டு வேலைக்காரியா..? அவளா.. எனக்கா..? ஹா.. ஹா.."

கோபச்சிரிப்பை சிரித்தான் சதானந்தன்.. கோபத்தை அடக்கி வைத்தவனாய் அவனை முறைத்தான் பிரசன்னா..

"யோவ்.. புருசனுக்கு பொண்டாட்டி வேலைக்காரி தான்.. அதேசமயம் பெண்டாட்டிக்கும் புருசன் வேலைக் காரன்தான்.. உனக்கு எதுக்கு அந்த விவகாரமெல்லாம்.. அது புருசன் பொண்டாட்டி விவகாரம்.. என் பொண்டாட்டி வீட்டுக்குள்ள வேலைக்காரியாவும் இருப்பா.. எனக்கு எஜமானியாவும் இருப்பா.."

"கோடிஸ்வரிய வீடு பெருக்க வைத்துவிட்டு பேச்செல்லாம் நல்லாத்தான் பேசற.."

"அவ வூட்ட அவ பெருக்குறா.. இதில உனக்கெதுக்கு காண்டு..?"

இரண்டு ஆண்களும் மோதிக் கொண்டு இருக்க.. யாருக்காக அவர்கள் பகைவர்களாக ஆனார்களோ.. அந்த சாருலதா உள்ளே பிரவேசித்தாள்.. நேர்த்தியான உடை.. கையில் செல்போன் என்று வந்தவள் சதானந்தனிடம்..

"நான் சைட் விசிட் போகனும்.." என்றாள்..

"இந்தா.." சதானந்தன் கார் சாவியை எடுத்துக் கொடுத்தான்..

வாங்கிக் கொண்டு திரும்பியவள் அங்கே பிரசன்னா நின்றிருப்பதைப் பார்த்து விட்டு..

"நீங்க எங்கே இங்கே..?" என்றாள்..

"சார் நீ ஏன் வேலைக்கு வரலேன்னு கேட்டுப் போக வந்திருக்கிறார்.." என்றான் சதானந்தன்..

"நான் சொந்தமா கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியை ஆரம்பிச்சிருக்கேன்.. ஸோ.. உங்க கம்பெனி வேலையை ரிசைன் பண்ணிட்டேன்.. இதுக்கா இவ்வளவு தூரம் வந்தீங்க..?"

'கேட்டுக்கிட்டயா..?' சதானந்தனின் கேலிப் பார்வை பிரசன்னாவைச் சுட்டது..

"சொந்தக் கம்பெனியா..?" பிரசன்னாவின் கேள்விக்கு..

"ஸாரி.. உங்களுக்கு விளக்கம் சொல்ல எனக்கு டைமில்லை.. என் ஹஸ்பெண்ட் சொல்வார்.. ஏங்க.. இவர் நமக்கு ரிலேட்டிவ்.. உட்கார வைத்துப் பேசிக் குடிக்க காபி, டீ ஆர் கூல்டிரிங்க்ஸ்ன்னு குடுத்து அனுப்பி வைத்துடுங்க.. ப்ளீஸ்.." என்று சதானந்தனிடம் கொஞ்சி விட்டுப் போய் விட்டாள் சாருலதா..

"அதுக்கென்ன கண்ணு.. நம்ம சொந்தக்காரன்னு சொல்லிப்புட்ட.. பங்காளிய நான் பார்த்துக்க மாட்டேனா..? நீ போயிட்டு வாடி செல்லம்.."

பிரசன்னாவின் வயிறெரிச்சலைக் கொட்டிக் கொண்டு மனைவியை முத்தமிடாத குறையாக டாட்டா காட்டி வழியனுப்பி வைத்து விட்டு வந்த சதானந்தன் பிரசன்னாவின் தோள்களைப் பற்றி அழுத்தி அங்கிருந்த சேரில் வலுக்கட்டாயமாக உட்கார வைத்துவிட்டு எதிரில் உட்கார்ந்து..

"அப்புறம்..? பங்காளி.." என்று கடுப்படித்தான்..

"இது என்ன புது டிராமா..?" இளக்காரமாக கேட்டான் பிரசன்னா..

"டிராமாவா..? இந்த சதாவா..? ஏரியாவுக்குள்ள கேட்டுப் பாரு பங்காளி.. இந்த சதாவுக்கும் டிராமாவுக்கும் எம்மாந்தூரம்ன்னு புட்டுப்புட்டு வைப்பானுக.."

"இது டிராமா இல்லாம வேற என்ன..? கண்ஸ்ட்ரக்சன் கம்பெனியாம்.. சைட் சீயிங்காம்.. அடேங்கப்பா.. பில்ட்-அப் தூள் பறக்குது.."

"தூள் பறக்குமில்ல.. பட்டயக் கிளப்ப போறோமில்ல.. பாத்துக்கிட்டே இரு பங்காளி.. உன்னோட மாமன்காரரு மகளுக்காக ஆரம்பிச்சு வைச்சிருக்கிற சார்ஸ் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனிய.. நான் என் பொண்டாட்டிக்காக ஆரம்பிச்சுக் கொடுத்திருக்கிற 'சசார்ஸ் கண்ஸ்ட்ரக்சன் கம்பெனி..' பீட் அடிக்கப் போகுது.."

"கனவு கண்டுக்கிட்டே இரு.."

"இன்றைய கனவு.. நாளைய நனவு.. நாங்க உழைத்து முன்னேறுகிற வர்க்கம் பங்காளி.. அப்பன், பாட்டன் பணத்த ஒன்னுக்கு நூறா பெருக்கிற வார்க்கமில்ல.. ஒற்றைப் பைசாவா இருந்தாலும் அது சொந்த உழைப்பில சம்பாதிச்ச காசாத்தான் இருக்கும்.."

'சொல்லிக் காட்டறான்..'

"சொல்லிக் காட்டனும்ங்கிறதுக்காக இத்தச் சொல்லலை.. உள்குத்து எதுவுமில்லை.. உனக்குக் குத்தினா அதுக்கு நான் எதுவும் பண்ண முடியாது.."

"ஏய்ய்.. அடங்குடா.."

"முடியாதுடா பங்காளி.. ஆட்டம் இப்பத்தான் ஆரம்பிச்சிருக்கு.. போகப் போக சூடு பிடிக்கப் போகுது பாரு.. அப்ப உனக்கும் உன் மாமன் வூட்டுக்கும் தெரியும்.. இந்த சதா யாருன்னு.."

"இப்பவும் தெரியுமே.."

"இதுக்கு முன்னால நீ பாத்த சதா வேற பங்காளி.. இப்ப இருக்கிற சதா வேற.. அந்த சதா வாழ்க்கையை வெறுத்துப்

போயிருந்தான்.. இந்த சதா வாழ்க்கையை வாழ்ந்துக்கிட்டு இருக்கான்.. என்ன.. அப்படிப் பார்க்கிற..?"

"எதுக்காக இந்த குதி குதிக்கிறன்னு பார்க்கிறேன்.."

"இது நான் குதிக்க வேண்டிய நேரம் பங்காளி.. இந்த மெக்கானிக் ஷாப்பு என் சொந்த இடத்தில இருக்குது.. இதில பாதியைப் பிரிச்சுக் கட்டி அதில சாருவுக்காக கம்பெனி ஆபிஸைக் கட்டிக் கொடுத்திருக்கேன்.."

"ஓ.."

இது பிரசன்னாவுக்கு புதிய செய்தி.. சாருலதா அலுவலகம் வரவில்லை.. விசாரித்தால் வேலையை ராஜினாமா செய்திருந்தாள்.. அலுவலகத்திலும் அவளைப் பார்க்க முடியவில்லை என்பதில் கொதிப்பாகித்தான் வருவது வரட்டும் என்று சதானந்தனின் மெக்கானிக் ஷாப்பிற்கு வந்திருந்தான்.. அங்கே என்னடாவென்றால் விலையுயர்ந்த கார்கள் வரிசை கட்டி நிற்கின்றன.. சதானந்தன் நிற்க நேரமில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறான்.. சாருலதாவுக்காக தன் சொந்த இடத்தில் ஆபிஸ் கட்டிக் கொடுத்திருக்கிறான்..

"எதுக்கு இந்த 'ஓ'?"

"ஆபிஸ் கட்டிக் கொடுத்துட்டாப் போதுமா..? கண்ஸ்ட்ரக்சன் கம்பெனின்னா உனக்கு அவ்வளவு ஈஸியாப் போயிருச்சா..?"

"இதான வேணாங்கிறது.. நான் சும்மா சும்மா கூவிக் கிட்டே இருக்கேன்.. உன் காதிலே ஏற மாட்டேங்குதே பங்காளி.. நான் தொழில் தெரிஞ்சவன்.. மெக்கானிக்கல் என்ஜினியர்.. வேலையிலே நான் இறங்கிட்டேன்னு வைய்யி.. உயர உயரப் போய்கிட்டே இருப்பேன்.. என் வீட்டை வித்துக் கையில இருந்த பணத்தையும் போட்டு மெயினான இடத்தில இடம் வாங்கிக் கொடுத்திருக்கேன்.. அதில என் பொண்டாட்டி அபார்ட்மெண்ட் கட்டி விக்கப் போறா.. எண்ணி இன்னும் ரெண்டே வருசம்தான் நாங்க சிகரத்தைத் தொட்டுக் காட்டறோம் பாரு.."

சதானந்தன் சொன்னதைச் செய்தான்.. அடுத்த இருபத்தி நான்கு மாதங்களில் அவனுடைய மெக்கானிக்கல் ஷாப் கார்களை ரீ மாடல் செய்து விற்கும் கம்பெனியாக மாறியிருந்தது.. சாருலதாவின் 'சசார்ஸ் கண்ட்ஸ்ட்ரக்சன் கம்பெனி..' தனது ஆறாவது புராஜெக்டை ஆரம்பித்திருந்தது..

அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுவதில் பெயர் பெற்று விட்டாள் சாருலதா.. அவர்களின் அடுக்கு மாடி குடியிருப்புகளில் ஒன்றிற்கு அவர்கள் தற்காலிகமாக குடி புகுந்தார்கள்..

"பெசண்ட் நகரில் ஒரு பங்களாக் கட்ட இடம் வாங்கியிருக்கேன்.. என் பெண்டாட்டிதான் கட்டித் தரப் போகிறா.."

சதானந்தன் சொன்ன வார்த்தைகள் காற்றில் கலந்து சக்ரபாணியின் காதுகளை எட்டின.. சாருலதா தாய்மை அடைந்திருப்பதை அறிந்த சுமதி தடையை மீறி மகளைப் பார்க்கச் சென்று வந்தாள்.. தகவல் அறிந்த பிரசன்னா தனது திருமணத்திற்கு சம்மதம் சொல்லி விட்டான்..

கோபம் மறைந்து சக்ரபாணி தன் மகளுக்கு சீமந்தம் செய்த போது பிரசன்னா தன் மனைவியுடன் அமெரிக்கா புறப்படத் தயாராகியிருந்தான்..

சதானந்தனுக்கு மகன் பிறந்தான்.. தயானந்தனின் தம்பிக்கு 'சுகானந்தன்' என்று பெயரிட்டார்கள்.. பெசண்ட் நகர் பங்களாவின் கிரகப் பிரவேசத்திற்கு வந்தவர்களை சக்ரபாணியும், சுமதியும் வாசலில் நின்று வரவேற்று அழைத்துச் சென்றார்கள்..

சதானந்தன் நல்லவன்.. உண்மையானவன்.. மனதார அவன் சாருலதாவை ஆராதித்தான்.. அவள் விண்ணில் வாழும் நிலவு என்று விலகி நின்றான்.. அவனது உண்மையான காதலில் அவனுக்காக விண்ணைத் தாண்டி வந்தாள் சாருலதா.. அவன் மண் மீதான வாழ்வில் பற்றுதல் கொண்டு ஜெயித்துக் காட்டி விட்டான்..

- முற்றும் -